# இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்

## (மலையக மக்கள் வரலாறு)

ஆய்வு நிறுவனம்
RESEARCH ORGANIZATION OS

# இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம்

## (மலையக மக்களின் வரலாறு)

2 DEC 1986

க. மோகன்ராஜ்

[redacted]

| | |
|---|---|
| ACC. NO. | |
| CLASS. NO | |


ஈழ ஆய்வு நிறுவனம்

முதற்பதிப்பு : ஜூன், 1984
ஈழ ஆய்வு நிறுவன வெளியீடு

உரிமை : ஈழ ஆய்வு நிறுவனம்

EELAM RESEARCH ORGANIZATION
179, Norval Road,
North Wembley, Middlesex,
United Kingdom.

விலை: ரூ. 10-00

தொடர்புக்கு :
ஈழம் [redacted] அமைப்புச் சங்கம்
10, கங்காராம் தோட்டம்,
சிவன் கோயில் தெரு,
சென்னை-600 024.

அச்சிட்டோர் :
விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்,
25, தெற்கு சிவன்கோயில் தெரு,
சென்னை-600 024.

# NEO-SLAVERY IN THE TWENTIETH CENTURY

## (Histroy of the up Country Tamils)

**BY : MOHANRAJ**

EELAM RESEARCH ORGANIZATION
179, Norval Road, North Wembely
Middlesex, UnitedKingdom

# முன்னுரை

இனிவரும் பக்கங்களில் ஒரு சமுதாயத்தின் கடந்த காலத்தின் சோகச் சுவடுகள் பதியப்பட்டுள்ளன. வாழ்க்கையைத் தொடங்கும் பொழுதே ஏமாற்றத்துடன் தொடங்கியவர்கள் ஏறத்தாழ 180 வருடங்களின் பின்பும் ஏமாற்றத்துடனும் ஏக்கத்துடனும் தம் வாழ்வைத்தொடர்கின்றனர். காலடிபடாத காடுகள் படர்ந்த மலைமுகடுகளெல்லாம் இவர்களின் கைகளினால்தான் வளமானது. தலைமன்னார் துறையிலிருந்து கண்டிச் சீமை வரை இவர்கள் கால் நடையாக வந்து சேர்ந்த சோகக் கதையினை ஏடறியா இலக்கியமான நாட்டுப்பாடல்கள் இன்றும் சொல்லிக் கொண்டே இருக்கின்றன.

துன்பம் மிகுந்த இவர்கள் வாழ்க்கையில் வரலாற்றுச் சுவடுகள் ஒவ்வொன்றும் நீண்டகாலமாக மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டுமே வந்திருக்கிறது. இங்கே அவர்களைப்பற்றியதான வரலாற்று ஆய்வின் மூலம் மறைந்து போன அந்தச் சுவடுகளையெல்லாம் துலக்கவைத்துள்ளார் இந்நூலின் ஆசிரியர். இவர்கள் உழைப்பிலேயே உண்டு கொழுத்த அதிகாரவர்க்கம் 1948இல் எந்தவித நன்றி உணர்வும் இல்லாமல் வாக்குரிமையைப் பறித்து இவர்களை அரசியல் அனாதைகளாக்கியது. நாடற்றவர்களென முத்திரை குத்தியது.

உலகவரலாற்றின் எந்தப்பக்கங்களிலும் அரசியல் சாசனத்தின்மூலம் ஒரு சமூகத்தின் முகம் அழிக்கப்பட்டதான அடையாளங்களிலிருந்ததே இல்லை.

1948 இன் பின்னுன இவர்களின் அரசியல் வாழ்வு சூன்யமாகவே காணப்படுகிறது. எந்த ஜனநாயகக் கொம்பனும் அரசியல் மேதாவியும் இவர்களது அரசியல் உரிமைகள் குறித்து ஏறெடுத்துப்பார்க்கவில்லை. வாக்குகள் மட்டுமே ஜனநாயகத்தின் அடித்தளமென்ருன பின்பு இவர்கள் கடைக்கோடிக்குத் தள்ளப்பட்டனர். ஆனுலும் ஒவ்வொரு அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் அந்தப்பாதிப்புகளிலிருந்து இவர்களால் தப்பித்துக்கொள்ள முடியவே இல்லை. இனவாதம் தலைதூக்கிய போதும் சிங்கள பேரினவாதம் தலைவிரித்தாடிய போதும் இவர்களின் இரத்தங்களே பூமியைச் சிவக்க வைத்தன. வடக்கு, கிழக்கில் வாழும் பாரம்பரிய தமிழ்பேசும் மக்களின் தேசிய உணர்வு மேலெழத் தொடங்கிய போராட்ட காலகட்டத்தின்போது தமிழ்ப் பேசும் தலைமை இவர்களைப் புறக்கணித்தே வந்துள்ளது. தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டபோதுமட்டும் இவர்கள் பிரச்சனையை மையமாகக்கொண்ட தமிழ்த் தலைமை அதன்பின் எந்தக் காலத்திலும் இவர்கள் பிரச்சனையை மையப்படுத்தவேயில்லை. ஆனுலும் 1970க்குப் பின் இளைய நெஞ்சங்களின் அரசியல் எழுச்சிக்குப் பின்னுல்தான் இவர்கள் பிரச்சனை வடகிழக்கின் அரசியல் கோரிக்கையில் இணையத் தொடங்கியது.

வர்க்கப் பார்வை மட்டுமே உலகப் பார்வை எனக் கொண்ட இலங்கை இடதுசாரிகள்கூட இவர்களை வர்க்க அடிப்படையில் இனங்காணத் தவறிவிட்டனர். 1971 இல் சிங்கள இடதுசாரி

இளைஞர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியின் போது கூட இவர்கள் இணைத்துக் கொள்ளப்படாததுடன் இந்திய விஸ்தீரண கொள்கையின் ஏஜெண்டுகளெனவும் வர்ணிக்கப்பட்டனர். இவ்வேளையில்தான் இவர்கள் வளப்படுத்திய மண்ணிலிருந்து இவர்களைப்பிரிக்க ஆளும் வர்க்கம் சூழ்ச்சி செய்தது. தோட்டங்களை தேசிய மயமாக்கல் எனும் சட்டங்கள் மூலம் இவர்கள் மண் சிங்களமயமாக்கப்பட்டது. இப்பொழுதுதான் இவர்கள் தங்கள் நிலை குறித்து சிந்திக்கத் தொடங்கினர். தம் மண் பறிக்கப்படுவதை மூர்க்கமாக எதிர்க்கத் தொடங்கினர். வழி நடத்திச் செல்ல அரசியல் தலைமை இல்லாத காரணத்தினால் இவர்களது எதிர்ப்பு முளையிலே கிள்ளி வீசப்பட்டது. இவ்வேளையில்தான் வடக்குக் கிழக்கு தேசிய இனப் போராட்டம் மூளத்தொடங்கியிருந்தது. இப்போராட்டம் பிற்போக்குத் தனமான ஜனநாயகத் தலைமையினாலும் மொழி வெறி இனவெறி கொண்ட சக்திகளினாலும் மேலெடுக்கப்பட்டது. இந்தப் பின்னணியில்தான் ''ஈரோஸ் இயக்கம்'' ஈழப் போராட்டம் பற்றியதான தன் ஆய்வுகளை மேற்கொண்டது. இவ்வாய்வுகளின் முடிவாக 1975 இல் தனது ஈழப் போராட்டம் பற்றியதான தனது அரசியல்பிரகடனத்தை வெளியிட்டது. இப்பிரகடனம்தான் ஈழப் போராட்ட வடிவத்தையே அதன் உள்ளடக்கத்தையே தலைகீழாக மாற்றியது.

இலங்கையின் அடிப்படைப் பாட்டாளி வர்க்கம் மலையகத் தொழிலாளர்களே யென்றும் ஆனால் இவர்களை முன்னணியாகக் கொண்ட தேசிய போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வரலாற்றுக் காரணிகள் பின்தள்ளப்பட்டுள்ளன என்பதனால் வடக்குக் கிழக்குத் தேசிய இனப்

போராட்டத்தை இவர்களை உள்ளடக்கியதான வர்க்கப்போராட்டமாக மாற்ற வேண்டுமென்றும் இவர்களின் தேசிய அந்தஸ்துக்காக இம் மக்கள் வாழும் பகுதியும் இணைக்கப்படவேண்டுமென்றும் இம் மக்களை முன்னணியாகக்கொண்ட போராட்ட மொன்றின் மூலமே ஈழமென்னும் தேசிய அந்தஸ்தை நிலைநிறுத்த முடியுமெனவும் ''ஈரோஸ்'' தன் அடிப்படையாகக்கொண்டதுடன் அரசியலரங்கிலும் முன் வைத்தது. தன் வேலைத் திட்டத்தையும இவ்வகையிலே அமைத்துக் கொண்டது. அன்று இக்கருத்து முன்வைக்கப் பட்டபோது அத்தனை பேரும் இதனை வன்மை யாக எதிர்த்தனர். சாத்தியமாகுமா என வினு வெழுப்பினர். சந்தேகம் கொண்டு எம்மைப்பார்த்த னர். ஆனால் இன்று 1983 இன்பின் இவர்கள்பிரச்சனை பற்றி முன்வைக்காத பேசாத எழுதாத எவருமே இல்லை. இன்று அவர்கள் பற்றிய ஆய்வுகள் கூட பலராலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்நிலையில்தான் ''ஈழப் புரட்சி அமைப் பின்''(EROS) ஆய்வு வெயீட்டுப்பிரிவான ''ஈழ ஆய்வு நிறுவனம்'' இவர்களது வரலாற்றை ஆவணமாக வெளியிடுவதில் பெருமை அடை கிறது.

பாதிக்கப்பட்டு வரும் இம் மக்களின் வர லாற்றை அம்பலப்படுத்தி இம் மக்களை அரசியல் ரீதியானபோராட்டத்திற்கு உடமைப்பாட்டுக்கான போராட்டத்திற்கு அணி திரட்ட, இவர்கள் வாழு கின்ற மண் இவர்களால் வளப்படுத்தப்பட்ட மண் இவர்களுடையதே என்பதைஉணர வைக்க இந்நூல் பயன்படுமானல் அதுவே எமது முயற்சி யின் வெற்றியாகும். அதன் காரணத்தினலே

தான் ஈரோஸ் அமைப்பைச் சாராத தோழர் மோகன்ராஜினால் எழுதப்பட்ட போதும் அமைப்பு வேறுபாடுகளைக் கடந்து கருத்து விவாதங்களைக் கடந்து இந்நூலை வெளியிடுகின்றோம் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமையாகும்.

## சமர்ப்பணம்

மலையக மக்களுக்காக தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தவர்; முதன் முதலாக மலையகத்தில் அரசியல் தீபத்தை ஏற்றியவர்; நேர்மையும், தியாகமும் செறிந்த செம்மல் அமரர் கே. நடேச ஐயர் அவர்களுக்கு இந்நூல் காணிக்கை.

# ஆசிரியருரை

நான் சார்ந்துள்ள மலையகத் தமிழ் சமூகம் இன்று பாரதூரமாகப் பாதிக்கப் பட்டு நிலை குலைந்து நிற்கிறது. இம்மக்களது துயர் தோய்ந்த வரலாறு ஏனைய இலங்கை மக்களிலிருந்து பல அம்சங்களில் வேறுபட்டது. எனவே இவர்களது வரலாற்று வழி வந்த பிரச்சினைகளும் பல அம்சங்களில் தனித்துவமானவை.

இலங்கை சுதந்திரம் பெற்ற 1948-ன் பின்னர் 71 வரை இவர்கள் மீதான ஒடுக்குமுறை அரசயாப்பினூடாக பாராளுமன்ற வழியில் (Constitutional form through Parliament) மேற்கொள்ளப்பட்டு வந்தது. அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் இவர்களது பிரஜா உரிமையும், வாக்குரிமையும் பறிக்கப் பட்டமை ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தம் ஆகியன இதிலடங்கும்.

1972-ன் பின்னர் பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதிலிருந்து இவ்வொடுக்கு முறை அரசு ஒடுக்குமுறை வடிவை எடுத்தது (State form). இவ்வரசாங்கம் ஆட்சிக்கு வந்த 1977-ம் ஆண்டு முதல் இவ் அரச ஒடுக்குமுறை சரீர ரீதியான தாக்குதலாகவும் (Physical attack) தமிழர் படுகொலையாகவும் (Pogrom) பரிணமம் அடைந்து 1983 ஜூலை வன்செயலின் போது

“அழித்தொழித்தல்” (Genocide) நிலைக்கு வளர்ந்தது.

சிங்கள தேசிய வெறியின் ஊற்றுமூலங்கள் பல இருப்பினும் இன்று அது உச்ச கட்டத்தை அடைந்துள்ளமைக்கு “இந்தியத் தலையீடு பற்றிய பீதி”, அமெரிக்க ஊடுருவல் ஆகியன பங்களிப்பு செய்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இன்று சிங்களமயப்படுத்தப்பட்டுள்ள அரச முப்படைகள் சிங்கள தேசிய ஆதிக்க வாதத்தின் பாதுகாவலனாக மாறியுள்ளன. சிங்கள குண்டர்களுக்கும், சிங்கள இளைஞர்களுக்கும் தமிழருக்கெதிராக இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. சகல பிரச்சார சாதனங்களும் முடுக்கி விடப்பட்டு தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தை “பயங்கரவாதமாகச்” சித்தரித்துக் காட்டி சிங்களத் தேசிய வெறியைத் தூண்டி ‘இந்தியப் பீதியைப்’ பூதாகரமாக கிளறி விட்டு “புனிதயுத்தம்” ஒன்றுக்கு சிங்கள மக்களை இவ்வரசாங்கம் தயார் செய்து வருகிறது. இந் நிலையில் சிங்கள வெறியர்களின் பணயக் கைதிகளாக மலையகத் தமிழர் சிங்களவரின் மத்தியில் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு பயங்கரமான சூழலில் மலையக மக்கள் மத்தியில் பணிபுரியும் அரசியல் சக்திகள் இம்மக்களின் பிரச்சினைகளையும் உணர்வுகளையும் புரிந்து கொண்டு சரியான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு உதவியாகவும், மலையக மக்கள் மீது அனுதாபம் கொண்டு அவர்களது நிலைமைக்காக உலக அரங்கில் குரல் கொடுக்கும் நல்லிதயங்களுக்கு பயன்படக் கூடிய விதத்திலும் புள்ளி விபரங்களுடன் கூடிய திட்ட

வட்டமான தகவல்களின் அடிப்படையில் இவ் வரலாற்று நூலை எழுதலானேன்.

இந்நோக்கங்களை ஓரளவேனும் இந்நூல் நிறைவேற்றுமானுல் அதுவே எனது முயற்சியின் வெற்றியாகும்.

நீண்டகாலமாக இத்தகைய ஒரு நூலை எழுதும் நோக்கத்தை மனதிற் கொண்டு அதற்காகப் பல சான்றுகள், குறிப்புகள், பேட்டிகள், உசாத்துணை நூல்கள் இத்தியாதிகளை சேகரித்து வந்தேன். ஆனுல் அவற்றில் பல கைவசம் இல்லாத நிலையில், தற்போதுள்ள ஒரு சில குறிப்புகளின் துணையுடன் இதனை எழுதியுள்ளேன். எனவே சில குறைபாடுகள் ஏற்படுவதை என்னுல் தவிர்க்க முடியவில்லை.

எனது இம்முயற்சியை அறிந்ததும் என்னைத் தேடி வந்து இந்நூலைச் சீக்கிரம் எழுதி முடிக்குமாறு உற்சாகமூட்டியதுடன் இதனை விரைவில் எழுதி முடிப்பதற்கு வசதியாக ஒரு தோழரை உதவியாளராக ஏற்பாடு செய்து தந்த ஈரோஸ் தோழர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றி.

நான் EROS இயக்கத்தில் அங்கத்தவனுக இல்லாதபோதும் இந்நூலின் அவசியத்தை மதித்து, இதனை வெளியிட தாமாகவே முன் வந்த EROS இயக்கத்தின் பெருந் தன்மைக்கு நான் சிரம் தாழ்த்துகிறேன்.

நான் கூற தனது அழகிய கையெழுத்தால் இந்நூலைப் பிரதி பண்ணி உதவுவதில் முக மலர்ச்சியோடு எனக்குப் பூரண ஒத்துழைப்பு

நல்கிய தோழர் கண்ணன அவர்களுக்கு எனது அன்பு கலந்த நன்றி.

அடுத்த பதிப்புகளில் திருத்தங்கள் செய்வதற்காக தமது கருத்துகளேயும், விமர்சனங்களேயும் வாசகர்களிடமிருந்து மகிழ்ச்சியுடன் எதிர்பார்க்கிறேன்.

நன்றி,

-ஆசிரியர்

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத அளவு மிக மூர்க்கமான, மனித அடிப்படை உம்மைகளுக்கு முரணான, பிரஜா உரிமைச் சட்டம் இலங்கையிலேயே காணப்படுகிறது. இந்த மூர்க்கமான 'பிரஜா உரிமைச்' சட்டத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் மலையகத்தமிழர்களே. இவர்களது தேசியத்துவம் பற்றி இன்றளவும் சர்ச்சைகள் நடைபெற்று வருகின்றது. இலங்கையின் சிங்கள ஆதிக்கவாத அரசாங்கம் 1911ல் இருந்து இம்மக்களை "இந்திய வம்சாவளித் தமிழர்" என்ற சொற்பதத்தை உத்தியோக பூர்வமாகப் பாவித்து வருகிறது. இச்சொற்பதம் இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் இம்மக்களின் தேசத்துவம் சம்பந்தமாக கொண்டுள்ள நிலைப்பாட்டினை தெளிவாகப் புலப்படுத்துகின்றது. இச்சொற்பதத்தின் உண்மையான அரசியல் உள்ளடக்கம்:- "இவர்கள் இந்தியாவில் இருந்து இங்கு கூலிகளாக வந்தவர்கள். இவர்களுக்கு இந்நாட்டில் எந்தவிதத் தேசிய உரிமையும் கிடையாது" என்பதாகும்.

இவ்வாதத்தின் அடிப்படையில் பார்த்தால் சிங்களவர்கள் கூட வடஇந்தியாவிலிருந்து வந்தவர்களே. அவர்களுக்கும் இந்நாட்டில் எதுவித தேசிய உரிமையும் கிடையாது. எனவே நான் மலையகத் தமிழர் என்ற சொற்பதத்தை இக்கட்டுரை முழுவதும் பிரயோகிக்கிறேன்.

இலங்கையில் இந்திய வம்சாவளியினர் என்றழைக்கக்கூடிய ஒரு சாரார் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் மலையகத்துடன் எவ்விதத் தொடர்புமில்லாத- இந்தியாவைத் தாயகமாகக்கொண்டு இலங்கையில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இந்தியர்களாவர். இவர்கள் கொழும்பை மையமாகக் கொண்டு இந்தியாவிலும் இலங்கையிலுமாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகையோரின் எண்ணிக்கை சுமார் 30,000 பேர் மாத்திரமே. ஏனைய அனைவரும் மலையகத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள்.

மலையக மக்களில் சுமார் 90 சதவிகிதத்தினர் தொழிலாளராவர். இவர்களில்85% னர் தோட்டத் தொழிலாளராவர். 1931ம் ஆண்டுபுள்ளிவிவரப்படி மலையகத் தமிழர்களின் மொத்தத் தொகை 8, 18, 500 ஆகும். இதில் சுமார் 86%னர் அதாவது 6,92,540 பேர் தோட்டத் தொழிலாளர் ஆவர். ஏனையோரில் தோட்டத்துறையைச் சாராத துறைமுகத் தொழிலாளர், அரசாங்க ஊழியர், உள்ளூராட்சி ஊழியர், சிறு வர்த்தகர், கடன் வழங்குவோர், நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், சிந்து, மார்வாரி, குஜராத்வர்த்தகர்கள், கடைச் சிப்பந்திகள், எழுதுவினைஞர்கள், சிறு நில உடமையாளர்கள், விவசாயத் தொழிலாளர் ஆகியோர் அடங்குவர். இக்காலத்தில் நகர சுத்தித் தொழிலாளர் கூட இந்தியர்களையே முழுமையாகக்கொண்டிருந்தது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் இந்நிலை இன்னும் மாறவில்லை என்பதை நிரூபிக்கின்றன. பாரதம் திரும்பியோர் பற்றி அண்மையில் இந்தியாவில் மேற்

கொள்ளப்பட்ட ஆய்வொன்றும் இக்கூற்றை மேலும் உறுதிப்படுத்துகிறது. மலையகத் தமிழரின் வருகை 1796 இல் இருந்தே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கம்பனியாளர்களால் துறைமுகத்தொழிலாளர்களாவும் இதர தொழிலாளராகவும் கொண்டுவரப்பட்டனர். எனினும் மலையகத் தமிழர்களின் வரலாற்றை ஆறு காலகட்டங்களாக வகுக்கலாம். அவையாவன: 1) கோப்பிக்காலம் - 1820 முதல் 1880 வரை; 2) தேயிலையின் ஆரம்பகாலம்-1880 முதல் 1920 வரை; 3) மலையக மக்கள் நிலைபெறும் காலம்-1920 முதல் 1948 வரை; 4) சுதந்திர இலங்கையில் சுதந்திரம் பறிக்கப்பட்ட மலையகம்-1948 முதல் 1971 வரை; 5) அரசுடமையும் தேசிய இன அடக்குமுறையும்- 1971 முதல் 1983 ஜூலை வரை; 6) 1983 ஜூலையின் பின்னர்.

## காலகட்டம் 1

## கோப்பிக்காலம் - 1820 முதல் 1880 வரை

### கோப்பிப் பயிர்ச் செய்கை

“இந்தியத் தொழிலாளர்” அல்லது “கூலிகள்” என்றழைக்கப்படும் மலையகத் தமிழ் தொழிலாளரின் வரலாறு இலங்கையில் கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பமான கால கட்டத்தில் இருந்து முக்கியத்துவம் பெறுகிறது. 1823-ம் ஆண்டு கம்பளைக்கு அருகேயுள்ள சிங்கபிட்டிய என்ற கிராமத்தில், கெப்டன் ஹென்றிபேர்ட் ( Captain Henry Bird of The Ceylon Rifes) என்ற பிரிட்டிஷ்காரர், இந்தியாவில் இருந்து 14 தொழிலாளர்களை வரவழைத்து, மிகவும் வெற்றிகரமான முறை

யில் கோப்பி பயிர் செய்து 600 பவுண்ட்கள் சுத்த லாபமாகப் பெற்ருர். இந்த வெற்றியானது மலையகத் தமிழர்களது வாழ்வை மாத்திரமல்ல; இலங்கைப் பொருளாதாரத்தின் தலைவிதியைக் கூட அடியோடு மாற்றி விட்டது. இந்தியாவிலிருந்து லட்சக்கணக்கான தொழிலாளர்களை வஞ்சகமான முறையில்வரவழைத்து வந்துநவீன அடிமைகள் சமூகமொன்றை உருவாக்குவதற்கும், பெருந்தோட்ட பொருளாதாரத்திலும் அதனுடன் தொடர்புடைய சார்பு மூலதனத்துவத்திலும் (Dependent Capitalism) இலங்கையும் தங்கி இருக்க வேண்டிய நிலைமைக்கும் தொடக்கப் புள்ளியாக அந்தச் செயல் அமைந்து விட்டது.

கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு பெரியளவு மூலதனமோ, மிக நவீன தொழில் நுட்பமோ தேவையில்லை. இதனுல் நிர்வாகி சேவையிலும், இராணுவச் சேவையிலும் ஈடுபட்டிருந்தவர்கள், கெப்டன் பேர்டின் வெற்றியால் கவரப்பட்டு கோப்பிப்பயிர்ச்செய்கையில்போட்டிபோட்டு கொண்டு இறங்கினர். ஆள்பதி (Governor), இராணுவத்தினர், நீதிபதி, ஆங்கில கிருத்துவ மத குருமார், அரசு நிர்வாகசேவையில் ஈடுபட்டிருந்த கிட்டத்தட்ட சரிபாதிப்பேர்;இவ்வாறு சகல உத்தியோகத்தர்களும், வசதிபடைத்தவர்களும் யார் அதிக லாபமீட்டுவது என்ற போட்டியில் குதித்தனர். கிழக்கிந்திய (The East India Company) கம்பெனியைச் சேர்ந்த அதிகாரிகள் தமது சேமிப்பை கோப்பிப் பயிர்செய்கையில் முதலீடு செய்தனர். இந்தக் கோப்பி மோகம் (Coffee mania) 1845-ம் ஆண்டளவில் அதன் உச்சக் கட்டத்தை அடைந்தது.

கோப்பிப் பெருந்தோட்டம் பெருகி விரிவாகக் கூடிய விதத்தில் அன்றைய உள்நாட்டு நிலைமை மிகவும் சாதகமாக இருந்தது. அவற்றை இவ்வாறு வரிசைப்படுத்தலாம்.

**சாதகமான உள்நாட்டு நிலைமைகள் :**

(அ) 1505ல் போர்த்துக்கேயரும், 1658ல் ஒல்லாந்தரும், 1796ல் பிரிட்டிஷ்காரரும் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றி தொடர்ச்சியாக ஆட்சி செய்த போதும் 1815ம் ஆண்டுதான் முதற்தடவையாக கண்டி இராச்சியம் வெற்றிகொளளப்பட்டது. இதனால் இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின்கீழ் வந்தது. கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு மிகவும் சிறந்த புவியியல் தன்மைகளைக் கொண்டிருந்த கண்டி இராச்சியம், இப்போது முதற் தடவையாக, உலகெங்கும் விரிந்த சந்தைகளை தன் கையில் :வைத்திருக்கும் பிரித்தானியனின் குடையின்கீழ் இருந்தது. எனவே அங்கு உற்பத்திசெய்யப்படும் கோப்பிக்கு உலக சந்தையில் இடம் கிடைக்கக்கூடிய சூழல் உருவானது.

இங்கு ஒரு விடயத்தை நினைவிலிருத்திக் கொள்வது நல்லது. கோப்பிச் செடியை இலங்கையர் ஐரோப்பியரது ஆக்கிரமிப்பிற்கு முன்னரே அறிந்திருந்தனர். ஆனால் அந்தப் பாரசீக பானத்தை (Persian Beverage) அவர்கள் தயாரிக்கத் தெரிந்திருக்கவில்லை. கண்டிப் பகுதிகளில் செழித்து வளர்ந்த கோப்பிச் செடியின் விதையை அவர்கள் மருந்துக்கும், பூவைப் புத்தபெருமானுக்கு பூசை செய்வதற்கும் மாத்

திரமே பயன்படுத்தினர். டச்சுக்காரர்களும் கோப்பி உற்பத்தியில் சிறிது ஆர்வம் காட்டினர். ஆனால் 1739ல் அதனைக் கைவிட்டனர். கோப்பிப் பயிர்ச் செய்கை ஒரு பிரதான உற்பத்தியாக மூலதனத்துப் பயிராக மாறியது பிரிட்டிஷ் ஆட்சியின் கீழேதான்.

(ஆ) 1818-ம் ஆண்டு கண்டி இராச்சியத்தில் நிலப்பிரபுத்துவ உயர் பிரபுக்கள் வெள்ளையருக்கு எதிராக நடத்திய வெல்லஸ்ஸ கலகம் அடக்கப்பட்டது. உயர் பிரபுக்கள் அழித்தொழிக்கப்பட்டனர். இதனால் கண்டி இராச்சியத்தில் இனி ஒரு கலகம் ஏற்படாது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அமைதியான அரசியல் சூழல் இதனைத் தொடர்ந்து ஏற்பட்டது.

(இ) ஆரம்பத்தில் இலங்கையில் ஐரோப்பியர் நிலம் வாங்க அனுமதிக்கப்படவில்லை. இந்த சட்டம் 1810-ல் தளர்த்தப்பட்டு விட்டது. 1812-ல் வெளியான ஒரு விளம்பரம் ஐரோப்பியர்கள் 4,000 (நாலாயிரம்) ஏக்கருக்கு மேற்படாமல் காணி வைத்திருக்கவும், அத்துடன் அவர்கள் ஐந்து வருடங்களுக்கு எதுவித வரியும்வழங்கத்தேவையில்லைஎனவும்அறிவித்தது ஆனால்அதே சமயம் 1800-ல் இயற்றப்பட்ட ஒரு சட்டம் உள்ளூர்வாசிகள்- இந்த மண்ணின் சொந்தக்காரர்கள், எவரும் 100 ஏக்கருக்கு அதிகமான காணி வைத்திருக்க முடியாது எனக் கூறியது.

(ஈ) கோல்புரூக் ஆணைக்குழுவின் சீர்திருத்தம் (1835) கோப்பி உற்பத்தியாளருக்கு மிகவும் சாதகமாக இருந்தது. இவ்வாணைக் குழுவின் சிபாரிசினால் கோப்பிப் பெருந்தோட்ட

உற்பத்திக்கு அவசியமான சகல அரசியல், நிர்வாக மாற்றங்களும் செய்து முடிக்கப்பட்டன.

(உ) முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக பல சலுகைகளை அரசாங்கம் வழங்கியது. சகல வரிகளும் சுங்கத் தீர்வையும் 12 வருடங்களுக்கு நீக்கப்பட்டன. கண்டி மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் கோப்பிப் பெருந்தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் இராச காரிய சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டனர். கண்டி மாகாணங்களில் இச்சலுகை அமலாக்சப் படுவதை கமிஷனர் சபை எதிர்த்தது. ஏனெனில் மலிவாக பாதைகள் அமைப்பதற்கு இந்தச் சேவை அங்கு பயன்படுத்தப்பட்டது.

(ஊ) ஆள்பதிகள் கோப்பி உற்பத்தியில் உற்சாகமாக ஈடுபட்டமை பல சலுகைகளை சுலபமாகப் பெற்றுக் கொடுத்தது. அத்துடன் அரசாங்க பாதுகாப்பை அது உத்தரவாதப் படுத்தியது.

(எ) கோப்பிக்கான நிலம் மிகவும் மலிவான விலைக்கு வழங்கப்பட்டது அப்போது ஒரு ஏக்கருக்கு 5 சிலிங் (கிட்டத்தட்ட 25 சதம்) மாத்திரமே. அதுவும் அளவை கட்டணமாக (Survey Charge) அளவிடப்பட்டது.

(ஏ) கோல்புருக் சீர்திருத்தம் அரசாங்க ஊழியர்களின் மேலதிக வருமானத்தை வெகுவாகக் கட்டுப்படுத்தியது. (உதாரணம்—அரச நிர்வாக உத்தியோகத்தர்களின் சம்பளத்தைக்குறைத்தமை, அவர்களது பென்சன் உரிமையைப் பறித்தமை) இதனுல் அவர்கள் மேலதிக வருவாய் நாடி கோப்பி உற்பத்தியில் ஈடுபட்டனர்.

(ஐ) அரசநிர்வாக உத்தியோகத்தர்கள்வியாபாரத்தில் ஈடுபடக் கூடாதென சட்டம் கூறியது. ஆனால் விவசாயத்தில் ஈடுபடுவதை அச்சட்டம் தடை செய்யவில்லை.

இவ்வாறு கோப்பி உற்பத்திக்கான அகநிலைச் சூழல் சிறப்பாக அமைந்த அதே சமயம் சர்வதேச நிலைமையும் சாதகமாக அமைந்தது.

**சாதகமான சர்வதேச நிலைமைகள் :**

1. ஐரோப்பாவெங்கும் அப்போது கோப்பிப் பானம் மிகவும் பிரபல்யமடைந்து வந்தது. கோப்பி பருகுவோர் தொகை அதிகரித்து வந்தது.

2. மேற்கிந்தியத் தீவுகளில் தொழிற் தகராறு காரணமாக கோப்பி உற்பத்தி திடீரென வீழ்ச்சியடைந்தது. இதனால் இலங்கைக் கோப்பிக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது.

3. இங்கிலாந்து, இலங்கை கோப்பி மீது விதித்திருந்த இறக்குமதித் தீர்வையை 1835-ல் குறைத்தது.

எனவே மலைநாடுகளில் பரவலாக, மிக வேகமாக கோப்பிப் பெருந் தோட்டங்கள் உருவாயின.

**வேகமாகப் பரவிய கோப்பிப் பெருந்தோட்டம் :**

கோப்பி உற்பத்தியில் லாப வேட்டைக்காரர்களுக்கிருந்த ஆர்வமும் அவசரமும் எத்தகையது என்பதை அக்காலத்தில் அவர்களால் போட்டி போட்டுக்கொண்டு வாங்கப்பட்ட காணியின் அளவைக் கொண்டு அளவிடலாம்.

கோப்பிப்பயிர்ச் செய்கைக்குட்பட்ட நிலப்பரப்பு:

| | | |
|---|---|---|
| 1845ல் | ... | 25,198 ஏக்கர் |
| 1847ல் | ... | 50,071 ஏக்கர் |
| 1848ல் | ... சுமார் | 60,000 ஏக்கர் |
| 1871ல் | ... ,, | 196,000 ஏக்கர் |
| 1878ல் | ... ,, | 273,000 ஏக்கர் |
| 1881ல் | ... ,, | 256,000 ஏக்கர் |

1830-களில் இலங்கையில் இரு மையங்களில் இக் கோப்பிப் பயிர்ச் செய்கை ஆரம்பமாயிற்று. காலி நகரில் இருந்து 16 மைல் தொலைவில் உள்ள உடுகம மலைக்குன்றில் முதலாவது மையம் அமைந்தது. இங்கு கொழும்பு வர்த்தகர்கள் கோப்பிப் பெருந்தோடடத்தை நிறுவினார்கள். கண்டி மாவட்டம் அடுத்த கோப்பி மையமாக அமைந்தது. இங்கு கம்பளை, பேராதனை, தும்பறை ஆகிய பகுதிகளில் கோப்பிப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இவற்றில் காலியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடைந்தது. கண்டியில் வெற்றி பெற்றது. அதிலும் விசேடமாக தும்பறைப் பகுதியில் கம்பளை, பேராதனை ஆகிய இடங்களை விட கூடிய லாபம் பெறப்பட்டது. எனவே மத்திய மாகாணம்கோப்பியின் குவிமையமாக மாறியது.

1838 முதல் 1843 வரை, ஆறு வருடங்களில் சுமார் 130 கோப்பிப் பெருந்தோட்டங்கள் மத்திய மாகாணத்தில் அமைக்கப்பட்டன. இவை யாவும் கண்டி நகரைச் சுற்றி 30 மைல் வட்டத்திற்குள்ளாகவே அமைந்தன. 1845 ஜனவரி 1-ந் தேதி 25, 198 ஏக்கராக இருந்த

கோப்பி 1847 டிசம்பர் 31-ல், அதாவது இரு வருடங்களில், 50,071 ஏக்கராக அதிகரித்தது. அதாவது இருமடங்கானது. (See.K.M. De Silvar A History of Srilanka)

1857-ல் கோப்பி உற்பத்தி சிவனொளிபாத மலை அடிவாரத்தைச் சுற்றி, விசேடமாக டிம்புள்ள பகுதியில் பரவியது. அத்துடன் ஊவாமாகாணத்தில், அப்புத்தளை பகுதிக்கும் விரிந்து சென்றது.

1866-ம் ஆண்டு உலகப் பொருளாதார நெருக்கடி கோப்பி உற்பத்தியை கடுமையாகப் பாதிக்கவில்லை. எனவே 1867 முதல் 1871 வரை கோப்பி உற்பத்தி ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் உள்ள மொரவக்க கோரளைக்குத் தாவியது.

இவ்வாறு அதுவரை மனித குடியேற்றமே இல்லாத மத்திய மலை நாடுகளில் ஆங்காங்கு கோப்பி பயிரிடுவதற்கு போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி பிரதான காரணமாயமைந்தது. ஆள்பதி அண்டர்சன் காலத்தில் (1850-55) கினிகத்தெனயையும், எட்டியாந் தோட்டயையும் இணைக்கும் பாதை அமைக்கப்பட்டு விட்டது. இப்பாதை அம்பகமுவ, கொத்மலை பகுதியில் விளையும் கோப்பியை களனி ஆறு வரை கொண்டு சென்று அங்கிருந்து படகுமூலம் கொழும்புக்கு அனுப்புவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

1867-ல் முதலாவது கொழும்பு- கண்டி ரயில் பாதை அமைக்கப்பட்டது. 1871-ல் கண்டியிலிருந்து பேராதனை ஊடாக நாவலப்பிட்டிக்கு இப்பாதை விரிவாக்கப்பட்டது

1870-களின் இறுதியில் இப்பாதையை நானு ஓயாவுக்கு விரிவாக்கவும் அதேபோல் கண்டியி லிருந்து மாத்தளைக்கு ஒரு ரயில்பாதை அமைக் கவும் திட்டமிடப்பட்டது.

இவ்வாறு 1870-களின் தொடக்கத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கை அதன் உச்ச வளர்ச் சியை அடைந்தது. 1871-ல் 196,000 ஏக் கராயிருந்த அதன் உற்பத்தி 1878-ல் 273,000 ஏக்கராக அதிகரித்தது. ஆனால் இக்காலப் பகுதியில், கோப்பி நோயொன்று பரவி விட்டது. 1880-களில் கோப்பி யுகம் முடிவடைந்தது.

**''இந்தியத் தொழிலாளர் இறக்குமதி''**

வேகமாக விரிந்து செல்லும் கோப்பித் தோட் டங்களுக்கு ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இவர்களை எங்கிருந்து பெறுவதென்ற வினவுக்கு ஏற்கனவே கெப்டன் பேர்ட் ஒரு விடையைத் தேடியிருந்தார். அவரது முன்மாதிரியை இலங்கைப் பிரித்தானிய அரசாங் கம் தொடர்ந்து பின்பற்றியது.

இந்தியாவிலிருந்து உழைப்பாளர்கள் ஏன் இறக்குமதி செய்யப்பட்டனர்? ஏதனால் சிங்கள மக்கள் அத்துறையில் ஈடுபடுத்தப்படவில்லை? இவற்றிற்கான விடையை இனிப் பார்ப்போம்.

**சிங்களவரை ஈடுபடுத்தாததேன்?**

சில வரலாற்றுசிரியர்கள் இவ்வினவுக்கு மிகவும் கொச்சைத்தனமான விடையைக் கூறு கிறார்கள். ''மலைநாட்டில் நிலவிய கடுங்குளி ரிலும் மழையிலும் சிங்களவர் வேலை செய்யத்

தயாராக இருக்கவில்லை. எனவே இந்தியர்கள் ஈடுபட்டார்கள்'' என மிகச் சுலபமாக அவர்கள் விடை கூறி விடுகிருர்கள். இதன் மூலம் சிங்கள மக்கள் இயல்பாகவே சோம்பேறிகள், வேலைக்கு 'லாயக்கற்றவர்கள்' என்ற ஒருவகை இனவாத (Racist) கருத்து உருவாக்கப்படுகிறது. ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. அதற்கான காரணங்களில் பிரதானமானவை பின்வருமாறு:-

1) அப்போது இலங்கையில் நிலவியது நிலப் பிரபுத்துவ சமுதாய அமைப்பாகும். நில வுடமை மேலோங்கியுள்ள சமுதாயத்தில்விவசாயி பிறரிடம் கூலிக்கு வேலை செய்வதைக் கேவல மாகக் கருதுவான். அதனை அடிமைத்தனமென வெறுப்பான். இன்றுகூட கிராமப்புறங்களில் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருப்போர் ''பிறருக்கு வேலை செய்து கை நீட்டி ஊதியம் வாங்குவது கேவலம். அதைவிடச் சொந்த நிலத்தில் பாடு படுவது சுதந்திரமானது. தன்மானம் மிக்கது'' எனக் கூறுவதைக் கேட்கலாம். முன்னர் நில வுடமை அழுத்தம் பெற்றிருந்தபோது இந்த மனோபாவமும், நிலத்துடனை பிடிப்பும், பிணைப் பும் இன்னும் அதிகமாக இருந்தது. நிலத்தை விட்டு விவசாயிகள் தாமாக எளிதில் விடுபடுவ தில்லை. மூலதனத்துவ உற்பத்தி முறை-அதாவது கூலிக்கு உழைப்பை விற்கும் செயல் அவர்களைக் கவருவதில்லை. பொதுவாக, அவர் கள் தாமாகத் தம்மைத் தொழிலாளர்களாக அர்ப் பணிப்பதில்லை. இதனுற்ருன் ஐரோப்பாவில் இயந்திரக் கைத்தொழில் புரட்சி நடைபெற்ற போது நிலத்தை விட்டு விவசாயிகள் பலவந்த

மாக வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட விவசாயிகளை பசியாலும், பட்டினிச்சாவாலும் பதப்படுத்தியே தனக்குத் தேவையான உழைப்பாளர் அணியை மூலதனத்துவம் உருவாக்கிக் கொண்டது எல்லா நிலவுடைமைச் சமுதாயத்திலும் நிலவிய இதே மனோபாவந்தான் சிங்கள விவசாயிகளிடமும் காணப்பட்டது. அவர்கள் நிலவுடைமைச் சித்தாந்தங்களாலும் (ideology), உற்பத்தி உறவினாலும் நிலத்தோடு பிணைக்கப்பட்டிருந்தார்கள். எனவே கோப்பித் தோட்டங்களில், மூலதனத்துவ உற்பத்தியில், கூலிகளாக வேலை செய்ய அவர்கள் விரும்பவில்லை. இதனைக் கோப்பிப் பெருந்தோட்ட ஆரம்பகர்த்தா ஒருவரின் கூற்றை தனது நூலில் கே.எம்.டி. சில்வா இவ்வாறு ஆதாரம் காட்டுகிறார்: ''பொது நியதியாக அவர்களுக்கு (கண்டியர்களுக்கு) தமது சொந்த வயல்கள், சொந்த மாடுகள், எருதுகள், பழத்தோட்டங்கள் இருந்தன. இவற்றைப் பராமரிப்பதிலும், நிர்வகிப்பதிலும் இவர்கள் முழுக்கவனத்தையும் செலுத்தினார்கள். இவர்களது தேவைகள் சுலபமாக சமாளிக்கப்பட்டன. அவர்கள் தமது மனைவிமார்களுக்கு புதிய ஆடை ஒன்றை பரிசளிக்க விரும்பும் போதும், ஒரு துப்பாக்கி வாங்க நினைக்கும் வேளையிலும்......மாத்திரமே கோப்பித் தோட்டங்களில் வேலை செய்தனர். அத்தகைய நிலைமைகள் இல்லாதபோது கோப்பித்தோட்டங்கள் அவர்களை ஈர்க்கவில்லை.''

''அவர்கள் தமது பெற்றோர் வழி வந்த நிலத்தோடு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர்....

மேலும் பிறருக்குக் கீழ் கூலிக்கு வேலை செய்வதைத் தமது தேசிய உணர்வுக்கு ஒவ்வாத செயல் எனக் கருதினர். அவ்வாறு வேலை செய்வதை அடிமைத்தனம் என நினைத்தனர்''.

2. பிரிட்டிஷ்காரன், ஐரோப்பாவில் செய்ததுபோல நிலத்தில் இருந்து கண்டிய விவசாயிகளை விரட்டி அடித்து அவர்களைக் கொண்டுதனது உழைப்பாளர் அணியை உருவாக்கிக் கொள்ள எத்தனிக்கவில்லை. மாருக, தமக்கு கோப்பிப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான நிலத்தை அவர்களிடம் இருந்து அபகரித்துக் கொண்டு, வேறு இடங்களில் அவர்களைக் குடியேற்றுவதையே அவன் தனது கொள்கையாகக் கொண்டிருந்தான். இதற்கு மூன்று பிரதான காரணங்களைக் கூறலாம். ஒன்று, பெருந்தோட்டப் பொருளாதாரம் பெரும்பாலும் அநேக நாடுகளில் வெளிநாட்டு உழைப்பாளரின் மீதே ஆதாரப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் பருத்தித் தோட்டங்கள் அடிமை நீக்ரோக்களினதும், மலேசிய ரப்பர்த் தோட்டங்கள் சீனத் தொழிலாளரதும், பிஜித் தீவின் கரும்புத் தோட்டங்கள் இந்திய உழைப்பாளரதும், மலிவான உழைப்பிலேயே தங்கியிருக்கின்றன. இப்படி இன்னும் பல நாடுகளில் இதற்கான உதாரணத்தைக் காண முடியும். ஏனெனில் உள்நாட்டில் ஏனைய மக்களுடன் ஒட்டமுடியாத, வேறுபட்ட அந்நிய மக்களை நவீன அடிமைத்தனம் பொருந்திய பெருந்தோட்டத்துறையில் ஈடுபடுத்துவதன் மூலமே, கூடுதலான லாபத்தை சுலபமாக ஈட்டக்கூடியதாய் இருந்தது. ஏனைய பல தொழிற்சாலைகளைப் போல இவ்வுற்பத்தி நவீன இயந்திரங்

களை பெருமளவு சார்ந்திருக்கவில்லை. ஏராளமானோரது தேர்ச்சியற்ற உழைப்பின் மீதே பெருந்தோட்டம் ஆதாரப்பட்டிருந்தது. எனவே எவ்வளவுக்கெவ்வளவு கூலி குறைவாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு லாபம் கிடைத்தது. வெளிநாட்டில் இருந்து தொழிலாளரை கொண்டு வந்து இத்துறையில் ஈடுபடுத்துவதால் அவர்களை வேறு துணை எவருமற்ற நவீன அடிமைகளாக, குறைந்த வாழ்க்கைத் தரத்தில் வைத்துக் குறைவான கூலி வழங்கிக் கூடிய நேரம் வேலை வாங்க முடிந்தது. எண்ணிக்கையில் அதிகமான தொழிலாளர்கள் ஒரே இடத்தில். ஒரே துறையில் குவிக்கப்படும்போது அத்தொழிலாளர் விரைவில் நிறுவனமையப்படவும் தீவிரமாகப் போராடவும் கூடிய நிலைமை சாதகமாக இருக்கும். வெளிநாட்டுத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளரில் இருந்து தனிமைப்படுத்தவும், விசேடமான நிர்வாக அமைப்புகளின் மூலமும் அடக்குமுறை மூலமும் அத்தகைய "ஆபத்தை" மூலதனவாதிகளால் தடுக்க முடியும். இவையே பெருந்தோட்டத் துறையில் வெளிநாட்டுத் தொழிலாளர் ஈடுபடுத்தப்பட்ட காரணங்களாகும். இதே காரணங்களே இலங்கைப் பெருந்தோட்டங்களில் "இந்தியத் தொழிலாளர்" ஈடுபடுத்தப்பட்டதற்கான காரணங்களுமாகும்.

இரண்டு, கண்டிய சிங்களவரை அதிகம் சீண்டிவிட பிரிட்டிஷ்காரன் விரும்பவில்லை. 1818, 1848 ஆகிய ஆண்டுகளில் அங்கு வெடித்த கலகங்களையும், அவற்றை அடக்குவதற்கு அவன் பட்ட சிரமமும் அவனுக்குத்

தெரியும். போதியளவு போக்குவரத்து தொடர்பு சாதனங்கள் இன்னும் வளர்ச்சி யடையாத கண்டியப் பிரதேசத்தில், இயற்கை அரண் மிகுந்த அப்பகுதியில் சிங்கள மக்கள் அதிருப்தி கொண்டெழுந்தால் நிலைமை என்ன வாகும் என்பதை அவன் அறிந்து வைத்திருந் தான். எனவே அவர்களது வாழ்க்கை முறையை அவன் பலவந்தமாக மாற்றி யமைக்க விரும்பவில்லை.

மூன்று, இராச காரிய சேவையினால் அவர் களது உழைப்பை, கூலி வழங்காமல் பெற்று, நீண்ட பாதைகள் அமைத்ததால் அவ் வுழைப்பை பெருந்தோட்டத்தில் ஈடுபடுத்த விரும்பவில்லை.

**இந்தியாவிலிருந்து தொழிலாளர் இறக்குமதி செய்யப்பட்டதேன்?**

இனி இந்தியாவில் இருந்து தமிழர்கள் தருவிக்கப்பட்டதற்கான காரணத்தைப் பார்ப் போம். 1) பிரிட்டிஷ்காரர் ஆரம்பத்தில் சீனர் களை வேலைக்கமர்த்துவது பற்றிச் சிந்தித்தனர். ஆனால் அதற்கு அதிகச் செலவாகும் என்ற காரணத்தினால் அம்முயற்சி கைவிடப்பட்டது. தென் இந்தியா இலங்கைக்கு அருகில் இருந்த படியால் அதிகச் செலவின்றி தமிழர்களைக் கொண்டு வர முடிந்தது. 2) இந்தியாவும், இலங்கையும் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமையால் இதனைச் சுலபமாகச் செய்யக் கூடியதாய் இருந்தது. 3) இந்தியாவில் அப் போது கடும் பஞ்சமும், வறட்சியும் நிலவியதால் அங்கிருந்து மக்களை ஆசை வார்த்தைகள் கூறி

அழைத்து வரக் கூடியதாய் இருந்தது. தமிழ் நாட்டில், சில மாவட்டங்களில் இக்காரணத்திற்காக செயற்கையான முறையில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுத்தப் பட்டது. அப்போது மலையகத் தொழிலாளரின் மூதாதையர் வாழ்ந்த பகுதிகளில் நிலவரி கிஸ்தி முறை கடுமையாக இருந்தது. இந்த கிஸ்திமுறை அவர்களை கடன்காரர்களாகவும் கடும் தண்டனைக்குள்ளாகுபவர்களாகவும் ஆக்கியது. இத்தொல்லையில் இருந்து மீள்வதற்கு ஒரு மாற்று வழியாக இலங்கைக்குத் தப்பி ஓடுவதை அவர்கள் கருதினர்.

இந்நிலைமைகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷார் தென்னிந்தியாவிலிருந்து "மலிவான கூலிகளை" வரவழைப்பதற்கு பல வஞ்சகமான உபாயங்களைக் கையாண்டனர்.

தமிழ் தரகர்களை இப்பணிக்கு அவர்கள் ஈடுபடுத்தினர். இத்தரகர்கள தென் இந்தியர்களை ஆசைகாட்டி, ஏமாற்றி அழைத்து வந்தனர். சில இனத் துவேசிகள் கூறுவதைப் போல "மலையகத் தமிழர்கள்" இந்தியாவிலிருந்து தாமாக விரும்பி வந்தவர்கள் அல்ல. வஞ்சகமான முறையில் வரவழைக்கப் பட்டவர்கள். இதைவிட முக்கியமான விஷயம் என்னவென்ருல் இலங்கைக்கு மாத்திரமல்ல; பர்மா, மலேயா, மேற்கிந்தியத் தீவுகள், பிஜீ தீவுகள் போன்ற பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுக்கு இவ்வாறு லட்சக்கணக்கானவர்களை அழைத்துச் செல்லும்போது அவ்வவ் நாடுகளின் ஏனைய இனங்களுக்கு வழங்கப்

படுகின்ற சகல உரிமைகளும் சலுகைகளும் இவர்களுக்கும் வழங்கப்படும் என்ற உத்தர வாதத்தின் மீதே இவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆரம்பத்தில் தொழிலாளர்கள் திருநெல் வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங் களில் இருந்தே திரட்டப்பட்டனர். இவர்களில் மிகப் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட வகுப்பு களைச் சேர்ந்தவர்களாவர்.

கோப்பிப் பயிர்ச் செய்கை அறிமுகப் படுத்தப்பட்ட 1820-களுககு முன்னமே மிகச் சிறு அளவில் தென் இந்தியாவிலிருந்து ''கிஸ்தி'' க்கும் நிலப் பிரபுக்களின் கொடுமைக் கும் அஞ்சித் தமிழர்கள் இலங்கை வந்துள்ளனர் என்பதற்கு சான்றுகள் உள்ளன. அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் குடியேறி நாளடைவில் கலந்திருக்கலாம். சில பகுதிகளில் தனிச் சமூ கங்களாக உருவாகி இருக்கலாம். (உடப்பு பகுதி இவ்வாறு உருவானதாக இருக்கலாம்) ஆனல் பாரிய அளவில் அவர்கள் வரத் தொடங்கியது இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பமான பின்னரே என் பதையும் மலையகத் தமிழர் அல்லது ''இந்தியத் தொழிலாளர்'' என்று அழைக்கப்படுபவர் இவர் களே என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு, சிறு தொகையாக ஆரம்பித்த இவர்களின் வருகை விரைவில் இடையருத பாய்ச்சலாகி விட்டது. இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

**இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட**
**''இந்தியத் தொழிலாளர்''**

| | | | |
|---|---|---|---|
| 1842-ல் | — | 14,000 | பேர் |
| 1843-ல் | — | 31,000 | பேர் |
| 1844-ல் | — | 71,000 | பேர் |
| 1845-ல் | — | 67,000 | பேர் |

**இந்தியத் தொழிலாளர்**
**தொகையின் வளர்ச்சி**

| | | | |
|---|---|---|---|
| 1827-ல் | — | 10,000 | பேர் |
| 1847-ல் | — | 50,000 | பேர் |
| 1877-ல் | — | 146,000 | பேர் |

**தொடக்கமே ஒரு துயரக் கதை**

இவர்களை இந்தியாவிலிருந்து வஞ்சகமான முறையில் அழைத்து வந்தபோது இவர்கள் அனுபவித்த துயரங்கள் அமெரிக்காவுக்கு அடிமைகளாக நீக்ரோக்கள் பிடித்துச் செல்லப் பட்டபோது அவர்கள் அனுபவித்த துயரங் களுக்கு எவ்விதத்திலும் குறைவானதல்ல.

தங்களுடைய கிராமங்களில் இருந்து இராமேஸ்வரத்திற்கும் தட்டைப்பாறைக்கும் (தொண்டிக்கருகில்) வழியெல்லாம் நடந்தே வந்தனர். வழியில் தாம் கொண்டு வந்த உடமைகளை பல சமயங்களில் திருடர்களிடம் பறிகொடுத்து வெறுங்கையோடு, வள்ளங்கள் மூலம், இலங்கைக்கு வந்து சேர்ந்தனர். தலைமன்னாரிலிருந்து அல்லது அரிப்பிலிருந்து, வனாந்தரங்களில், வனவிலங்குகளின் அச்சு றுத்தலுக்கும், மலேரியா நோயின் பயங்கரத் திற்கும் (அப்போது மலேரியா நோய் கோரத்

தாண்டவமாடியது) நடுவே அவர்கள் போதிய உணவோ, உடையோ இன்றி பல வாரங்கள் தொடர்ந்து நடந்தனர். அவர்கள் பிரயாணம் செய்த பாதையில் பல இடங்களில், பல மைல் தூரத்திற்கு நீர் கிடைக்காது. வழியில் செத்து மடிந்தோரின் சடலங்கள் வன விலங்குகளுக்கு உணவாக விடப்பட்டன. தாய்மார் இறந்த பல சமயங்களில் அவர் களது கைக்குழந்தைகளும் அவர்களது பிரேதத் தின் அருகே நிராதரவாக விட்டுச் செல்லப் பட்டன.

தென் இந்தியாவின் கடும் வெப்பக்கால நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட குளிர் மிகுந்த மலை நாட்டில் சோர்வுற்ற நிலையில் இவர்கள் குடியமர்த் தப்பட்டபோது அவர்களில் அநேகர் நோயாளி யானார்கள். குறுகிய காலத்துள், குறைந்த செல வில், கூடிய லாபம் ஈட்டுவதே தோட்டத் துரை மாரின் நோக்கமாக இருந்தது. எனவே அவர்கள் இம்மக்களின் சங்கடங்களைப் பற்றிக் கவலைப் படவில்லை சில சமயங்களில் $10 \times 10$ அடியுள்ள அறையொன்றில் 10 பேர் அடைக்கப்பட்டனர். இறந்தோரின் சடலங்கள் பயிர்களுக்குப் பசளையாக்கப்பட்டன இவர்களது ஆட்சேபனை களுக்கு சாட்டை அடிகள் பதிலாகக் கிடைத் தன. நோயாளிகள் கூட வேலை செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். மருத்துவ வசதி எதுவும் பொருட் படுத்தத் தக்க அளவில் இருக்கவில்லை.

இத்தகைய மிலேச்சத்தனமான சூழலில் நூற்றுக்கு 40 பேர் வரை ஆரம்பத்தில் மரித்ததாக நம்பப்படுகிறது. இத்தகைய

மரண வீதத்தை ஆராய்வதற்காக 1826-ல் ஒரு கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது. 1841-ம் ஆண்டுக்கும் 1849-க்கும் இடையில் குடியேறியவர்களில் 70,000 பேர் அல்லது 25 சதவீதத்தினர் மரணமடைந்தனர் எனக் "கொழும்பு ஒப்சேர்வர்" அறிவித்தது.

இவ்வாறு கொடியமுறையில் கொண்டுவரப் பட்ட தொழிலாளர் குறைந்த சாதியினராக இருந்தனர். இவர்களை நிர்வகிப்பதற்கு உயர் சாதியினர் ஈடுபடுத்தப்பட்டனர். இவ்வாறு நிலப் பிரபுத்துவ சாதி அமைப்பை எவ்வாறு பெருந்தோட்டங்களில் வெற்றிகரமாக பயன்படுத் துவது என்பதே அன்றைய வெள்ளைத் துரை மாருக்கு நிர்வாகம் சம்பந்தமாக வழங்கப் பட்ட ஆரம்பப் பாடமாக இருந்தது.

தொழிலாளர்கள் கல்வி அறிவற்றவர் களாகவும், தேர்ச்சியற்ற பாமரர்களாகவும் இருக்கக்கூடிய விதத்திலும், நிர்வாகிகள் கல்வி அறிவுள்ளவர்களாகவும், தேர்ச்சி பெற்றவர் களாகவும் இருக்கக்கூடிய விதத்திலும் பெருந் தோட்டத்துறை அமைப்பு செய்யப்பட்டது. இதில் அறுதிப் பெரும்பான்மையினரான தொழிலாளரிடம் நிர்வாகம் எதிர்பார்ப்பதெல் லாம் தமது கட்டளைகளை நிறைவேற்றக்கூடிய, அடிமை மனோபாவம் பொருந்திய, உழைப்பு ஒன்றைத்தான்.

ஏனைய மக்களிடம் இருந்து தனிமைப் படுத்தப்பட்டு, ஒருவகை இராணுவ முகாம் போன்ற தோட்ட நிர்வாக அமைப்பின் கீழ்

கைதித் தொழிலாளராக வைக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர் பொது அரசியல் வாழ்விலும் ஏனைய மக்களிடமிருந்தும் அந்நியப்பட்டிருந்தனர்.

**"கூலி ஏற்றுமதிக்கு" எதிர்ப்பு:**

இலங்கைக்கு தொழிலாளர் ஏற்றுமதி செய்யப் படுவதையும் அவர்கள் அடிமைகளாக நடத்தப்பட்டு அனுபவிக்கும் துயரங்களையும் எதிர்த்து இந்தியாவிலும், இங்கிலாந்திலும் மனிதாபிமானிகள் குரலெழுப்பினர். எனவே இந்திய அரசாங்கம் 1839-ல் சட்டத்தொடர் 14-ம் விதியை நிறைவேற்றி இலங்கைக்குப் பயிற்றப்படாத தொழிலாளர்கள் ஏற்றுமதியைத் தடை செய்தது. (இந்தியாவிலும், இங்கிலாந்திலும் குடியேறும் தொழிலாளர்களின் நலனை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென "எவாஞ்சலிகல்" குழுக்கள் (Evangelical Groups) கிளர்ச்சி செய்தன.)

பெருந்தோட்ட உரிமையாளரின் வற்புறுத்தலினாலும் இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக இந்திய அரசாங்கத்திடம் இத்தடையை நீக்குமாறு மன்றாடியதனாலும் சில அடிப்படை வசதிகளை வழங்க அவை உறுதியளித்ததன் பேரிலும் 1847-ல் இந்தியா இத்தடையை நீக்கியது.

**கோப்பிப் பயிர்ச்செய்கையின் இயல்பு:**

கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு பெரிய அளவில் மூலதனமும், நவீன தொழில் நுட்பமும் அவசியமில்லை. எனவே அரசாங்க

ஊழியர்களும் வசதிபடைத்த உள்ளூர்வாசிகளும் அத்துறையில் முதலீடு செய்தனர். அதைவிட, கோப்பித் தோட்டங்களில் வருடந்தோறும் சீராக வேலைவாய்ப்பு கிடைப்பதில்லை. கோப்பி பிடுங்கும் காலங்களில் மாத்திரமே அதிகளவு மனிதக்கரங்கள் தேவைப்படும். எனவே தென்னிந்தியாவிலிருந்து கோப்பி அறுவடைக்குச் சென்று, கோப்பித் தோட்டங்களில் வேலை ஓய்ந்ததும், தமது வயல்களுக்குத் திரும்பி விவசாயத்தில் ஈடுபடக்கூடிய நிலைமை இருந்தது. இதனால் பாரிய அளவில் மலையகத் தமிழர் நிலையாக இலங்கையில் குடியமரவில்லை. இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையில் குடிபெயர்ந்து கொண்டிருந்தனர். இக்குடிப் பெயர்ச்சியை "மிதக்கும் குடிபெயர்ச்சி" (Floating Migration) எனக் கூறலாம். கோப்பி 4000 அடிக்கு மேற்பட்ட உயர்மலைநாட்டில் செழித்து வளரவில்லை. எனவே அப்பகுதிகள் இன்னும் காடாய்க் கிடந்தன.

**கோப்பி நோய்:**

1870-களில் ஏற்பட்ட இலைச்சுருட்டி நோயொன்றினால் (Hemileia vestatrix கோப்பிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்தது இதனால் கோப்பிப் பயிர்ச் செய்கைக்குட்படுத்தபட்ட நிலங்களை என்ன செய்வதென்ற பிரச்சினை தோன்றியது. இப்பிரச்சினைக்கு விடை ஏற்கனவே தயாராக இருந்தது. கோப்பிப் பயிர் செழித்தோங்கிய காலத்தின்போதே வெவ்வேறு பணப் பயிர்கள் பற்றி பரிசோதனை மேற்

கொள்ளப்பட்டன. மேற்கிந்திய தீவின் முன் உதாரணத்தைப் பின்பற்றி இலங்கையைத் தமது பெருந்தோட்டமாக்கும் முயற்சியில் பிரித்தானியர் திவிரமாக ஈடுபட்டனர். இவ்வாறு கரும்பு, தென்னை, கொக்கோ, சிங்கோனு, தேயிலை, ரப்பர், இண்டிகோ போன்ற பயிர்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இவற்றில் கோப்பியின் இடத்தை நிரப்பக் கூடிய, அதாவது கோப்பி வளரக்கூடிய காலநிலைச் சூழலில் உற்பத்தியாகக்கூடிய பயிரை அவர்கள் தேடினர். இவ்வகையில் ஈடு செய்யக்கூடிய சிங்கோனு உற்பத்தி வெற்றி தரவில்லை. மத்திய கோட்டு வெப்பத்தில் தேயிலை வளராது என்ற நம்பிக்கை அப்போது நிலவியது. ஆனல் ஜேம்ஸ் டெய்லர் 1867-ல் இத்துறையில் அடைந்த வெற்றி இம்முடிவை மாற்றி அமைத்தது. அதன் பின்னர் கோப்பியின் இடத்தை தேயிலை நிரப்பியது.

கோப்பி நோய் முதன் முதலாக மடுல்சீம பகுதியில் 1869-ம் ஆண்டு தாக்கத்தொடங்கியது. அடுத்த பத்தாண்டுகளில் ஏனைய பகுதிகளுக்கும் அது வேகமாகப் பரவியது. 1880-களின் தொடக்கத்தில் இந்நோய் கோப்பி உற்பத்தியை முற்ருக முடிவுக்குக் கொண்டு வந்தது ஊவா பிரதேசத்தில் மாத்திரம் இந்நோய் வேகமாகப் பரவவில்லை. அங்கு 1880 வரை தாக்குப் பிடித்தது.

கோப்பிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து இந்தியத் தொழிலாளர்களின் வெளியேற்றம் மிக அதிகமாக இருந்

தையும் கோப்பி யுகத்தில் நிரந்தரக் குடியேற்றம் குறைவாக ஏற்பட்டதையும் பின் வரும் புள்ளி விபரம் நிரூபிக்கிறது:-

| | | குடியேற்றம் | வெளியேற்றம் |
|---|---|---|---|
| 1843 | ... | 47028 | 19693 |
| 1851 | ... | 57464 | 31443 |
| 1861 | ... | 68415 | 52185 |
| 1871 | ... | 102511 | 82471 |
| 1881 | ... | 57850 | 52752 |

## காலகட்டம் - 2 :
## தேயிலையின் ஆரம்ப காலம்-1880 முதல் 1920வரை வெற்றிகரமான தேயிலை உற்பத்தி:

1867-ல் ஹேவாஹெட்டயில் உள்ள லூல் கந்தலா என்ற இடத்தில் ஜேம்ஸ்டெய்லர் என்பவர் 50 ஏக்கர் நிலத்தில் வெற்றிகரமாக தேயிலையை உற்பத்தி செய்தார். இதனைத் தொடர்ந்து படிப்படியாக இலங்கை ''லிப்டனின்'' தேயிலைத் தோட்டமாக மாற்றமடைந்தது.

தேயிலை கோப்பியைப் போல சாதாரண மனிதனின் உற்பத்தியல்ல. தேயிலை உற்பத்திக்கு பெரிய தொழிற்சாலைகளும் நவீன தொழில் நுட்பமும் அதேசமயம் பெருமளவு நிரந்தரமான தேர்ச்சியற்ற தொழிலாளர் அணியும் தேவை. இதனைப் பெரும் மூலதனம் படைத்த இராட்சத நிறுவனங்களே மேற்கொள்ள முடியும். எனவே தேயிலை உற்பத்தி இலங்கை ஏகாதிபத்திய கம்பெனிகளின்

இரும்புப் பிடிக்குள் கொண்டு வரப்பட்டது. சார்பு மூலதனத்துவம் இலங்கையில் வேகமாக வளரலாயிற்று. இதே காலகட்டத்தில் தான் சர்வதேச அரங்கில் மூலதனத்துவம் ஏகாதிபத்தியமாகப் பரிணமம் அடைந்தது. அந்தச் சர்வதேசிய ஏகபோக சங்கிலியுடன் இலங்கையும் இவ்வாறு பிணைக்கப்பட்டது.

தேயிலைத் தோட்டங்களில் வருடம் முழுவதும் வேலைகள் இருந்தபடியால் நிலையான தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இதனால் பல்வேறு காரணங்களினால் இந்தியாவிற்கு மலையகத் தொழிலாளர் வெளியேறிய போதும் காலப்போக்கில் இந்தியாவுடனான தொடர்பைத் துண்டித்துக்கொண்டு மலையகத்தில் நிலையாக வாழும் மலையகத்தவரின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது.

தேயிலைப் பயிர்ச் செய்கையினால் ஏற்பட்ட மற்றொரு பிரதான மாற்றமென்னவென்றால் ஆரம்பத்தில் மலையகத் தாழ் நிலங்களில் மேற்கொள்ளப்பட்ட இப் பயிர்ச்செய்கையானது உயர் மத்திய மலைநாடுகளுக்கும் விரைவில் பரவியது என்பதுதான். தேயிலை உற்பத்திக்கு உயர் மத்திய மலைநாட்டில் காணப்பட்ட காலநிலை உகந்ததாக இருந்தபடியால் அதுவரை மனித குடியேற்றம் எதுவும் நிகழ்ந்திராத உயர்மத்திய மலை நாடு தேயிலைப் பயிர்ச் செய்கையின் குவி மையமாக அமைந்தது. கடல்மட்டத்திலிருந்து 3000 அடி முதல் 6000 அடிவரை இடைப்பட்ட பகுதியிலேயே சிறந்த ரகத் தேயிலை விளைந்தது. பெரும்

பாலான தேயிலைத் தோட்டங்கள் இப்பகுதியிலேயே அமைந்தன.

1870-களில் ஹட்டன் பகுதியிலுள்ள டிக்கோய, டன்பார், தரவல போன்ற தோட்டங்களும் 1885-ல் பதுளைப்பகுதியில் நமுனுகுல, பசறை, மொனராகல, ஒப்டன், மடுல்சீம, போன்ற தோட்டங்களும் 1886-ல் நுவரேலியா, அப்புத்தளைப் பகுதிகளிலும் 1894-ல் பண்டாரவளைப் பகுதிகளிலும் 1924-ல் இரத்தினபுரி, ஹல்துமுல்ல, தம்பதென்ன போன்ற தோட்டங்களும் ஆரம்பமாகின.

**தேயிலை உற்பத்தியின் வளர்ச்சி :**

1880-களின் பின்னர் தேயிலை உற்பத்தியும் அதையொட்டி மலையகத் தொழிலாளர்களின் வருகையும் அதிகரித்துச் சென்றதை பின்வரும் புள்ளி விபரம் காட்டுகிறது.

தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட நிலத்தின் அளவு வேகமாக பின்வருமாறு அதிகரித்துச் சென்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1878-ல் | தேயிலை | ... | 4700 | ஏக்கர் |
| 1905-ல் | ,, | ... | 384000 | ஏக்கர் |
| 1917-ல் | ,, | ... | 426000 | ஏக்கர் |
| 1953-ல் | ,, | ... | 574250 | ஏக்கர் |
| 1971-ல் | ,, | ... | 597171 | ஏக்கர் |

இவ்வேகம் 1930-களின் பின்னர் படிப்படியாகக் குறைந்து 1940-களில் ஸ்தம்பித்த நிலையை அடைந்தது.

மலையகத் தமிழர்களின் வருகையும் இதற்கேற்ப அதிகரித்துச் சென்றது.

| ஆண்டு | இலங்கையின் மொத்த சனத்தொகை | மலையகத் தமிழர்களின் மொத்த சனத்தொகை | மலையகத் தமிழர் சதவீதம் |
|---|---|---|---|
| 1911 | 4,106,400 | 531,000 | 12.9 |
| 1921 | 4,488,600 | 602,700 | 13.4 |
| 1931 | 5,306,400 | 818,500 | 15.4 |
| 1946 | 6,657,300 | 780,600 | 11.7 |
| 1953 | 8,097,900 | 974,100 | 12.1 |
| 1963 | 10,582,000 | 1,123,000 | 11.6 |
| 1971 | 12,689,900 | 1,174,000 | 9.3 |

இவர்களில் பெருந்தோட்டத் துறையில் ஈடுபட்டோர்:

| | | |
|---|---|---|
| 1946 | 665,855 | 88.8 சதவீதம் |
| 1953 | 815,000 | 83.6 ,, |
| 1963 | 932,090 | 82.5 ,, |
| 1971 | 951,785 | 81.9 ,, |

குறிப்பு: 1911-ல் மலையகத் தமிழர்களே (530,983) ஏனைய பகுதி தமிழர்களைவிட (528,024) எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர்.[4]

தேயிலைப் பயிர்ச் செய்கையால் இலங்கையில் சமூகப் பொருளாதார அமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாயிற்று. முன்னர் கண்டியிலிருநது கொழும்பிற்கு நிலம் மார்க்கமாகக் கோப்பியை மாட்டு வண்டிகளில் அனுப்பும் செலவு, கொழும்பிலிருந்து இங்கிலாந்திற்கு கடல் மாரக்கமாக அதனை அனுப்புவதற்காகும் செலவை விட அதிகமாக இருந்தது. எனவே போக்குவரத்துப் பாதைகள் வேகமாக அமைக்கப்பட்டன. வங்கிகள், தபால் சேவை ஆகியன வளர்ச்சியுற்றன. இக்காலப் பகுதியில் சூயஸ் கால்வாய் அமைக்கப்பட்டு விட்டது. காலி, கொழும்பு துறைமுகங்களை நோக்கி ஏராளமான கப்பல்கள் வரத் தொடங்கின. எனவே ஏதாவது ஒரு துறைமுகம் விரிவாக்கப்படவேண்டியதேவை ஏற்பட்டது. ஆள்பதி கிரகரி கொழும்பைப் பிரதான துறைமுகமாக்க விரும்பினர். எனவே கொழும்புத் துறைமுகம் விரிவாக்கப்பட்டது. கொழும்பு தலைநகரம் வர்த்தக மையமாக வளர்ச்சியுற்றது.

இதனல் அரசாங்கச் சேவையிலும் துறைமுகத்திலும் போக்குவரத்துப் பாதைகள் அமைப்பதிலும் கணிசமான அளவு இந்தியர்கள் ஈடுபட்டனர். கொழும்பிலும், மலையகத்திலும் வியாபாரத் துறை வட்டித் தொழில் ஆகியன விரிவடைந்து

சென்றன. இத்துறையில் பெருமளவு இந்தியர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். நகரங்கள் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து நகர சுத்தி கரிப்பு தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். இவர்களும் இந்தியத் தொழிலாளர்களாகவே இருந்தனர். இதைத் தவிர மலையகத் தாழ் நிலங்களில் கோப்பி, கொக்கோ, இரப்பர் தோட்டங்களை இந்திய வம்சாவளியினர் சிலர் கொண்டிருந்தனர்.

19-ம் நூற்றுண்டின் இறுதியில் ரப்பர் இலங்கையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. ரப்பர் தோட்டங்களிலும் மலையகத் தமிழரே பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

**ரப்பர் பெருந்தோட்டங்கள்:**

ரப்பர் 1877ம் ஆண்டு இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் சிறுசிறு எஸ்டேட்களில் பரிட்சார்த்தமான முறையில் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 1890 களில் பிரித்தானியர்களும் வசதிபடைத்த இலங்கையர்களும் இப்பயிர்ச் செய்கையால் கவரப்பட்டனர். களுத்துறை மாவட்டத்தில் மாத்திரமே தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட இப்பயிர்ச் செய்கை பின்னர் பல பகுதிகளுக்கு, விசேடமாக 1500 அடி உயரத்திற்கு கீழ்ப்பட்ட இடங்களுக்குப் பரவியது. தேயிலைப் பயிர், சனக் குடியேற்றம் முன்னர் நிகழ்ந்திராத உயர் மலைநாட்டில் செழித்தோங்கியது. இதற்கு நேர்மாறுன முறையில் சனத்தொகை அடர்த்தியான மேற்கு, தெற்கு மாகாணங்களில் ரப்பர் பயிர்ச் செய்கை விரிவடைந்தமை பிற்காலத்தில் ஏற்பட்ட நிலமில்லா பிரச்சினைக்கு உத்வேகமளித்தது.

மோட்டார் உற்பத்தி அபிவிருத்தியடைந்த 19ம் நூற்ருண்டின் இறுதியில் ரப்பரின் மதிப்பும், விலையும் அதிகரித்தது. இதனுல் ரப்பர் உற்பத்தி இயல்பாகவே உத்வேகம் பெற்றது. 1905-10 ஆண்டுகளில் ரப்பர் உற்பத்தி வெகுவாக விரிவடைந்தது. உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களே இவ்வுற்பத்தியில் பெருமளவில் ஈடுபட்டனர். ரப்பர்ப் பயிர்ச் செய்கைக்குத் தேயிலையின் அளவு ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்படாத போதும் கணிசமான தொழிலாளர்கள் நிரந்தரமாகத் தேவைப்பட்டனர். தேயிலை உற்பத்தி நூற்றுக்கு நூறு வீதம் தேர்ச்சியற்ற ''மலையகத் தொழிலாளர்களைக்'' கொண்டிருந்தது. ஆனுல் ரப்பர் தோட்டங்களில் சிங்களவரும் வேலை செய்தனர். எனினும் ரப்பர் உற்பத்தித் துறையும் மலையக தொழிலாளர்களையே பெருமளவு கொண்டிருந்தது.

### இந்தியத் தொழிலாளர்களின் வருகையும், வெளியேற்றமும்

இந்தியாவிலிருந்து வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததனுல் அதனை ஒழுங்குபடுத்துவதற்காகவும் அவர்களது நலனைக் கண்காணிக்கவும் தோட்ட நிர்வாகிகள் 1904ல் ''கோஸ்ட் ஏஜன்ஸிஸ்'' (Coast Agency) என்ற பெயரில் அலுவலகங்களை இந்தியாவில் நிறுவினர். இதனை இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தது மாத்திரமல்ல, அவற்றிற்கான செலவில் 25 சதவீதத்தையும் அது வழங்கியது.

இவர்களின் குடிபெயர்ச்சியைப் பொறுத்தள வில் இந்திய அரசாங்கமும், இலங்கைத் தோட்ட முதலாளிமார்களும், ஒரே விதமான கண்ணேட் டத்தைக் கொண்டிருந்தனர். இந்திய அரசாங் கம் வரட்சியும, பஞ்சமும் நிலவிய காலங்களில் இந்தியர்கள் வெளியேறுவதை ஆதரித்தது. பொருளாதார செழிப்பு நிலவும் காலங்களில், அவர்கள் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தியது. இதேபோல் இலங்கைத் தோட்டஉரிமையாளர்கள் பொருளாதார செழிப்புக் காலங்களில் கூடியளவு தொழிலாளர்களை இறக்குமதி செய்வதையும், பொருளாதார மந்தம் நிலவிய காலங்களில் அவர் களைத் திருப்பி அனுப்பவும் முயற்சிகள் செய்தனர். உதாரணமாக 1923 - ல் பெருந்தோட்ட உற்பத்தி யால் பெருமளவு இலாபம் கிடைத்த காலங்களில் இந்தியா இந்தியர்களை வெளியேறுவதைத் தடை செய்தபோது அத் தடைச் சட்டத்தை நீக்குமாறு தோட்ட உரிமையாளர்கள் வேண்டினர். அதே சமயம் பொருளாதார மந்தம் உச்ச நிலையில் இருந்த 1930 களின் முற்பகுதியில் தேயிலை, ரப் பர் திட்டமொன்றை அமுலுக்குக் கொண்டு வந்து உபரியாயிருந்த பெருந் தொகையானேரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பினர். 1937-ல் இதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டது. இவ்விதமாக சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியத் தொழிலாளர்களின் குடி பெயர்ச்சி பெரும்பாலும் தோட்டங்களின் பொரு ளாதார நலன்களாலேயே நிர்ணயிக்கப்பட்டது.

இவர்களுடைய வருகையையும், வெளியேற் றத்தையும் கட்டுப்படுத்தும் திணைக் களம் பின்னர் தொழிற்கட்டுப்பாட்டு அதிகாரி முறையாக மாற்ற

மடைந்து, தற்போது தொழிற் கமிஷன் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. 1914 ல் நோயாளர்கள் தங்குவதற்காக மண்டபம் கேம்ப் திறக்கப் பட்டது.

**கண்டிய விவசாயிகளும், பெருந் தோட்டமும்:**

சிங்கள மக்கள் மத்தியில் பிற்காலத்தில் வளர்க்கப்பட்ட இந்திய எதிர்ப்பு வாதத்திற்கு ஒரு காரணமாக கண்டிய விவசாயிகளின் நிலம் பறிக்கப்பட்டமை கூறப்படுகிறது. ஆனல் உண்மையில் 1930 கள் வரை மலையகத் தமிழருக்கும் கண்டியச் சிங்களவருக்குமிடையே எதுவித சச்சரவோ, தகராறே ஏற்படவில்லை. அதுவரை இந்திய எதிர்ப்புவாதம் அவர்கள் மத்தியில் அத்துணை அழுத்தம் பெறவில்லை என்பதற்குப் பின் வரும் விடயங்கள் சான்று பகர்கின்றன.

1. முற்காலத்தில் இந்திய சிற்றரசர்களின் மகள்மாரை மணப்பதை இலங்கையின் சிங்கள அரசர் பெருமையாகக் கருதினர். பெரிய இடத்தில் பெண் எடுத்த நடுத்தரப் பணக்காரனின் மனேபாவத்திற்கு நிகரான பெருமை இது. கண்டி இராச்சியத்தின் கடைசி அரசனை ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் (1815 வரை ஆட்சி செய்தான்) ஒரு இந்தியத் தமிழன். அவனது உண்மையான பெயர் கண்ணசாமி. இவனை வீழ்த்துவதற்காக பிரித்தானியர் இனவாதத்தைப் பயன்படுத்திய போதும் இந்தியர் எதிர்ப்பு அல்லது தமிழர் எதிர்ப்பு மனேபாவம் சிங்கள மக்கள் மத்தியிலே ஏன், விக்கிரமராஜசிங்கனை வீழ்த்துவதற்குப் பிரித்தானியருக்குத் துணை புரிந்த கண்டிய பிரா

தானிகள் மத்தியிலோ இருக்கவில்லை என்பதை அடுத்த மூன்றுண்டில் அதாவது, 1818ல் வெடித்த வெல்லஸ்ஸ கலகத்தைப் பற்றி ஆராய்ந் தாலே தெளிவாகும். இன்று "சிங்கள இனத் தின்" வீரனுகச் சித்தரிக்கப்படும் 1818 ம் ஆண்டு கலகத்தின் கதாநாயகனுன கெப்பட்டிபொல திசாவ, ஆரம்பத்தில் வெள்ளையனுக்கு விசுவாச மாக இருந்த செல்வாக்குமிக்க கண்டியப் பிரதா னிகளில் ஒருவர். 1818 கலவரத்தின்போது அரச பரம்பரையில் தோன்றிய இந்தியத் தமிழ ரான துரைசாமி என்பவரைத் தேடிப்பிடித்து முடிசூட்டி அரசனுக ஏற்றுக் கொண்டு, கண் டியை மீட்டு அவனது காலடியில் ஒப்படைப்பதே கெப்பட்டிபொலவின் பிரயத்தனமாக இருந்தது. 1815 ல் கண்டிய பிரதானிகள் வெள்ளையருடன் செய்த கண்டி ஒப்பந்தத்தில் கெப்பட்டிபொல யைத் தவிர ஏனைய அனைவரும் தமிழிலேயே கையெழுத்தட்டுள்ளனர். 1915 ல் இலங்கையில் நிகழ்ந்த முதலாவது கலவரமான சிங்கள - முஸ் லீம் கலவரத்தின்போது சிங்கள பூர்சுவாககளுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துரைப்பதற்காக இங்கிலாந்து சென்று திரும்பிய சேர். பொன். இராமநாதனை தேரில் வைத்து வடம் கட்டி இழுத் துச் சிங்களவர்கள் மகிழ்ச்சி கொண்டாடியதும் உயர் சாதியைச் சேர்ந்த இதே இராமநாதன் 1917 ல் நடைபெற்ற ஒரே படித்த இலங்கையருக் கான ஆசனத்துக்கான தேர்தலில் படித்த சிங்கள உயர்சாதி நிலப்பிரபுக்களின் ஆதரவோடு கராவ சாதியைச் சேர்ந்த சிங்களவரான மார்க்கஸ் பெர் ணுண்டோவைத் தோற்கடித்த நிகழ்ச்சியும் இலங் கையில் சாதி உணர்வு வலுப் பெற்றுத் திகழ்ந்த

அளவுக்கு தேசிய இன உணர்வோ மொழி உணர்வோ வளர்ச்சி பெற்றுத் திகழவில்லை என்பதைத்தான் காட்டுகின்றன.

2. வெள்ளையர்களால் கொண்டு வரப்பட்ட மூன்று சட்டங்கள் கண்டிய விவசாயிகளில் பெரும்பாலானோரை நிலத்தை விட்டு விரட்டியது என்பது உண்மையே. 1848, 1897 - களில் நிறைவேற்றப்பட்ட தரிசு நிலச்சட்டம் (Waste Lands Ordinance of 1848, 1897) கண்டி விவசாயிகள் தம் மந்தைகளை மேய்ப்பதற்கான நிலங்களைப் பறிமுதல் செய்துவிட்டது. இதனால் இவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளானார்கள். அது மாத்திரமல்ல. இலங்கையின் இயல்பான மூலதனத்துவ வளர்ச்சியையும் தடை செய்வதில் இச்சட்டம் கணிசமான பாத்திரமாற்றியது. அவர்களை மிகக் கடுமையாகவும் பாதித்தது. அன்று கண்டி ராச்சியத்தின் நில உரிமைக்கான சான்றுகள் வழங்கப்படும் முறை பொதுவழக்கமாக இருக்கவில்லை. அரசனின் பிரதானிகளுக்கும், தளபதிகளுக்கும், போரிலே சிறப்புத் தொண்டாற்றியவர்களுக்கும் மாத்திரமே, சான்றுகளுடன் அரசனால் நிலம் வழங்கப்பட்டிருந்தது. ஏனைய நிலங்கள் யாவும் அரசனுக்குரிய நிலங்களாகக் கருதப்பட்டன. இச்சட்டம் வலுவான சான்றுகளுடன் நில உரிமையை நிலை நாட்டாதவர்களின் நிலங்கள் யாவும் பிரித்தானிய அரசனுக்குச் சொந்தமெனக் கூறியது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் நிலமிழந்தனர். இவ்வாறு 62 சதவீதமான கண்டிய விவசாயிகள் தமது நிலத்தைப் பறிகொடுத்து வேறிடங்களுக்குச் சென்றனர். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை வெள்ளை

யன் வேறிடங்களில் குடியமர்த்தியதையும் அதற்கான காரணத்தையும் முன்னர் ஓரிடத்தில் ஆராய்ந்தோம். 1856-ல் கொண்டுவரப்பட்ட கோயிற் காணிச் சட்டம் (Temple Lands Registration Ordinance No. 10 of 1856) பௌத்த பீடத்தின் பலத்தைக் குறைத்தது. 1897-ல் இயற்றப்பட்ட முடிக்குரிய காணிச் சட்டம் (Crown Lands Ordinance of 1897) காடுகள் உட்பட ஏனைய சகல நிலங்களையும் பிரித்தானிய முடியின் கீழ் கொண்டு வந்தது.

ஆயினும் இவற்றினுல் கண்டி விவசாயிகளுக்கு ஏற் பட்ட பாதிப்பு சில வரலாற்று ஆசிரியர்களால் மிகைப்படுத்தப்படுகின்றன. இவ் வெளியேற்றத்தினுல், பெருமளவு கண்டிய சிங்களவர்கள் உயிர் இழந்ததாகச் சான்றுகள் கிடையாது. மேலும் அவ்வாறு வெளியேறியவர்களுக்கு வேறு இடங்களில் நிலம் பெறுவதற்கு அதிக சிரமம் இருக்கவில்லை. ஏனெனில் அன்றைய சனத்தொகை மிகக்குறைவாக இருந்தது. 1877-ல் இலங்கையின் மொத்த சனத்தொகை 24,00,380 மாத்திரமே. இதில் 1/3 பகுதியினர் கூட கண்டிய ராச்சியத்தில் வாழவில்லை.

இதனை மற்ருெரு வரலாற்று ஆசிரியர் மேலும் கருராகக் கூறுகிருர். "மத்திய மாகாணத்தில் 1850-களின் நடுப்பகுதியில் மொத்த சனத்தொகை 150,000 என மதிப்பிடப்படுகிறது. இதன் அடிப்படையில் பார்த்தால் மத்திய மாகாணத்தில் வாழ்ந்த விவசாயிகளுக்கு போதுமான அளவு விவசாயத்திற்குத் தேவையான நிலம் கோப்பி யுகத்தில்

இருந்தது'' (See.: L.R.U. Jayawardene, "The supply of Sinhalese Labour to Ceylon Plantation, 1830-1930-unpublished PH. D. Thesis, University of Cambridge, 1963)

சிலர் கருதுவதைப் போல மலையகத்திலுள்ள சகல பகுதிகளிலும் அன்று குடியேற்றங்கள் அமையவில்லை. அது மாத்திரமல்ல. கோப்பிப் பயிர்ச் செய்கை செழித்தோங்கிய காலத்தில் அதுவும் ஆரம்ப காலகட்டத்தில்தான் தும்பறை, கொத்மலை போன்ற புராதனச் சிங்கள கிராமங்கள் கோப்பிப் பயிர்ச் செய்கைக்குட்படுத்தப் பட்டன. அப்பகுதியில்கூட பளளத்தாக்குகளில் நெல்வயல்கள் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டன. கோப்பியின் பிற்காலம் மனித நடமாட்டமே இல்லாத மத்திய மலைநாட்டை நோக்கி நகர்ந்ததை ஏற்கனவே பார்த்தோம். இது ஒன்றும் வெள்ளையன் கடைப்பிடித்த பெருந்தன்மையான கொள்கையின் விளைவாக நடந்து விடவில்லை. கோப்பிப் பயிரின் தன்மை அப்படி. அது நெல்விளையும் சேற்று நிலத்தில் விளைவதில்லை.

அன்று நிலப்பிரச்சினை காரணமாக கண்டியச் சிங்களவர்களுக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் இடையே குரோதம் ஏற்பட்டது என்பது ஆதாரமற்ற கூற்றுகும். கிராமவாசிகளின் கால்நடைகள் கோப்பிப் பயிர்களை அழிப்பதும் அதனுல் தோட்ட உரிமையாளருக்கும் கிராமவாசிகளுக்குமிடையே அடிக்கடி தகராறு ஏற்படுவதும் அன்று பொதுவழக்காக இருந்ததே தவிர, தோட்டத்தொழிலாளர்களுக்கும் கிராம விவசாயிகளுக்குமிடையே எவ்விதத்

தகராறும் ஏற்படவில்லை. மாறாக நல்லுறவே நிலவியது. அன்று கோப்பியை எடுத்துச் செல்லும் பிரதான போக்குவரத்துச் சாதனமாக மாட்டு வண்டியே பயன்பட்டது. இவற்றை ஓட்டுவோரும் உரிமையாளரும் சிங்கள கிராமவாசிகளே. அதைத் தவிர தோட்டத்தில் வேலை செய்த மேசன், தச்சன் ஆகிய தொழிலாளர்கள் சிங்களவர்களே இவர்களுக்கிடையில் மிகவும் நல்லுறவு நிலவியது.

தேயிலை யுகத்தில் கண்டிய விவசாயிகளின் நிலத்தை தேயிலைத் தோட்டங்களுடன் பொருத்திப் பார்ப்பது வரலாற்று குருட்டுத்தனமாகும். கோப்பிப் பயிர்ச் செய்கையின் அழிவுடன் தும்பறை, கொத்மலை போன்ற அன்றைய கண்டியர் வாழ்ந்த நிலங்கள் அநேகமாக பெருந்தோட்ட வலையத்தை விட்டு வெளியேறி விட்டன. இவற்றில் தேயிலை உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே இன்று அவை சிங்களக் கிராமங்களாகவே காட்சியளிக்கின்றன. ஏனெனில் தேயிலைக்கு கோப்பியை விட உயரம் கூடிய மலைப் பிரதேசம் உகந்தது.

ரப்பர் உற்பத்தியில் மாத்திரமே நிலைமை வேறு. கோப்பி காலத்தில் கண்டியர் நிலம் பறிக்கப்பட்டது பற்றிய ஒரு சுவாரஸ்யமான வரலாற்றுக் குறிப்பைச் சற்று பார்ப்போம்.

''பொருளாதார மந்தம் நிலவிய 1847-8 ஆண்டு வரை கண்டி இராச்சியத்தின் இதயமாகத் திகழ்ந்த முக்கியமான பகுதிகளில் இருந்து 250,000 ஏக்கர் காணி விற்கப்பட்டன. சில சிங்களவரும் தமிழரும் இவற்றை வாங்கிய

போதும் இவற்றில் பெரும்பாலானவை ஐரோப்பியர்களுக்கே விற்கப்பட்டன. இவ்வாறு பெருமளவு நிலத்தை வாங்கிய பிரித்தானியர்கள் ஊக வணிகர்களாக இருந்தனர். (ஒரு பிரித்தானியர் மாத்திரம் 30, 825 ஏக்கர் நிலம்- ஏக்கர் 5 சிலிங் வீதம்-வாங்கி இருந்தார். ஆனால் அப்போது 50,071 ஏக்கரில் மாத்திரமே கோப்பி பயிரிடப்பட்டிருந்தது. ஆர்.) ஆனால் 1847-8 பொருளாதார நெருக்கடி இந்நிலைமைக்கு ஒரு முடிவு கட்டியது. அதன்பின்னர் முடிக்குரிய காணிகளை வணிகம் பண்ணுவதற்காக யாரும் வாங்கவில்லை. ஏனெனில், விசேடமாக 1950-களின் பின்னர் முன்பு விற்கப்பட்ட நிலங்களிலேயே புதிதாக கோப்பி பயிர் செய்யப்பட்டது. 19-ம் நூற்றுண்டின் நடுப்பகுதியின் பின்னர் தரிசு நிலங்களை வாங்குவதில் குறிப்பிடத்தக்க மாற்ற மொன்று நிகழ்ந்தது. 1868 முதல் 1906 வரைக்குமான இடைக்காலத்தில் ஐரோப்பியரல்லாதவர்களே 72% வீதமான முடிக்குரிய காணிகளை வாங்கினர். இவர்களில் பெரும்பான்மையினர் சிங்களவர். கணிசமான அளவினர் தமிழர். இவ்வாறு விற்கப்பட்ட நிலங்கள் கண்டியப் பகுதியை மாத்திரம் சார்ந்ததல்ல. நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்தது". (See. P. Peebles : "The Transformation of a Colonial Elite—the Mudaliyars of Nineteenth Century Ceylon" —unpublished PH.D.Thesis, University of Chicago, 1973).

(3) பெருந்தோட்டத்திற்கு அருகே இருந்த கிராமங்களில் வாழ்ந்த குயவர்கள், கொல்லர்கள், தச்சர்கள், அங்காடி வியாபாரிகள் ஆகியோரு

டன் தோட்டத் தொழிலாளருக்கு அண்மைக் காலம் வரை நல்லுறவு நிலவி வந்தது. (இதைப்பற்றிப் பின்னர் ஓரிடத்தில் விளக்கப் படும்.) எனவே 1958 வரை மலையகத் தமிழர் களுக்கும், கண்டியச் சிங்களவர்களுக்குமிடையே ஒரு இனக்கலவரமாவது வெடிக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பாக மூன்று பிரதான விடயங்கள் இனவாத வரலாற்று ஆசிரியர் களால் மறைக்கப்படுகின்றன. ஒன்று, கண்டி விவசாயிகளின் நிலத்தை அபகரித்தவர்கள் மலையகத் தமிழர்கள் அல்ல. பிரித்தானியர் களே. இரண்டு, அவ்வாறு சந்தேகத்திற் குரிய, சான்றுகளற்ற, நிலங்களைப் பெருமளவில் அபகரித்தவர்கள் வெள்ளைக் காரர்கள் கூட அல்ல. சிங்கள மூலதனத்துவவாதிகளே. ஆள்பதி கிளிப்பேற் இதனைப் பின்வருமாறு கூறுகிறார்: ''சந்தேகத்திற்குரிய உறுதிப் பத் திரங்களைக் கொண்ட கிராம வாசிகளின் நிலங் களை வாங்கும் பணி பெரும்பாலும் அவர்களது ஊர்வாசிகளாலேயே மேற்கொள்ளப்பட்டது. ("the speculative work of buying up doubtful titles from villagers for the most part conducted by their own countrymen" (See: Sir High Clifford, Some Reflections on the Ceylon Land Question)

பிரித்தானியன் 1815-ம் ஆண்டு கண்டி ராச்சியத்தைக் கைப்பற்றும்போது அங்கு நிலவியது நெல்லுற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட கிராமியப் பொருளாதாரமாகும். கடல் மட்டத்திலிருந்து 3000 அடிக்கு மேற்பட்ட

மலைநாட்டில் குளிர் காரணமாக நெல் வளர முடியாது என்பதையும் எனவே நெல்லை அடிப் படையாகக் கொண்ட சிங்களக் குடியேற்றங் களெதுவும் அப்போது அப்பகுதியில் இருந் திருக்க முடியாது என்பதையும் எளிதில் விளங்கிக் கொள்ளலாம். எனவேதான் உயர் மலைநாட்டில் 200 வருடங்களுக்கு முற்பட்ட ஒரு கட்டடத்தைத்தானும் காண முடியவில்லை. முதன்முதலாக இப்பகுதியில் குடியேறியவர்கள் மலையக மக்களே. அங்கு பெருந்தோட்டத்துறை வளர்ச்சியுடன் ஒட்டி ஏற்பட்ட ஏனைய துறை களில் ஈடுபட்டுள்ள ஏனைய மக்களே அம்மண் ணுக்கு அந்நியர்கள்.[5]

## தோட்டத் துரைமாரின் ராச்சியத்தில்

தோட்ட வேலைக்கு ஆட்களைத் திரட்டியவர் கள் அந்தந்தக் கிராமத்தில் செல்வாக்குள்ள வர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் கங்காணி என] அழைக்கப்பட்டனர். இலங்கைக்கு கொண்டு வருவதற்காக அவர்கள் கிராமத் திலிருந்து ஆட்களைத் திரட்டினுர்கள். இப்படி திரட்டப்பட்ட தொழிலாளர் கோஷ்டி (Gang) அவரது கட்டுப்பாட்டில் இருந்தது. தலைமைக் கங்காணி அல்லது பெரிய கங்காணி சில சில்லறைக் கங்காணிகளை இப்பணியில் தனது ஏஜண்டுகளாக வைத்திருந்தனர். பெரிய கங்காணிகளின் வரையறையற்ற அதிகாரங் களும் அவர்கள் இழைத்த அடக்குமுறைச் சுரண்டல், அட்டூழியங்களும் மிலேச்சத்தன மானவை.

பெரிய கங்காணி முறை :

தொழிலாளி தனது கிராமத்தை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் தான் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காகவும், பிரயாணத்திற்குரிய செலவிற்கும் கங்காணியிடம் ஆரம்பத்தில் கடன் வாங்க நேர்ந்தது. இவ்வாறு இந்தியாவிலிருந்து புறப்படும்போதே, தொழிலாளர் பெரிய கங்காணிக்கு கடன்காரராகினர். இந்த மீளாக் கடன் அவர்களைச் சுரண்டும் ஆயுதமாக பெரிய கங்காணிகளால் பயன்படுத்தப்பட்டது. மேற்கூறிய கடனை விடத் திருமண வைபவங்கள், ஈமச்சடங்குகள், பூப்பெய்தும் வைபவங்கள் எனப் பலவித கடன்களை வாங்கினர். இதைவிட கங்காணிக்குச் சொந்தமான கடைகள், தோட்டங்களில் இருந்தன. அவற்றில்தான், அவர் கூறும் விலை எதுவாக இருந்தாலும், பொருட்களை வாங்க வேண்டும். இவற்றின் கடனும் கணக்கில் சேர்க்கப்படும்.

தோட்டத் துரையிடமிருந்து பெரிய கங்காணியே தனது தொழிலாளர் கோஷ்டிக்குரிய சம்பளத்தை வாங்குவார். அப்பொழுது தோட்டத் தொழிலாளரிடையே 100% கல்வியறிவின்மை நிலவியது. இவர்களது எழுத்தறிவின்மையைப் பயன்படுத்தி, ‘‘வெள்ளைக் கம்பளி’’ வாங்கிய கணக்கு, ‘‘கறுப்பு கம்பளி’’ வாங்கிய கணக்கு என்று கள்ளக் கணக்கெழுதிச் சம்பளத் தொகை முழுவதையும் பெரிய கங்காணி அபகரித்துக் கொள்வார். என்றுமே தொழிலாளியால் அவருடைய கடனில் இருந்து மீள முடியாது.

**துண்டு முறை : (Chit System)**

ஒரு தொழிலாளி ஒரு தோட்டத்தை விட்டு மற்றொரு தோட்டத்திற்கு மாறுவதாக இருந்தால் அல்லது இந்தியா திரும்புவதாக இருந்தால் தோட்டத் துரை ''இவர் தோட்டத்திற்கு கடன் எதுவும் கிடையாது'' என்று கடிதம் எழுதிக கொடுக்க வேண்டும். இக்கடிதமும் பற்றுச் சீட்டும் இல்லாமல் எந்தவொரு தோட்டமும் அத்தொழிலாளியை வேலையில் சேர்த்துக் கொள்ள மாட்டாது. பற்றுச்சீட்டு என்பது அத்தொழிலாளி பற்றிய சேவை விபரங்களை உள்ளடக்கிய பத்திரமாகும். இப்பற்றுச் சீட்டு மண்டபம் கேம்ப்பில் வைத்து தொழிலாளிக்கு வழங்கப்படும். பற்றுச் சீட்டு எனப்படும் இந்த மீளா அடிமைச் சான்றிதழ் தொலைந்து விட்டால் தொழிலாளி நிர்க்கதியாக வேண்டிய நிலை ஏற்படும். அவ்வாறு தொலைத்தால் அதற்கான தண்டனையாக அபராதம் அல்லது சவுக்கடி வழங்கப்படும்.

தோட்டத்துரை அத்தொழிலாளியை விடுவிப்பதற்கு தாம் தயாராக இருப்பதாகத் துண்டெழுதிக் கொடுக்கும் முறைக்கு ''துண்டு முறை'' என்று பெயர். பெரிய கங்காணி தனது கடன் முழுவதையும் பெற்றுக் கொண்ட பின்னரே துரைக்கு துண்டு கொடுக்கும்படி சிபாரிசு செய்வார். பெரிய கங்காணி வசமுள்ள தொழிலாளர் கோஷ்டி ஒன்றின் சேவையைப் பெறவிரும்பும் மற்றொரு தோட்டத்துரை, அக்கோஷ்டி கங்காணிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை விட மேலதிக

மாகப் பணம் செலுத்த முன் வருவதும், கங்காணி தனக்கு ஆகக் கூடிய பணம் கொடுக்கச் சித்தமாயிருக்கும் துரைக்கு அவர்களை விற்பதும் சர்வசாதாரண மாக நடைபெற்றன.

இத் துண்டு முறை 1921-ல் சட்டவிரோத மாக்கபபட்டது. ஆயினும் பல தோட்டங்களில் இம்முறை 1950-கள் வரை தொடர்ந்து நிலவி வந்தது.

**பென்ஸ் முறை:**

பெரிய கங்காணிக்கு, தொழிலாளர் கோஷ்டியைத் திரட்டியதற்காக, தொழிலாளரின் சம்பளத்திலிருந்து தரகுப் பணம் அறவிடப்பட்டு வழங்கப்பட்டது. இவ்வாறு அறவிடப்பட்ட தொகைக்கு பென்ஸ் கணக்கு என்று பெயர். பெரிய கங்காணிக்கு வழங்கப்படும் தரகு அதிக மாக இருந்தபடியால் அது பெரிய பென்ஸ் எனவும் சில்லறைக் கங்காணிக்கு வழங்கப்பட்ட தொகை சிறிதாக இருந்தபடியால சின்னப் பென்ஸ் என்றும் அழைக்கப்படடது.

**முரட்டுத் துரைமார் :**

தோட்டத் தொழிலாளர்களின் சர்வ வல்லமை பொருந்திய எசமானர்களாக துரை மார் திகழ்ந்தனர். தோட்டத் துரைமார்களின் முரட்டுத்தனத்தையும், மூர்க்கமான நடத்தை யையும் பற்றி ஒரு வரலாற்று நூல் இவ்வாறு கூறுகிறது:- ''உண்மையில் தோட்டத்துரைகள் முரடர்கள். எதற்கும் தயங்காதவர்கள்... வெகு சிலரே விவசாயப் பயிற்சி பெற்றவராக இருந்

தனர். பொதுவாக இவர்கள் கல்வியறிவற்ற வர்களாக இருந்தனர். (ஹைபொறஸ்ட் தோட்டத்தில், இது நுவரெலியா மாவட்டத்தில் உள்ளது, சுப்ரீண்டனுக இருந்த ஒரு வெள்ளைத் துரைக்கு கையெழுத்துத்தானும் வைக்கத் தெரியாது. ஆ.ர்) இவர்கள் அராஜகத துணிச்சல் காரர்களாகவே நாட்டுக்கு வந்தனர். அல்லது பட்டாளத்திலிருந்து கொண்டு வரப்பட்டனர்......இராணுவத்திலிருந்து கழிக்கப்பட்ட இப்பேர்வழிகள் ஒரு சாதாரண தந்திரோபாயத்தின் மூலம் தமது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டனர். அவர்கள் அனைவரும் காப்டன் களாகிவிட்டனர்......தோட்டங்களின் ஆரம்ப நிருவாக முறை பிரிட்டனில் 19-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்த கைத்தொழில் ஸ்தாபன அமைப்பைப் பின்பற்றியது. அந்த அமைப்பில் தொழிலாளர்கள் பெரும்பாலும் இராணுவ கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு, அரை அடிமை நிலையில் வைக்கப்பட்டனர். அதேசமயம் முகாமையாளருக்கும் பெருமளவு சுதந்திரமும் அதிகாரச் சலுகையும் இருந்தன.[6]

சுதந்திரத்தின் பின்னரும் பிரிட்டிஷ் துரை மார்களுக்குப் பதிலாக கறுப்புத் துரைமார நியமிக்கப்பட்ட பின்பும்கூட இந்நிலை அதிகம் மாறவில்லை. அவர்கள் அடிப்படையில் அதே காலனி ஆதிக்க மனோபாவத்தைக் கொண்டிருந்தனர். ஆங்கில மொழி, உடை, நடை, பாவனைகளைக் கொண்டிருந்தனர். அவர்கள் ஒன்றில் பிரசித்திப் பெற்ற ரகர் வீரர்களாகவோ

அல்லது கிரிக்கெட் வீரர்களாகவோ திகழ்ந்தனர். இத்துரைமார்களுக்குத் தோட்டத்துறையை நிர் வகிப்பது சம்பந்தமாக ஒரு கை நூல் வழங்கப் பட்டது. அந்நூலில் தோட்டத்துறையில் நிலவும் சாதியமைப்பு பற்றியும் அவர்களிடையே நிலவும் சாதி முரண்பாடுகளை எவ்வாறு நிருவாகத்திற்கு சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளு வது என்ற விளக்கமும் குறிப்பிடப்பட்டிருந்தது.

தோட்டத் துறையில் அநேகமாக கங்காணி மார்களும், எழுதுவினைஞர்களும் உயர்சாதியின ராகத் திகழ்ந்த அதே சமயம் தொழிலா ளர்கள் தாழ்த்தப்பட்ட சாதியின ராகக் காணப்பட்டனர். இந்தியாவில் நிலவிய நிலப்பிரபுத்துவ சாதியமைப்பு முறையை பெருந் தோட்டத்துறையின் மூலதனத்துவம் தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொண்டது.

**தீவுக்குள் ஒரு தீவு**

இலங்கையில் தோன்றிய முதலாவது தொழி லாளர்கள் இவர்களே. ஆயினும் இவர்கள் மத்தி யில் ஒரு தொழிற்சங்கமோ அல்லது பிரம்மாண்ட மான போராட்டமோ இக்காலப்பகுதியில் தோன்ற வில்லை. இதற்கான காரணங்களைப் பின்வருமாறு கூறலாம்.

முதலாவதாக, இவர்கள் இந்தியாவிலிருந்து கிராமவாரியாக அப்படியே பெயர்த்துக்கொண்டு வரப்பட்டு தோட்டங்களில் பொருத்தப்பட்டனர். அவர்கள் இந்தியாவில் வாழ்ந்த அதே உறவினர் கள் மத்தியில் இங்கு வாழ்ந்தனர். எனவே இவர் களது உறவுத் தொடர்புகள் கூட சாதி, குடும்பம்

என்ற எல்லைக்கப்பால் பரவவில்லை. அவர்கள் மத்தியில் பழைய நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் பண்ணை அடிமை மனோபாவமே மேலோங்கி இருந்தது. இதைவிட இவர்கள் இலங்கையிலுள்ள ஏனைய சமூகத்தவரிடமிருந்தும் பொதுப்பொருளா தாரத் தொடர்பிலிருந்தும் துண்டிக்கப்பட்டு மலை நாட்டில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் தீவுக் குள் ஒரு தீவாக சிறை வைக்கப்பட்டனர். இரண் டாவதாக, இவர்கள் சுதந்திரத் தொழிலாளர் களாய்த் திகழவில்லை. தோட்டத்தோடு இணைக் கப்பட்ட பாதிக் கொத்தடிமைத்தனம் (SEMI-SERFDOM) பொருந்திய பெருந்தோட்டத் தொழி லாளர்களாகவே இருந்தனர். அவர்கள் தம் இஷ்டப்படி தமக்கு விருப்பமான வேலையை விரும்பிய இடத்தில் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் பெற்றிருக்கவில்லை. பல்வேறு தளை களால் தோட்டத்தோடு பிணைக்கப்பட்டிருந்தனர். அவர்களது வதிவிடமான 'லைன்' அறைகளைத் தோட்ட நிர்வாகம் வழங்கியிருந்தது. இது ஒரு வகையில் தோட்டத்தோடு தொழிலாளரை நிரந் தரமாகப் பிணைக்கும் தளையாகும். ஏனெனில் அத் தோட்டத்தில் வேலை செய்யாதவர்கள் அந்த 'லைன்' அறையைவிட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறினால் அவனுக்குச் செல் வதற்கு வேறு இடமில்லை. 1865ல் இயற்றப்பட்ட தொழிற்சட்டப்படி வேலையைவிட்டு நீங்குவது தண்டனைக்குரிய குற்றமாகும். எவராவது தோட் டப்புறத்தின் கொடிய வாழ்க்கை பிடிக்காமல் தப்பியோடினால் அவரைப் பிடித்து வந்து சாட் டையால் அடித்தனர். அவரைப் பொலிசாரிடம் ஒபபடைத்துத் தண்டித்தனர். இவ்வாறு தப்பி

ஓடுபவர்களைத் தடுப்பதற்காக கடிநாய்கள் பயன் படுத்தப்பட்டன. இதைவிட 'துண்டு' முறையால் அவர்கள் கங்காணிமார்களதும் துரைமார் களதும் பிடியிலிருந்து தப்பமுடியாத மீளா அடிமையாகத் திகழ்ந்தனர். எப்படியோ தப்பி யோடி கிராமப்புறங்களில் வாழலாம் என்ருல் அவருக்குச் சிங்கள மொழி தெரியாது. சிங்கள மக்களுடன் எவ்விதத் தொடர்பும் கிடையாது. தோட்டப்புறங்களைச் சுற்றிச் சிங்களக் கிராமங் களேயுள்ளன. அத்துடன் தோட்டத்துறை நிர் வாகம் ஒருவகை நலன்புரி(Welfare)அரசாங்கமாக வும் செயற்பட்டது. தொழிலாளர்களுக்குத் தேவை யான உணவுப் பொருட்கள், கம்பளி போன்ற வற்றை அது வழங்கியது. இதற்கானதொகையை கழித்துக்கொண்டு மீதியையே சம்பளமாகக் கொடுத்தது. இதனுல் இரு விளைவுகள் ஏற்பட்டன. ஒன்று, நிர்வாகம் இடைத் தரகனுக மாறி கலப் படம் செய்து கொள்ளை லாபம் ஈட்டியது. இரண்டு, அவர்களை தோட்டத்துடன் பிணைத்து வைத்தது. மூன்ருவதாக, இவர்கள் இயந்திரக் கைத்தொழில் தொழிலாளர்களாகவோ, தேர்ச்சி பெற்ற தொழி லாளர்களாகவோ இருக்கவில்லை.சமூகவிஞ்ஞானங் கள் பற்றிய சர்வதேசக் கலைக் களஞ்சியம் பெருந் தோட்டத்தைப் பின்வருமாறு வரையறுக்கின்றது: ''பெருந்தோட்டம் என்பது எண்ணிக்கையில் அதிகமான தேர்ச்சியற்ற தொழிலாளர்களைக் கொண்டு அவர்களது நடவடிக்கைகளை நெருக்க மாக மேற்பார்வை செய்து விவசாயப் பண்டங் களை விற்பனைக்காக உற்பத்திச் செய்யும் ஒரு பொருளாதார அலகாகும். இதில் அமைந்துள்ள நிர்வாக மேல் கட்டுமானம் தேர்ச்சி பெற்ற மேற்

பார்வையாளர்களையும் முகாமையாளர்களையும் கொண்டிருக்கும். இவர்களே தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துபவராவர். தேர்ச்சியற்ற தொழிலாளர்களின் பிரதான தகைமை அவர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதாகும்.

"Plantation Is an economic unit producing agricultural commodities for sale and employing a relatively large number of unskilled abourers whose activities are closely supervised. There is a vertical hierarchy in the plantation, with skilled supervision or managers directing production undertaken bʌ unskilled labourers whose primary skil is to follows orders" (Internaional Encyclopaedia of Social Sciences. Page 154-56)

மலையகத் தொழிலாளரைப் பொறுத்தளவில் இத்தன்மைமிகவும் தெளிவாகக் காணப்படுகிறது. தேயிலைத் தொழிற்சாலைகளை இயக்கும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாகக்கூட இவர்கள் பணியாற்றவில்லை. இப்பணியில் 'ரீமேக்கர்' எனப்படும் நிர்வாகியே ஈடுபட்டுள்ளார். தோட்டத் தொழிலாளர் விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட தேர்ச்சி பெறுத தொழிலாளர்களாகவே இருக்கின்றனர்.

நான்காவதாக, வெளி உலகமோ, நடப்பு நிலைகளோ தெரியாமல் தோட்டத் தொழிலாளரின் அறிவு வளர்ச்சியை நிர்வாகமே திட்டமிட்டே தடைபடுத்தி வந்தது. இவர்களால் கோயில்கள் மைக்கப்பட்டன. மதுக்கடைகள் திறக்கப்பட்ட

டன. ஆனால் பாடசாலைகள் மறுக்கப்பட்டன. இதன் விளைவாக 1911ல் தோட்டப்புறத்தில் கல்வியற்றோர் விகிதம் 100 ஆக இருந்தது.[7]

ஐந்தாவதாக, வெளியாட்கள் தோட்டப் புறங்களுக்குச் சென்று சமூகப் பணிகளோ, அரசியல் பணிகளோ, கல்விப் பணிகளோ செய்யமுடியாது. அத்துமீறல் சட்டம் (Criminal Trespass Act) தடை செய்தது. இச்சட்டம் 1957லேயே நீக்கப் பட்டது.

ஆறுவதாக, ஆனால் பிரதானமாக, மலையகத் தமிழர் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சி பெறவில்லை. இவர்கள் இன்னும் இந்தியாவுடனான தொடர்பை முற்றாகத் துண்டித்துக்கொள்ள வில்லை. இவர்களில் ஒரு பகுதியினர் இந்தியாவுக்கு அடிக்கடி சென்று வந்தனர். இக்காலக்கட்டத்தின் இறுதியில் இலங்கையில் பிறந்த ஒரு தலைமுறை உருவாகிவிட்டபோதும் தனக்கு இந்நாட்டிலுள்ள தேசிய உரிமை பற்றி தெளிவான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க முடியவில்லை.

## காலகட்டம்-3
## மலையக மக்கள் நிலைபெறும் காலம்
## 1920 முதல் 1948 வரை

மலையக மக்கள் படும் இன்னல்களுக்கெதிராக இந்தியாவில் மாத்திரமல்ல, வேறு பல நாடுகளிலும் மனிதாபிமான இயக்கங்களும் தனிநபர்களும் குரல் கொடுத்தனர்.[8] இதனால் இந்தியா அடிக்கடி இவ் விவகாரத்தில் தலையிட்டு சில அடிப்படைத் தேவைகளை மலையகத் தமிழர்களுக்கு உதரவாதப்படுத்த முயற்சித்தது. இவ்வாறு

1912ல் மருத்துவ வசதிச் சட்டம், 1920ல் கல்வி சகாயச் சட்டம், 1921ல் தொழிற் சட்டம், 1927ல் சம்பளச் சட்டம் ஆகியன இலங்கை அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டன.

## வெளியேற்றத்தடை

20களில் இந்தியாவில் மலையகத் தொழிலாளர் மீது அக்கறைக் காட்டும் இயக்கங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. இதனால் 1922ம் ஆண்டு இந்தியா வெளியேற்றத் தடைச்சட்டத்தின் மூலம் இந்தியாவிலிருந்து பெருந்தோட்டங்களுக்கு ஆள் திரட்டுவதைத் தடை செய்தது. அக்காலப் பகுதியில் ரப்பருக்கு உலக சந்தையில் கிராக்கி ஏற்பட்டதால் ரப்பர் தோட்டங்களுக்கு பெருமளவு தொழிலாளர் தேவைப்பட்டனர்.

எனவே இத்தடையால் அதிர்ச்சியடைந்த பெருந்தோட்ட நலன் விரும்பிகள் இந்திய அரசாங்கத்திடம் தடையை தளர்த்துமாறு மன்றுடினர். ஆகையால் இத்தடைச்சட்டம் தளர்த்தப் பட்டது.

இவ்வெளியேற்றச் சட்டம் மலையக மக்களின் வாழ்வில் ஒரு திருப்பு மையமாக அமைந்தது. இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை இதன் பின்னர் படிப் படியாக குறைந்தது. அதேசமயம் இலங்கையில் மலையகத் தமிழர் நிலைபெறும்போக்கு அதிகரித்தது. இதன் பின்னரே தமது அடிப்படை பிரச்சினைகளுக்காக-உரிமைக்காக அல்ல- போராடவும் அதற்கான தொழிற்சங்கங்களை அமைக்கவும் தொடங்கினர். மலையக மக்கள் மத்தியில் இன்றள

வும் ஒரு அரசியல் கட்சி தோன்றுததை இதன் பின்னணிலேயேபுரிந்துகொள்ளமுடியும். அதாவது அவர்கள் தமது உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வை எதிர்பார்த்து தொழிற்சங்கங்களில் ஸ்தாபனப்பட்டனரே தவிர தமது அடிப்படை அரசியல் உரிமைக்கான போராட்டத்தின் தேவையை உணரவில்லை. ஆயினும் இத்தொழிற் சங்கங்கள் அமைக்கும் பணிகூட அவ்வளவு சுலப மாகத் தோட்டப் பகுதியில் செய்யமுடியவில்லை. மிகக் கடுமையான அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்திற்கூடாகவே இவர்கள் மத்தியில் தொழிற்சங்கம் வளர்க்கப்பட்டது.

**மலையகத்தில் தொழிற்சங்கம் வேரூன்றுதல்:**

1911ல் இலங்கை தொழிலாளர் அணியில் 5,85,952 பேர் தோட்டத் தொழிலாளராகவு 75,000 பேர் மாத்திரமே நகரத் தொழிலாளராம் கவும் இருந்தனர். இதைவிட இலங்கையில் தோன்றிய முதலாவது தொழிலாள வர்க்கமும் இவர்களே. எனினும் இவர்கள் மத்தியில் இருந்து தொழிற்சங்க இயக்கமோ, இடதுசாரி இயக்கமோ முதன் முதலில் தோன்றவில்லை. இதற்கான கார ணத்தை முன்னர் ஆராய்ந்தோம்.

இலங்கையில் முதலாவது தொழிலாளர்களின் வேலை நிறுத்தமான தேர்ஸ்டன் கைத்தொழில் பாடசாலை (Thurston industrial school) யைச் சேர்ந்த தச்சர்களின் (Carpenter) வேலை நிறுத் தம் 1860ல் நடைபெற்றது. இவ்வேலை நிறுத்தம் ஒரு வருடம் நீடித்தது.

அதன் பின்னர் 1899 ல் இடம் பெற்ற ச்அசுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் முதலாவது தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்தது. இத் தொழிற்சங்கம் குறுகிய காலமே நீடித்தது.

ஏ.ஈ. குணசிங்காவும்,
மலையகத் தொழிலாளரும்:

1920 ல் முதற் தடவையாக தீவிர தொழிவ் சங்கப் போராட்ட இயக்கம் ஆரம்பமானது. இது வியக்கத்திற்கு ஏ. ஈ. குணசிங்க தலைமை கொடுத்தார். இவரது தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் சங்கத்தினுல் 1923 ல் நடத்தப்பட்ட முதலாவது பொது வேலைநிறுத்தம் தொழிற்சங்க இயக்கம் ஒரு கட்டத்திற்கு வளர்ந்து விட்டதற்கு சான்று கூறியது. இப்பொது வேலை நிறுத்தத்தில் சுமார் 20,000 தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்.

1935 டிசம்பர் மாதம் இலங்கையின் முதலாவது இடதுசாரி கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி உருவானது.

ஆனுல் பெருந்தோட்டத்துறையில் இத்தகைய அபிவிருத்திகள் மெதுவாகவே ஏற்பட்டன. 30 களின் பின்னரே இங்கு தொழிற்சங்கங்கள் வேரூன்றத் தொடங்கின. திட்டவட்டமாகக் கூறுவதெனில் 1939ம் ஆண்டு ஆகஸ்ட் 1ந் திகதி பயிற்றப்படாத தொழிலாளர் வெளியேற்றத் தடைச் சட்டத்தை இந்தியா நிறைவேற்றிய பின்னரே, இந்தியாவில் இருந்து தொழிலாளர் வருகை நின்றது. அதன் பின்னரே இங்கு பலமான தொழிற்சங்கங்கள் உருவாக முடிந்

தது. தோட்ட நிர்வாகம் பெருந்தோட்டத் துறையில் தொழிற்சங்கங்கள் அமைவதைத் தடுக்க சகல முயற்சிகளேயும் மேற்கொண்டன. யாராவது தொழிற்சங்கம் அமைக்க முற்பட்டால் அவர் மீது போலி வழக்குகள் ஜோடித்து சிறைச் சாலைக்கு அனுப்பினர். அல்லது இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பினர். 1939 தடைச் சட்டம் இந்யாவுக்கு இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இதனுல் தொழிற்சங்கம் வளரக்கூடிய சூழல் உருவானது.

### கே. நடேச ஐயர்

மலேயகத் தொழிலாளர் மத்தியில் தொழிற் சங்க இயக்கத்தைத் தோற்றுவித்த ஆரம்ப கர்த்தா திரு. நடேச ஐயராவார். இவர் ஒரு பிராமணர். பத்திரிகை எழுத்தாளர். இவர் தனது அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனத்தை (Ceylon Indian Workers Federation) 20களில் ஆரம்பித்தார். 1922ல் அது ஓரளவு அங்கீகாரம் பெற்ற இயக்கமாக வளர்ந்தது. இவரது முயற்சியால் தோட்டத் தொழிலாளரை பெரிதும் சிரமத்திற்குள்ளாக்கி வந்த 'துண்டு' (Chit) முறை 1921ல் நீக்கப்பட்டது. குணசிங்க தோட்டத் தொழிலாளரை தொழிற்சங்க மயப்படுத்தவில்லே. இப்பணியை தோட்டப்புறங்களில் ஆரம்பித்தவர் நடேச ஐயர். இவர் 1925 ஏ. இ. குணசிங்காவின் தொழிலாளர் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டதுடன் அதில் துணைத் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். ஆனுல் இருபதுகளின் இறுதி ஆண்டுகளில் ஏ. இ. குணசிங்காவிடம்

இந்திய எதிர்ப்பு உணர்வு அதிகரித்து வந்ததினுல் அதனை விட்டு வெளியேறினர்.

1920 தொடக்கத்தில் நகர்ப்புற இந்தியத் தொழிலாளர் ஏ. இ. குணசிங்காவின் தொழிற்சங்கத்தில் அணிதிரண்டனர். ஆயினும் இருபதுகளின் இறுதியாண்டுகளில் அவரது இந்தியர் எதிர்ப்புவாதம் வெளிப்பட ஆரம்பித்ததும் இந்தியத் தொழிலாளர் அவரைவிட்டு வெளியேறினர். ல. ச. ச. கட்சியின் ஆரம்பத் தொழிற்சங்க நடவடிக்கையின் அடித்தளமாக இவ்வாறு ஏ.ஈ.குணசிங்க மீது அதிருப்தி கொண்ட இந்திய நகரத் தொழிலாளர்களே அமைந்தனர். இவர்களின் மத்தியில் இருந்தே இலங்கை இடதுசாரித் தொழிற்சங்க இயக்கம் முதலில் தோன்றியது. இதன் தொடக்கமாகவும் ஏ. ஈ. குணசிங்காவின் வீழ்ச்சியின் அறிகுறியாகவும் வெள்ளவத்த நெசவாலை வேலை நிறுத்தம் அமைந்தது.

வெள்ளவத்தை
நெசவாலை போராட்டம்:

வெள்ளவத்தை நெசவாலையின் உரிமையாளர்கள் இந்தியர்களே. 1890ல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலை அன்று இருந்த நெசவாலைகளில் மிகப் பெரியது. 1400 தொழிலாளர் அதில் வேலை செய்தனர். குணசிங்க தலைமையில் இங்கு 1923, 1926, 1929 ஆகிய ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் நடந்தன.

பொருளாதார மந்தம், விற்பனைச் சந்தையில் ஜப்பான் துணிகளின் ஆதிக்கம் ஆகிய காரணங்ளினுல் ஆலை நிர்வாகம் 1933 பெப்ரவரி மாதம்

சம்பளக் குறைப்பை அறிவித்தது. இதனை எதிர்த்து முழுத் தொழிலாளர்களும் வேலை நிறுத் தத்தில் குதித்தனர். இக்காலப் பகுதியில் நிர் வாகத்தினரின் பாதுகாவலனுக குணசிங்க மாறி யிருந்தார். ஆலை நிர்வாகம் தமது சார்பில் இவ் விடயத்தில் தலையிடுமாறு குணசிங்காவை வேண் டியது. குணசிங்க தொழிலாளர்களை வேலை நிறுத் தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புமாறு புத்திமதி கூறினா. அதற்கு, தகுந்த முன்னறி வித்தல் இல்லாமல் வேலை நிறுத்தம் செய்தது தமது தொழிற்சங்கத்திற்கும் முதலாளிகள் சமா ஜத் (Employees Federation) திற்கும் இடையே (1929 - ஜுன் மாதம்) நடைபெற்ற கூட்டு ஒப்பந் தத்தை மீறிய செயல் என்று கூறினர். மேலும் வேலை நிறுத்தம் செய்த பெரும்பாலான தொழில ளர்களின் சங்க அங்கத்துவம் காலாவதியாகி விட் டதைச் சுட்டிக் காட்டினர். இதனல் தொழிலா ளர் அதிர்ச்சியடைந்தனர்.

இப்பிரச்சினையில் வாலிப முன்னணி தலை யிட முன் வந்தது. அதே மாதம் (1933 பெப்ர வரி) 23ந் திகதி இதற்காக பெரியளவிலான பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அதில் வெள்ளவத்த தொழிலாளர் சங்கம் ஆரம்பமானது. கொல்வின் ஆர். டி. சில்வா அதன் தலைவராகவும் வேர்ணன் குணசேகரா, ஜே. டபிள்யூ சேன நாயக்க ஆகியோர் செயலாளர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பிலிப் குணவர்த்தன, என் எம். பெரேரா, எஸ். ஏ. விக்கிரமசிங்க, ருேபர்ட் குணவர்த்தன, சுசன் டி. சில்வா ஆகியோர் இவ் வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்தல், சொற் பொழிவாற்றுதல், நிதி சேகரித்தல் போன்ற

பணிகளில் முன்னணி வகித்தனர். அப்புஹாமி, குட்டன், ராமையா ஆகிய தீரமிக்க தொழிலாளர் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

வேலைநிறுத்தம் இரு மாதங்கள் தொடர்ந்தது. ஆலைத் தொழிலாளர்களில் 2/3 பகுதியினர் மலையாளிகளாவும், 1/3 பகுதியினர் சிங்களவராகவும் இருந்தனர். அச்சமயம் பொருளாதார மந்தம், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை அதிகரித்து இந்திய எதிர்ப்புவாதம் மேலோங்கி இருந்தது. இந்நிலையில் குணசிங்க மலையாளிகளுக்கு எதிரான உணர்ச்சியையும் இனவாதத்தையும் கிளப்பினுர். அத்துடன் சிங்களத் துறைமுகத் தொழிலாளர்களை லொறிகளில் ஏற்றி கருங்காலிகளாக நெசவாலைக்கு அனுப்பினுர். வேலைக்குத் திரும்ப விரும்பும் வேலை நிறுத்தக்காரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதே இதன் நோக்கம் என அவர் கூறினுர். இதனுல் மலையாளிகளுக்கும் சிங்களவர்களுக்குமிடையே மோதல் ஏற்படும் அபாயகரமான நிலையை அவர் உருவாக்கினுர். உடனே மோதலைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு ஒரு ஆணைக்குழுவை வரலாற்றில் முதல் தடவையாக நியமித்தது. இவ்வாணைக்குழு வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளரைக் கண்டித்தது. குணசிங்காவை பாராட்டியது. (இது சம்பந்தமான விளக்கமான கட்டுரைக்கு பார்க்க: கலாநிதி குமாரி ஜயவர்தன, ''இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம்'')

**தொழிற்சங்க உரிமை:**

1935 ல் தொழிற்சங்க சட்டமூலம் அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட பின்னரும் தோட்டப்

புறங்களில் தொழிற்சங்கங்கள் அமைக்கப்படுவதை பெரும்பாலான தோட்டத்துரைமார் கொடிய முறையில் நசுக்கி வந்தனர். இச்சட்டத்தின் கீழ் ல. ச. ச.கட்சி தனது அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தைப் பதிவு செய்தது. (All Ceylon Estate Workers Union)

**பிறேஸ்கேர்டின் சம்பவம் (1937):**

டொனமூர் சகாப்தத்தில் ஏற்பட்ட முதலாவது அரசியல் நெருக்கடியாகவும் ல. ச. ச. கட்சியை புகழேணியின் உச்சத்திற்கு உயர்த்திய சம்பவமாகவும் இது அமைந்தது. அச்சம்பவம் இதுதான்:

மார்க் அந்தனி பிறேஸ்கேர்டின் (Mark Antony Bracegirdle) என்ற இளைஞர் பிரித்தானியாவில் இருந்து அவுஸ்திரேலியாவில் குடியேறிய வெள்ளையராவார். அவுஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான இவர் 1935ல் இலங்கை வந்தார். அப்போது வெளியாட்கள் எஸ்டேட்களுக்குள் நுழைவதுகூட அத்து மீறல் சட்டத்தின் படி தண்டனைக்குரிய குற்றம். அவர் தேயிலைத் தோட்டமொன்றில் உத்தியோகம் செய்தார். இவர் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ல. ச. ச. கட்சிக்குச் சார்பாக தொழிற்சங்கப் பணிகளில் தீவிரமாகச் செயற்பட்டார். ல. ச.ச, கட்சி மேடைகளில் பகிரங்கமாக உரையாற்றினார். தோட்டத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கம் வேரூன்றுவதில் இவரது துணிகரமான செயற்பாடுகள் பெரும்பங்காற்றின. இவரது தீவிரமான செயற்பாடு தோட்ட நிர்வாகத்திற்கும் அரசாங்கத்திற்கும் தலையிடியாக இருந்தது. எனவே அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் பிரதம

பொலிஸ் அதியட்சகர் (ஐ.ஜி.பி) பிரதம காரிய தரிசி ஆகிய இருவரும், 1896ல் நிறைவேற்றப் பட்ட கவுன்சில் கட்டளைச் சட்டத்தின் அடிப் படையில் (Order- in - Council) இவரை நாடு கடத்தும் ஆணையைப் பிறப்பித்தனர்.

நாடு கடத்துவதற்கான இந்த ஆணை 1937 ஏப்ரல் 22ந் திகதி பிறப்பிக்கப் பட்டது. ஆனால் அதற்கு முன்னரே விடயமறிந்த ல. ச.ச. கட்சியினர் அவரைத் தலைமறைவாக்கிவிட்டு பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை எடுத்தனர். ஆள் கொணர்வு மனு (Habeas Corpus) விடுத் தனர். அதாவது பொலிஸார் ஆளைக் கடத்திச் சென்றதாக வழக்கு சாமர்த்தியமாக ஜோடிக்கப் பட்டது. அதே வேளை பிரதம நீதியரசர் முன்னி லையில் நாடு கடத்தல் ஆணை செல்லுப்படியாகா தென வழக்காடப்பட்டது. இறுதியாக ''பிறேஸ் கேர்டின் செய்ததெல்லாம் அவர் தனது பேச்சுச் சுதந்திரத்தைப் பிரயோகித்தது மாத்திரந்தான். இதற்காக அவரை நாடு கடத்த முடியாது''எனப் பிரதம நீதியரசர் தீர்ப்பளித்தார்.

இப்பிரச்சினையை நீதிமன்றத்துடன் மாத்தி ரம் அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. அப் போது சட்டமன்றத்தில் இருந்த என். எம்.பெரே ராவும், பிலிப் குணவர்த்தனவும் இப்பிரச்சினை யால் டொனமூர் யாப்பின் தகைமைக்கே சவால் விட்டனர். நாடு கடத்தல் ஆணையைப் பிறப்பித் ததன் மூலம் பிரதம செயலாளர், உள்நாட்டமைச் சரின் அமைச்சரவையின் துணைத் தலைவரதும் அதிகாரத்தில் குறுக்கிட்டுள்ளார். உள்ளூர் அர செயல்வாதிகளை பிரித்தானிய ஏகாதிபத்திய பாம்மைகளாக மாற்றப் பார்க்கிறது என சட்டம்

சபையில் முழங்கினர். பிரமாண்டமான ஒரு பொதுக்கூட்டத்தையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினர். ல. ச. ச. க. ஏற்பாடு செய்த அப் பொதுக்கூட்டத்தில் திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கவும் உரையாற்றினர்.

முல்லோயா சம்பவம் :

நடேச ஐயர் தோட்டப் பகுதியில் தொழிற் சங்கத்தை முதலில் ஸ்தாபித்தபோதும் சமசமா ஜிஸ்டுகள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங் கிய பின்னரே தோட்டப்புறங்களில் வேலை நிறுத் தங்களும், போராட்டங்களும் உத்வேகம் பெற் றன. இவர்களது தொழிற்சங்க நடவடிக்கை மிகவும் மாறுபட்ட விதத்தில் அமைந்தது. ஊவா பகுதியில் இவர்கள் பலம் பெற்றுத் திகழ்ந்தார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்புக் கோஷத்தை முன் வைத்து பல அரசியல் வேலை நிறுத்தங்களை வெற்றிகரமாக நடத்தினர்கள். 1940ல் பதுளையில் மே தினத்தை விமர்சையாக நடத்தினர். இவ் வாறு மலையகத்தில் அரசியல் விழிப்புணர்வையும், வர்க்க உணர்வையும் வளர்க்கும் ஆரம்ப முயற்சி இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது. இவர் களுடன் கே. நடேச ஐயர் மிகவும் நெருக்கமாக ஒத்துழைத்து வந்தார். இக்காலகட்டத்திலே தான் ஹேவாஹெட்ட பகுதியிலுள்ள முல்லோய தோட்டத்தின் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட் டது. இப்போராட்டத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் தொழிலாளி ஒருவர் (திரு கோவிந்தன்) காலமானர்.

இவ்வாறு மலையகப் பகுதியில் இடதுசாரிகள் வேரூன்றத் தொடங்கிய காலப் பகுதியிலேதான்

இரண்டாம் உலக மகாயுத்தம் வெடித்தது. யுத்தத்தின்போது பிரித்தானியருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்த, ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தை தீவிரப்படுத்திய சமசமாஜக் கட்சித் தலைவர்கள் 1940 ஜூன் மாதம் ''பாதுகாப்புச் சட்டத்தின்'' கீழ் கைது செய்யப்பட்டனர். விசாரணை இன்றி விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். ஆயினும் 1942 மார்ச் மாதம் சட்டவிரோதமாக்கப்படும் வரை அவர்களது தொழிற்சங்கம் இயங்கியது. வளரத் தொடங்கும் போதே தடை செய்யப்பட்டதால் இவர்களது தொழிற்சங்கம் மலையகத்தில் வளர முடியாமற் போனது

1939ல் இந்தியா, தொழிலாளர் ஏற்றுமதியைத் தடை செய்ததன் பின்னர், துரைமாரால், தொழிலாளர்களை தொழிற்சங்கம் அமைத்த குற்றத்திற்காக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப முடியவில்லை அதைவிட 1940 ஜூலை 29ந் திகதி தோட்டத் துரைமார்களுக்கும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏழு அம்ச ஒப்பந்தமொன்று கைச் சாத்தானது.

(Between the Planters 'Association of Ceylon, the Ceylon Estates Proprietory Association and the all Ceylon Association in London on one hand and the Ceylon Indian Workers Federation and the all Ceylon Estate Workers' Union on the other)

1940ம் ஆண்டு 7 அம்ச ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 'பூர்ஷ்வாக்கள் தலைமையிலான ''இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கம்''

ம—5

(Ceylon Indian Congress Labour Union) (1940 மார்ச் மாதம் நிறுவப்பட்டது) வேகமாக வேரூன்றத் தொடங்கியது. இதன் பெயர் 1950 ல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என மாற்றபபட்டு இன்றளவும் பலம் மிக்க மலையகத் தொழிற்சங்கமாக இருந்து வருகிறது. இதற்கான காரணங்களை தொடர்ந்து வரும் பகுதிகளில் புரிந்து கொள்ளலாம்.

## இந்திய எதிர்ப்பு வாதமும் மலையக மக்களும்

1948ம் ஆண்டில் முதல் தடவையாக இந்திய எதிர்ப்பு வாதம் தோன்றியது. இவ் இந்திய எதிர்ப்பு மாத்தளைப் பகுதியில் தமது நிலம் பறி போவதனால் பாதிக்கப்பட்ட நிலப்பிர புக்களால் உருவாக்கப்பட்டபோதும், அரசாங்க துறையில் தொழில் புரிந்த, கோப்பிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட, கோப்பி உற்பத்தியாளர்கள் இந்தியாவில் இருந்து தொழிலாளர் இறக்குமதி செய்வதை ஆதரித்ததாலும், கணிசமான அளவு சிங்கள நிலவுடமையாளர் இந்தியத் தொழிலாளரின் உழைப்பை நம்பி கோப்பி உற்பத்தியில் ஈடுபட்டதனாலும் அதிகம் வலுப் பெறவில்லை. அத்துடன் 1848 மாத்தளைக் கலகத்தின் பிரதான இலக்கு பிரித்தானியரே. அதன் பின்னர் அநகாரிக தர்மபால போன்ருேரால் கிளப்பப்பட்ட இந்திய எதிர்ப்புவாதம் சில கருநிலைகளைக் கொண்டிருந்தாலும் ஒரு இயக்கமாகப் பரிணமிக்கவில்லை. அவர்களது ஒரே இலக்கு இந்தியர்கள் அல்ல. அவாது பிரதான இலக்கு பிரித்தானியராகவே திகழ்ந்தனர்.

முப்பதுகளில் :

1930 களில் தான் உண்மையான அர்த்தத்தில் குறிப்பிடக்கூடிய இந்திய எதிர்ப்பு முதற் தடவையாக இலங்கையில் உருவானது. இது ஐந்து துறைகளில் தோன்றி வியாபித்தது.

1) வர்த்தகத்துறையில்

அன்று இலங்கை வர்த்தகத்துறையில் இந்தியர்களின் பிடி மிகவும் இறுக்கமாக இருந்தது. பிற்காலத்தில் அதாவது 1945ல் பெறப்பட்ட புள்ளி விபரம் ஒன்றின்படி 750 செட்டிகள் நிறுவனங்கள் 10 கோடி வங்கி மூலதனத்தைக் கட்டுப்படுத்தின. அன்று உள்ளூர் கடன் வங்கிகளாக இவையே செயலாற்றின. இதைத் தவிர மொத்த வணிகத்தில் 90 சதவீதமும், இடை வணிகத்தில் 60 சதவீதமும், சில்லறை (Retail) வியாபாரத்தில் 40 சதவீதமும் இந்தியர் வசம் இருந்தது.[9]

1930-களிலேயே சிங்கள மக்கள் ஒரு தேசிய இனமாக உருவாகும் போக்கு ஒரு இறுதிக் கட்டத்தை அடைந்தது.[10] வர்த்தக மூலதனத்தைக் கொண்ட ஒரு சிங்கள வணிகர் அணி இக்காலத்தில் உருவாகிவிட்டது. இவ்வணி பலம் மிக்க இந்திய வணிக மூலதனத்துடன் மோதியது. இவர்கள் வியாபாரச் சந்தையை இந்தியரிடமிருந்து மீட்பதற்காக இந்திய எதிர்ப்பு வாதத்தை கிளப்பினர். இவர்கள் எழுப்பிய இந்திய எதிர்ப்பு வாதத்தின் இலக்கு இந்திய வர்த்தகர்களே தவிர தோட்டத் தொழிலாளர்கள் அல்ல.

2) அரசாங்க, நிர்வாகத் துறையில்

அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் இடை மட்ட நிர்வாகிகளாகவும் பெருமளவு இந்தியர்கள் பெரும்பாலும் மலையாளிகள் — பதவி வகித்தனர். தற்போது ஆங்கிலம் கற்ற சிறு அணி ஒன்று உயர்குலத்தில் உருவாகிவிட்டது. இவர்கள் இந்திய உத்தியோகத்தர்களை வெளியேற்றிவிட்டு அவ்விடத்தில் தாம் அமர்ந்து கொள்வதற்காக இந்திய எதிர்ப்பைக் கிளப்பினர். இவர்களது இலக்கு இந்திய உத்தியோகத்தர்களே தவிர தோட்டத் தொழிலாளர் அல்ல. ஒரு புள்ளி விபரப்படி அரசாங்க உத்தியோகத் துறையிலே 1936 ல் 36 சதவீதத்தினர் இந்தியராக இருந்தனர். இத்தொகை 1939ல் 19 சதவீதமாகவும் 1941 ல் 12 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது.

ஆங்கிலக் கல்வி கற்ற இலங்கையர், தமிழர், சிங்களவர் என்ற வேறுபாடின்றி இவர்களை வெளியேற்றுவதில் கைகோர்த்திருந்தனர்.

3) நகரத் தொழிலாளர் மத்தியில் :

ரயில்வே துறையிலும், கொழும்புத் துறைமுகத்திலும், வெள்ளவத்தை நெசவாலை போன்ற பெரும் தொழிற்சாலைகளிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் இந்தியர்களாகவே இருந்தனர். இக்காலத்தில் இலங்கையில் முதற்தடவையாக வேலையில்லாத் திண்டாட்டம் உலகப் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து கூர்மையடையத் தொடங்கியது. இதனால் வேலையற்ற சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புக் கிளம்பியது. இவர்களது இலக்கு நகர்ப்புறத்து இந்தியத் தொழிலாளர்களே தவிர

தோட்டத் தொழிலாளர் அல்ல. நிலவுடமையுடன் இன்னும் பிணைந்து கிடந்த கண்டியப் பகுதி களில் மூலதனத்துவ அபிவிருத்தியோ, மூல தனத்துவத்தின் கீழ் தொழில் தேடும் பட் டாளமோ உருவாகவில்லை. எனவே சில வரலாற்ருசிரியர்கள் ''வேலை இன்றித் திண் டாடிய கண்டிய விவசாயிகள் இக்கால கட்டத் தில் மலையகத் தொழிலாளரைப் பொருமையுடன் பார்த்தனர்'' என்று கூறும் கூற்றில் அர்த்தமே இல்லை. பெரும்பாலும் மலையாளத் தொழிலாளர் களைக் கொண்டிருந்த வெள்ளவத்தை தொழி லாளர்கள் 1933-ல் நடாத்திய வேலைநிறுத் தத்தை, தொழிற்சங்க இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாவான, பின்னுள் இனவாதி, ஏ.ஈ.குண சிங்க சிங்களத் தொழிலாளரை வேலைக்கனுப்பி முறியடித்தது போன்ற செயல் எதுவும் மலை யகத்தில் நடைபெற வில்லை.

4) தொழிற்சங்க இயக்கத்தில்

இடதுசாரிகள் தொழிற்சங்க வேலையில் ஈடுபட்டபோது பெரும்பாலான நகர்ப்புற இந் தியத் தொழிலாளர்கள் ஏ.ஈ.குணசிங்காவின் தொழிற்சங்கத்தை விட்டு விலகி இடதுசாரி களுடன் சேர்ந்தனர். மலையகத் தொழிலாளர் களின் பிரதிநிதியாக அப்போது திகழ்ந்த நடேச ஐயரும் இடதுசாரிகளை வலுவாக ஆதரித்தார். இதனுல், மறைமுகமாக இந்திய எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி வந்த, ஏ.ஈ குணசிங்க வெளிப்படையாகவே பேசத் தொடங் கினுர். தொழிலாளர் இயக்கத்தினுள் இவ்வாறு இனவாதம் பரவ இவர் காரணமாயினுர்.

### 5) பாராளுமன்ற அரசியல்

பூர்ஷ்வாக்களைப் பொறுத்தளவில் சிங்கள தமிழ் பூர்ஷ்வாக்கள், இந்திய எதிர்ப்பில் ஒரே கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தனர். இக் கால கட்டத்தில் இந்தியருக்கு எதிரான ஒரே வகையான கருத்தையே இவ்விரு சாராரும் வெளியிட்டனர். இந்திய மூலதனத்தின் ஆதிக்கத்தை எதிர்ப்பதிலும், இந்திய நிர்வாகிகளை வெளியேற்றுவதிலும் இவர்கள் பிடிவாதமாய் இருந்தனர். இந்திய நகரத் தொழிலாளர்களை வெளியேற்றுவதிலும் அவர்கள் ஆர்வம்காட்டினர். ஆனால் தோட்டத் தொழிலாளரை வெளியேற்ற அவர்கள் முயற்சிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் தோட்ட உரிமையாளராக இருந்தபடியால் மலையகத் தொழிலாளரின் மலிவான, இலகுவாகச் சுரண்டக்கூடிய உழைப்பை இழக்க விரும்பவில்லை. இந்த மனோபாவத்தை 1937 அரச சபையில் (State Council) நடைபெற்ற ஒரு சம்பவம் தெளிவாகக் காட்டுகிறது. இம் மனோபாவத்தை விளக்கும் மற்ருெரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். 1939 ஆகஸ்டு மாதம் 1ந் திகதி பயிற்றப்படாத தொழிலாளர் வெளியேற்ற தடைச் சட்டத்தை இந்தியா நிறைவேற்றி இந்தியத் தொழிலாளர் இலங்கை செல்வதைத் தடை செய்தது. (இதன் பின்னணி அடுத்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.) இத்தடையை நீக்குமாறு 1940 நவம்பர் மாதம் இலங்கையின் உயர்மட்டத் தூதுக் குழுவொன்று டெல்லி சென்று பேச்சுவார்த்தை நடத்தியது' இத் தூதுக் குழுவில் பிற்காலத்தில் மலையகத் தமிழர்களின் பிரசாவுரிமை

யைப் பறிமுதல் செய்த D.S. சேனநாயக்க பிரதானமானவர். இவரைவிட திருவாளர்கள் S.W.R.D. பண்டாரநாயக்கா, G.C S. கொரியா, எச். ஜே. ஹக்சம் (H.J.Huxhum the Financial Secretary) ஆகியோரும் இத் தூதுக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

காலஞ் சென்ற என். எம் பெரேரா இந்தியத் தொழிலாளர் இறக்குமதிக்கு லைசன்ஸ் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்ற பிரேரணையை 1937 அரச சபையில் சமர்ப்பித்த போது 29 வாக்குகள் எதிராகவும் 5 ஆதரவாகவும் கிடைத்தது. ஏ.ஈ. குணசிங்க நடுநிலை வகித்தார். இவ்வாறு அப்பிரேரணை படுதோல்வியடைந்தது.

இவ்வாறு மலிவான, சுலபமாகச் சுரண்டக்கூடிய உழைப்பு என்ற முறையில் மலையகத் தொழிலாளரை பிரிட்டிஷ் கொம்பெனிகளும் இலங்கையைச் சேர்ந்த தோட்ட உரிமையாளர்களும் விரும்பியபடியால்மலையகத்தொழிலாளருக்கு எதிரான ஒரு உணர்வு வளர்க்கப்படவில்லை.

ஆனால் அரசியல் அதிகாரத்தைப் பொறுத்தளவில் மலையகத் தொழிலாளர் உரிமைகள் எதுவுமற்ற "கூலிகளாக" என்றும் இருப்பதையே விரும்பினர். அவர்களது அரசியல் பலத்தைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் இந்திய எதிர்ப்புணர்வைப் பயன்படுத்திக் கொண்டனர். 1920-களில் சட்ட நிருபண சபைக்கு இந்தியப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதை இலங்கை பூர்ஷ்வாக்கள் எதிர்த்தனர். அத்துடன் 1929-ல் டொனமூர் ஆணைக்குழு சர்வஜன வாக்குரிமை வழங்க முன்வந்தபோது இவ்வெதிர்ப்பு உச்ச

கட்டத்தை அடைந்தது. ஏனெனில் மலையகத் தொழிலாளரின் வாக்குபலத்தால் இந்தியப் பூர்ஷ்வாக்கள் அதிகார மிக்கவர்களாக ஒரு புறத்தில் வளர்ந்து வந்தனர். (உ.ம்.1947 பொதுத் தேர்தலில் 7 இந்திய வம்சாவளிப் பிரதிநிதிகள் தெரிவு செயயப்பட்டனர்). மறு புறத்தில், இடதுசாரிகள் அவர்களது வாக்கினுல் அதிக பலம் பெற்று வந்தனர் (1947-ல்17 இடது சாரிகள் இவர்களது ஆதரவுடன் வெற்றி பெற்றனர்). இவ்விரு அபிவிருத்திகளேயும் இலங்கை பூர்ஷ்வாக்கள் விரும்பவில்லை. இவ்விடயம் பின்னர் கொடுக்கப்படும்.

**இந்தியர் வெளியேற்றம் :**

மேலே கூறப்பட்ட விடயங்களில் இருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. 30-களில் உருவான இந்திய எதிர்ப்பு வாதமும், "இந்தியர்களே வெளியேற்று" கோஷமும் மலையகத் தொழிலாளர்களுக்கு எதிராகக் குறிவைக்கப் பட்டவை அல்ல. மாருக மலையக மக்கள் என்ற பிரிவில் அடங்காத இந்தியர்களுக்கு எதிராகக் கிளப்பப்பட்டதாகும். இந்த இந்திய எதிர்ப்பு இயக்கத்திஞல் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் இந்திய புத்திஜீவிகளே. அரசாங்க உத்தியோகங்களில் இருந்த இந்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே இவ்வியக்கம் முதலில் செயற்பட்டது. ஏனெனில் இலங்கையில் பூர்ஷ்வா வளர்ச்சியை விட புத்திஜீவிகளின் வளர்ச்சியே அதிகமாக இருந்தது இது விரைவில் நகர்ப்புற இந்தியத் தொழிலாளருக்கும் எதிராகப் பரவியது. இதற்கான காரணம்

யாதெனில் எந்த ஒரு சமூகத் தட்டும் பாதிக்கப் படும்போது, அல்லது போராடும்போதும், ஒரு வலுவான தொழிலாள வர்க்கத்தின் ஆதரவைப் பெற முயலும். இவ்வாறு புத்திஜீவிகள் நகர்ப் புறத் தொழிலாளரின் உதவியையும் பெற்றனர். ‘‘இந்தியரை வெளியேற்று’’ என்ற கோஷம் இருவரது நலன்களையும் போராட்டத்தையும் இணைத்தது.

எனவே போக்குவரத்து அமைச்சர் தனது இலாகாவில் பணி புரிந்த 8,000 பேருக்கு ஒரு மாத நோட்டீஸ் கொடுத்தார். இவர்களுக்கு பல வருடங்கள் சேவையாற்றியிருந்தாலும் கூட, ஒரு மாதச் சம்பளத்தை மாத்திரம் நட்ட ஈடாக வழங்க அவர் முன்வந்தார். அதையும் அவர்கள் போய்ச் சேர வேண்டிய கிராமத்தில் (இந்தியாவில்) கொடுப்பதாகவே ஏற்பாடு செய் யப்பட்டது.[11]

## இந்தியர் தேசிய இயக்கம்

இக்காலகட்டத்தில் கொழும்பை மையமாகக் கொண்ட இந்தியர்களின் நலனைப் பாதுகாப் பதற்கு இரண்டு அமைப்புகள் தோன்றி விட்டன. அவற்றில் இலங்கை இந்தியர் சங்கம் திரு.எஸ்.தேசாய் தலைமையின் கீழும், இந்திய சேவா சங்கம் வள்ளியப்ப செட்டியார் தலை மையிலும் இயங்கி வந்தன. இவ்விரு சங்கங் களும் கோல்பேஸ் திடலில் பொதுக்கூட்டங்களை நடத்தி இலங்கை அரசாங்கம் தனது தீர் மானத்தை வாபஸ் பெற வேண்டுகோள் விடுத் தன. ஆனால் இலங்கை அரசாங்கம் செவி சாய்க்கவில்லை. எனவே இரு சங்கங்களும்

மகாத்மா காந்திக்கு மனுச் செய்து இப் பிரச்சினையில் தலையிட வேண்டுமென கேட்டுக் கொண்டன.

இலங்கையில் முதலீடு செய்திருந்த இந்திய பூர்ஷ்வாக்கள் இந்திய அரசியலிலும் செல்வாக் குக் செலுத்தும் அளவுக்கு வலிமை மிக்கவர் களாக இருந்தார்கள். உதாரணமாக அண்ணு மலைச் செட்டியாருக்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் வயல் இலங்கைக்கு வெளியே இருந்தது. அதன் நெல்லை ஏற்றிச் செல் வதற்கு தனியான கப்பல்களை அவர் கொண் டிருந்தார். இலங்கை அவரது அரிசிக்கான நல்ல சந்தையாக இருந்தது. தமிழ்நாட்டில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தை நிறுவியவரும் இவரே.

இவ்வாறு, தேசிய சிறுபான்மை இனத்து (National Minorities) பூர்ஷ்வாக்கள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் ஆதிக்கம் செலுத்திய போக்கு இலங்கைக்கு மாத்திரம் புறம்போக்கான ஒன்று அல்ல. பொதுவாகவே தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இத்தன்மை காணப்பட்டது. பர்மாவிலே இந்திய நிலவுடை மையாளர்களும் பூர்ஷ்வாக்களும், தாய்லாந்து இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் சீனபூர்ஷ்வாக்களும், மலேசயாவில் சீன, இந்திய பூர்ஷ்வாக்களும் இவ்வாறே ஆதிக்கம செலுத்தினர். இதற்கான காரணம் யாதெனில் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மூலதனத்துவ வளர்ச்சி மிகவும் மந்தமாக இருந்தபடியால் ஓரளவு வர்த்தக மூலதனத்துவ

வளர்ச்சி பெற்ற அண்டை ஆசிய நாடுகளைச் சேர்ந்த பூர்ஷ்வாக்கள் வர்த்தகத் துறையை கைப்பற்றிக் கொண்டனர் என்பதே யாகும்.

மலேசியாவிலும், இலங்கையிலும் நிலவிய ஒரு பொதுத்தன்மையை இங்கு ஒப்பிட்டுப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும். இங்கு நகரத்தை மையமாகக் கொண்ட பெரும்வர்த்தக பூர்ஷ்வாக்கள் தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்நதவர்களாக இருந்தார்கள். அதேசமயம் அவர்களோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத அதே சமூகத்தைச் சார்ந்த பெரும் அளவு மக்கள் பெருந்தோட்டங்களில் வாழ்ந்து கொண்டு தனியான மக்கள் குழுவாக உருவாகிக் கொண்டிருந்தார்கள். உள்நாட்டு பூர்ஷ்வாக்கள் தோன்றி வளர ஆரம்பித்த போது இந்த "அந்நிய பூர்ஷ்வாக்களுக்கு" எதிராகத் தேசிய வாதம் கிளப்பப்பட்டது. அத்தேசிய வாதம் பெருந்தோட்ட தொழிலாளருக்கு எதிராகவும் திசை திரும்பியது. அதை விட முக்கியமான விடயம் யாதெனில் அதுவரை தம் சமூகத்தைப் பற்றி கவலைப்படாத தேசியச் சிறுபான்மை பூர்ஷ்வாக்கள் தமக்குப் பிரச்சினை வந்தபோது தமக்கு எதிராக தேசியவாதம் கிளப்பப்பட்ட போது- தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தொழிலாளரிடம் ஓடினர். அவர்கள் மத்தியில் தேசியவாதத்தைத் தட்டி எழுப்பி அவர்களை ஸ்தாபனப்படுத்தினர். ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். தேசிய இயக்கங்களைத் தொடங்கி தலைமை தாங்கினர். இலங்

கையில் இப்போக்குத்தான் முப்பதுகளில் நடைபெற்றது.

**இலங்கை இந்திய காங்கிரஸ்-**
**முதலாவது தேசிய இயக்கம்**

இலங்கையில் இந்திய பூர்ஷ்வாக்களின் நலன் எந்தளவுக்கு அச்சுறுத்தப்பட்டதெனில் பண்டிட் ஜவகர்லால் நேரு அவா்களே (அப்போது அவர் பிரதமா் அல்ல. இந்தியா சுதந்திரம் பெறவில்லை) மாகாத்மாவின் தூது வராக இலங்கைக்கு 1939-ல் விரைந்து வந்து நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்த வேண்டி இருந்தது. அவர் வரும்போது முன்னர் கூறப் பட்டவாறு 4000 பேர் வரை போக்குவரத்து அமைச்சால் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப் பட்டு விட்டனர். இதுபற்றி நேரு நடாத்திய பேச்சு வார்த்தை வெற்றியளிக்கவில்லை. இதற்குப் பதிலடியாகவே நேருவின் சிபாரிசின் படி 1939 ஆகஸ்ட் 1-ந் திகதி பயிற்றப் படாத தொழிலாளர் வெளியேற்றத்தை இந்தியா தடை செய்தது. இதன் பின்னும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு பல்வேறு விதமாக சிறுதொகையினர் வரவே செய்தனர். ஆயினும் அவர்களில் பெரும்பாலானோர் தொழி லாளர்கள் அல்லாதோராவர்.

நேரு பாரதம் திரும்ப முன்னர் இந்திய சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுக்கு தம்மை இலங்கை இந்திய காங்கிரஸ் என்ற பெயரில் (Ceylon Indian Congress) ஒழுங்கமைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை கூறினார். இச்சமயத் தில் பல்வேறு தொழில்துறையில் ஈடுபட்டிருந்த

"இந்திய சமூகத்தினர்" பல தனியான அமைப்புகளைக் கொண்டிருந்தனர். அவற்றை எல்லாம் ஒரு உடன்பாட்டுக்கு நேரு கொண்டு வந்தார்.

நேருவின் ஒத்துழைப்புடன் இலங்கை இந்திய காங்கிரஸ் 1939 ஜூலை 15ந் திகதி நள்ளிரவு 1 மணிக்கு கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராக திரு. வீ. ஆர்.எம். லட்சுமணன் செட்டியார் தெரிவு செய்யப்பட்டார். "இந்திய இலங்கை" பூர்ஷ்வாக்கள் அனைவரும் இவ்வாறு ஒரு அமைப்பின் கீழ் ஒன்றுபட்டனர். ஆயினும் தோட்டத் தொழிலாளரின் ஆதரவின்றி நமக்கு பலம் எதுவும் கிடையாது, என்பதை அவர்கள் உணர்ந்தே இருந்தனர். எனவே தோட்டத் தொழிலாளரை தம் பக்கம் ஈர்க்கக் கூடிய விதத்தில் பேசத் தொடங்கினர். திரு லட்சுமண செட்டியார் தனது தலைமை உரையில் "கூலி" என்ற சொற்பிரயோகத்தை நீக்குவதற்காக தமது இயக்கம் போராட வேண்டுமெனக் குறிப்பிட்டார். இதன் முதலாவது கிளை நாவலப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டது.

இங்கே மூன்று விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒன்று, இலங்கை இந்திய காங்கிரஸ் மலையகத்தில் பிறந்த குழந்தை அல்ல. கொழும்பிலே பிறந்து? பூர்ஷ்வாக்களால் உருவாக்கப் பட்டு பின்னரே மலையகததில் திணிக்கப்பட்டது. இரண்டு, அது அமைக்கப்பட்டது மலையகத் தொழிலாளரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அல்ல மூன்று, இலங்கை இந்திய காங்கிரஸ் ஒரு கட்சியாகவோ, தொழிற்சங்கமாகவோ உருவாக

வில்லை. இந்திய வம்சாவளியினரின் முதலாவது தேசிய இயக்கமாகவே அது உருவானது.

**சிங்களவர் மத்தியில் இந்தியப் பீதி :**

கொழும்பில் இருந்த இந்திய பூர்ஷ்வாக்களை எவ்விதத்திலும் மலையகத் தமிழர் எனக் கூற முடியாது. அவர்களது நோக்கம் இலங்கையில் கூடிய வரை சேகரித்து இந்தியாவுக்குக் கொண்டு சென்று சேர்ப்பதாகவே இருந்தது. அவர்களுடைய குடும்பங்களும், நிலையான சொத்துக்களும் இந்தியாவில் இருந்தன. இவர்கள் இந்தியத் தலைவர்களின் துணையுடன் தமது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள விரும்பியமை, இந்தியத் தலைவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டமை போன்ற செயல்கள் இலங்கையின் சிங்களப் பூர்ஷ்வாக்கள் மத்தியிலே அச்சத்தையும், ஐயத்தையும் ஏற்படுத்தின. அவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னர் நிகழ்ந்த தென் இந்திய நிலப் பிரபுத்துவ படையெடுப்புகளை நினைவு கூர்ந்தனர். அத்தகைய இந்திய ஆக்கிரமிப்பு பற்றி மிகைப்படுத்தியும் திரிபுபடுத்தியும் தொடர்புபடுத்தியும் அதிகம் பேசப்பட்டது. இந்திய எதிர்ப்புவாதம், நவீன அர்த்தத்தில், இலங்கை வரலாற்றில் முதற் தடவையாக இவ்வாறு எழுப்பப்பட்டது. உண்மையில், இதற்கு முன்னா இலங்கையில் இந்திய எதிர்ப்பு மனோபாவம் இத்தனை வலுவோடு திகழவில்லை என நிச்சயமாகக் கூறலாம். டொனமூர் (Donoughmore) ஆணைக்குழு, 1929 ல் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை வழங்குவது சம்பந்தமாக ஆராய்ந்தபோது சிங்களத் தலைவர்களினதும், தமிழ் பூர்ஷ்வா தலைவர்களினதும் மனோபாவம்

வெளிப்பட்டது.[12] அப்போது இடதுசாரிகள் இயக்கம் இன்னும் தோன்றவில்லை. கரையோரப் பூர்ஷ்வாக்களும் தமிழ் பூர்ஷ்வாக்களும் மலையகத் தமிழரின் அரசியல் பலம் அதிகரித்ததால் இலங்கைவாழ் இந்திய பூர்ஷ்வாக்களின் செல்வாக்கு அதிகரிக்கும் என அஞ்சினர்.

கல்வி அறிவற்ற தோட்ட தொழிலாளருக்கு வாக்குரிமை வழங்கினுல் தோட்ட நிர்வாகிகளின் தூண்டுதலுக்கேற்பவே அவர்கள் வாக்களிப்பார்கள். எனவே பெருந்தோட்ட நலன்களின் செல்வாக்கு அதிகரிக்கும் என அவர்கள் காரணம் கூறினர். கண்டியச் சிங்கள பூர்ஷ்வாக்கள் மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்கினுல் தமது அரசியல் பலம் குறைந்து விடும் என அஞ்சினர். இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற ஸ்தாபனமே அப்போது இலங்கைப் பூர்ஷ்வாக்களின் பிரதான அமைபபாக இருந்தது. அதில் சிங்கள தமிழ் பூர்ஷ்வாக்கள் இணைந்து செயற்பட்டாலும் இரு சாராருக்கும் இடையே கருத்துவேற்றுமைகள் வளர்ந்து வந்தன. சிங்கள பூர்ஷ்வாக்களின் ஆதிக்கம் அதில் மேலோங்கி இருந்தது. பிரிட்டிஷாரின் ஆட்சியில் தத்தமது அரசியல் அதிகாரம் எவ்வாறு வரையறுக்கப்படவேண்டும் என்பதில் இருதரப்பிலும் இணக்கம் காணமுடியாத அளவு முரண்பாடுகள் அதில் தலைதூக்கின. சிங்கள பூர்ஷ்வாக்கள் தமக்கே முழு அதிகாரமும் வேண்டுமென பிடிவாதமாயிருந்தனர். தமது தயவில் தமிழர்கள் வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டை மிகவும் நாசுக்காக வெளியிட்டனர். தமிழ் பூர்ஷ்வாக்கள் சிங்

ளவர் அல்லாதோருக்கு சம ஆசனங்கள் ஒதுக்க வேண்டும் எனக் கோரினர். ஆனால் இவ்விருசாராரும், அப்போதைய தொழிற்சங்க இயக்கத்தின் தலைவரான ஏ.ஈ குணசிங்கவைத் தவிர, ஒரு விடயத்தில் ஒத்தக் கருத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள் சர்வ சன வாக் குரிமையையும், ''மலையகத் தொழிலாளருக்கு'' வாக்குரிமை வழங்குவதையும் ஒருமனதாக எதிர்த்தனர். அப்போதைய சேர்.பொன்.அருணா சலம் ''தோட்ட கூலிகளுக்கு'' வாக்குரிமை வழங்கக் கூடாது என வெளிப்படையாகவே வாதிட்டு வந்தார்.

1931-ல் வரையப்பட்ட டொனமூர் சிபாரிசின் அடிப்படையிலான யாப்பு சிறு பான்மையினருக்கு பெரும் அநீதியிழைத்து, சிங்களப் பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்தை மேம் படுத்தும் பிராந்தியத் தேர்தல் தொகுதி முறையை அறிமுகப்படுத்தியது. எப்படியோ டொனமூர் சிபாரிசினால் ஆசியாவிலே முத லாவது சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட நாடு என்ற ''பெருமை''யை இலங்கை பெற்று விட்டது.

முதலாவது சர்வஜன வாக்கெடுப்பு :

1931ல் முதலாவது சர்வஜன வாக்குரிமை அடிப்படையிலான பொதுத்தேர்தல் நடைபெற் றது. யாழ் பகுதியில் உருவான இலங்கையின் முதலாவது இடதுசாரி இளைஞர் இயக்கத்தின் தலைமையில் ஈழத்தமிழர் இத்தேர்தலை பகிஷ்கரித் தனர். ஆனால் மலையக இயக்கங்கள் இத் தேர்த லில் பங்கு கொண்டன. இத்தேர்தலில் சுமார்

1,00,000 இந்திய வம்சாவளியினர் வாக்குரிமை பெற்றிருந்தனர். இத்தேர்தலில் திருவாளர்கள் கே. நடேசஐயர், பெரியசுந்தரம், எஸ். பீ. வைத்திலிங்கம் ஆகியோர் இவர்களின் வாக்குரிமையினுல் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் திரு. பெரியசுந்தரம் தொழில், உற்பத்தி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

1936ல் நடைபெற்ற இரண்டாவது அரசாங்க சபைத்தேர்தலின் போது இம்மக்களின் வாக்காளர் தொகை 1,45,000 ஆகவும் 1939ல் 2,25,000 ஆகவும் அதிகரித்துச் சென்றது.

1936 இரண்டாவது சட்டசபைத் தேர்தலில் இடதுசாரித் தலைவர் திரு. என். எம். பெரேரா ருவன்வெல தேர்தல் தொகுதியில் வெற்றி பெறுவதற்கும் அவிசாவளை தொகுதியில் திரு. பிலிப் குணவர்தன வெற்றி பெறுவதற்கும் இவர்களின் வாக்கு பெருமளவு காரணமாயிருந்தது. இக்காலகட்டத்தில் கே. நடேசஐயர் தலைமையிலான இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் இடதுசாரிகளை ஆதரித்து வந்தது. இதனுல் இடதுசாரிகளின் பலம் அதிகரித்து வருவதையும் மலையகத் தமிழர் அரசியலில் ஈடுபாடு கொள்வதையும் அச்சத்தோடு நோக்கிய சிங்கள பூர்ஷ்வாக்கள் கங்கணங்கட்டத் தொடங்கினுர்கள்.

**உள்ளூராட்சித் தேர்தலில்:**

1937ல் உள்ளூராட்சித் தேர்தலில் தோட்டத் தொழிலாளருக்கு வாக்களிக்கும் உரிமையை புதிதாக இயற்றப்பட்ட சட்டமொன்றின் மூலம் பறிமுதல் செய்தனர். இச் சட்ட மூலத்தை அப்

போதைய உள்ளூராட்சி அமைச்சராகவிருந்த திரு. எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்க சபையில் சமர்ப்பித்தார். இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலிருந்து மலையகத் தமிழர் ஒதுக்கப்பட்டதன் பிரதான நோக்கம் மலையகத் தொழிலாளரை ஏனைய சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்து, தோட்ட நிர்வாகத்தின் கீழ், நவீன அடிமைகளாக வைத்திருப்பதேயாகும். உள்ளூராட்சி மன்ற முறைக்குள் மலையகத் தொழிலாளர்களைக் கொண்டு வந்தால் படிப்படியாக தோட்டப் புறங்களில் நிலவும் ஒரு வகை இராணுவ முகாம் தன்மையும், துரைத்தனமும் குறைய நேரும். அவர்கள் தமது அரசியல், சமூக வாழ்வைத் தாமே நிர்ணயிப்பதற்கு பயிற்றப்படுவர் என்று அவர்கள் மிகச் சரியாகவே கணித்தனர்.

இவ்வாறு 37ல் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்குரிமை பறிக்கப்பட்டதை எதிர்த்து பெரிதாக ஒரு போராட்டத்தை இடதுசாரிகளோ, மலையகத் தலைவர்களோ முன்னெடுத்துச் செல்லவில்லை.

**இலங்கை—இந்தியர்**
**காங்கிரஸ் தொழிற்சங்கம்:**

மலையகத்தில் முதலாவது பூர்ஷ்வா தேசிய இயக்கம் 1939ல் ஆரம்பிக்கப்பட்டதை முன்னர் பார்த்தோம். அது தொழிலாளர்கள் மத்தியில் இருந்து தனக்குத் தேவையான பலத்தைத் திரட்டிக் கொள்வதற்காக திரு. பெரிய சுந்தரம் தலைமையில் அதன் அங்கமான இலங்கை— இந்தியர் காங்கிரஸ் தொழிற்சங்கத்தை (Ceylon Indian Congress Labour Union) 1940 மார்ச்

மா தம் அப்புத்தளை கதிரேசன் கோவிலில் வைத்து ஸ்தாபித்தது. இச்சங்கத்தில் ஒரு வருடத்திற்குள் 1 லட்சம் அங்கத்தவருக்கு மேல் சேர்ந்தனர். இதன் வேகமான வளர்ச்சிக்குக் காரணம் என்ன?

திரு. கே. நடேசஐயர் இலங்கை—இந்தியச் சமூகத்தில் இருந்த முற்போக்குப் புத்தி ஜீவிகளை பிரதிநிதித்துவப்படுத்தினர். இவர் பிரதிநிதித்துவப்படுத்திய அணி மிகவும் சிறியதாக இருந்தது. அவர் மலையகத் தொழிலாளரின் நல்வாழ்வுக்காக நேர்மையோடு பாடுபட்டார். மலையகத் தொழிலாளர் மத்தியில் தொழிற்சங்கம் அமைப்பதற்குத் தோட்ட நிர்வாகமும், அரசாங்கமும் விதித்த தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் மீறி தொழிற்சங்க இயக்கத்தை மலையகத்தில் தொடங்கி வைத்தவர் இவரே. 1940ல் தோட்ட நிர்வாகமும் உரிமையாளரும் மலையகத்தில் தொழிற்சங்கங்கள் அமைக்கும் உரிமை வழங்கியதற்கு இவர் தொடர்ச்சியாக நடத்தி வந்த போராட்டமும் ஒரு முக்கிய காரணம். ஆயினும் ஒரு பெரிய இயக்கத்தை, எந்த நிதி உதவியையும் செய்ய முடியாத ஏழைத் தொழிலாளர் மத்தியில், கட்டி எழுப்பக்கூடிய நிதி வசதியும் ஆட்பலமும் அவரிடமும் இருக்கவில்லை. இது நடேசஐயரின் இயக்கம் வீழ்ந்தமைக்கு ஒரு காரணம்.

ஆனல் இதற்கான பிரதான காரணம் அவர் அன்றைய யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமையேயாகும். அன்று இந்திய எதிர்ப்புவாதம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது. "இலங்கை

யர் மயப்படுத்தல்'' என்பது சாராம்சத்தில் ''சிங்களமயப்படுத்தல்'' என்ற நிலையில் வளர்ந்து வரும்போது, தற்பாதுகாப்புப் பக்கத்தில் இருந்து ஒரு ''இந்திய—இலங்கையர்'' தேசியவாதமென்றும், அதனை அடிப்படையாகக் கொண்ட பூர்ஷ்வா தேசிய இயக்கம ஒன்றும் உருவாகி வருவதையும் அவர் காணத் தவறி விட்டார்.

இத் தேசியவாதத்தை முன் வைத்த இரண்டு வேறுபட்ட சக்திகள் அதில் இருந்தன. ஒருபுறத்தில் கொழும்பை மையமாகக் கொண்ட மலையகத்தோடு தொடர்பற்ற இந்தியாவை வாழ்விடமாகக் கொண்ட பூர்ஷ்வாக்கள். இவர்கள் முன்வைத்த தேசியவாதம் ஒருவிதமானது. இவர்கள் இலங்கை அரசியலில் முழு இந்தியச் சமூகத்திற்கும் தாம் தலைமை தாங்க நினைக்கவில்லை. தமது கொழும்பு வியாபார நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதொன்றே அவர்களது நோக்கமாயிருந்தது. இந்திய இலங்கையர் தேசிய வாதத்தையும், இயக்கத்தையும் தொடக்கி வைத்து ஆதரித்தார்களே தவிர தொடர்ந்து அதனை முன்னெடுத்துச் செல்ல விரும்பவில்லை. அதைவிட தமது செல்வத்தை இந்தியா கொண்டு சேர்த்து, இந்தியாவில் நிலைத்து விடுவதே அவர்களது பிரதான குறிக்கோளாயிருந்தது. இதனாற்றான் கொழும்பில் உருவான இவ்வியக்கத்தின் தலைமை நாளடைவில் மலையகத்தை மையமாகக் கொண்டவர்களின் கரங்களுக்கு மாறியது.

மறுபுறத்தில், மலையகத்தில் வணிகத் துறையிலும், விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தோர் ஏற்படுத்திய தேசியவாதம் இதற்கு சற்று வேறுபட்

டிருந்தது. அவர்களில் இந்தியா திரும்புவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டவர்கள் போக, இந்தியாவுடனுன தொடர்பைத் துணித்துக் கொண்டு செயற்பட்டவர்கள் ஒரு சமூக சக்தியாகக் கணிக்கக்கூடிய அளவில் மாத்தளை, தெல்தெனிய, தலாத்து ஓய போன்ற பகுதிகளில் நிலச் சொந்தக்காரர்களாகவும், தோட்ட உரிமையாளராகவும், வணிகர்களாகவும் இருந்தனர். கரையோரப் பகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகர்கள் இக் காலகட்டத்தில் மலையகத்தில் போட்டியிடத் தொடங்கி இந்திய எதிர்ப்பு வாதத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தனர். எனவே பாதுகாப்பு நிலையில் ஓரளவு முற்போக்குத்தனமான இந்திய இலங்கையர் தேசியவாதம் இவர்கள் மத்தியில் உருவாகத் தொடங்கியது. இதனைத் திரு. கே. நடேசஐயர் இனங்கண்டு இவர்களது தேசிய இனப்பிரச்சினையையும், தேசிய இயக்கத்தையும் முன்னெடுக்கத் தவறினுர். இடதுசாரிகளும் இதே தவறை விட்டனர். இவர்கள் விட்ட தவறை இந்திய வம்சாவளி பூர்ஷ்வாக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். இத்தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு மலையக மக்களைச் சுலபமாக அணி திரட்டினர்.

இதற்கான பணபலம் அவர்களிடம் இருந்தது. ஆள்பலத்தை தோட்டப்பகுதியில் இருந்த சாதிமுறையைப்பயன்படுத்தி, உயர்சாதியினரான கங்காணிமார்களின் துணையுடன் தோட்டத் தொழிலாளரை தமது பிடிக்குள் கொண்டு வந்தனர். இதன் தலைமை தோட்ட உரிமையாளரான தரகு பூர்ஷ்வாக்களின் கைகளுக்கு மாறியது. எனவே வர்க்க முரண்பாட்டை விட தேசிய இன

முரண்பாட்டையே அவர்கள் தூக்கிப் பிடித்தனர். இந்திய இலங்கையர் மத்தியில் பெரியளவு மூலதனத்துவ வளர்ச்சி இல்லாதபடியால் நாளடைவில் அது ஒரு கட்சியாக வளராமல், வேறெந்த இயக்க வடிவையும் எடுக்காமல், தொழிற்சங்கமாக மாத்திரம் நிலைத்தது. இருந்தாலும் இது வெறுமனே ஒரு தொழிற்சங்கம் மாத்திரமல்ல. மலையகத் தமிழர்களின் தேசிய இயக்கமும் ஆகும். இன்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தொழிற்சங்கமாக இருந்து கொண்டும், மலையகத் தமிழர்கள் தேசிய இயக்கமாகவும் செயற்படுவதை இந்தப் பின்னணியில்தான் பார்க்க வேண்டும். மலையகத் தமிழரில் பெரும்பாலானோர் (90%) தொழிலாளராக இருப்பதாலும், அவர்களுடைய தேசிய இனப்பிரச்சினை சாராம்சத்தில் வர்க்கப் பிரச்சினையாக இருப்பதாலும், அதன் பூர்ஷ்வா தலைமைக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே பிரச்சினை கூர்மையடைந்துள்ள அண்மைக் காலங்களில், முரண்பாடு அதிகரித்து வருவதையும் அந்தத் தலைமையின் இன்றைய தன்மையையும் பின்னர் பார்க்கலாம். தற்போது மீண்டும் பாராளுமன்ற அரசியலுக்குத் திரும்புவோம்.

பாராளுமன்ற அரசியல்:

1939 செப்டம்பர் மாதம் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கியது. இலங்கை அரசாங்கம் பிரித்தானியருக்கு யுத்தத்தில் ஆதரவளிப்பதைக் கண்டித்த ல.ச.ச.க தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். ல.ச.ச கட்சி தடைசெய்யப்பட்டது. எனவே, அவர்களது தொழிற்

சங்கம் மலையகத்தில் செயற்பட முடியாமல் போனது. இந்நிலைமை இலங்கை இந்தியன் காங்கிரசுக்கு சாதகமாக அமைந்தது. இத்தடை, யுத்தம் முடிவுறும் தறுவாயில் நீக்கப்பட்டது. யுத்த கால நிலைமை காரணமாக அரசாங்க சபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை.

யுத்தம் முடிவுறும் போது உலக நிலைமை வெகுவாக மாற்றமடைந்திருந்தது. உலகமெங்கும் தேசிய விடுதலை இயக்கங்கள் வலிமை பெற்றுத் திகழ்ந்தன. சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய ஏகாதிபத்திய சாம்ராச்சியம் ஆட்டம் கண்டது. அது முன்னரைப் போல நேரடியாக தனது காலனிகளை ஆளும் வல்லமையை இழந்து விட்டது. புதிய முறையில் தனது பொருளாதார நலனுடன் இணைக்கப்பட்ட தனக்கு விசுவாசமான உள்ளூர் பூர்ஷ்வாக்களின் கைகளுக்குத் தனது பொருளாதார நலன் பாதிக்கப்படாத விதத்தில் அரசியல் அதிகாரத்தை மாற்றுவது பற்றி ஆராய்ந்தது. 1944-ல் இலங்கை வந்த சோல்பரி ஆணைக்குழு (Soulbury Commission) இதற்கான தயாரிப்பைச் செய்தது. இலங்கையை நிர்வகிக்கும் பொறுப்பை தனக்கு விசுவாசமான சிங்களப் பூர்ஷ்வாக்களின் கையில் அது ஒப்படைத்தது. சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமையை இக்குழுவும் முற்றுக நிராகரித்தது. என்றும் அவர்கள் சிறுபான்மைஇனத்தவராய் இருக்கும் நிலையைத் தோற்றுவித்த டொனமூர் திட்டத்தை மேலும் உறுதிப்படுத்திற்று. அதுவரை இலங்கை சிங்களப் பூர்ஷ்வாக்களுக்

கென ஒரு கட்சிதானும் இருக்கவில்லை. இலங்கை தேசிய காங்கிரசே அவர்களது ஸ்தாபனமாக இருந்து வந்தது. சோல்பரி பிரபுவின் ஆலோசனையின் பேரில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் முதலாவது பாராளுமன்ற தேர்தலைக் கருத்திற் கொண்டு, அவசர அவசரமாக ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான இலங்கைத் தமிழர் காங்கிரஸ், மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை இந்தியன் காங்கிரஸ், நடேசஐயரின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் ஆகியவை தவிர்ந்த ஏனைய பூர்ஷ்வா அமைப்புகளான இலங்கை தேசிய காங்கிரஸ், பண்டாரநாயக்காவின் சிங்கள மகாசபை, முஸ்லீம் லீக் ஆகியவை ஒன்றிணைக்கப்பட்டு ஐக்கிய தேசிய கட்சி 1946-ல் உருவாக்கப்பட்டது.

இதற்கிடையில் இலங்கை இந்தியர்களின் வாக்குப்பலத்தைக் குறைப்பதற்கான பல நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டன. 1940-ல் இருந்து வாழ்விடத் தெரிவுத் தகைமையைப் புகுத்தி பிரஜைகளைப் பதிவு செய்வதில் கண்டிப்பான முறையை அமுல் படுத்தத் தொடங்கியது. இதனால் 1943-ல் இலங்கை இந்தியர்களின் வாக்காளர் தொகை 1,68,000 ஆக வீழ்ச்சியடைந்தது. இத் தொகை 1939-ல் இருந்ததைவிட 57,000 பேரால் குறைந்ததாகும்.

**1947 தேர்தல்:**

இருப்பினும் சோல்பரி திட்டத்தின்படி 1947-ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற

முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் 7 மலையகத் தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டார்கள். திருவாளர்கள் ஜி.ஆர்.மோத்தா, எஸ். எம். சுப்பையா, சி. வி. வேலுப்பிள்ளை, கே.ராஜலிங்கம், எஸ்.தொண்டமான், கே. குமாரவேலு, திரு.டி.ராமானுஜம் ஆகியோரே அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களாவர். இதைவிட பல தொகுதிகளில் இடதுசாரிகள் வெற்றி பெறுவதற்கு இவர்களது வாக்குகள் காரணமாய் அமைந்தன. ஏ.ஜெ.வில்சனது கூற்றுப்படி மலையகத் தமிழர் 20 தோதல் தொகுதிகளில் நிர்ணயகரமான சக்திகளாக இருந்தனர். [13] இதனால் ''கம்யூனிச அபாயத்தில் இருந்து பௌத்தத்தை பாதுகாப்பது'' என்ற கோஷத்தை முன்வைத்துத் தேர்தலில் வாக்கு வேட்டையாடிய டி.எஸ்.சேனநாயக்காவின் ஐக்கிய தேசிய கட்சி மொத்த 95 ஆசனங்களில் 42-யும் மொத்த வாக்குகளில் 39.5%மாத்திரமே பெற்றது. மேலும் கண்டியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இடதுசாரி வேட்பாளரான டி.பி.இலங்கரத்ன வெற்றி பெறுவதற்கு இவர்களது வாக்குகள் கரணமாய் இருந்தன. இதனால் ஆத்திரமடைந்த டி. எஸ். சேனநாயகா பாராளுமன்ற அரசியலில் இலங்கை இந்தியத் தமிழர்களின் பலத்தை அடியோடு அடித்து வீழ்த்திவிட திடசங்கற்பம் பூண்டார்.

**வாக்குரிமை பறிக்கப்பட்டமை:**

இதன் உடனடி விளைவாகவே மலையகத் தமிழரின் பிரசா உரிமையும், வாக்குரிமையும்

பறிக்கப்பட்டமையாகும். இதற்குக் காரணம் சிலர் கூறுவதைப் போல இடதுசாரிகளை அவர்கள் ஆதரித்தது மாத்திரமல்ல. இதற்கு மூன்று காரணங்கள் இருந்தன. ஒன்று மலையக தொழிலாளர் மலிவான எளிதில் சுரண்டக் கூடிய கடினமான உழைப்புச் சக்தி என்ற முறையில் அவர்கள் தேவைப்பட்டார்கள். அவர்களை நிரந்தரமான "கூலிகளாக" நவீன அடிமைத்தனத்தில் வைத்திருப்பதால் கிடைத்து வரும் ஆதாயங்களை- அவர்கள் பொது அரசியல் வாழ்வில் ஒரு முக்கிய பாத்திரத்தை ஆற்றக் கூடிய நிலைமை வளர்ந்தால், அரசாங்கத் தீர் மானங்களை உருவாக்குவதில் அவர்களது கருத்துக்கள் செல்வாக்குச் செலுத்தத் தொடங் கினால்-இழக்க வேண்டி வரும். அத்துடன் அவர்கள் தொழிற்சங்கங்களிலும் மிகவும் கூடிய எண்ணிக்கையில் ஸ்தாபனப்பட்டிருந்தனர். இலங்கை பொருளாதாரத்தில் 80% அவர்களின் உழைப்பில் தங்கியிருந்தது. எனவே அவர்கள் எதிர்காலத்தில் பலமிக்க அரசியல் சக்தியாக உருவாகி பூர்ஷ்வா நலன்களுக்கு எதிரான போராட்டத்தில் முன்னணி வகிக்க முடியும். இவ்வபாயத்தைத் தவிர்ப்பது அவசியமென வர்க்க உணர்வு மிகுந்த பூர்ஷ்வாக்கள் உணர்ந் தனர். இரண்டாவதாக, தமது வர்க்க நலனுக்கு சவாலாக வளர்ந்து வரும் இடதுசாரி இயக் கத்தைத் தேர்தலில் தோட்டத் தொழிலாளர் ஆதரிப்பதால் நாளை இடதுசாரிகளின் தலை மையில் நடைபெறும் போராட்டங்களையும் அவர்கள் ஆதரிக்கக்கூடும். இந்நிலை வளர்ந் தால் எந்த அரசாங்கத்தாலும் தொழிலாளர்

களின் கோரிக்கைகளுக்குத் தலைவணங்காமல் இருக்க முடியாது. மூன்றாவதாக, மலையக தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் இடம் பெறுவது சிங்களப் பூர்ஷ்வாக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் சர்வதேச ரீதியில் பல மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். இந்தியாவின் ஆக்கிரமிப்புப் பற்றி அச்சம் கொண்டிருந்த சிங்கள பூர்ஷ்வாக்கள் இந்திய நலன்களுக்கு இலங்கையில் பாதுகாவலராய் இருந்த மலையகப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு தெரிவானதைத் தவிர்க்க விரும்பினர். இக்காரணங்கள் அனைத்துக்குமாகத்தான் டி.எஸ்.அவ்வாறு நடவடிக்கையில் இறங்கினர்.

1947ல் நடைபெற்ற தேர்தலில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. அது தான், மலையகத் தமிழர் மற்றெல்லோரையும் விட மிகக் கூடுதலாக யாருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றனரோ அந்த கே. நடேசஐயர் இத்தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரஸ் அபேட்சகரிடம் தோல்வியடைந்தார். அத்துடன் அவரது அரசியல் வாழ்வு முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் அவர் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினர். இப்பத்திரிகை ஈழத்தமிழர்கள் மத்தியில் தேசிய உணர்வைத் தட்டி எழுப்புவதில் வகித்த பாத்திரம் மகத்தானது. இச் சுதந்திரன் பத்திரிகை 1947 ஜூன் மாதம் 1ந் தேதி இலங்கை தமிழ் காங்கிரசின் பத்திரிகையாக ஆரம்பிக்கப் பட்டது. இதன் உரிமையாளராக தமிழ் தேசிய

வாதியாகத் திகழ்ந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் திகழ்ந்தார். இதன் முதலாவது பத்திரிகை ஆசிரியர் கே. நடேச ஐயராவார். இவரது நோக்கம் மலையகத்திற்கும், வடக்கு, கிழக்கிற்கும் நல்லுறவை ஏற்படுத்துவதாக இருந்தது.

இச்சமயத்தில் மற்ரொரு விடயத்தையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அதாவது 1947 தேர்தலின் போது நடேசஐயரின் இயக்கம் மாத்திரமல்ல இலங்கை இந்திய காங்கிரஸ் கூட இடதுசாரிகளையே ஆதரித்தது.யூ.என்.பி.விரோத மனப்பான்மை கொண்டிருந்தது. இதில் ஒரு சில தலைவர்கள், தொண்டமான் போன்ற பெருந்தோட்ட உரிமையாளர்கள் யூ.என்.பி. ஆதரவளர்கள், அதில் இருந்தாலும் அவர்களது கரம் இன்னும் ஓங்கவில்லை. இவர்கள் பொருாதார ரீதியில், பெருந்தோட்ட உரிமையாளராக இருந்தபடியால், யூ.என்.பி.யைச் சேர்ந்த பூர்ஷ்வாக்களுடன் ஆயிரமாயிரம் நலன்களாலும், தொடர்புகளாலும் பிணைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தமது பண பலத்தைக் கொண்டே அவ்வியக்கத்தின் நிதி பலவீனத்தைப் பயன்படுத்தித் தலைவர்கள் ஆனவர்கள். அன்று யூ. என். பி. விரோத மனப்பான்மை இவர்கள் மத்தியில் திகழ்ந்தமைக்குக் காரணம் என்ன?

இதற்கான காரணம் சிலர் கூறுவதைப்போல அவர்கள் இடதுசாரிகளாக இருந்தமை அல்ல. உண்மையில் அவர்களில் எவரும் இடதுசாரியாக இருக்கவில்லை. அன்றிருந்த யூ.என்.பி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 80 சதவீதத்தினர் தோட்ட உரிமையாளராக இருந்தனர். எனவே

அவர்களுடன் தோட்டத் தொழிலாளரின் நலன்கள் மோதியமை முதலாவது காரணம். இரண்டாவதாக, அன்று இந்திய எதிர்ப்புவாதத்தையும், தமிழருக்கெதிரான துவேசத்தையும் வெளிப்படையாகப் பேசிய அனைவரும் அக்கட்சியைச் சேர்ந்தவர்களே. அன்று ஸ்ரீ. ல. சு. கட்சியைப் போன்ற தீவிர சிங்களவாத கட்சிகள் எதுவும் இருக்கவில்லை. எனவே அவர்களது சிங்கள ஆதிக்க வாதம் இவர்களை ஒ டவிடாமற் செய்தது. மூன்றாவதாக, அன்று இனத்துவேஷமில்லாதவர்களாக இடதுசாரிகள் மாத்திரமே திகழ்ந்தார்கள். இவர்களிடம் ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு சரியான வேலைத்திட்டம் இருக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் அச்சமயத்தில் அவர்கள் இனவாதிகளாக இருககவில்லை என்பதை மறுக்க முடியாது. அத்துடன் தேசிய சமஉரிமை என்ற கோஷத்தையும் அவர்கள் உறுதியாக முன்வைத்திருந்தார்கள். எனவேதான் இடதுசாரிகளை மலையகமக்கள் விரும்பி ஆதரித்தனர். இக்காலப் பகுதியில் என்.எம். போன்ற இடதுசாரித் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் லைன் அறைகளில் தங்கி அரசியல் வேலை செய்ததையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

மலையக மக்கள் நிலைபெறுதல்:

1920-48-ம் இடைப்பட்ட இக்காலகட்டத்தில் இந்தியாவோடு நேரடித்தொடர்பைத்துண்டித்துக் கொண்ட நிலையான மலையக மக்கள் உருவாகத் தொடங்கினர். இவ்வாறு இலங்கையின் நிரந்தரக் குடிகளாக மாறிவிட்ட மலையகத் தமிழர்களைப் பற்றிய புள்ளிவிபரங்களைப் பல்வேறு அறிக்கை

களில் காணலாம். 1928ம் ஆண்டு டொனமூர் குழு அறிக்கையின்படி இத்தகைய நிரந்தரக்குடிகள் 40 முதல 50 சதவீதம் வரை இருக்குமென மதிப்பிடப்பட்டது. 1938ல் வெளியான ஜெக்சன் அறிக்கை இதனை 60 சதவீதமென்றும், 1946ல் சோல்பெரி அறிக்கை 80 சதவீதமென்றும் கூறியது.

மலையகமக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்ச்சியையும், உரிமைக்கான ஆவலும், பாராளுமன்ற அரசியலில் அவர்கள் பங்கு கொண்டமையால், வளர்ச்சியுற்றது. இவர்களது வாக்குரிமை மாத்திரம் பறிக்கப்படாமல் இருந்திருந்தால், இவர்களுடைய தலைவிதி மாத்திரமல்ல, இலங்கை அரசியலின் தலைவிதிகூட விரைவில் மாறியிருக்கும்.

## காலகட்டம் 4:
## சுதந்திர இலங்கையில் சுதந்திரம் பறிக்கப்பட்ட மலையகம்— 1948 முதல் 1971 வரை

### மலையகத் தொழிலாளர் மீது இந்திய எதிர்ப்பு வாதம்:

தோட்டத் தொழிலாளர்கள் மீது பிரித்தானியர்கள் ஏனைய உள்ளூர் தொழிலாளர்கள் மீது காட்டுவதை விட மிகுந்த அக்கறைக் காட்ட வேண்டிய நிலை இருந்தது. ஏனெனில் இவர்களது வாழ்நிலையே ஏனைய தொழிலாளர்களைவிட மிக மோசமாக இருந்தது. இதனால் இதனை எதிர்த்து உலக மனிதாபிமான இயக்கங்கள் பலத்த கண்ட

னக்குரல் எழுப்பின. எனவே இந்திய அரசு அடிக்கடி தலையிட நேர்ந்தது. எனவே பல கண் துடைப்பு சட்டங்கள் அவ்வப்போது இயற்றப் பட்டன. 1912ல் சட்ட நிரூபண சபை இவர்களது சுகாதார நலனை பாதுகாக்கும் சட்டமொன்றை நிறைவேற்றியது. 1923ல் தேவையான தொழிலாளர்களை இந்தியாவில் திரட்டுவதற்கு ஒரு பொது நிதியம் உருவாக்கப்பட்டது. இதைவிட உள்ளூர் வாசிகள் மீது விதிக்கப்படும் பல வரிகளிலிருந்து இவர்களுக்கு விதிவிலக்களிக்கப் பட்டது. இருப்பினும் இவர்களது வாழ்வு வாய்க்கும் வயிற்றுக்குமான வாழ்வாகவே இருந்தது. 1920 களில் விசேடமாக பொருளாதார நெருக்கடி உச்சகட்டத்தை அடைந்தபோது இவை சிங்கள இனவாத அரசியல் வாதிகளால் திரித்து பூதாகரமாகச் சித்தரிக்கப்பட்டன. விசேடமாக 1927ல் குறைந்த பட்ச சம்பளச் சட்டம் நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து இந்நிலை மேலும் வளர்ச்சியடைந்தது. இச்சட்டப்படி பலதரப்பட்ட "இந்தியத் தொழிலாளர்களுக்கும்" வழங்க வேண்டிய குறைந்தபட்ச சம்பளம் வரையறுக்கப்பட்டது. இதற்காக சம்பள நிர்ணயசபை ஒன்று நிறுவப்பட்டது. தோட்ட நிர்வாகம் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை மாற்றீட்டு விலைக்கு (Subsidised rate) வழங்க வேண்டுமென விதிக்கப்பட்டது. அப்போது நிலவிய பொருளாதாரநெருக்கடி தோட்டத் தொழிலாளரை மோசமாகப் பாதித்தது. அதனைச் சமாளிப்பதற்கே இச்சலுகை வழங்கப்பட்டது என்பதே உண்மையாகும்.

இவ்விதமாக நிர்ணயிக்கப்பட்ட "சலுகைகளை" "உள்ளூர் தொழிலாளர்களுக்கும்" வழங்க

வேண்டுமென்ற கோரிக்கை 1920களில் சிங்கள அரசியல்வாதிகளால் முன் வைக்கப்பட்டது. உதாரணமாக டி.எஸ்.சேனநாயக்க சட்டநிரூபண சபையில் இது பற்றி தனது அதிருப்தியை வெளியிட்டார். நிலைமை தர்மசங்கடமானபோது ஆணையாளர் (Controller of Indian Immigrant Labour) இவை இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே வழங்கப்படுகின்றன எனக் கூறினார். அதைவிட தோட்டத் தொழிலாளர் மாத்திரமே ''ஒழுங்கு முறை'' (Organised) படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மாத்திரமே இவை வழங்கப்படக் கூடிய நிலையில் உள்ளார்கள் எனவும் காரணங் காட்டினர்.

இந்தியர் எதிர்ப்புவாதம் அதிகரித்து வந்த முப்பதுகளின் இறுதிப்பகுதியில் ஏ.இ.குணசிங்க போன்றோர் தோட்டத் தொழிலாளர்களையும் வெளியேற்ற வேண்டும் என்ற கோஷத்தை முன்வைத்தனர். ஆனால் இக் கோஷத்திற்கு பூர்ஷ்வாக்களின் ஆதரவு கிடைக்கவில்லை. ஆயினும் 40-களில் இந்தியர் எதிர்ப்புவாதம், இந்திய ஆக்கிரமிப்புப் பற்றிய பீதி கலந்த இந்திய எதிர்ப்புவாதமாகத் தோட்டத் தொழிலாளருககு எதிரானதாகவும் திரும்பியது. இக் காலப் பகுதியில் இந்தியா சுதந்திரம் பெறுவது உறுதியாகி விட்டது. பிரித்தானிய இந்தியா சுதந்திர இந்தியாவாக மாறினல் இலங்கையை ஆக்கிரமிக்கக்கூடும் என சிங்கள பூர்ஷ்வாக் களும் அஞ்சத் தொடங்கினர். எனவே தோட்டத் தொழிலாளர் ''இந்தியராக'' இருப் பதாலும், அவர்கள் இந்திய தேசியவாத

கலாச்சாரப் பிடியில் கிடந்ததாலும் தமது தேசிய நலனுக்கு ஆபத்து நேரும் எனக் கருதினர். எனவே ஏ.இ.குணசிங்க போன்ளுேர் தோட்டத் தொழிலாளரை வெளியேற்ற வேண்டும் எனக்கோரினர். 1940-ல் டெல்லியில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்து கொண்ட திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா "இந்தியர்கள் இலங்கையை தமது சொந்த நாடாகக் கருதி அதன் நடவடிக்கைகளில் பங்கு பற்றுவது கிடையாது" எனக் குற்றம் சாட்டியதை இங்கு நினைவு கூறலாம். இக்காலப் பகுதியில் நிலவிய இந்திய ஆக்கிரமிப்பு பற்றிய அச்சத்தை நேரு "அற்புதமான மடத்தனம்" (Fantastic non-sense) எனக் குறிப்பிட்டார்.

"இந்திய ஆக்கிரமிப்பின்" காவல் நிலைக் களனுக அல்லது தீவிர இடதுசாரி அரசியலின் அடித்தளமாக தோட்டத் தொழிலாளர் மாறக் கூடும் என்ற அச்சம் ஒருபுறம். மலிவான கடும் உழைப்பாளர் என்ற முறையில் அவர்களை இழகக விரும்பாத மனநிலை மறுபுறம். இரண்டுக்கு மிடையே சிங்கள பூர்சுவா தலைவாகள் ஊசலாடினர். எனவே தோட்டத் தொழிலாளர் இந்திய பிரசைகளாக இந்நாட்டில் தேசிய உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டு, தேவை ஏற்படும் போது இறக்குமதி செய்யவும் விரும்பிய போதெல்லாம் திருப்பி அனுப்பிவிடக் கூடியதாகவும் அவர்களது உழைப்பைப் பெற விரும்பினர். இவர்களது இம்மனோபாவம் அவர்கள் 40-களில் நடத்திய பேச்சு வார்த்தையின் போது வெளிப்பட்டது.

இரண்டாம் உலக மகாயுத்தம் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது. பிரித்தானிய மலேசியாவை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டது. இதனால் பிரித்தானியா தனது அதிகரித்த ரப்பர் தேவைக்கு இலங்கையையே பெரிதும் சார்ந்திருந்தது. ஆகையால் இலங்கையில் ரப்பர் உற்பத்தி உத்வேகமடைந்தது. ரப்பர் தோட்டங்களில் பணிபுரிய "இந்தியக் கூலிகள்" தேவைப் பட்டனர். இந்திய அரசாங்கமோ "கூலி" ஏற்றுமதியைத் தடை செய்திருந்தது.

இச் சூழலில் தோட்டத் தொழிலாளர்களைத் தொடர்ந்து பெறுவதற்காகவும், அவர்களது தேசிய உரிமையை தமக்குச் சாதகமான முறையில் நிர்ணயிப்பதற்காகவும் இலங்கை அரசியல் தலைவர்கள் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். இத்தகைய முதலாவது பேச்சு வார்த்தை—வாஜ்பாய்சேனநாயக்கா பேச்சுவார்த்தை—1940 நவம்பர் மாதம் டெல்லியில் இந்திய இலங்கை மாநாட்டின் போது (Indo Ceylon Exploratory Conference) நடைபெற்றது. இலங்கைத் தரப்பில் டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் சென்ற தூதுக் குழுவில் எஸ். டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்காவும் இடம் பெற்றார். இதுபற்றி முன்னர் குறிப்பிட்டுள்ளேன்.

இப் பேச்சுவார்த்தையின் தொடர்ச்சி அடுத்த வருடம் செப்டம்பர் மாதம் கொழும்பில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையின் போது "இலங்கையர் அல்லாதவர்" (Non-Ceylonese) என்ற முறையில் தோட்டத்துறைக்குத் தேவை

யான தொழிலாளர்களை இந்தியா தந்துதவ வேண்டும் எனவும் ''இந்தியர் வம்சாவளியினரை'' இந்தியா தனது பிரசைகளாக அங்கீகரிக்க வேண்டுமெனவும் இலங்கை தரப்பினர் கோரினர். இதனை இந்தியா ஏற்கவில்லை. எனவே இப் பேச்சுவார்த்தை எதுவித முன்னேற்றமும் காணவில்லை.

1942 டிசம்பர் மாதம் ரப்பர் தோட்ட தொழிலாளர் தேவை அதிகரித்தபோது இலங்கை மீண்டும் ஒருமுறை ''யுத்தம் முடிவடைந்ததும் திருப்பி அனுப்பக் கூடிய விதத்தில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு'' ரப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்கு கூலிகளை தந்துதவுமாறு வேண்டியது. இவ் வேண்டுகோளை நிராகரித்து 1943 ஜனவரி மாதம் இந்திய அரசு ஒரு அறிக்கை விடுத்தது. அதில், குடியேற்ற தொழிலாளர்கள் குடியேறிய நாடுகளின் பிரசைகளே என்ற தனது நிலையை திட்டவட்டமாக அறிவித்தது.

இந்திய வம்சாவளியினரின் தேசிய பிரச்சினை தொடர்பாக மேலும் இரு மாநாடுகள் சுதந்திரத்திற்கு முன்னர் நடைபெற்றன. 1945 செப்டம்பரில் நடைபெற்ற இலங்கை இந்திய உறவுகள் மாநாடு கூடியபோது குடியேற்றம், இந்தியர்களின் வாக்குரிமையும், அந்தஸ்தும் ஆகிய விஷயங்கள் ஆராயப்பட்டன 1947-ல் நடைபெற்ற இரண்டாவது மாநாடு நேரு-சேனநாயக்க பேச்சு வார்த்தையாகும். இதில் இலங்கையில் வசித்து வரும் 8,00,000 இந்தியர்களில் யார் யார் பிரசா உரிமை பெறத்

தகுதியுடையவர், அவர்களுக்கு எவ்வாறு பிரசா உரிமை வழங்குவது ஆகிய பிரச்சினை கள் ஆலோசிக்கப்பட்டன. ஆனால் இரு மகா நாடுகளிலும் எவ்வித முடிவும் எடுக்கப்பட வில்லை. ஏனெனில், இந்திய வம்சாவளியினர் பர்மா, தென் அமெரிக்கா, பீஜித் தீவு இன்னும் இப்படிப் பல நாடுகளில் வாழ்ந்து வந்தனர். இத்தகைய பிரச்சினைகளை இந்தியா பல நாடு களில் எதிர்நோக்கி வநதது. எனவே இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினர் பற்றி எடுக்கப்படும் முடிவு, அத்தகைய ஏனைய நாடுகளில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளையும் கருத்திற் கொண்டே இந்தியத் தலைவர்கள் செயற்பட்டனர். எனவே அவர்கள் ஒரு உறுதியான முடிவை எடுக்கத் தவறினர்.

மூன்று மனிதஉரிமை மீறல் சட்டங்கள்:

இந்நிலையில்தான் டி. எஸ். சேனநாயக்க ''சுதந்திர இலங்கையில்'' மிகச் சுதந்திரமாக மூன்று மனித உரிமை மீறல் சட்டங்களை, சம் பந்தப்பட்ட மக்களின் கருத்திற்கு மாருக நிறைவேற்றினர். அவற்றில் ஒன்று—1948-ம் ஆண்டு நிறைவேற்றபட்ட இலங்கைப் பிரசா உரிமைச் சட்டமாகும்.

இரண்டாவது, 1949-ம் ஆண்டு கொண்டுவரப் பட்ட இந்தியர் பாகிஸ்தானியர் பிரசா உரிமைச் சட்டம்.

1. Citizenship Act of 1948
2. The Indian and Pakistani Residents Act
3. The Election Amendment Act of 1949

1948 பெப்ரவரி 4-ந் திகதி இலங்கை "சுதந்திரம்" பெறும் வரைக்கும் சகலரும் ஐக்கிய சாம்ராச்சியத்தின் பிரசைகளாகக் (U.K.Subjects) கருதப்பட்டதால் இலங்கைப் பிரசையா, இந்தியப் பிரசையா என்ற பிரச்சினை இருக்கவில்லை. ஆனால் "சுதந்திர" இலங்கையில் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவு கடுமையான முறையில் பிரசா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. சில நாடுகளில் அம்மண்ணில் பிறந்தவர்களுக்கு பிரசா உரிமை கிடைத்து விடுகிறது. இன்னும் சில நாடுகளில் அந்நாட்டில் சில வருடங்கள் வாழ்ந்திருந்தாலே பிரசா உரிமை வழங்கப்பட்டு விடுகிறது. வேறு சில நாடுகளில் அந்நாட்டில் குடியேறி அந்நாட்டு சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதாக ஒப்புதல் தெரிவித்தாலே பிரசா உரிமை கிடைத்து விடுகிறது. ஆனால் இச் சட்டத்தின்படி இரண்டொரு தலைமுறையாக வாழ்ந்து, இந்தியாவுடன் தொடர்பிழந்து போன, லட்சக்கணக்கான மக்களுக்கு- முன்னர் இதே நாட்டில் பிரசா உரிமை இருந்தவர்களுக்கு- இந்நாட்டின் தேசிய உரிமை மறுக்கப்பட்டது.

இது உலகில் வேறெந்த நாட்டிலும் காண முடியாத கொடிய சட்டமாகும். இக்கொடியசட்டத்தின்படி, சிங்களப் பெயரையுடைய ஒருவர் இலங்கைப் பிரசையாகக் கருதப்பட்ட அதேசமயம் தமிழ், இஸ்லாமியப் பெயர்களைத் தாங்கி நின்றவர்கள் இலங்கைப் பிரசைகளாகக் கருதப்படவில்லை. அல்லது சட்டவிரோதமாகக் குடியேறியவராகக் கருதப்பட்டனர். இலங்கையில் பிறந்த

ஒருவர் தான் இலங்கைப் பிரசை என்ற தகுதியைப் பெறுவதற்கு தனது தந்தை அல்லது தனது தந்தை வழிப் பாட்டன் இலங்கையில் பிறந்ததாக நிரூபிக்க வேண்டும். அவர் இலங்கைக்கு வெளியே பிறந்தவராக இருந்தால் அவரது தந்தையும் தந்தையின் தந்தையும் (பாட்டன்), அல்லது பாட்டனும் முப்பாட்டனும் இலங்கையில் பிறந்ததற்கான சான்றுகளை சமர்ப்பித்தாக வேண்டும். இதற்கான சிறந்த சான்ருக பிறப்புச் சான்றிதழ் கருதப்பட்டது. இதனுல் பெரும்பாலும் அவ்வாறு நிரூபிப்பது இயலாத காரியமாக இருந்தது. ஏனெனில் 1895ல் இருந்தே பிறப்பைப் பதிவு செய்யும் முறை கட்டாயமாக்கப்பட்டது. அதற்கு முன்னர் பிறப்பைப் பதிவு செய்வது அவசியமாகவே கருதப்படவில்லை.[14]

இச்சட்டத்தின் நெகிழ்ச்சியற்ற தன்மையைப் பாராளுமன்றத்தில் சுட்டிக் காட்டிய இடதுசாரித் தலைவர்களில்ஒருவரான பீட்டர் கெனமன் "இதில் கோரப்படும் சான்றுகளின் அடிப்படையில் பார்க்கப்போனுல் மதிப்புக்குரிய பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்க அவர்கள் கூட இலங்கைப் பிரசையாக முடியாது. ஏனெனில் அவரது தந்தை இலங்கையில் பிறந்ததற்கான சான்றை அவரால் கூட சமர்ப்பிக்க முடியாது" எனக் குறிப்பிட்டார். இக்கூற்று பிரசா உரிமைச் சட்டத்தின் பாரபட்சத்தையும் கடுமையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

**தமிழ்த் தலைவர்களின் துரோகம்:**

இச்சட்ட மூலத்தை அன்றைய பூர்சுவா தமிழ் தலைவர்களான ஜி.ஜி. பொன்னம்பலமும்,

நேசையாவும், எஸ். சுந்தரலிங்கமும் ஆதரித்துப் பேசி வாக்களித்ததன் மூலம் சிங்கள பூர்சுவாக் களின் நல்லெண்ணத்தைப் பெற விரும்பினர். பிரிட்டிஷாரின்கீழ் 50க்கு 50என்ற கோரிக்கையை முன் வைத்த அவர்களது சிறுபான்மை தேசிய இனத்தவருக்கு சமஉரிமைக்கான விண்ணப்பங் களையும், வேண்டுகோளகளையும் பிரிட்டிஷார் புறக்கணித்துச் சிங்கள பூர்சுவாக்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்ததனுல் அவர்களுடன் சமரசம் செய்து கொண்டு சலுகைகளைப் பெற விரும்பினர். இதற்காக மலையகத் தமிழர்களின் உரிமையை பலியிட்டு அந்தத் துரோகத்திற்குப் பரிசாக ஜி. ஜி. மந்திரி பதவியும் பெற்ருர். அதே சமயம் இத்தலைவர்களின் துரோகத்தனத்தை எதிர்த்து ஒரு சாரார் "இன்று அவர்களுக்கு நாளை எமக்கு"என்ற தீர்க்கதரிசனக் கூற்றுடன் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையில், இலங்கைத் தமிழா காங்கிரசை விட்டு வெளியேறி 1949ல் தமிழரசுக் கட்சியை அமைத்ததை நாம் மறக்க முடியாது. ஆயினும் இவர்கள் மலையக மக்களை அணிதிரட்டி போராட்டத்திற்கு தயார் படுத்தவில்லை. இதைவிட 1956ல் நடைபெற்ற பண்டா-செல்வா பேச்சு வார்த்தையின் போது அதுவரை மலையகத்தமிழர்களின் குடியுரிமை கோரி வந்த திரு. எஸ். ஜே. வி செல்வநாயகம், திரு. பண்டார நாயக்காவின் வற்புறுத்தலின் பேரில் இக்கோரிக்கையைக் கைவிட்டார். இதன் பின்னரே பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது.

**இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதம் :**

இடதுசாரிகள் இச்சட்டத்தை எதிர்த்துப் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துவதுடன்

தமது கடமையை முடித்துக் கொண்டனர். சுதந்திரத்தின் பின்னர் அவர்கள் பாராளுமன்றத் துக்கும், பாராளுமன்ற ஜனநாயகத்திற்கும் அப் பால் போராடுவதைக் கைவிட்டமையை இது காட்டியது. இப்பிரச்சினையில் பாராளுமன்ற ஜனநாயக வரம்புக்குள் கூட அவர்கள் போராட வில்லை. இது அவர்கள் பாராளுமன்ற சந்தர்ப்ப வாத அரசியலில் தமது முதலாவது அடியை எடுத்து வைத்ததைக் குறித்தது.

**குதிரைப்படையால் நசுக்கப்பட்ட சத்தியாக்கிரகம் :**

அப்போது மலையக மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த இலங்கை இந்தியர் காங்கிரஸின் தொண்டமான் தலைமையிலான தீவிர வலதுசாரிகளின் செல்வாக்கு பலமாக இருந்தது. இச்சட்டத்தை எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் கொதித்துக்கிளம்பினர். காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்த அடையாள சத்தியாக்கிரகத்தில் பங்கு கொள்வதற்காக கொழும்பு காங்கிரஸ் தலைமை காரியாலயத்தில் பல்லாயிரக்கணக்கில் குழுமினர். அரசாங்கம் 11 பேருக்கு மேல் வீதிகளில கூடக் கூடாது என்ற சட்டத்தை, பிறப்பித்தது. ஆயினும் தோட்டத் தொழிலாளர்கள ஆவேசத்தோடு சட்டத்தை மீறு வோம் என முழங்கிக்கொண்டிருந்தனர். காரியால யத்தின் உள்ளே தலைவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது பற்றியல்ல, பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்பது பற்றிப் பேசிக் கொண்டிருநதார்கள்.

அப்போது அன்றைய இடதுசாரி தொழிலாளர்களின் சர்வதேசிய உணர்வையும், போராட்டக் குணத்தையும் உணர்த்துகின்ற சம்பவம் ஒன்று நடைபெற்றது. துறைமுகத் தொழிலாளர்களின் கீழணித் தலைவர்கள் அவர்களிடம் வந்து, "சட்டத்தை மீறி சத்தியாக்கிரகம் நடத்துங்கள். நாமும் எம்மோடு உள்ள தொழிலாளத் தோழர்களும் வந்து கலந்து கொள்கிறோம்" எனக் கூறினர். ஆனால் அவர்களுக்கு "நாம் அதுபற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். தேவையானால் சொல்லி அனுப்புகிறோம்" எனக்கூறி மலையகத் "தலைவர்கள்" திருப்பி அனுப்பினார்கள்.

அன்று காங்கிரஸ் தலைவர்களும் இடதுசாரி தலைவர்களும் இணைந்து ஒரு போராட்டத்தை நடத்தக்கூடிய நிலைமை சிறப்பாக இருந்தது. ஆனால் இருதரப்பு தலைவர்களுமே சந்தர்ப்பவாதிகளாய் இருந்து விட்டனர்.

காரியாலயத்தில் கூட்டம் நடத்திக் கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர்கள் திடீரென வெளியே வந்தார்கள். பதினொரு பேர் கொண்ட குழுக்களாக பின்தொடருங்கள் எனக் கூறிவிட்டு அவர்களது கருத்தைக் கூறவிடாமலே முன்தொடர்ந்து 11பேராகச் சென்றுபாதையில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினார்கள். பொலிசார் தலைவர்களைப் பாதுகாப்பாக வண்டியில் ஏற்றிச் சென்றனர். தொண்டர்கள் மீது குதிரைப்படை ஏவப்பட்டு, போராட்டம் மூர்க்கமான முறையில் நசுக்கப்பட்டது. அதற்கு மேல் எந்தப் போராட்டத்தையும் நடத்த காங்கிரஸ் தலைவர்கள் துணியவில்லை.

**பதிவுப் பிரசைகள்**

1949ல் பதிவுப் பிரசைக்கான சட்டம், இந்தியர் - பாகிஸ்தானியர் குடியிருப்போர் சட்டம், (Indian and Pakistani Residents Citizenship Act) என்ற பெயரில் கொண்டு வரப்பட்டது. இதன்படி விண்ணப்பதாரி 1946ம் ஆண்டில் இருந்தும் அதறகு முன்னர் 10 வருடங்களுக்கு முன்பிருந்தும் தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்பவராக இருத்தல் வேண்டும். ஆயினும் இதனை நிருபிப்பதில் கண்டிப்பான, சிக்கலான முறைகளை நடைமுறைப்படுத்தி பதிவுப் பிரசைகளின் எண்ணிக்கையைக் கூடியவரையில் குறைப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியது. இச்சட்டம் 1952-ல திருத்தப்பட்டது.

**வாக்குரிமை பறிப்பு**

அடுத்த ஆண்டில் கொண்டுவரப்பட்ட தேர்தல் திருத்தச் சட்டம் (The election amendment act of 1949) பிரசா உரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமை கிடையாதென்று மறுத்ததன் மூலம் மலையகத் தமிழர்கள் தமது வாக்குரிமையை இழந்தனர். (இதனல்) இதன் பின்னர் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய தேர்தல் தொகுதிகள் சிங்களப் பிரதிநிதிகளால் நிரப்பப்பட்டன. மலையகத் தமிழ் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதானது. பெருந்தோட்ட நிர்வாகிகளினதும், உரிமையாளர்களினதும் நோக்கத்தையும், நலன்களையும் மாத்திரம நிறைவேற்றவில்லை. தோட்டத் தொழிலாளர்கள், அந்நியர்கள், அண்டிப் பிழைக்க வந்தவர்கள், இந்நாட்டில் அவர்களுக்கு எவ்வித தேசிய உரிமையும் கிடையாது என்ற

கருத்தோட்டத்தை ஏனைய சமூகங்களுக்கிடையே ஏற்படுத்தி அவர்களை இரண்டாந்தர பிரசைகளாக ஆக்கியது. அது மாத்திரமல்ல. இச்செயல் முழு தொழிலாள வர்க்கத்தின் பலத்தையும் வெகுவாகக் குறைத்து விட்டது. அன்று முதல் இலங்கையின் பொது அரசியல் வாழ்விலிருந்து மலையகத் தமிழர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள். இலங்கையில் நீண்ட பாராளுமன்ற அரசியல் ஒரு மரபாகி விட்ட சூழ்நிலையில், இடதுசாரிகள்கூட பாராளுமன்ற வரம்புக்குள் கட்டுப்பட்டுக் கிடந்த நிலையில் இவர்கள் அரசியல் முக்கியத்துவமற்ற, அ ர சி ய ல் அனாதைகளானார்கள். தொழிலாளர் அணியில் பெரும்பான்மையினரான இவர்கள் பொது அரசியல் வாழ்விலிருந்து இவ்வாறு ஒதுக்கப்பட்டதால் இலங்கையின் முழுத் தொழிலாள வர்க்க அரசியலும் பலவீனமடைந்தது. இதன் பின்னர் நகர்ப்புறத் தொழிலாளர் தலைமை தாங்கிய பிரமாண்டமான போராட்டங்களில், பொதுப்படையாக, தோட்டத் தொழிலாளர் பங்கு கொள்ளவில்லை. அதே போலத் தோட்டத் தொழிலாளர் நடத்திய போராட்டங்களில் நகர்ப்புறத் தொழிலாளர் பங்கு கொள்ளவும் இல்லை. இவ்வாறு இரு தொழிலாள அணிக்கும் இடையே ஒரு இடைவெளி உருவாகி வளர்ந்து நாளடைவில் இரு சாராரிடத்தும் குரோதம் வளரும் அளவுக்குச் சென்றது. சிங்களத் தொழிலாளர் நடத்தும் போராட்டங்கள் மாத்திரமே இடதுசாரிகளால் ஆதரிக்கப்பட்டன. அல்லது பொருட்படுத்தப்பட்டன. மலையகத் தமிழ் தொழிலாளர் நடத்தும் போராட்

டங்கள் ''தொண்டமானின் பிற்போக்குத்தன மான'' போராட்டங்களாகக் கூட பல சமயங் களில் சித்தரிக்கப்பட்டன. எனவே இதன் பின் னர் ''நகர (சிங்கள) தொழிலாளரின் போராட் டங்கள் யாவும் முற்போக்கானவையாகவும், தோட்டத் தொழிலாளரின் போராட்டங்கள் ''பிற்போக்கானவை''யாகவும் சித்தரிக்கப் பட்டன. இதற்கான அடிப்படைக் காரணம் யாதெனில் 1948-க்குப் பின்னர் மலையகத் தமிழ் தொழிலாளரின் மத்தியில் இருந்து தோன்றிய பிரமாண்டமான போராட்டங்கள் யாவும் அவர் களது தேசிய உரிமை சம்பந்தப்பட்ட போராட் டங்களாகவே இருந்தன. இவர்களது தேசிய இன உரிமை சம்பந்தமாக சிங்கள மக்கள் மத் தியில் ஊட்டி வளர்க்கப்பட்ட தப்பெண்ணங் களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய இடது சாரிகள் உட்பட அனைவரும் தவறி விட்டனர்.

இதன் பின்னர் காணப்பட்ட இரண்டு பிழையான கருத்தோட்டங்களை இவ்வாறு வரையறுக்கலாம். ஒன்று, சிங்களத் தேசிய வாதத்தில் இருந்த முற்போக்கு அம்சம் மிகைப் படுத்தப்பட்டதுடன் தமிழ் தேசியவாதத்தில் இருந்த முற்போக்கு அம்சம் முற்றாக நிராகரிக் கப்பட்டது. இரண்டு, மலையகத் தமிழரின் மத்தி யில் ஒடுக்குமுறையாக வளர்ந்து விட்ட சிங்கள ஆதிக்கவாதம் கூட முற்போக்குத் தேசியவாத மாகச் சித்தரிக்கப்பட்டது. மலையகத் தமிழரின் மத்தியில் உருவான தேசிய உரிமைக்கான கோரிக்கைகள் இந்திய விஸ்தரிப்பு வாதத்துடன் இணைத்துப் பார்க்கப்பட்டது.

**நாடற்றவர் :**

1948—49ம் வருட பிரசா உரிமைச் சட்டங்களின்படி 1951 ஆகஸ்ட் 5ந் திகதி வரை பிரசா உரிமைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஆரம்பத்தில் இ. இ. காங்கிரஸ் இதனைப் பகிஷ்கரிக்கும்படி மலையகத் தொழிலாளர்களை வேண்டியது. பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்டு விண்ணப்பிக்கும்படி கூறியது. இந்த ஊசலாட்டம் தீர்க்கமான இக்காலகட்டத்தில் தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பைக் கொண்டு வந்தது. பகிஷ்கரிப்பை கைவிட்ட பின்னர் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வெகு சொற்பமாகவே இருந்தது. இந்தக் குறுகிய காலத்துள் அரசாங்கம் கோருகின்ற, மிகவும் சிக்கலான விபரங்களையெல்லாம் அவர்கள் ஆதாரத்துடன் சமர்ப்பிக்க முடியவில்லை.

ஆயினும் 1951-ல் ஆகஸ்ட் 5 வரை சுமார் 825,000 பேருக்கு பிரசா உரிமை கோரி 237,034 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இதிலிருந்து அவர்கள் இந்தியாவுடனான வலுவான தொடர்பை கொண்டிருக்கவில்லை என்பதையும் மிகப் பெரும்பான்மையினர் இலங்கையில் வாழவே விரும்பினர் என்பதையும் ஊகிக்க முடியும். கொடிகாரவின் கூற்றுப்படி 1937ல் இருந்து பெருந்தோட்டங்களுக்கு இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் திரட்டப்பட வில்லை. 1941ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியேற்ற மசோதா இவர்களது வருகையை கட்டுப்படுத்தியது. இலங்கை அரசாங்கம் அந்

நியச் செலாவணி சம்பந்தமாக கொண்டு வந்த பல்வேறு கட்டுப்பாடுகளும், இலங்கையர் மய மாக்கல் முயற்சிகளும், இந்தியர் எதிர்ப்புவாதமும் இந்தியர்கள் வந்து குடியேறுவதற்கு இலங்கை கவர்ச்சியளிக்கவில்லை. ஏற்கனவே தோட்டங்கள் தெவிட்டல் நிலைமையை அடைந்துவிட்டமை இதற்கான இன்ெனாரு காரணமாகும்.

மற்றொரு புள்ளி விபரத்தின்படி 50 சத வீதத்திற்கு அதிகமான தோட்டத் தொழிலாளர் பிரசாவுரிமைச் சட்டங்கள் இயற்றப்படும்போது இந்தியா சென்றதில்லை. வணிக வட்டத்தைச் சேர்ந்தவர்களே அடிக்கடி இந்தியா சென்று திரும்பினர். எனவே இம்மக்களில் பெரும் பாலானோர் இலங்கையில் நிலைபெற்று விட்ட னர். அது மாத்திரமல்ல. இலங்கையைப் பிறப் பிடமாகக் கொண்ட இரண்டொரு தலைமுறையும் இங்கு உருவாகி விட்டது. 1920-ம் ஆண் டளவிலேயே இந்தியாவுடனான பந்தங்களைத் துண்டித்துக் கொண்ட ஒரு பகுதியினர் இங்கு நிலையாக வாழத் தொடங்கி விட்டனர் என சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். (ஆதாரம்: பொருளியல் நோக்கு, 1980, மார்ச்). சோல்பரி கமிஷன் இவ்வாறு இலங்கையில் நிலை பெற்றவர் களின் தொகை 80 சதவீதமென மதிப்பிட் டது.

இருந்தும், கூடியவரையில் இவர்களுக்கு பிரசா உரிமை மறுப்பதையே உள் நோக்கமாக இலங்கை அரசாங்கம் கொண்டிருந்தது என் பதை தொடர்ச்சியான நிகழ்ச்சிகள் நிரூபிக்

கின்றன. பிரசாவுரிமை கோரி விண்ணப்பிக்கப் பட்ட மனுககளைப் பரிசீலனை செய்வதில் அரசாங்கம் காலம் கடத்தியது. 1951-ல் இருந்து 1962 வரை சுமார் 11 வருடங்கள் இவ்விண்ணப்பங்களைப் பரிசீலனை செ வதில் கழிந்தது. 1962 வரை 134,188 பேர் மாத்திரமே பரீட்சையில் தேறி பிரசா உரிமைப் பெற்றனர். அதாவது விண்ணப்பித்த முழுத் தொகையில் 16.2 சதத்தினர் மாத்திரமே இலங்கைப் பிரசா உரிமை பெறும் தகுதியைப் பெற்றனர்.

இந்திய அரசாங்கம், இலங்கையில் பிரசா உரிமை நிராகரிக்கப்பட்ட அனைவரும் தன்னியல் பாக இந்தியப் பிரசைகளாகி விட முடியாது என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டது; மலையகத் தமிழர்கள் பற்றிய பொறுப்பு இலங்கை அரசாங்கத்தையே சாரும் என்ற தனது நிலையை எடுத்தது. ஆயினும் 1948-ல் பிரசாவுரிமை சட்டம் இயற்றப்பட்ட பின்னர் இந்திய பாஸ் போர்ட் வைத்திருந்த அனைவரையும் இந்தியா ஏற்க வேண்டியிருந்தது. இதன்படி 1949 முதல் 1964 வரை 184,771 பேர் இந்தியா வுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்

இரு அரசாங்கத்தாலும் பிரசைகளாக அங்கீ கரிக்கப்படாத, மலையகத் தமிழர் ''நாடற்றவர்'' என்ற சொற்பதம் பெற்ற தனியான பிரிவினராக வகைப்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு 1948 வரை பிரசாவுரிமை இருந்தது. 1948 பிரசா உரிமைச் சட்டமே இவர்களது தேசியஉரிமையைப் பறித்தது. எனவே இவர்கள் நாடற்றவர்களோ, பிரசா உரிமை அற்றவர்களோ அல்ல. பிரச

உரிமை அல்லது தேசிய உரிமை பறிக்கப்பட்டவர்கள்.

1948 டிசெம்பர் 10ந் தேதி இயற்றப்பட்ட உலக மனித உரிமைகள் சாசனத்தின் 15வது ஷரத்து பின்வருமாறு கூறுகிறது.

Article 15 of Universal Declaration of Human Rights. (Dec. 10 - 1948) "Everyone has the right to a nationality, no one shall be arbitrarily deprived of his nationality nor deniedthe right to change his nationality.

"தேசிய இனத்துவ உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ஒருவருடைய தேசிய இனத்துவம் வேண்டுமென்றே பறிக்கப்படுவதோ, அல்லது அவரது தேசிய இனத்துவத்தை மாற்றிக் கொள்வதற்குள்ள அவரது உரிமையை மறுப்பதோ கூடாது."

ஆனால் இலங்கை அரசாங்கம் மலையகத் தமிழர்களை நாடற்றவராக்கியமை அடிப்படை மனித உரிமையை மீறிய செயலாகும். நாடற்றோர் என்ற நிலை இந்நாட்டில் 80% அந்நியச் செலாவணியைத் தமது இரத்தத்தாலும் வியர்வையாலும் பெற்றுத் தந்த மலையகத் தமிழ் தொழிலாளர்களுக்கு எதிர்காலத்தில் பல பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கி விட்டது.

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்:**

1950களின் தொடக்கத்தில் உருளவள்ளி தோட்டத்தில் இருந்து தமிழ் தோட்டத் தொழிலாளரை வெளியேற்றி விட்டு அக்காணியை

சிங்களவருக்கு பகிர்ந்தளிக்க டி.எஸ். சேனநாயக்காவின் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்தது. இதற்கெதிராக இத்தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். தோட்டங்களையே முழுதும் சார்ந்திருந்தது இம்மக்களது வாழ்க்கை. தோட்டத்தை விட்டு எதிர்கால வாழ்க்கைக்கு மாற்றுத் திட்டம் எதுவும் வகுக்காமல் அகதிகளாக வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்ட இந் நடவடிக்கை மிகவும் பாரதூரமான ஒன்றாகும். அந்நியர்களாகக் கருதப்பட்டு தேசிய உரிமையை மறுத்த முதலாவது செயற்பூர்வமான நடவடிக்கை இது. இப்போராட்டத்தை ஆதரித்து ஏனைய அயல் தோட்டங்களும் வேலை நிறுத்தங்களில் குதித்தன. இப்போராட்டத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை தாங்கியது. (இலங்கை இந்திய காங்கிரஸ் 1950ல் எஸ். தொண்டமான் தலைமையில் இ. தொ. கா. என்று பெயர் மாற்றம் பெற்று விட்டது.)

இ. தொ. கா. இந் நடவடிக்கையை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தது. வழக்கின் தீர்ப்பு அரசாங்கத்திற்குச் சார்பாக அமைந்தது. அதனை பிரிவி கவுன்சிலுக்கு அட்பீல் செய்து இறுதியாக வெற்றி கொண்டது. இப்போராட்டத்திற்கும், வழக்கிற்கும் ஏகப்பட்ட செலவானது. அவற்றில் பெரும் பகுதியை எஸ். தொண்டமான் தனிப்பட்ட முறையில் ஏற்ருர். இதற்காக தனது எஸ்டேட் ஒன்றையும் அவர் விற்று பணத்தைச் செலவழித்தார். இதற்கு அதிகளவு விளம்பரம் கொடுக்கப்பட்டது.

தொண்டமான் ஒரு தியாகியாக, ரட்சகராக சித்தரிக்கப்பட்டார். அது முதல் மலையகத்தின் ''தனிப்பெரும் தலைவராக'' அவர் உயர்ந்து விட்டார்.

இப்போராட்டம் மிகவும் முற்போக்கானது. அதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போராட்டம் நடத்தப்பட்ட முறை விமர்சனத்துக்குரியது. இக்கால கட்டத்தில் இ. தொ. கா. மலையகத்தில் மாத்திரமல்ல, தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கம் என்ற இடத்தைப் பெற்று விட்டது. இலங்கையின் பொருளாதாரத்தில் 80% இவர்களின் உழைப்பில் தங்கி இருந்தது. இடதுசாரிகள் நகரத் தொழிலாளரிடையே பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்ததுடன் அவர்களிடையே யூ. என். பி. விரோத மனப்பான்மையும் ஓங்கி இருந்தது. சிங்கள ஆதிக்கவாதிகளாக இடதுசாரிகள் இன்னும் மாறவில்லை. இந்நிலையில் ஒரு பரந்துபட்ட தொழிற்சங்க நடவடிக்கை மூலம் அரசாங்கத்தைச் சுலபமாகப் பணிய வைத்திருக்க முடியும். ஆனால் பெரும் எஸ்டேட் உரிமையாளனும், பெரிய கங்காணியாய் இருந்து தோட்ட உரிமையாளனாக மாறியவரது மகனுமான எஸ். தொண்டமான் பூர்சுவா பாணியில், தேசிய உடமைப் பிரச்சினையை சட்டப் பிரச்சினையாக மாற்றி எப்படியோ தீர்வும் கண்டார். அத்துடன் அவர் தன்னை இதன் மூலம் தனிப்பெரும் தலைவராகவும் உயர்த்திக் கொண்டார். அவர் செய்த முதலீட்டுக்கு நல்ல லாபம் கிடைத்தது. அதன்பின்னர் இ.தொ.கா. என்றால் தொண்டமான், தொண்டமான் என்றால் இ. தொ. கா. என மாறிவிட்டது. அந்த அமைப்பின் சர்வாதிகாரியானார். ''சங்கக்

கடையின்'' உரிமையாளராக மாறினர். சாதி அடிப்படையில் கே. ராஜலிங்கம் போன்ற தலைவர்களை வெளியேற்றினர். அவரைத் துதிபாடும் கூட்டம் ஒன்றை வைத்துக்கொண்டு பணத்தையும், சாராயத்தையும், சாதித் தடிப்பையும் கொண்டு தனது செல்வாக்கைப் பரப்பினர். அதிலிருந்து அவர் செல்லும் தோட்டங்களில் எல்லாம் அவருக்கு கழுத்து நிறைய மலர் மாலைகளுக்கும், புகழாரங்களுக்கும் இ. தொ. கா. தலைமையலுவலகம் கணிசமான அளவு பணம் ஒதுக்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு உருவாக்கப்பட்ட அவரது ''இமேஜ்'' (தனிமனித உருவகம்) எந்தளவுக்கு வளாக்கப்பட்டதெனில், 50களின் நடுப்பகுதியில் கல்வி அறிவற்ற, பாமரத் தொழிலாளர்கள் எஸ். தொண்டமானின் உருவப்படத்தை தமது குல தெய்வங்களின் படத்தினருகே வைத்து வழிபடும் அளவுக்கு அவர் தெய்வாம்சம் பொருந்திய பிறவித் தலைவராகக்கருதப்பட்டார்தொண்டமானை வளர்த்து விட்டதில், தொண்டமான் பணபலத்திற்கும், திட்டமிட்ட சதிகளுக்கும் கணிசமானபங்குஇருந்தாலும், அதற்கு தோட்டத்தொழிலாளரின் பாமரத்தன்மை காரணமாக இருந்தாலும், அதில் எமது இடது சாரிகளின் சந்தர்ப்பவாதங்களுக்கு உள்ளபங்கைக் குறைத்து மதிப்பிட முடியாது.

எல்லா இடதுசாரிகளும் தொண்டமானைத் திட்டினர். இந்திய மனோபாவத்தைக் கண்டித்தனர். ஆனல் அவர்களுக்குப் பிரச்சினை வரும போதெல்லாம ஒதுங்கியே இருந்தனர். பிற்காலத்தில் இன்னும் ஒரு படி மேலே போய் சிங்கள

ஆதிக்கவாதத்தின் பாதுகாவலராக இருந்தனர் இன்னும் சில "தூய புரட்சியாளர்கள்" பிற் காலத்தில் சிறிதுகாலம் என். சண்முகதாசன் தலைமையில் மலையகத்தில் வளர்ந்து வந் தார்கள். செங்கொடிச் சங்கம்கூட வளர்ந்த வேகத்தை விட மிக வேகமாக வீழ்ச்சியடைந் தார்கள். இவர்கள் தேசிய இனப் பிரச்சினை பறறி பேசுவதை இனவாதம் என்ருர்கள். "பிரசா உரிமை, வாக்குரிமை எதற்கு?" என வினவி ஞர்கள். பிரச்சினைகளை மறந்து வர்க்க அடிப் படையில் சோசலிசப் புரட்சியில் ஒன்றுபடும் படி கூறினுர்கள். (ஆனல் சோஷலிச புரட்சி) இவ்வாறு இதைத் தவிர வேறெந்த வேலைத் திட்டமும் இவர்களிடம் இருக்கவில்லை. இப்படி இவர்கள் புரட்சி பற்றி உரக்க பேசிக்கொண்டி ருக்கும்போது தொழிலாளர்கள் நிர்வாகத்துட ஞன (சகல பிரச்சினைகளுக்கும்) அன்ருட பிரச் சினைகளுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக இ. தொ.கா. காரியாலயங்களுக்குபடையெடுத்துக் கொண்டிருந்தனர்.

இ. தொ. கா வினதும், தொண்டமானின தும் செல்வாக்குக்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, மலையகத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையையும், இத் தேசிய உணர்வுகளையும் ஏனையோர் அடியோடு நிராகரித்த அதே சமயம் இ. தொ. கா. அத னையே அடித்தளமாகக் கொண்டு தன்னைக் கட்டி வளர்த்துக் கொண்டது. இதுவே பிரதான காரணமாகும். இரண்டாவதாக, இ. தொ. கா. பணபலம் மிக்கதாகவும், அப்பணம் தொண்ட

மானின் கட்டுப்பாட்டில் இருந்து வருவதும். மூன்றுவதாக, தொழிற்சங்க கிளைகளை எல்லாத் தோட்டங்களிலும் நிறுவி ஒழுங்காக நிர்வகித்தல. நான்காவதாக, தொண்டமான் பூர்சுவாவாக இருப்பதால் பதவி உயர்வு, அரசாங்கப் பதவி, இடமாற்றம் போன்ற சில தேவைகளை சிங்களப் பூர்சுவா அரசியல்வாதிகளுடன் பேசிப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நிலையில் இருத்தல். ஐந்தாவதாக, மலையகத் தமிழர்களின் பாமரத்தன்மையிலும் ஊழலிலும் தனது பலத்தை ஸ்தாபித்தல். ஆறுவதாக, சர்வதேச அரங்கில் பிற்போக்குவாதிகள் தொண்டமானைத் தூக்கிப் பிடித்து தேவையான அளவு பணத்தை அள்ளிக் கொடுத்தல். ஏழாவதாக, சுயமாக வெடிக்கும் தோட்டத் தொழிலாளரது போராட்டங்களை ஆதரித்து அதன் மூலம் கிடைக்கும் அரசியல் லாபத்தை பல வழிகளிலும கீழ்த்தரமான முறையில் கூட தானே கைப் பற்றுதல். இ.தொ.கா. வரலாற்றிலேயே எநத ஒரு முக்கிய போராட்டத்தையும அது ஆரம்பித்ததில்லை. தொழிலாளர்கள் சுயமாகப் போராடுவார்கள். அதனை சமரசப்படுத்த இ.தொ.கா. முயலும். பல சமயங்களில் இ.தொ.கா காட்டிக் கொடுத்தே வந்துள்ளது. அதையும் மீறிப் போராட்டம முன்சென்று அரைகுறை வெற்றியைத் தழுவினல் அவ்வெற்றியை உயர்த்திப் பிடித்து அரசியல் வியாபாரம் நடத்தும். இதுவே அதன் மரபாக இருந்து வந்துள்ளது.

ஆயினும் இ.தொ.கா.இன்றளவும் மலையகத் தமிழர்களால் தமது தேசிய இயக்கமாகவே

மதிக்கப்படுகிறது. எனவே, இ.தொ.கா.வின் பிடியிலிருந்து மலையகத் தமிழ் தொழிலாளர்களை விடுவிக்க வேண்டுமானால் மலையகத் தமிழர்களின் தேசிய உணர்வுகளை மதிக்கின்ற விதத்தில் அவர்களது தேசிய இனப்பிரச்சினைக்கான வேலைத் திட்டம் ஒன்றின் மூலந்தான் முடியும், என்பது கூறுமலே விளங்கும்.

இன்றைய இ தொ கா.வைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் ஒன்றுள்ளது. அதனை இங்கு இனிப் பார்ப்போம்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியம் பலவீனமடைந்து அதன் இடத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் வகிக்கத் தொடங்கியது. இம்மாற்றம் இலங்கையிலும் ஏற்பட்டது. சுதந்திரம் பெறும்வரை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் பாதந்தாங்கிகளாக இருந்த யூ.என்.பி தலைவர்கள் பின்னர் அமெரிக்கத் தாசர்களாக மாறினர். அமெரிக்காவின் பிடி படிப்படியாக இலங்கையில் அதிகரித்தது. தொண்டமான் அமெரிக்காவின் விசுவாசமான ஏஜண்டாக மாறினர். இந்தச் சர்வதேசப் பின்னணி தொண்டமானை அமெரிக்க சார்பு பூர்சுவாக்களின் நலனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் யூ.என்.பி.யுடன் இணைத்தது. அவர் இ தொ.கா. என்ற பெயரில் இயங்கும் யூ.என்.பி காரன் என்றழைக்கபடுவதில் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது.

சுதந்திரக்கட்சி பதவியில் இருக்கும்போது தோட்டத் தொழிலாளரின் போராட்டங்களையும், நகர்ப்புறத் தொழிலாளர் நடத்தும் போராட்டங்

களையும், சுதந்திரக் கட்சிக் கெதிரான எதையும் ஆதரிக்கும் இவர் யூ.என்.பி. ஆட்சியின்போது தோட்டத் தொழிலாளர்களைப் போராட வேண்டாம் எனக் கூறுவதையும், 1960-ல் சுதந்திரக் கட்சி அரசாங்கம் தொண்டமானை நியமன அங்கத்தவராக நியமித்தபோது சமயம் பார்த்து அவ்வரசாங்கத்தை வீழ்த்தியதையும் இதன் பின்னணியிலேயே பார்க்க வேண்டும்.

**இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்:**

ஆரம்ப காலத்தில் இ.தொ. கா.வின்பொதுச் செயலாளராக இருந்த ஜனுப். ஏ.அஸீஸ் அவர்களுக்கும் தொண்டமானுக்கும் இடையே ஏற்பட்ட செல்வாக்குப் போட்டியில் திரு. தொண்டமான் வெற்றி பெற்ருர். அஸீஸ் வெளியேற்றப்பட்டார். இவ்வாறு வெளியேற்றப்பட்ட அஸீஸ் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற பெயரில் தனியான தொழிற்சங்கமொன்றை அமைத்தார். ஆரம்பத்தில் இது மலையகத்தில் மிகவும் செல்வாக்குப் பெற்ற தொழிற்சங்கமாகத் திகழ்ந்தது. தொண்டமானேடு பணபலத்தில் போட்டியிடக் கூடிய பூர்சுவாவாக அஸீஸ் திகழ்ந்தபடியால் இ.தொ கா.வுடன் போட்டியிட முடிந்தது. இதைவிட அன்றிருந்த அத்துமீறல் சட்டத்தை மீறித் தோட்டங்களுக்குள் சென்று தொழிற்சங்கக் கிளைகளை அமைக்கும் துணிச்சலான பணியை அவர் மேற்கொண்டார். இதனல் இவர் கைது செய்யப்பட்டு இவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கை பிரிவிகவுன்சில் வரை கொண்டு சென்று இறுதியில் வெற்றி பெற்ருர்.

இதனுலும் இவர் ரஷ்ய அணியைச் சார்ந்து நின்றதாலும் இவருக்கு முற்போக்காளர், துணிகரமான வீரர் என்ற பெயர் ஏற்பட்டது.

ஆனுல் காலப் போக்கில் இவர் தொழிற் சங்கத்தை விட தனது சொந்த வியாபாரத்தில் (இவர் உஷா தையல் மெசின் இறக்குமதி யாளர்) அதிக நாட்டம் செலுத்தியதாலும், தொண்டமான் பணத்தை வாரி இறைத்தளவிற்கு இவர் ஈடு கொடுக்கத் தவறியதாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங் கத்தின் ஒரு அங்கமாக மாறியதாலும் இவரது தொழிற் சங்கம் வேகமாக வீழ்ச்சி யுற்றது. இன்று இத்தொழிற்சங்கம் பெயரளவில் இயங்கிக் கொண்டு வெளிநாட்டில் கிடைக்கும நிதியுதவிகளை பெறுவதையும், பாராளுமன்ற அரசியலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேருவதையும் மாத்திரமே நோக்க மாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

**தேசிய தொழிலாளர் சங்கம்:**

அஸீஸ் வெளியேறிய பின்னர் இ. தொ. கா.வின் பொதுச் செயலாளராக சேவையாற்றிய திரு வெள்ளையன- தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்- அவருடைய செல்வாக்கு வேகமாக வளர்ந்து வருவதைக் கண்ட திரு.தொண்டமான் அதனைத் தனக்குரிய எதிர்கால அச்சுறுத்தலாகக் கருதினுர். எனவே சாதியடிப்படையில் நிர் வாகிகளை மாற்றம் செய்து அவரை வெளி யேற்றினுர். இப்பிரச்சினை பூதாகரமாக எழுந்தது அதனைச் சமாளித்து தான் சாதி வெறியரலல எனக் காட்டிக் கொள்வதற்காக தொண்டமான் ஒரு உபாயத்தை மேற்கொண்டார். அதுவரை

இ.தொ.கா. பிரதிநிதியாக பணிபுரிந்த திரு. ஜேசுதாசன் என்பவரை உடனடியாக செனட்டராக நியமித்தார். இவர் திரு.வெள்ளையன் அவர்களின் நெருங்கிய உறவினர் மாத்திரமல்ல. அதே சாதியைச் சேர்ந்தவருமாவார். திரு. வெள்ளையன் அவர்களின் தேசிய தொழிலாளர் சங்கம் மலையகத்தில் வேகமாக வளர்ந்தது. அவா குறுகிய காலத்தில் அமரத்துவம் அடைந்த பின்னர் இச்சங்கம் வேகமாக வளர்ச்சி பெறவில்லை.

இடதுசாரி தொழிற்சங்கங்கள் :

1956-ல் இ தொ.கா. பிளவுபட்டதை அடுத்து C. V. வேலுப்பிள்ளை, தேவராஜ், நடேசன், மூர்த்தி, ரொசாரியோ பெர்ஞன்டோ போன்றவர்கள் அசீஸின் ஜ.தொ.கா.வினதுமுக்கிய அங்கத்தவராக இருந்தனர். ஆனல் அவரது தன்னிச்சையான முதலாளித்துவ போக்கு பிடிக்காமல் உறவை முறித்துக் கொண்டனர். செங்கொடிச் சங்கமென என். சண்முகதாசனிஞல் நடாத்தப்பட்டு வந்த ஐக்கிய தொழிலாளா சங்கத்துடன் கணிசமான அங்கத்தவர் சேர்ந்து கொண்டனர். இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் கீழ் இயங்கி வந்த இந்தத் தோட்டத் தொழிலாளர் சங்கம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட ரஷ்ய-சீன முரண்பாட்டால் சிதைந்து சின்ஞபின்ஞமானது. C. V. வேலுப்பிள்ளை தேசிய தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்தார். நடேசனும், சண்முகதாசனும் விலகி இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் இயங்கத் தொடங்கினர். இச்சங்கம் வேகமாக வளர்ந்தது

ஆனல் 1970ல் நடந்த கீனு கொலேப் போராட்டத்தின் தோல்வியுடன் வேகமாக வீழ்ச்சியடைந்தது.

இப்படித்தான் இடதுசாரித் தொழிலாளர் அணி வரலாற்றுப் போக்கிலே ஒன்று சேர்ந்து பெரும் சக்தியாக மாறி பெரும் பிரளயத்தை ஏற்படுத்துவதை விடுத்து, பிளவுபட்டு உருமாறி தொழிலாளரின் ஒற்றுமையை உருக்குலேத்தது. இது இலங்கை மலேநாட்டுத் தொழிலாளர் வரலாற்றிலே ஒரு கவலேக்குரிய அம்சமாகும்.

இவ்விரு அணிகளும் மலேயகத்தில் செல்வாக்கு மிக்க சக்திகளாக வளராமைக்கு மூன்று காரணங்களேக் கூறலாம். ஒன்று, இவை தூய புரட்சி பற்றியும், தூய வர்க்கம் பற்றியும் பேசியமை. இரண்டு, மலேயக மக்களின் தேசிய அபிலாசைகளேயும் உணர்வுகளேயும் கருத்தில் கொள்ளாமை. மூன்று, தொழிற்சங்க பேரங்களில் இ. தொ. கா. போன்ற பூர்சுவா அமைப்புகளுடன் இவர்களால் ஈடு கொடுக்க முடியாமற் போனமை.

## இலங்கை தொழிலாளர் கழகம் (ஐ. டி. கே - I.T.K.)

தமிழரசுக் கட்சியின் அங்கமான இலங்கை தொழிலாளா கழகம் 1962-ம் ஆண்டு மன்னர் மாநாட்டில் வைத்து உருவாக்கப்பட்டது. இதன் தலேவராக காலஞ்சென்ற டாக்டர் நாகநாதனும், செயலாளராக திரு. சிவானந்த சுந்தரமும் திகழ்ந்தனர். சிறந்த வக்கீல்களேத் தன்னகத்தே கொண்டிருந்த இத்தொழிற்சங்கம் தொழிற் தகராறுகளே நீதிமன்றஙகளுக்கும்,தொழில் நீதிமன்றங்களுக்கும் எடுத்துச் சென்று திறமையாக வாதிட்டது. மலேயகத்

தில் நிலவிய ஒரு பொது நிலைமை யாதெனில் தொழிலாளரின் தொழிற் தகராறுகளை கையாளக்கூடிய நிர்வாகத் திறன் படைத்த தொழிற்சங்கங்களின் கொள்கை எதுவாக இருப்பினும் அதனால் ஓரளவு வளரமுடியும். இவ்வகையிலேயே இலங்கை தொழிலாளர் கழகம் தனது பணியை ஆரம்பித்தது. தீவிரத் தமிழ் வாதத்தையும் அது முனவைத்தது. எனினும் மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இயக்கமாக அதனால் வளர முடியவில்லை. மலையக மக்களுக்கு இத் தொழிற் சங்கம் ஒரு அந்நிய இயக்கமாகவே தோன்றியது.

60களில் தமிழரசுக் கட்சி ஈழத் தமிழர்களின் தேசிய இயக்கமாகச் செயற்பட்டு முற்போக்கான பல போராட்டங்களை நடத்தியபோதும் அதனால் மலையகத்தின் தலைமையைக் கைப்பற்ற முடியவில்லை. 1964/65 களில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்து தமிழரசுக் கட்சி போராடிய காலத்திலேயே இச்சங்கத்தின் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்தது. ஆயினும் அதன் அங்கத்துவம் எந்தக்காலத்திலும் நாற்பதாயிரத்தைத் தாண்டவில்லை. 65ல்சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தை யூ என்.பி. அரசாங்கத்தின் காலத்தில் திருத்தத்தோடுஏற்றுக்கொண்டபின்னர், விசேடமாக டட்லி அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி அங்கத்துவம் வகித்தபோது இதன் வளர்ச்சி தோல்வியுற்றது.

மீண்டும் 70களின் தொடக்கத்தில் சிறிமா அரசாங்கத்தை எதிர்த்து நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது மறுபடியும் வளரத் தொடங்கி

தொண்டமானுடன் 72ல் சமரசம் செய்து கொண்டு தனது வளர்ச்சியைத் தாரை வார்த்தது.

இவ்வாறு தமிழரசு கட்சி மலையகத்தில் வேரூன்ற முடியாமற் போனதற்கு அதன் சமரசப் போக்கு ஒரு காரணம். அது தொழிலாளர்களின் பிரச்சினையைத் தொண்டமானின் அதேபாணியில் அதாவது சிங்கள பூர்சுவாககளின் தயவில் தீர்க்க முயற்சித்தது, மற்றொரு காரணம். தொண்டமானும் இத்தலைமையும் ஒரே சர்வதேச சார்பைக் கொண்டு யூ. என். பி. ஆதரவாளர்களாகவும் ஒரே வர்க்க தன்மை கொண்டவர்களாகவும் இருந்தமை இன்னொரு பிரதான காரணமாகும். அனைத்தையும் விட இவர்கள் மலையக மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கவும், அவர்களது பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை முன்வைக்கவும் தவறினர்.

**இனக் கலவரம்:**

1956ல் கடைசி தமிழனை 24 மணித்தியாலத்தில் வெளியேற்றுவேன் எனக்கூறிக் கொண்டு பதவிக்கு வந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அரசாங்கம் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை நிறைவேற்றிய போதும், கல்வி அறிவற்ற, கல்வியால் தொழில் வாய்ப்பை எதிர்பாராத மலையகத் தமிழர் அதிகம் பாதிக்கப்படவில்லை. 1958-இல் வெடித்த முதலாவது சிங்களத் தமிழ் கலவரம் கூட இவர்களை அதிகம் பாதிக்கவில்லை.

58ல் பதுளை நகரில் நடைபெற்ற சிங்களவரின் தாக்குதலால் அந்நகர் ஓரளவு பாதிக்கப்பட்டது.

இப்படி ஆங்காங்கே பல பகுதிகளில் சில சில சம்பவங்கள் ஏற்பட்டன. 58ல் சிங்கள வீரனுகத் தன்னைக் காட்டிக் கொண்ட கே. எம். பீ. ராஜ ரத்தின வெலிமடை பகுதியைச் சேர்ந்தவன். ஆயினும் அச்சமயங்களில் தோட்டப்பகுதிகளிலே எவராலும் வாலாட்ட முடியவில்லை. பதுளைக் கருகில் இருந்த தையனுவல தோட்டப்பகுதியில் அத்துமீறி விட எத்தனித்த சிங்களவர்கள் அடித்துக் கலைக்கப்பட்டார்கள். அட்டனுக்கு அருகிலுள்ள கொட்டியாகல பகுதிக்குள் நுழைந்த சிங்களக் காடையர்கள் மிகச் சிரமததுடனேயே உயிர் தப்பி வந்தார்கள். பிற்காலத்தில் சிங்கள வெறியர்கள், கொழும்பு முதல் கொட்டியாகல வரை தமிழர்களைத் துடைத்தெறிவோம் என முழங்கியமைக்கு இதுவே காரணம்.

அதுமுதல் மலையகத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. தாம் எச்சமயத்திலும் தாக்கப்படலாம்; எனவே தயாராக இருப்பது அவசியம் என்ற உணர்வும், தாம் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களிடையே வளர்ந்து வந்தது. மாலை நேரங்களிலும், இரவு நேரத்திலும் அவர்கள் சிலம்படி, மல்யுத்தம் போன்ற பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததை எல்லாத் தோட்டங்களிலும் பரவலாகக் காணக்கூடியதாய் இருந்தது. இது இவர்கள் மத்தியில் தேசிய இன உணர்வு எழுச்சி பெற்றிருந்ததை எடுத்துக் காட்டியது. ஆனல் நிலைமை நீடிக்கவில்லை. இவ்வாறு இவர்கள் ஒரு புறத்தில் தாம் இலங்கையில் வாழ்ந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு திடசங்கற்பம் பூண்டிருக்கும்போது மறுபுறத்தில் இவர்களை

நாடற்றவர்களாக்கிய அரசாங்கம் இவர்களை வெளியேற்றுவதற்கான வழிவகைகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தது.

**பண்டார நாயக்காவும், மலையகமும்:**

பண்டாரநாயக்கா ஆட்சியில் இந்திய நிர்வாகிகளின் ஆதிக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. பீடி புகையிலை இறக்குமதி தடை செய்யப்பட்டமை இலங்கையில் இந்திய பீடி கம்பெனிகளுக்கிருந்த ஏகபோகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. இந்திய திரைப்படங்களையும், சஞ்சிகைகளையும் இறக்குமதி செய்து பெருமளவு லாபம் ஈட்டியவர்கள் இவற்றுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டார்கள். இந்தியர்களின் வர்த்தகம் பல வழிகளில் கட்டுப்படுத்தப்பட்டன. இவ்வாறு பண்டார நாயக்காவின் தேசிய மயக் கொள்கையும், இலங்கையர் மயக்கொள்கையும், பல துறைகளில் இந்திய மூலதனத்திற்கு எதிராகவே பிரதானமாகச் செயற்பட்டது. ஆயினும் இவரது காலத்திலேதான் தோட்டத்துறையில் செயல்படுத்தப்பட்ட அத்துமீறல் சட்டம் நீக்கப் பட்டது. இவரால் கொண்டுவரப்பட்ட ‘‘சேமலாப நிதித்திட்டம்’’ (E.P.F.) தோட்டத் தொழிலாளருக்கு பெரும் நன்மையளித்தது.

பண்டாரநாயக்கா அதுவரை பிரிட்டிசாரின் படைத்தளமாகத் திகழ்ந்த திருகோணமலைத் துறைமுகத்தையும், கட்டுநாயக்கா விமான நிலயத்தையும் தேசியமயமாக்கியதற்கு இந்தியா மீதான அச்சமே பிரதான காரணம் எனக் கூறப் படுகிறது. இத்தளங்களை கண்காணிக்கும் பொறுப்பை இந்தியாவிடம் பிரிட்டிசார்விட்டிருந்த

தால் அவற்றை இந்தியா பயன்படுத்தக் கூடிய சாத்தியக்கூறு இருந்ததென இதற்கு விளக்கம் கூறப்படுகிறது.

பண்டாரநாயக்க காலத்தில் ஏற்பட்ட ஒரு முக்கியமான குணும்ச மாற்றத்தை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். இந்தியாவிலே சொத்தும் இலங்கையில் தொழிலும் கொண்டிருந்த இந்தியர்கள் பண்டாரநாயக்காவின் கொள்கையின் கெடுபிடி தாங்க மாட்டாமல், விசேடமாக மலையகத்தை விட்டு வெளியேறினுர்கள். இதனுல் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட புதிய வர்த்தகக் குழாம் ஒன்று உருவானது. இவ்அணி மலையகத் தொழிலாளருடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. கழிந்து சென்ற அந்த அணியைப் போல பல விடயங்களில் அவ்வளவு பிற்போக்கானதல்ல. தனது சமூகத்தின் கல்வியிலும் (இங்கு ஆழ்ந்த வர்க்க அர்த்தத்தில் இதனை நான் கூறவில்லை) முன்னேற்றத்திலும் இவ்அணி நல்ல பங்களிப்பு செய்தது. ஆங்கில மொழியின் இடத்தை தாய்மொழி பெற்றமையால் தமிழ் மொழிக்கு பாரபட்சம் காட்டப்பட்ட போதும், அதன் பொருளாதார மதிப்பு உயர்ந்தது. இவ்விரு காரணிகளும் ஓரளவு படித்த வாலிபர்கள் மலையகத்தில் தோன்ற காரணமானது. இதன் பின்னர் அதாவது இந்தியர்கள் மலையகத்தை விட்டு வெளியேறிய பின்னர் ''இந்தியத் தமிழர்'' அல்லது ''இந்தியவம்சாவளித் தமிழர்'' ஆகியசொற்பதங்கள் விஞ்ஞானரீதியில் பொருத்தமற்றவை. இதன்பின்னர் மலையகத் தமிழர் என்ற பதமே பொருத்தமானது.

**"நாடற்றவர்" பற்றிய பேச்சுவார்த்தைகள்:**

சுதந்திரத்தின் பின்னர் இரு அரசாங்கங்களும் இரு மகாநாடுகளை நடத்தின. 1953 ஜூன் மாதத்தில் லண்டனிலே நேரு—டட்லி சேனநாயக்கா பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் டட்லி சேனநாயக்கா ஏனைய மகாநாடுகளுடன் ஒப்பிடுகையில், ஓரளவு நியாயமான பிரேரணைகளை முன் வைத்தார் எனக் கூறலாம். இவரது திட்டப்படி இந்தியா 3,00,000 பேரை ஏற்க வேண்டும். ஏனையோருக்கு இலங்கை பிரசா உரிமை வழங்கப்படும். இதில் ஒரு சரத்து, இவ்வொப்பந்தம் ஏற்கப்பட்டால், இந்தியாவுக்கு கட்டாயமாக 3,00,000 பேர் திருப்பி அனுப்பப்படுவர் எனக் குறிப்பிட்டது. இதில் "கட்டாயமாக" என்ற பதத்தை நேரு ஏற்கவில்லை. இதனால் இப்பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை.

அதற்கடுத்த நேரு-கொத்தலாவல பேச்சுவார்த்தை புதுடெல்லியில் 1954 ஜனவரி மாதம் நடைபெற்றது. இதில்ஏற்பட்டசிறுஉடன்படிக்கையின் கீழ் இந்தியப் பிரசைகளாகப் பதிவு செய்யப்பட்டவர்களின் தொகை 53,000 மாத்திரமே. இவ்விரு பேச்சுவார்த்தையும் எந்தவொரு முன்னேற்றமும் காணாததற்கு இரு அரசாங்கங்களின் எதிரெதிரான மனோபாவங்களும் காரணமாக இருந்தன. இந்திய அரசாங்கம் அவர்களை இலங்கையர் என்றது. இலங்கை அரசாங்கம் அவர்களை இந்தியர் என்றது. இந்திய அரசாங்கம் ஏனைய பல நாடுகளில் வாழும் இந்திய வம்சா

வெளியினரையும் மனதிற் கொண்டு எந்தப் பொறுப்பையும் ஏற்காமல் தட்டிக் கழிக்க முயன் றது. இலங்கை அரசாங்கமோ கூடிய பொறுப்பை இந்தியாவின் தலையில் கட்டிவிட முயற்சி செய் தது. இதனால் இரு அரசாங்கங்களும் இணக்கம் காணவில்லை. இவ்வாறு இப்பிரச்சினை இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு திடீர் சூழ்நிலை ஏற்பட்டது.

பர்மாவில் இருந்தும் (3,00,000 பேர்) உகாண்டாவில் இருந்தும் (28755 பேர், 1964 செப்டம்பர் 8ந் திகதி) இந்தியர்கள் அவ்வரசாங்கங்களால் விரட்டி அடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பான்மை யினர் வணிகர்கள். இங்குள்ளது போல பெருந் தோட்டத் தொழிலாளர் அல்ல. (பர்மாவில் வாழ்ந்த இந்தியர்கள் அங்கு 20%மான விவ சாய நிலங்களை கொண்டிருந்தனர்) இத்தகைய ஒரு நிலைமை இலங்கையிலும் ஏற்பட்டு விடக் கூடாது என இந்தியா விரும்பியது. அடுத்ததாக நடைபெற்ற 1962ல் சீன-இந்திய யுத்தத்தைத் தொடர்ந்து சீனவுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த இலங்கையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள இந்தியா விரும்பியது. இறுதியாக, அப்போதைய பாகிஸ்தான் ஜனாதி பதியாக இருந்த யஹியாகான் இலங்கை அரசாங் கத்துக்கு தமது அரசாங்கம் இலங்கையில் உள்ள சகல பாகிஸ்தானியர்களையும் ஏற்றுக் கொள்ளத் தயார் எனக் கடிதம் ஒன்று எழுதி இருந்தார். அப்போது இலங்கையில் 5749 பாகிஸ்தானியர் களே வாழ்ந்தனர். அதனால் பாகிஸ்தானுக்கு

அவர்களை ஏற்றுக் கொள்வது அவ்வளவு சிரமமான காரியம் அல்ல. அதே கடிதத்தில் அவர் ''இந்தியா தனது அயல்நாடு எதனுடனும் சுமுகமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவில்லை'' எனக் குற்றம் சாட்டி இருந்தார். எனவே சீனுவுடனான யுத்தத்தினால் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து சர்வதேச அரங்கில் இந்தியா தனது பெயரை நிலைநிறுத்த வேண்டிய நிலையில் இருந்தது.

அச்சமயத்தில் பர்மாவிலிருந்து இந்தியர்கள் விரட்டியடிக்கப்பட்டதை அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்டிக்கவில்லை. மாறாக தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார். 1964 ஜனவரியில் லண்டனில் நடைபெற்ற காமென்வெல்த் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட அவர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் ''இந்திய அரசாங்கம் கூடியவரை இந்தியத் தமிழர்களை இலங்கையிலிருந்து திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறோம். அவர்கள் 3,00,000 பர்மியர்களை ஏற்றுக் கொள்ளுவதற்கு ஒத்துக் கொண்டுள்ளனர்'' என்று கூறினார்.

இச்சமயத்திலே பண்டிட் ஜவகர்லால் நேரு காலமானார். லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானார். இவருக்கும் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையே 1964 அக்டோபர் 30ந் தேதி அபகீர்த்தி பெற்ற சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தானது. 1964 நவம்பர் 2ந் திகதி இலங்கை மந்திரிசபை அதனை அங்கீகரித்தது.

### சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம்

இலங்கையிலுள்ள 'இந்தியர்களின்' தொகை 1964 செப். 25ந் திகதியன்றிலிருந்தவாறு 1,008,269என கணக்கிடப்பட்டது. இதில்இந்திய கடவுச் சீட்டு வைத்திருப்போரின் எண்ணிக்கை 28,269. எனவே எஞ்சிய 9,75,000 பேரின் பிரசா உரிமை பற்றியே இம்மாநாடு முடிவு செய்தது.

புது டில்லியில் பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியுடன் உயர் மட்டப் பேச்சு வார்த்தை 1964 அக்டோபர் 24ம் திகதி ஆரம்பமானது. தொடக்கத்தில் இருதரப்பும் எத்தகைய உடன்பாட்டிற்கும் வரவில்லை. இதனுல் ஆறுநாட்கள் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஆரம்பத்தில் இந்தியா, சுதந்திரத்திற்கு முன்னர் இந்தியாவைவிட்டு சென்று குடியேறியவர்கள் இந்தியப் பிரசை அல்ல என வாதாடியது. இந்தியப் பிரசைகளெனில் இந்தியத் தூதுவராலயங்களில் பதிவு செய்திருக்க வேண்டுமெனவும் வெளிநாட்டு விசா பெற்றிருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியது. எனினும் இறுதியில் இந்தியா தனது தரப்பில் விட்டுக் கொடுப்புகள் செய்ய முன்வந்தது எனவே 1964 அக்டோபர் 30ந் திகதி சிறிமா — சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தானது. இவ்வொப்பந்தப்படி 9,75,000 பேரில் 5,25,000 பேருக்கு 15 வருட காலத்தில் (அவர்களின் இயற்கை அதிகரிப்புடன்) இந்தியா பிரசா உரிமை வழங்குவதென்றும், அதே காலத்தில் 3,00,000 பேருக்கு அவர்களின் இயற்கை

அதிகரிப்புடன் இலங்கை பிரசா உரிமை வழங்குவதெனவும ஒப்புக்கொள்ளப்பட்டது.

எஞ்சியுள்ள 150,000 பேரின் பிரசா உரிமை அந்தஸ்து 1974 ஆண்டு தீர்மானிப்பது என ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி 1974 ஜனவரியில் செய்து கொள்ளப் பட்ட சிறிமா—இந்திரா ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையும், இந்தியாவும் 75, 000 வீதம் இருநாடுகளும் எஞ்சிய 150,000 பேரை தமக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொண்டன.

இவ்வொப்பந்தங்களைக் கண்டிக்காத சர்வ தேச சுதேச மனிதாபிமான இயக்கங்களே இல்லை எனலாம். இருந்தும் இரு அரசாங்கங்களும் அவற்றைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இவ்வொப்பந்தத்தைப் பற்றிய பிரதான கண்டனங்களை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. சம்பந்தப்பட்ட மக்களின்கருத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், இரு அரசாங்கங்களும் தான் தோன்றித்தனமாக நிறைவேற்றிய ஒப்பந்தம் இது. அதாவது இதனை ஒரு சமூகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகப் பாராமல் அந்தப் பத்து லட்சம் மக்களின் தலைவிதியை அவர்கள் பங்கு பற்றுமலே இரு அரசாங்கங்களும் வெறும் எண்களை கருத்திற் கொண்டு கணித முறையில் முடிவு செய்தன. மனிதாபிமான அடிப்படைகளும், மனித அடிப்படை உரிமைகளும் முற்றுக மறுக்கப்பட்டன. இப்பேச்சு வார்த்தை இடம் பெற்றபோது ஆகக் குறைந்தது அம்மக்களுடைய பிரதிநிதிகள் தானும் கலந்தாலோசிக்கப்படவில்லை, அப்போது ஸ்ரீ. ல. சு க. அரசாங்கத்தில்

நியமன எம். பி. யாக திரு. எஸ். தொண்டமான் இடம் பெற்றிருந்தும் கூட.

2. இவ்வாறு முடிவு செய்யப்பட்டதும், அம்முடிவு ஒரு கட்டாய அடிப்படையில் அமுல் நடத்தப்பட்டது. இதற்கான மனுக்கள் கோரப்பட்டு இடாப்புகள் மூடப்பட்டபோது இலங்கைப் பிரசா உரிமை கோரிச் சுமார் 7,00,000 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் இவ்வொப்பந்தப்படி இலங்கைப் பிரசா உரிமை வழங்கப்பட வேண்டியவர்கள் தொகை 375,000 மாத்திரமே. இந்தியப் பிரசா உரிமை 600,000 பேருக்கு வழங்கப்படும் என்ற நிலைமை இருக்கும் போது இந்திய பிரசா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களின் தொகை 400,000 மாத்திரமே. இவ்வாறு மனுச் செய்தவர்களின் இலங்கைப் பிரசா உரிமை மறுக்கப்பட்டால் இந்தியப் பிரசா உரிமையாவது சிரமமில்லாமல் கிடைக்கட்டும் என இரு நாடுகளுக்கும் விண்ணப்பித்தவர்களின் தொகை கணிசமானது. இதைவிட இவ்வொப்பந்தம் அமுலாகும்போது இந்தியாவில் அமையப் போகும் 'புது வாழ்வு' பற்றி மிகக் கவர்ச்சியான சித்திரங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இருந்தும்கூட இந்தியா செல்வதற்கு இவர்கள் மத்தியில் இருந்து மிகக் குறைவாகவே ஆர்வம் காண்பிக்கப்பட்டது. இதற்குக் காரணம் இம்மக்கள் இலங்கையில் வளமாக வாழ்ந்தார்கள் என்பதல்ல. எந்த ஒரு மக்கள் கூட்டமும் தாம் வாழும் பிரதேசத்தை விட்டு இடம் பெயர்வதை எளிதில் விரும்புவதில்லை. உதாரணத்திற்கு இயற்கை அழிவு மிக்க பல நாடுகளில் வாழும்

மக்கள் அத்தனை சோதனைக்கு மத்தியிலும் தாம் வாழும் பிரதேசத்தை விட்டகல விரும்பாமல் தொடர்ந்து வாழ்வதை நினைவு கூரலாம். மூலதனத்துவ சமூகம் தோன்றிய பின்னர் நிலைபெற்று விட்ட மக்களிடையே இந்த மனோபாவம் பொதுமையானது. அதற்கு முன்னர் நிகழ்ந்த குடியேற்றங்களையும், குடிப்பெயர்ச்சிகளையும் இதனுடன் போட்டுக் குழபபிக் கொள்ளக் கூடாது.

இவ்வாறு இம்மக்களின் சுய விருப்பத்திற்கு மாருகப் பல்வேறு நிர்ப்பந்தங்களாலும், ஏமாற்றுகளாலும் திணிக்கப்பட்ட இவ்வொப்பந்தம் மனித அடிப்படை உரிமைக்கு முரணனது. இதன் அடிபபடையில் இந்தியாவுக்கு அனுப்பப்படுவோர் தாயகம் திரும்புவோர் அல்ல; நாடு கடத்தப்படுவோராவர்.

3. இந்தியா செல்வதற்குத் தயாராதல், புறப்படுதல் போன்ற நிகழ் முறைகளில் இம் மக்கள் முகங்கொடுக்கும் கஷ்டங்கள் பற்றிப் பலர் ஆத்திரத்தோடு விமர்சித்துள்ளார்கள்.

இந்திய கடவுச்சீட்டு வழங்கப்பட்ட நாளிலிருந்து சகல ஒப்பந்தங்களையும் செய்து முடிப்பதற்கு 6 மாதம் முதல் ஒரு வருடம் வரை அவகாசம் (விசா) வழங்கப்படுகிறது. ஊழியர் சேம லாப நிதி, சேவைக்கால உபகாரப் பணம், நாணயப் பரிவர்த்தனை, அனுமதிப் பத்திரம், குடும்ப அட்டை ஆகிய அனைத்தையும் இந்த ஒரு வருட காலத்துள் கல்வி அறிவற்ற இத் தொழிலாளர் பெற்ருக வேண்டும். இதனுல்

தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தோட்ட நிர் வாகிகள் போன்ருேர் இடைத்தரகர்களாக மாறி இவர்களேக் கொள்ளை அடிக்கின்றனர். இதன் பின்னர் "Quit Notice" "வெளியேற்ற அறிவித்தல்" வழங்கப்படுகிறது. அதற்கு மேல் தங்கியிருந்தால் அவரைக் கைது செய்து நாடு கடத்தும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு. 71—77 ஆண்டுகளில் நாய்களேப் பிடித்துச் செல்வது போல இம்மக்களே இவ்வாறு பிடித்து ஜீப்புகளில் ஏற்றி உடுதுணியோடு இந்தியா வுக்கு நாடு கடத்திய சம்பவங்கள் சர்வசாதாரண மாக நடைபெற்றன.

இதைவிட அவர்கள் ராமேஸ்வரம்வரை பிரயாணம் செய்யும்போது பியோன் முதல் போர்ட்டர் வரை, கிளார்க் முதல் உயர் அதி காரி வரை அனைவரும் இவர்களே ஏமாற்றி லஞ்சம் பிடுங்கிக் கொள்கின்றனர்.

4. இவ்வாறு செல்வோரின் குடும்ப உறவு கள் துண்டிக்கப்படுகின்றன. பிரசா உரிமை முடிவு செய்யப்பட்டபோது பராயமடையாதிருந்த (மைனர்) குழந்தைகளுக்கு தந்தையுடன் சேர்த்து அதே பிரசா உரிமை வழங்கப்பட்டு விடுகிறது. ஆனுல் 18 வயது கடந்த அவர் களது பிள்ளேகள் தனியாக மனுச் செய்து இந்திய அல்லது இலங்கைப் பிரசா உரிமை பெற வேண்டும். அதற்குள் இவர்களே விட்டு வெளியேற்ற அறிவித்தல் பெற்ற தந்தையும், குடும்பத்தினரும் பிரிய நேரும். சில சமயம் கணவனே மனைவி பிரிய நேரிடுகிறது. ஒரே குடும்பத்தில் அண்ணனுக்கு இலங்கைப் பிரசா

உரிமையும், தம்பிக்கு இந்தியப் பிரசா உரிமையும் வழங்கப்பட்டு விடுகிறது.

பிறந்த நாட்டையும், வளர்ந்த மண்ணையும், பழகிய நண்பர்களையும், உறவினர்களையும் விட்டுப் பிரியும்போது இவர்கள் அனைவரும் அழுது பரிதவிக்கும் பரிதாபகரமான காட்சியை இன்றும் மலைநாட்டில் உள்ள சகல புகையிரத நிலையங்களிலும் காணலாம். காதலனைப் பிரியும் காதலி, அண்ணனைப் பிரியும் தங்கை, பெற்றோரைப் பிரியும் பிள்ளை...இப்படி மனித உறவை அறுத்தெறியும் அந்தக் கொடிய காட்சி இதயம் படைத்த எவரையும் கலங்கச் செய்யும்.

5. புதுவாழ்வைத் தேடி இந்தியாவுக்கு விரட்டப்படும் இவாகளுக்கு அங்கு நேரும் கதி இவை அனைத்தையும் விட அதிர்ச்சியுடன் விமர்சிக்கப்படுகிறது. 15

1980-ல் வெளியிடப்பட்ட பல விரிவான ஆய்வு அறிக்கைகள், இவ்வாறு இந்தியா சென்றவர்களின் நிலைமை பற்றி பல அதிர்ச்சியான தகவல்களை வெளியிட்டுள்ளன.
அவற்றில் சில வருமாறு:—

(அ) பாரதத்திற்கு அனுப்பப்பட்டவர்களில் 82 முதல் 84 சதவீதத்தினர் கல்வி அறிவற்ற, தேர்ச்சி எதுவுமற்ற, தோட்டப்புற வாழ்க்கையைத் தவிர வேறெதுவும் அறியாத தோட்டத் தொழிலாளர்.

(ஆ) இவர்களில் சுமார் 88 சதவீதத்தினர் இந்தியாவை முன்னர் பார்த்ததே இல்லை.

(இ) இவர்கள் இவ்வாறு செல்லும்போது' பரம்பரை பரம்பரையாக உழைத்து இலங்கைப் பொருளாதாரத்தின் 60% — 80% வரை தமது வியர்வையால் ஈட்டித் தந்த இவர்களிடம் எஞ்சுவது சேமலாப நிதி போன்றவற்ருல் கிடைக்கும் சிறு தொகை மாத்திரமே. இவ்வாறு இந்தியா செல்வோரிடம் சராசரியாக 1, 772 /— ரூபாவுக்கான சொத்துகளும், தங்க நகைகள் உட்பட ரூ 2,030/—பணமுமாக மொத்தம் 3,802/-ரூபாய் கையில் இருந்தன. இதை வைத்துத்தான் அவர்கள் புதிய வாழ்க்கையைப் புதிய இடத்தில் ஆரம்பிக்க வேண்டும். 15 சதவீதத்தினர் மாத்திரமே 10,000/— ரூபாவுக்கு அதிகமான உடமைகளும், பணமும் வைத்திருந்தனர். சுருக்கமாகச் சொன்ஞல் இந்தியா சென்ரேரில் 85 சதவீதத்தினர் வறியவர்கள். 15 சதவீதத்தினரே ஒன்றில் உத்தியோகம் பார்ப்பவர்கள் அல்லது ஏதாவது ஒரு வகையில் வாழக்கூடியவர்கள்.

(ஈ) இவ்வாறு தம்முடன் கொண்டு வந்த சொற்பப் பணத்தையும் 93 சதவீதமான குடும்பங்கள் இந்திய வாழ்க்கைத் தரமோ, முறையோ தெரியாமல் உணவிலும், நுகர்ச்சியிலும் செலவழித்து விடுகின்றனர்.

(உ) இந்திய அரசாங்கம் இவர்களை பொறுப்புடன் புனருத்தாரணம் செய்யவில்லை. அது வியாபாரக் கடன் வழங்கி சுய தொழிலில் ஈடுபடுமாறு வற்புறுத்துவதன் மூலம் தனது கடமையை

தட்டிக் கழிக்கிறது. எவ்வித முன் அனுபவமும் இல்லாத, கணக்கு வழக்குப் பார்க்கும் அறிவோ, தேர்ச்சியோ இல்லாத இவாகளை சுய வியாபாரத்தில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கிறது. இவ்வாறு 72 சதவீதத்தினருக்கு வியாபாரக் கடன் வழங்கப் பட்டுள்ளது. 4 சதவீதத்தினரே பெருந் தோட்டங்களில் குடியேறி ஓரளவு நிம்மதியாக வாழ்கின்றனர். மேலும் 4 சதவீதத்தினருக்கு மாத்திரமே விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சிய 20 சதவீதத்தினருக்கு மாத்திரமே நிரந்தரமான தொழில்கள் கிடைத்துள்ளன.

வியாபாரக் கடனுக மொத்தம் ரூ 5,000/— வழங்கப்பட்டாலும் இத்தொகை தவணை அடிப் படையிலேயே வழங்கப்படுகிறது. முதற் தவணையில் 3000/— ரூ வழங்கப்படுகிறது. வியாபாரம் வெற்றிகரமாக நடத்தப்படுகிறது என்பதை அரசாங்க அதிகாரிகள் பரிசீலனை செய்து உறுதி செய்த பின்னர் 5,000/— ரூபா பெறுமதி வாய்ந்த இருவர் உத்திரவாதப்படுத்திய பின்பே மீதி 2,000/— ரூ வழங்கப்படும். இத்தகைய நிலைமைகளால் 4 சதவீதத்தினரே வியாபாரக் கடனில் முழுத் தொகையையும் பெற்றுள்ளனர். ஏனையோர் 3000/—க்கு குறைவாகவே பெற்றுள்ளனர்.

இவ்வாறு வியாபாரக் கடன் பெற்றோரில் 88 சதவீதத்தினர்வியாபாரத்தில்ஈடுபட்டும் வங்குரோத்து அடைந்து வறுமையில் வாடுகின்றனர். இதற்கான இரு பிரதான காரணங்களைக் கூறலாம். ஒன்று, வியாபார முன் அனுபவமற்ற இப் பாமரர்களுக்கு உரிய முறையில் அரசாங்கம் வழி

காட்டவில்லை. உதாரணம், சுமார் 2000 மக்கள் வாழ்கின்ற ஒரு கிராமத்தில் 20 பலசரக்குக் கடைகளுக்கு வியாபாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு, அக்கடனை பெறுவதற்கு பல இடைத்தரகர்களுக்கும் அதிகாரிகளுக்கும் லஞ்சம் வழங்க வேண்டும். இவ்வகையில் சுமார் 50 சதவீதமான தொகையை அவர்கள் அபகரித்துக் கொள்கிறார்கள்.

(ஊ) இவர்கள் ஒரே பகுதியில் குடியேற்றப் படாமல் பல்வேறு பகுதியில், பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதால், இவர்கள் தம்மை ஸ்தாபனப்படுத்தி தமது பிரச்சினைகளை முன் வைத்து குரல் எழுப்ப வழியில்லாமல் போகிறது. சிலர் தமிழ்நாடு அல்லாது வெளிமாநிலங்களிலும் குடியேற்றப்பட்டுள்ளனர்.

(எ) இவர்கள் இந்தியாவின் பல பகுதிகளில் நிலவும் வேறுபட்ட கால நிலைக்கும், சூழலுக்கும் ஈடு கொடுக்கமுடியாமல் நோயாளியாகி விடுகின்றனர். 1976 ஜூலை மாதம் மண்டபம் கேம்பில் மாத்திரம் 50 பேர் காலராவினால் பாதிக்கப்பட்டு இறந்தனர்.

(ஏ) இத்தகைய நிலைமையில் இந்தியா சென்றோரில் 88 சதவீதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். இதுவரை குடியேறியவர்களில் சுமார் 55 சதவீதத்தினர் வறுமையாலும், பட்டினியாலும் அகால மரணமடைந்துள்ளனர். பலர் விபச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(6) இவ்வொப்பந்தத்தை அமுல்படுத்துவதில் கடைப்பிடிக்கப்படும் விகிதாச்சார முறை

தொகையின் அடிப்படையில் அல்லாமல் இந்தியாவுக்குச் செல்கின்ற ஒவ்வொரு 7 பேருக்கும் 4 பேர் வீதம் இலங்கைப் பிரசா உரிமை வழங்கப்படுவதே பொதுவான வழக்காக இருந்து வருகிறது. இதன்படி இந்தியப் பிரசா உரிமை பெற்றவர்கள இந்தியா செல்லும்வரை இலங்கைப் பிரசா உரிமை பெறுவோர் காத் திருக்க வேண்டும்

இம்முறையைத் தளர்த்தி இந்தியப் பிரசா உரிமை வழங்கப்பட்ட ஒவ்வொரு 7 பேருக்கும் 4 பேர் வீதம் (7:4) இலங்கைப் பிரசா உரிமை வழங்குமாறும் இந்தியாவுக்கு அனுப்பப்படும் வரை காத்திருக்க வேண்டாம் எனவும் தொழிற் சங்கங்களும், சமூக நிறுவனங்களும கோரி வந்துள்ளன. இக் கோரிக்கையை 1965—70 வருடங்களில் இருந்த டட்லி அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. ஆனல் 70—77 வருடங்களில் இருந்த சிறிமா அரசாங்கம் அதனை மாற்றி பழைய விதியை கண்டிப்பாக அமுல்படுத்தியது. 1977-ல் பதவிக்கு வந்த ஜே.ஆரின் அரசாங்கம் எழுத்தளவில் டட்லி கொள்கையை ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தாமல் ஏமாற்றி வருகிறது.

இதனல் படித்த பல மாணவர்கள் ''நாடற்றவர்'' என்ற நிலையில் ஆசிரியர் தொழில் போன்ற சாதாரண அரசாங்க உத்தியோகத் தானும் பெறமுடியாமல் திண்டாடுகின்றனர். காணிப் பங்கீடு வாக்குரிமை போன்ற விடயங் களிலும் இப்பிரச்சினை இவர்களைப் பாதிக்கிறது.

7. இவ்வொப்பந்தம் அமுல்படுத்தப்படுவதில் ஏற்படும் தாமதம் பல பிரச்சினைகளை சிக்கலாக்குகின்றன. இதன்படி வருடத்திற்கு 35 ஆயிரம் பேர் வீதம் இந்தியாவுக்கு அனுப்பப்பட வேண்டும். 17 வருடங்களுக்குள் சிறிமா—சாஸ்திரி, சிறிமா—இந்திரா ஒப்பந்தங்கள் இரண்டுமே, அமுலாகி 1981 அக்டோபரில் பூர்த்தியாகி இருக்க வேண்டும். ஆனல் இவ்வொப்பந்தம் இன்னமும் பூர்த்தியாகவில்லை.

இவ்வொப்பந்தம் அமுல் நடத்தப்படுவதில் ஆரம்பத்தில் இருந்தே காலதாமதம் காணப்பட்டது. இவ்வொப்பந்தம் 1964ல் கைச்சாத்திடப்பட்டபோதும் இலங்கை இந்திய (அமுல்) சட்டம் 1967 லேயே இயற்றப்பட்டது.

இவ் வொப்பந்தம் ஆமை வேகத்தில் அமுல் படுத்தப்பட்டு வருவதை பின்வரும் அட்டவணை காட்டுகிறது:-

| ஆண்டு | இந்தியப் பிரசைகளாக அங்கீகரிக்கப்பட்டோர் | இந்தியாவுக்கு அனுப்பப்பட்டோர் | இலங்கைப் பிரசா உரிமை வழங்கப் பட்டோர். |
|---|---|---|---|
| 19 4 | 554 | 14 | — |
| 1965 | 3,131 | 51 | — |
| 1966 | 5,042 | 1,910 | — |
| 1967 | 7,935 | 2,648 | — |
| 1968 | 11,825 | 2,123 | 170 |
| 1969 | 25,020 | 5,284 | 2,929 |
| 1970 | 18,549 | 8,733 | 7,469 |
| 1971 | 33,088 | 21,867 | 13,696 |
| 1972 | 40,859 | 27,575 | 16,107 |
| 1973 | 32,739 | 33,175 | 15,805 |
| 1974 | ? | ? | ? |
| 1975 வரை | 1,85,942 | 1,06,425 | 60,813 |
| 1976 வரை | 2,80,816 | 1,90,802 | 1,04,570 |
| 1978 ஜூன்30வரை | 3,09,926 | 2,29,925 | 1,31,473 |

இந்திய வட்டாரத்தில் இருந்து பெறப்பட்ட மற்ருெரு புள்ளி விபரம் வருமாறு:
ஸ்ரீ லங்காவில் இருந்து குடி பெயர்ந்தோர்—முன்னேற்றம்.

| வருடம் | இந்தியா வந்தோர் தொகை | ● கூட்டுத் தொகை | எதிர்பார்க்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| 1968 | 4,565 | 4,565 | 1,40,000 |
| 1969 | 5,876 | 10,441 | 1,75,000 |
| 1970 | 10,156 | 20,597 | 2,10,000 |
| 1971 | 26,051 | 46,648 | 2,45,000 |
| 1972 | 32,713 | 79,361 | 2,80,000 |
| 1973 | 40,979 | 1,20,340 | 3,15,000 |
| 1974 | 44,940 | 1,65,280 | 3,50,000 |
| 1975 | 26,028 | 1,91,380 | 3,85,000 |
| 1976 | 45,785 | 2,37,093 | 4,20,000 |
| 1977 | 29,800 | 2,76,893 | 4,90,000 |
| 1978 | 29,400 | 3,06,293 | 4,90,000 |
| 1979 (அக்'79) | 22,119 | 3,28,413 | 5,25,000 |

● ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் இந்தியா வந்து சேர்ந்தோரின் மொத்தத் தொகை

ஆதாரம்: A Report on the survey of Repatriates from Sri Lanka, 1980 Appendix II/From: The Rehabilation of Sri Lanka Repatriates, by V. Suriyanarayan. Indians in South Asia.

குறிப்பு: 1) *19-10-1983* வரை மொத்தம் *1,07,580* குடும்பங்கள், *4,28,380* பேர் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

2) *1981* அக்டோபர் *31* இல் இவ்விரு ஒப் பந்தங்களும் காலாவதியாகி விட்டன. ஆயினும் குடியகல்வு இன்னும் தொடர்கிறது. இந்திய ஜனாதிபதி நீலம் சஞ்சீவ ரெட்டி *1982* பெப்ர வரி மாதம் இலங்கை விஜயம் செய்தபோது, இது தொடர்பாக (PTI) பி.டி.ஐ க்கு ஜே.ஆர். வழங்கிய பேட்டியில் "இந்தியா மறுப்பதால் நாம் அவர்களை எமது பிரசைகளாக ஏற்போம்" எனக் கூறினர். இலங்கை அரசாங்கம் தொடர்ச் சியாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை இந்தியா ஏற்க வேண்டுமென எதிர்பார்த்தது. ஆனல் இந்தியா குறிப்பிட்ட காலவரையறை காலாவதியாகிவிட்டதால் ஏற் கனவே பதிவு செய்தவர்களையும் விண்ணப்பித் தவர்களையும் தவிர புதிதாக இடாப்பு திறக்க முடியாது எனக் கூறிவிட்டது. எனவே இன் னும் சுமார் ஒரு லட்சம் பேரை மாத்திரமே இந்தியா ஏற்றுக கொள்ளும்.

8) சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுலாக்கு வதற்கு குறித்த *15* வருட கால அட்டவணை மிகவும்நீண்டது. இந்தநீண்டகால அட்டவணையே இன்னும் அமுலாகி முடியவில்லை. இத்திட்டம்

பூர்த்தியாகும் போது பெரும்பான்மையினர் தமது நடுத்தர வயதைத் தாண்டி புதிய நாட்டில் புதிய சூழலில் புதுவாழ்வு தொடங்கும் வயதைக் கடந்து விடுவர். இதைவிட இத்திட்டமானது இம்மக்களிடையே இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையே ஊசலாடும் மனோபாவத்தை வளர்த்து, இந்நாட்டில் தமக்கு மறுக்கப்படும் உரிமையைப் போராடிப் பெறும் உணர்வை மழுங்கடித்து வருகிறது.

9.) இறுதியாக, ஆனல் பிரதானமாக, 1957-ல் திருச்சிராப்பள்ளியில் இருந்த இலங்கை குடி அகல்வு அலுவலகம், இந்திய அரசாங்கத்தால் மூடப்பட்டதுடன் இந்தியாவி லிருந்து தோட்டங்களுக்குத் தொழிலாளர் வருவது முற்றுக நிறுத்தப்பட்டது. இதற் கிடையில் 39-ன் பின்னர் இப்போக்கு தடை செய்யப்பட்டு விட்டது. ஒரு ஆய்வின்படி 87.6 சதவீதத்தினர் இலங்கையில் பிறநதவர்கள். இந்தியாவைப் பார்த்திராதவர்கள்.[16] 150 வருடகாலம் இங்கு வாழ்ந்து பல தலைமுறை யினரின் வாரிசுகளை- ஒருகாலத்தில் இலங்கைப் பிரசைகளாக இருந்தவர்களை, இவ்வாறு பல- வந்தமாக இந்தியர்களாக மாற்றி நாடு கடத்து வது நாகரிக உலகெங்கிலுமே நடக்க முடியாத காரியம். இவ்வாறு இவர்கள் நாடு கடத்தப் படுவதற்கு இவர்கள் செயத ஒரே குற்றம் இவர்களது முப்பாட்டன்மார் இந்தியாவில் பிறந் தவர்கள் என்பதுதான். இந் நாட்டின் 80சத வீதமான தேசிய வருவாயைத் தமது வியர் வையாலும், இரத்தத்தாலும் ஈட்டித் தந்த இத்

இ—10

தொழிலாளர்களுக்கு இந்நாடு செலுத்திய நன்றிக் கடன் இது.

**இ. தொ. காவும், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமும்**

இ.தொ.கா.வின் பூர்சுவா தலைமை இத் தொழிலாளர்களுக்கு எத்தகைய சாபக்கேடு என்பதற்கு இவ்வொப்பந்தத்தில் அதன் தலைமை நடந்து கொண்ட விதம் மற்றொரு உதாரணத்தைத் தருகிறது.

இவ்வொப்பந்தம் கைச்சாத்தான 64-ல் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் நியமான எம்.பி. யாகத் தொண்டமான் இருந்தார். அவர் இவ் வொப்பந்தத்தை எதிர்த்து வாக்களித்தார். ஆனால் பதவியைத் தூக்கி எறிந்து விட்டு இராசினாமாச் செய்யவில்லை.

இவ்வொப்பந்தத்தை எதிர்த்து வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வேலை நிறுத்தங்கள் ஏனைய தொழிற் சங்கங்களால் தொடங்கப்பட்டவை. உடனே சுதந் திரக்கட்சி ஒரு சரத்தை இம்மசோதாவில் சேர்த் தது. "இவ்வொப்பந்தத்திற்கு எதிராகச்செயற்படு வோரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்" என அச்சரத்து கூறியது. அவ்வளவுதான். தமது பெரும் சொத்துகளை இழக்க விரும்பாத இ.தொ.கா.தலைமை அத்துடன் போராட்டத்தைக் கைவிட்டு பிரசா உரிமைக்கு விண்ணப்பிக்கும் படி தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டது.

1965-ல் யூ.என்.பி. அரசாங்கம் இவ்வொப் பந்தம் தொடர்பாக 7:4 என்ற விதியில் முன் சொன்ன திருத்தத்தைக் கொண்டு வந்தபோது

அப்போது செனட்டர்களாக இருந்த இரு இ.தொ.கா. பிரதிநிதிகள் அதற்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர்.

**சந்தர்ப்பவாத இடதுசாரிகள்**
**இன ஒதுக்கல்வாதிகளாயினர்:**

இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்படும் காலத்தில் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் தமது இடதுசாரிக் கொள்கையைக் கைவிட்டு இனவாதிகளாக மாறி இருந்தனர். சிங்களம் மாத்திரம் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு சிங்கள ஆதிக்கவாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கத்துடன் அங்கம் வகித்தனர். இதன் மூலம் தமிழ்மக்களின் அடிப்படை மொழி உரிமையைக் காட்டிக் கொடுத்த இவர்கள் சிறிமா-சாஸ்திரிஒப்பந்தத்தை முழுமையாக ஆதரித்தனர்.

**தனித்தேர்தல் இடாப்பு:**

சிறிமா-சாஸ்திரி அமுலாக்க விதிகள் 1967-ல் கொண்டு வரப்பட்டபோது நாடற்றவர் தொகையைக் கணிப்பதற்கும், சட்டவிரோதமான குடியேற்றத்தைத் தடுப்பதற்கும வசதியாக ஒரு தனி இடாப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்ற திருத்தப் பிரேரணை ஒன்றை கொழும்பு மத்திய தொகுதி மூன்றும் உறுப்பினரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான திரு.பீட்டர் கெனமன் கொண்டு வந்தார். இதனை ஆதரித்து இனவாதிகளான ஆர்.ஜீ.சேனநாயக்க, பீலிக்ஸ் ஆர்.டயஸ் பண்டாரநாயக்க ஆகியோர் பேசினர்.

அவர்கள் இந்திய உதவி வெளிநாட்டமைச்சர் லட்சுமிமேனன் லோக்சபையில் தற்செயலாக இலங்கையில் உள்ள நாடற்ருேர் தொகை 16 லட்சம் எனக் கூறியதை மேற்கோள் காட்டி இத்தகைய தனி இடாப்பின் அவசியத்தை வலியுறுத்தினர். மேலும் தமது வாதத்தை வலியுறுத்துவதற்காக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் முன்ஞள் தலைவர் இத்தொகையை 17 லட்சம் எனக் கணிப்பிட்டிருப்பதாகக் கூறினர். இவ்வாதம் ஆதாரமற்றது. ஏனெனில் 9.75 லட்சம் பேர் நாடற்றவர் என்பது இந்திய அரசாங்கம் எடுத்த முடிவல்ல. இலங்கை சனத் தொகை புள்ளி விபர திணைக்களத்தின் முடிவேயாகும். எப்படியோ இத்திருத்தப் பிரேரணை தோல்வியடைந்தது.

இதற்கு முன்பே, இதேவிதமான தனி இடாப்பு கொண்டு வரும் தமது எண்ணத்தை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா 1964 நவம்பர் 10ந் திகதி செனட் சபையில் வெளியிட்டார். இதனை "ஜனதா" என்னும் இந்திய ஏடு இன ஒதுக்கல் கொள்கை எனக் கூறி கண்டித்தது. இந்தியப் பிரதமர் திரு. லால்-பகதூர் சாஸ்திரி 1964 நவம்பர் 22-ல் இதனை ஆட்சேபித்து திருமதி பண்டாரநாயக்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இது தொடர்பாக பொதுநலவாய அமைப்பின் இந்தியச் செயலாளர் சீ.எஸ்.ஜா. இலங்கை வந்த போது தனி இடாப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்தார். இதனுல் இம்முயற்சி கைவிடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் 1966 டிசம்பர் மாதம் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல்

படுத்துவதற்கான அமுலாக்கல் சட்டத்தை (Implementation Act of 14) நிறைவேற்றியது. ஆயினும் இந்திய அரசாங்கம் 1967-ம் ஆண்டு ஜூன் மாதமே அமுலாக்கல் சட்டத்தை நிறை வேற்றியது.

**அமுலாக்கல் சட்டமூலம் :**

1966 டிசம்பரில் திரு.டட்லி சேனநாயக் காவின் அரசாங்கம் இவ் அமுலாக்கல் சட்டத்தை கொண்டு வந்தபோது அதுவரை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்து வநத தமிழரசுக் கட்சி கட்டாய நாடு கடத்தலோ, தனிப்பட்ட தேர்தல் தொகுதியோ (தனி இடாப்பு அடிப்படையில்) அமுல்படுத்தப்பட மாட்டாது, என்பதனை ஏற்றுக் கொண்டு இவ் வொப்பநதத்தினை ஆதரித்தது. தமிழரசுக் கட்சி இதனை ஆதரித்தபோதும் அதில் உடன்பாடு காணாத மேலவை உறுப்பினர் திரு.எம். மாணிக்கம் செனற்சபையிடமிருந்து இராசி னுமாச் செய்தாா.

**மலையகத் தமிழ் பாடசாலைகள் பறிமுதல்:**

ஸ்ரீ.ல.சு.க.அரசாங்கக் காலத்தில் இடம் பெற்ற மற்றொரு இன ஒதுக்கல்வாதச் செயல் மலையகத் தமிழ் பாடசாலைகளை சிங்களப் பாடசாலைகளாக மாற்றியமைத்ததாகும்.

1963-ம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் தனியார் பாடசாலைகளைத் தேசிய மயப்படுத்தியது. இச்சுவீகரிப்பு பல முற்போக்கு அம்சங்களைக் கொண்டிருந்தாலும் மலையகத் தமிழரைப் பொறுத்தளவில் அது திட்டமிட்ட

இன ஒதுக்கல் நடவடிக்கையாகவே நடைமுறையில் அமைந்தது. 1945 முதலே தோட்டப்புறப் பாடசாலைகளை அரசு கையேற்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சகல அரசாங்கங்களும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டன. ஆனால் தோட்டப் பாடசாலைகள் மீது கைவைக்காத அரசாங்கம் தோட்டப்புற நகரங்களில் இருந்த மத்தியதர வர்க்கத்தின் தமிழ்ப் பாடசாலைகளை மாத்திரம் சுவீகரித்தது. இப்பாடசாலைகள் மிசனரிகளாலும் தமிழ்ப் பெற்ருேர்களாலும் கட்டப்பட்டவை. அதுவரை தமிழ்ப் பாடசாலைகளாகத் திகழ்ந்த முன்னணிப் பாடசாலைகள் பல சுவீகரிக்கப்பட்ட பின்னர் சிங்களப் பாடசாலைகளாயின. மதவாரியாக இப்பாடசாலைகள் தரம் பிரிக்கப் பட்டபோது எந்த மதத்தைச் சார்ந்த மாணவர்கள் பெரும்பான்மை எண்ணிக்கை கொண்டிருந்தனரோ அம்மதத்திற்குரிய பாடசாலையாக அது கணிக்கப் பட்டது. இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்பொழுது இலங்கைப் பிரசா உரிமையுள்ள பிள்ளைகள் மாத்திரமே கணக்கிடப்பட்டனர். நாடற்றவர் பிரச்சினை காரணமாக பெரும்பாலான மலையகத் தமிழ் மாணவர்கள் இலங்கைப் பிரசா உரிமை பெற்றிருக்கவில்லை. அதுவரைசிங்களத் தமிழ் கலப்புப் பாடசாலைகளாய்ப் பெரும்பாலான முன்னணிப் பாடசாலைகள் திகழ்ந்தன. பிரசா உரிமை இல்லாத காரணத்திஞல் மலையகத் தமிழ் மாணவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த பல பாடசாலைகள் ஒன்றில் பௌத்த பாட சாலைகளாயின, அல்லது முஸ்லிம் பாடசாலைகளாக மாறின.

இதற்கு சிறந்த உதாரணமாக பதுளை திகழ்ந்தது. அப்போதும தொண்டமான் நியமன அங்கத்தவராக இருந்தார்.

## கால கட்டம் - 5

## அரசுடைமையும், தேசிய இன அடக்குமுறையும்.

## 1971 முதல் 1983 ஜூலை வரை.

### தேசிய மயமாக்கல்:

பெருந் தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற கோஷம் இடதுசாரிகளால் முன்வைக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்திற்கு முன்னர் இக்கோஷம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மிகவும் முற்போக்கான முறையில் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. ஆனல் 70-களில் இதே கோஷம் மலையகத் தமிழர்களுக்கு எதிராகக் கிளப்பப்பட்டு அவர்களுக்குப் பாதகமான முறையில் ஏகாதிபத்திய பல்தேசிய கம்பெனிகளுக்கு சாதகமாக "தேசியமயமாக்கல்" அல்லது "சிங்களமயமாக்கல்" நடந்தேறியது.

1971-ம் ஆண்டு தோல்வியுற்ற ஏப்ரல் "இளைஞர் கிளர்ச்சி" கிராமப்புற இளைஞர்களின் அதிருப்தியை வெளிக்காட்டியது. இக்கிளர்ச்சி ஓரளவுக்கு நிலமில்லாப் பிரச்சினையின் வெளிப்பாடாகவும் இருந்தது. இக்காலப் பகுதியில் சனத்தொகை வேகமாக அதிகரித்து விட்டது. நிலப் பிரச்சினை கூர்மையடைத் தொடங்கியது. படித்த இளைஞர்களின் பிரச்சினையை வடக்கில் படித்த வாலிபர்கள் மீது சுமத்திய அன்றைய அரசாங்கம் கிராமப்புற அதிருப்தியை மலையகத்

தொழிலாளர் மீது சுமத்தியது. இதற்கான அகநிலை, புறநிலைச் சூழல்களும் சாதகமாக அமைந்தன.

பெரும்பாலான பெருந்தோட்டங்கள் ஏற்கனவே நட்டத்தில் இயங்கத் தொடங்கின. அதிகரித்துச் சென்ற வாழ்க்கைச் செலவு தொழிலாளர்களின் அடிமட்ட வாழ்க்கை நிலைமையை உத்திரவாதப்படுத்தக்கூடிய விதத்தில் சம்பள உயர்வை வழங்க நிர்ப்பந்தித்தது. அத்துடன் சுதந்திரத்தின் பின்னர் வெள்ளைத் துரைமார்களுக்குப் பதிலாகக் கருப்புத் துரைமார் நியமிக்கப்பட்டமை ஊழலுக்கும் நிர்வாக ஒழுங்கீனங்களுக்கும் வழிவகுத்தது. இதனால் உற்பத்திச் செலவு அதிகரித்தது. அத்துடன் பல தொழிற்சாலைகள் பழைமை தட்ட ஆரம்பித்து விட்டன. அவற்றைப் புனருந்தாரணம் செய்வதற்கு ஏராளமான முதலீடு செய்தாக வேண்டும். அதைவிட பெட்ரோலிய நாடுகள் பெட்ரோல் விலையை அதிகரித்தமையால் மேலும் உற்பத்திச் செலவு பன்மடங்காக அதிகரித்தது இச் சூழலில் பெருந்தோட்ட சுமையை இலாபகரமான முறையில் இலங்கை அரசாங்கத்திற்கு விற்றுவிட இலாபத்தில் இயங்கிய ஒரு சில ஸ்டேர லிங் கம்பெனிகளைத் தவிர ஏனைய கம்பெனிகள் ஆர்வம் காட்டின. இதனை விரும்பாத கம்பெனிகள் கூட தீவிரமான எதிர்ப்பைக் காட்டவில்லை. ஏனெனில் அவை தமது வெளிநாட்டு வர்த்தக ஆதிக்கத்தை ஏஜென்சி நிறுவனங்கள் மூலம் நிலைநிறுத்தி ஏற்றுமதி வர்த்தகத்தால் கிடைக்கும் கொள்ளை லாபத்தை பாதுகாத்துக்

கொள்வதிலும், காலாவதியாகி விட்ட தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்கு எடுக்கக்கூடிய அளவு நஷ்ட ஈடு எடுத்து அதே நிதியை அவற்றை விட லாபகரமான புதிய துறைகளில் முதலீடு செய்வதிலும் சிரத்தைக் காட்டின.

இச்சமயத்தில் பிரித்தானியாவில் இலங்கைத் தோட்டத்தொழிலாளரின் அவலநிலை பற்றி கூக்குரல் எழுப்பப்பட்டது. இங்கிலாந்தில் வசிக்கும் ஈழத்தமிழர் முயற்சியினால் GRAVADA என்ற தொலைக்காட்சி நிறுவனத்தினர் இலங்கை வந்து மலையக மக்களின் மிகமோசமான வாழ்க்கை முறையை தத்ரூபமாக படம் பிடித்து பிரித்தானியாவில் ஒளிபரப்பினர். பிரித்தானியர் அருந்துவது இலங்கையின் தேனீரல்ல; மலையக மக்களின் இரத்தம் எனப் பிரச்சாரம் செய்யப்பட்டது. இதனால் உருவாக்கப்பட்ட பொது சன அபிப்பிராயத்தின் காரணத்தால் பிரித்தானிய அரசு பாராளுமன்ற தூதுக்குழுவொன்றை இலங்கைக்கு அனுப்பியது. இக்குழு மலையகம் சென்று நேரடியாகப் பார்வையிட்டு தயாரித்து அனுப்பியஅறிக்கையில் காணப்பட்ட விபரங்கள்,மலையக மக்கள் நிலை மிக மோசமாக இருப்பதை ஒத்துக் கொண்டது. இதன்படி மலையமக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த அளவிற்கு உயர்த்துவதானால் 1000மில்லியன் பவுன்கள் தேவைப்பட்டன. இதனைப் பிரித்தானியாவிலுள்ள ஏஜன்சிகம்பெனிகள் பொறுக்க நேரிடும். இப்பணத்தைச் செலவழிப்பதை விட தோட்டங்கள் தேசியமயமாக்கல் கொள்கையை ஏற்பது ஸ்ரேனிங் கம்பெனிகளுக்கு இலாபகரமானது. இத

ஞல் ஸ்ரேனிங் கம்பெனிகள் தேசியமயமாக்கல் கொள்கையை ஆதரித்தன.

இவ்வாறு பிரித்தானிய அரசாங்கத்தின் அனுமதியுடன்-பிரித்தானியபல்தேசிய கம்பெனிகளின் சம்மதத்துடன் அவற்றுக்கு லாபகரமான முறையில் அவை பாதிக்கப்படாத விதத்தில் (உதாரணம்: ஏஜென்சி நிறுவனங்கள் சுவீகரிக்கப் படாமை) தேசியமயப்படுத்தல் நடந்தேறியது.

**பெருந்தோட்டங்கள் தேசியமயமாதலும் மலையகத் தமிழ் தொழிலாளரும்:**
**காணிப் பங்கீடு:**

முதலாவது காணிச் சீர்திருத்தசட்டம் (Land Reform Law) 1972ல் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 80,000 ஏக்கர் தேயிலைத் தோட்டங்கள் "சிங்கள மயப்" படுததப் பட்டன. தேசிய மயமாக்கப்பட்ட தோட்டங்களிலிருந்து அரசாங்கம் தோட்டத்தொழிலாளர் அப்புறப்படுத்தப்பட மாட்டார்கள் என உறுதி கூறியது. ஆனுல் உண்மையில், இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளில் இருந்து மலையகத் தமிழ் தொழிலாளர்கள் அகதிகளாக கேட்பார், பார்ப்பார் எவருமின்றி விரட்டி அடிக்கப்பட்டனர். உதாரணமாக, பூண்டுலோயா பகுதியில் இருந்த பல ஆயிரக்கணக்கான தேயிலைத் தோட்டங்கள் சுவீகரிக்கப்பட்டன. அவற்றில் தொண்டமானின் தோட்டங்களும் அடங்கும். அத் தோட்டங்கள் வனவிலங்குகள் வாழும் காடுகளாய் ஒரு காலத்தில் திகழ்ந்தவை. அவற்றைத் தோட்டங்களாக உருவாக்கியவர்கள் இத் தொழி

லாளர்களே. அவ்வாறு சுவீகரிக்கப்பட்டதன் நோக்கம் தோட்டத் தொழிலாளரிடையே அவை பகிர்ந்தளிக்கப்படுவதாக இருந்தால் அல்லது காலாகாலமாக மனிதவிலங்குகளைப் போல மிக வும் துயர வாழ்க்கை வாழ்ந்து வந்த அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட் டங்களை மேற்கொள்வதாக இருந்தால் அது பாராட்டப்பட வேண்டியது. முற்போக்கானது. ஆனால் நடந்ததென்ன? இக்காணிகள் தோட்டத் துறையோடு எதுவித சம்பந்தமும் இல்லாத சிங் கள கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. உதாரணமாக, பசாயிசித் தோட்டம். தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் விரட்டி அடிக்கப் பட்டு பிச்சைக்காரர்களாக தெருக்களில் அலைந்த னர். 1973ல் நிலவிய பஞ்சம் வேறு இக்கொடிய நிலைமையை உக்கிரப்படுத்தியது. எச்சில் சோற்றுக்கு இவர்கள் தவங்கிடந்ததை ஒவ்வொரு நகரங்களிலும் இக்காலப்பகுதியில் காணக்கூடிய தாயிருந்தது. இக்காலத்தில்தான் மலையகத்தில் முதற்தடவையாக பட்டினிச்சாவு இடம் பெற்றது.

இவ்வாறு வீடு வாசல் நிலம் தொழில் அனைத் தையும் ''தேசிய மயம்'' என்ற பெயரில் பறித்துக் கொண்ட சிங்களவாத அரசு, தெருக்களில் பிச்சை வாங்கி அலைந்து கொண்டிருந்தவர்களைப் பற்றி வெளிநாட்டுப் பயணிகள் குரல் கொடுத்த தால், அத்தகையவர்களின் கண்ணிலிருந்து மறைப்பதற்காக, இப்பிச்சைக்காரர் ஆக்கப்பட்ட வர்களை அரசாங்க வாகனங்களில் ஏற்றி சுற்றுலாப் பாதைக்கு வெளியே கொண்டு போய் போட்டு அப்புறப்படுத்தியது. இவ்வரசாங்கத்தில் என்.எம். பெரேரா, கொல்வின், பீட்டர் கெனமன்,

இலங்கை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனுப் அசிஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

1975இல் காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உரிமையாளர்களுக்கு 50 ஏக்கர் தேயிலை அல்லது ரப்பர் தோட்டங்கள் வழங்கப்பட்டு ஏனைய தோட்டங்கள் யாவும் சுவீகரிக்கப்பட்டன.

இக்காலப்பகுதியிலே மலையகத் தமிழருக்கு எதிராகப் பச்சை இனவாதம் பேசப்பட்டது போல வரலாற்றில் முன்னெப்போதும் பேசப்பட்டதில்லை. இதில் முன்னணி வகித்தவர்கள் காணிச் சீர்த்திருந்த அமைச்சர் திரு. கொப்பேகடுவ, கம்பளை எம். பி. ஜயரத்ன ஆகியோராவர். 1977ம் ஆண்டு, பொதுத் தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவின் மகன் அனுரா பண்டாரநாயக்க, நுவரெலியா—மஸ்கெலியா தொகுதியில் தொண்டமானை எதிர்த்துப் போட்டியிட்ட போது சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அவர் நிகழ்த்திய இனவாதப் பேச்சுகளும், அவர் செய்த இனத்துவேசச் செயல்களும் ஏனையோரை விஞ்சின.

**1973-75 பஞ்சம்:**

1973-ம் ஆண்டு நிலவிய பஞ்சமும் அதனைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு அரிசி கொண்டு செல்வதற்கு தடை விதித்தது போன்ற- நடவடிக்கைகளும் மலையகத் தொழிலாளர்களை வெகுவாகப் பாதித்தன இவ்வாண்டுகளில் அனுபவித்த கஷ்டங்களை முன் ஒரு போதும் இவர்கள் அனுபவித்ததில்லை. இப்பஞ்சத்தால் இவர்களிடம்

இருந்த பரம்பரை சேமிப்பான தங்க நகைகளை முதலில் விற்ருர்கள். பின்னர் பித்தளைச் சாமான்களை விற்ருர்கள். இறுதியாக எதுவுமற்ற நிலையில் கற்பையே விற்கும் நிலைக்குச் சென்ருர்கள்.

இக்காலப்பகுதியில் உணவுப் பொருட்களுக்கு நாடெங்கிலும் தட்டுப்பாடு நிலவிய போதும், நெல்லுற்பத்தி அறவே இல்லாத மத்திய மலைநாட்டில் வாழ்ந்த மலையகத் தமிழர்களை இந் நிலைமை வெகுவாகப் பாதித்தது. பாணுக்கும், (Bread) மாவுக்கும் பல மணித்தியாலங்கள் வேலையையும் விட்டு, வரிசையில் நின்று இவர்கள் அலைமோதிய காட்சியும் இவர்களை வணிகர்கள் ஈவிரக்கமின்றி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சுரண்டிய காட்சியும் மனித இதயம் படைத்த எவரையும் கலங்கச் செய்யக் கூடியவை.

டெல்டா- சங்குவாரித் தோட்டச் சம்பவம்:

மலையகத்தையே ஒரு குலுக்கு குலுக்கிய இச் சம்பவம் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கீழ் 1976ல்நடைபெற்றது. கம்பளை எம்.பிஜயரத்னவின் (சு. கட்சியினர்) கையாட்கள அவரது செயலாளரின் தூண்டுதலின் பேரில் புஸ்ஸல்லாவைக்கு அருகிலுள்ள டெல்டா-சங்குவாரி தோட்டங்களுக்கு அரசாங்க வாகனங்களில் சென்று தமிழ் தொழிலாளர்களை அடித்துக் காயப்படுத்தி, கொள்ளையடித்து அவர்களது ஆடுமாடுகளைக் கொன்று குவித்து, லைன்களை தீக்கிரையாக்கினர்.

இவ்வாறு அப்பாவி மக்கள் மீது காரணம் எதுவுமின்றி சிங்கள வெறியர்கள் தாக்குதல்

தொடுத்தது, இதுவே முதற்தடவை. இதனுல் அதிர்ச்சியுற்ற முழு மலையகமும் வேலை நிறுத்தத்தில் குதித்தது. இதன் விளைவாக இத்தகைய சம்பவங்கள் இடம் பெருமல் தடுக்கபபட்டபோதும் இது தொடர்பாக எவர்மீதும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

**சிவனு லட்சுமணன்**
**துப்பாக்கிச்சூட்டு சம்பவம்:**

சிறிமா தனது ஆட்சிக் காலத்தில் எப்படியும் தனது ஒரே மகனுன அனுரா பண்டார நாயக்காவை தேர்தலில் நிறுத்தி வெற்றி பெறச் செய்து விட வேண்டும் என நினைத்தார். இதற்காகவே அனுரா வெற்றி பெறக்கூடிய விதத்தில் நுவரெலிய மஸ்கெலிய என்ற மூவங்கத்தவர் தொகுதி செயற்கையாக உருவாக்கப்பட்டது. இங்கு மலையகத் தமிழரை நம்பியே யூ. என். பி. வாக்குகள் உள்ளன. மலையகத் தமிழர் பிரதிநிதி ஒருவரு•கான ஆசனம் ஒதுக்கப்படும்போது தொண்டமான் நிச்சயம் போட்டி இடுவார். யூ. என். பி. பிரமுகர் காமினி திசாநாயக்காவும் போட்டியிடுவார். எனவே யூ. என். பி வாக்குகள் பிளவுபடும். சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அனுரா எளிதில் சிங்களவரின் வாக்கினுல் வெற்றி பெற முடியும். இவ்வாறு இனரீதியான வாக்குகளை சுதந்திரக் கட்சி கணித்தது.

அனுரா இதனை மிகவும் திறமையாகப் புரிந்து கொண்டு செயற்படுவதாக நிரூபிக்கப் போய் தனது இனவாத சொரூபத்தை வெளிப்படையாக அம்பலப்படுத்திக் கொண்டார். தன்னை ஒரு கண்டிய சிங்கள வீரன் எனக் காட்டிக் கொள்வதற்காக மலையகத் தமிழர் மீது இனவெறியைக்

கக்கினுர். இவருக்கு ஆதரவாக அவரது மாமனுர் மற்றொரு "கண்டிய சிங்கள வீரன்" கொப்பேகடுவ "கண்டிய சிங்களவருக்குச் சொந்தமான நிலத்தை மீட்டுச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தடையாக தொண்டமான் குறுக்கே நின்ருல் அவரையும் வெட்டி கூறு போட்டுப் பகிர்ந்தளிப்பேன்" என முழங்கினுர். இங்கு தாக்கப்பட்டது தொண்டமான் அல்ல, மலையகத் தொழிலாளர்கள்.

தோட்டக் காணியைச் சுவீகரித்து மலையகத் தமிழர்களை விரட்டி அடிக்கும் நடைமுறைக்கு எதிராக ஒரு பெரும் எழுச்சியே மலையகத்தில் ஏற்பட்டிருந்தது. உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்னர் "கொரில்லாத் தாகுதலைப் போல" சிங்கள வெறியர்களால் தாக்கப்பட்ட சங்குவாரி டெல்டா தோட்டங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. காணியை அளப்பதற்காக அளவையாளர்கள் அங்கு சென்றபோது அவர்களது ஜீப்பை மறித்து அவர்களைத் தாக்குவதற்குத் தொழிலாளர்கள் தயாராஞர்கள். தமது முயற்சியைக் கைவிட்டு திரும்பிச் செல்வதாக உறுதி கூறிய பின்னரே அவர்கள் உயிருடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இத்தகைய எழுச்சியை தொண்டமானின் இ. தொ. கா. வழமை போல தொழிற்சங்க மூலதனமாக்கிக் கொண்டிருந்தது. அவ்வளவுதான்! இம்மக்களின் நியாயமான போராட்டத்தைத்தான் கொப்பேகடுவ "தொண்டமானின் பிற்போக்குப்" போராட்டமாகச் சிங்கள மக்களுக்குக் காட்ட முயற்சி செய்தார்.

இச்சூழலில்தான் நுவரெலியா- மஸ்கெலிய சிங்களவரின் வாக்குகளைப் பெறுவதற்காக ''காணிப் பகிர்வு'' என்ற சிங்களவரின் அரசியல் லஞ்சத்தை வழங்க விரும்பினார் அனுரா. டெவன் என்ற தோட்டத்தில் சிங்களவருக்குக் காணி பகிர்ந்தளிக்கும் முயற்சி தீவிரமாக நடைபெற்றது. தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்தார்கள். காணி அளவையாளர் எவரையும் உள்ளே வர விடாமல் தடுத்தனர். அனுரா, பொலிசாரை ஏவினார். அப் போதும் தொழிலாளர்கள் அசையவில்லை. பொலி சார் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர். ''சுடு என்னை'' என்று மார்பைக் காட்டிய வண்ணம் உணர்ச்சி மிக்க இளைஞன் ஒருவன் முன்னே பாய்ந்தான். அவன் மார்பில் பொலிசாரின் துப் பாக்கிக் குண்டு பாய்ந்தது. அவ்வீர இளைஞன் அமரனானான். அவனது பெயர்தான் சிவனு லட்சுமணன்.

இவ்வீரனின் சாவு மலையகம் முழுவதும் ஆத் திரத்தைக் கிளறிவிட்டது. தோட்டப்பகுதி எங் கும் வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தன. இதன் பயனாய் இக்காணிப் பங்கீடு தடுதது நிறுத்தப் பட்டது.

**சிவனு லட்சுமணன் தியாகத்தின்பேரில் அரசியல் வியாபாரம்:**

வீரத் தொழிலாளி சிவனுலட்சுமணன் இ.தொ கா. அங்கத்தவர் அல்ல, அவருக்குத் தொண்ட மானின் கள்ளத்தனங்கள் பிடிக்காது. அவர் தேசிய தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவர். இவரது சடலத்தைக் கவர்ந்து கொண்டு போய் இ.தொ.கா. அலுவலகத்தில் வைத்து, காங்கிரஸ்

கொடியால் போர்த்தி, காங்கிரஸ் செலவில் அடக்கம் செய்தார்கள். பணத்தை வாரி இறைத்து அவர் காங்கிரஸ் அங்கத்தவர், காங்கிரஸ்தான் இப்போராட்டத்தை நடத்தியது என உலகம் நம்பும்படிச் செய்தார்கள்.

மறுபுறத்தில் யூ.என்.பி அபேட்சகரான காமினி திசாநாயக்க, சிவனுலட்சுமணனின் அண்ணனை பணம் கொடுத்து விலைக்கு வாங்கி மேடைதோறும் ஏற்றித் தேர்தல் பிரச்சாரத் திற்கு சிவனுலட்சுமணனின் பெயரைப் பயன் படுத்திக் கொண்டார்.

**சிவனுலட்சுமணனுக்கு இரத்த அஞ்சலி:**

சிவனு லட்சுமணனுக்கு அஞ்சலி செலுத்து வதற்காக ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண் களுமாகத் தொழிலாளர்கள் அணி அணியாகச் சென்றனர். இவ்வாறு தலவாக்கலை நகரின் ஊடாக மௌன ஊர்வலம் சென்ற நூற்றுக் கணக்கானவர்களைச் சிங்களக் காடையர்கள் மறித்துத் தாக்கினர். இத்தாக்குதலில் சுதந்திரக் கட்சி, யூ.என்.பி., ஜே. வி. பி. அங்கத்தவர்கள் முன்னணி வகித்தார்கள்.

அட்டன் தமிழ்ப் பாடசாலை மாணவ, மாணவியர்கள் சிவனுலட்சுமணன் சுடப் பட் டதைக் கண்டித்து ஊர்வலம் சென்றனர். இவர்களைப் பொலிசாரும் சிங்களக் காடையர் களும் வெறித்தனமாகத் தாக்கினர். இதனால் நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர் காய மடைந்தனர்.

இவ்விடத்தில் ஒரு விடயத்தைக் கூற வேண்டும். அட்டன் பகுதியில் இருந்த சிங்கள மாணவ மாணவியர்களையும், ஆசிரியர்களையும் தமிழ் மாணவ மாணவியரின் போராட்டத்திற்கு எதிராகத் தூண்டுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முயற்சிகள் இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த பிரதேச இடதுசாரித் தலைவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது.

சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து நடத்தப்பட்ட இப்போராட்டம் மலையக மக்களுக்கு அம்மண்ணின் மீதுள்ள பற்றையும் பாசத்தையும் புலப்படுத்துகிறது. அரசு இதனை அடக்கிய விதம் மக்களின் உரிமை வேட்கைக்கு கொடுக்கப்பட்ட பலத்த அடியாகும்.

**கட்டாய வெளியேற்றம்:**

இத்தனை துயரங்களின் மத்தியில் சாகாமல், வாழ்வதெப்படி என, ஓட்டாண்டியாகி விட்ட நிலையில், தோட்டத் தொழிலாளர் பரிதவித்துக் கொண்டிருந்தபோது ஸ்ரீ. ல. சு. கட்சி அரசாங்கம் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் வெளியேற வேண்டியவர்களை நாயைப் பிடித்துச் செல்வது போல வண்டியில் ஏற்றி உடுதுணியோடு கொம்பெனித் தெரு முகாமில் அடைத்து இந்தியாவுக்கு பலவந்தமாக நாடு கடத்தியது. இச்சமயத்தில் மலையகப் பிரதிநிதியாக அசீஸ் நியமன எம். பி. பதவி வகித்தார்.

**மலையகமும், தமிழீழக் கோரிக்கையும்:**

1970-களிலேயே தனிநாட்டுக் கோஷத்தை முன்வைத்த ஆயுதப் போராட்டம் ஆரம்ப

மானது. இந்த தனிநாட்டுக் கோஷம் மலையகத் தமிழர்களைக் கவராத போதும் மலையகத் தமிழர் மீது வடக்கு இளைஞர்களின் அக்கறையும் மனோபாவமும் மாறி வந்ததை இக்காலப் பகுதியில் காணக் கூடியதாய் இருந்தது. அதே சமயம் ஸ்ரீ.சு.க.அரசாங்கத்தின் அடக்கு முறையும் இளைஞர்களின் தீவிர நடவடிக்கைகளும் மலையக வடகிழக்குப் பூர்சுவாக்களை நெருக்கமாகக் கொண்டு வந்தன.

**தமிழர் ஐக்கியமுன்னணியும்,**
**தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும்:**

1972 அரசியல் யாப்பில் செய்யப்பட்ட மாற்றம் இலங்கையை குடியரசாக்கியது. சோல்—பரி அரச யாப்பின் 29-வது சரத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட பாது காப்பு கூட புதிய யாப்பிற் இல்லாமற் போய் விட்டது. எனவே இ.தொ.கா. வும், தமிழ் அரசு கட்சியும், தமிழ் காங்கிரசும் இதர கட்சிகள் சிலவும் கூட்டாக ஆறம்ச கோரிக்கையை முன் வைத்து சிறிமாவுடன் நடத்திய பேர முயற்சி தோல்வியடைந்தது. இதனைத் தொடர்ந்து தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. ஆனால் தனி நாடு கோஷத்தை அது முன் வைக்கவில்லை.

இதில் தொண்டமானின் பிரச்சினை வேருகவும், வடக்கு கிழக்கு தமிழ் பூர்சுவாக்களின் பிரச்சினை வேருகவும் இருந்தது. தொண்டமானைப் பொறுத்தளவில் அப்போது அதிகரித்து வரும் இலங்கை தொழிலாளர் கழகம் (தமிழரசு கட்சியின் தொழிற்சங்கம்) செல்வாக

கைத் தடுக்க வேண்டி இருந்தது. இ.தொ.க. வின் அங்கத்துவம் இக்காலப் பகுதியிலே மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. எனவே ''மலையகத்தை என்னுடன் விட்டு விடுங்கள்'' என அவர்பேரம் பேசினர். அத்துடன் ஸ்ரீ.ல.சு கட்சி அரசாங்கத்திற்கு எதிராக அதன் அடக்குமுறைக்கு முகம் கொடுப்பதற்காகவும் இவ் ஐக்கியம் தேவைப்பட்டது. சு.க. அரசுக்கெதிராக யூ.என்.பி. சார்புச் சக்திகளை ஒன்றிணைக்கும் அமெரிக்க நலன்களும் இதன் பின்னணியில் செயற்பட்டன. தமிழ் பூர்சுவா தலைவர்களுக்கு ஒரு புறம் சு.க.யின் அடக்குமுறையையும், மறுபுறம் இளைஞர்களின் அதிருப்தியையும் சமாளிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. எனவே இம் முக்கூட்டு ஏற்பட்டது.

1976-ல் தமிழர் ஐக்கிய முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு திரு-வாளர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஜீ. ஜீ. பொன்னம்பலம், எஸ்.தொண்டமான் ஆகியோரைத் தலைவர்களாகத் தெரிவு செய்தது. இவ் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தொண்டமான் பிரசன்னமாயிருக்கவில்லை. இம் மாநாடு தனி நாட்டுக் கோஷத்தை முன்வைத்தது. தனிநாடு மலையகத் தமிழருக்கு தீர்வாக அமையாது, என்று அதில் தனது கருத்தை எழுத்து மூலம் தொண்டமான் முன் வைத்தார். அதனை த.வி.கூ.ஏற்றுக் கொண்டதை அடுத்து அவர் தொடர்ந்து தலைவர் பதவி வகித்தார். தனது நிலையை அதே வருடம் அட்டன் மாநாட்டில் விளக்கினர். இதனுல் அவருக்கு இருவகை

லாபம் ஏற்பட்டது. ஒன்று, அடுத்து பதவிக்கு வந்த ஐ.தே கட்சியில் அமைச்சராக முடிந்தது. இரண்டு, 77 தேர்தலில் நுவரெலியா- மஸ்கெலியா தொகுதியில் இருந்த 6,000 வடக்கு கிழக்கு வாசிகளின் 18,000 (ஒருவருக்கு 3 வாக்குகள்) வாக்குகளை கூட்டணியினரின் துணையுடன் பெற முடிந்தது. 77 தேர்தலில் இவரது தொகுதியில் மொத்தம் 22,000 தமிழ் வாக்காளர்களுக்கு ஆளுக்கு 3 வாக்குகள் வீதம் மொத்தம் 66,000 வாக்குகள் இருந்தன. ஆனால் தொண்டமானுக்கு மொத்தமாகக் கிடைத்ததோ 36,000 வாக்குகள் மாத்திரமே. இதில் 12 ஆயிரம் வடகிழக்கு தமிழர்களின் வாக்குகளாவது தொண்டமானுக்குக் கிடைத்திருக்கும். இவ்வாக்குகள் கிடைத்திராவிட்டால் அவர் மூன்ருவது எம். பி. யாகவேனும் தெரிவு செய்யப்பட்டிருக்க மாட்டார். இத்தேர்தலில் கூட்டணி தொண்டமானை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தது.

தேர்தல் முடிவில் திரு. அமிர்தலிங்கம் (TULF) எதிர்க்கட்சி தலைவரானுர். அப்போது உயிருடன் இருந்த ஒரே த.வி. கூட்டணித் தலைவர் தொண்டமான் ஆளும் கட்சியில் அமைச்சரானுர். 1977 தேர்தலில் அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்காக கூடிய த வி. கூட்டத்தில் தொண்டமானை த.வி. கூட்டணியின் அபேட்சகராகப் போட்டியிடுமாறு வேண்டியதற்கு தொண்டமான் செவிசாய்க்கவில்லை. மலையகப் பூர்சுவாக்கள் வடகிழக்கு தமிழ் பூர்சுவா தலைமையிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதிலும் தமது தலைமையைப் பாதுகாத்துக் கொள்வதிலும் எப்பொழுதும் கவனமாகச் செயற்

பட்டு வந்துள்ளதை இச்சம்பவம் உணர்த்துகிறது. இவ்வுணர்வை தொண்டமான் செயற்கையாக உருவாக்கினுர் எனக் குற்றம் சுமத்துவது தவருகும். வேண்டுமானுல் அவ்வுணர்வைத் தனது வர்க்கத்திற்குச் சார்பாகப் பயன்படுத்துகிருர் எனக் குறை கூறலாம். ஏனெனில் இல்லாத ஒரு சமுதாய யதார்த்தத்தை எவராலும் சிருஷ்டிக்க முடியாது. எந்த ஒரு தேசிய இயக்கத்திலும் ஆரம்பத் தலைமை பூர்சுவாக்களின் கையிலேயே இருக்கும்.

**'தமிழீழ' இளைஞர்கள்:**

1973-ல் வடக்கு இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல விழிப்புணர்வையும் அவர்கள் மலையக மக்கள் மீது காட்டிய ஆாவத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். தேர்தல் கண்ணேட்டமோ, சுயநலமோ எதுவுமின்றி நேர்மையுடன் 10 இளைஞர் பேரவை இளைஞர்கள் மலையகத்தின் பல பகுதிகளுக்கு, இ.தொ.கா. (I.T.K.) வின் சம்மதத்துடன் 1973-ல் விஜயம் செய்தனர். இவர்களின் ஒரே நோக்கம் மலையகத் தொழிலாளரின் வாழ்நிலையைப் புரிந்து கொள்வதுதான். இவ்வாறு விஜயம் செய்த இளைஞர்களில் காலஞ்சென்ற சிவகுமாரனும் ஒருவர். இவர் மலையக மக்களின் பிரச்சினைக்கு ஆயுதப் போராட்டமே தீர்வு என்ற கருத்தை முன் வைத்தார்.

1973 நவம்பர் மாதம் 6அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இ.தொ.க. அட்டன், தலவாக்கெலை, ராகலை, ஆகிய பகுதிகளில் வெற்றிகரமாக நடத்திய உண்ணுவிரதப்

போராட்டத்தில் இவ்விளைஞர்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

அடுத்து 1976-ல் சிவனு லட்சுமணன் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து யாழ் பல்கலைக் கழக மாணவர் நடாத்திய பகிஷ்கரிப்பையும், நிதி சேகரிப்பையும் குறிப்பிட வேண்டும். இவை யாவும் மலையகத்திற்கும் வடக்கிற்கும் இடையே நல்லுறவு பாலமமைக்கும் ஆரம்ப முயற்சிகளாக அமைந்தன. ஆனால் இப்பாலம வலுப்பெறவில்லை. இவ்விளைஞர்களால் தொடர்ந்து இப்பணியை நிறைவேற்ற முடியாமற்போனதும் ஈழத்தமிழர் மீது மலையக மக்களுக்கிருந்த அவநம்பிக்கையைப் போக்குவதற்கு அவர்கள் சரியான திட்டத்தை முன்வைக்கத் தவறியதும் இதற்கான பிரதான காரணங்களாகும். இக்காலப் பகுதியிலேயே மலையக மாணவர்கள் யாழ் பல்கலைக் கழகத்தில் தாக்கப்பட்ட சம்பவமும் நடந்தது. ஆயினும் பொதுவாக இரு சாராரிடத்தும் நல்லுறவை வளர்க்கும் முயற்சியே பிரதான போக்காக இருந்தது.

**சுதந்திரக் கட்சிமீது**
**மலையகத் தமிழரின்நியாயமான வெறுப்பு:**

சுதந்திரக் கட்சி ஆட்சி செய்த (1970-77) காலத்தில் ஒவ்வொரு நாளும் அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சத்தின் மத்தியிலேயே தோட்டத் தொழிலாளர் சாகாமல் செத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதனுல் எந்த ஒரு நன்மையும் பெறவில்லை. மாருக தேசிய

மயத்தின் பின் சிங்களமயமாக்கல் அமுலாவதை அவர்கள் கண்டார்கள். அவர்களது சீவாதாரங்கள் பறிபோவதைக் கண்டார்கள். அவர்கள் வாழும் தோட்டங்களைப் பறித்துக் கொண்டு அவர்களை விரட்டி அடித்து விட்டுச் சிங்கள மக்களுக்கு நியாயம் வழங்கியதாக அரசாங்கம் கருதிக் கொண்டது. மலையகத் தொழிலாளர்களோ அ னை த் தை யு ம் இழந்து ஓட்டாண்டியாக தெருக்களில் அலைந்தனர். அதனை அநாகரீகம் என்று கூறி அவர்களை அரசாங்க வண்டிகளில் ஏற்றிக் காட்டுப் பிரதேசங்களுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்பியது அரசாங்கம். இவர்களது வாழ்க்கை இத்தனை சோதனை மிக்கதாக இதற்கு முன்னர் இருந்ததில்லை.

இதைவிட "கள்ளத்தோணிகளின் வாக்குகள் எமக்கு வேண்டாம்" என்பது போன்ற இனவாத தேர்தல் பேச்சுகள்.... இவை அனைத்தும், சுதந்திரக் கட்சி என்றால் சிங்கள இனவாத கட்சி-மலையகத் தமிழருக்கு வெளிப்படையாக எதிரி என்ற உணர்வை மலையகத் தமிழர்களின் மனதில் பதிய வைத்து விட்டது.

தோட்ட நகர்ப்புற வர்த்தகர்கள் கூட இக்காலப் பகுதியில் கடும் சோதனைக்குள்ளாயினர். வருமானவரி அதிகாரிகள், விலைக் கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோர் (பெரும்பாலும் சிங்களவர்கள்) அடிக்கடி மலையகத் தமிழர் வர்த்தகர் மீது பாய்ந்தனர். இப்பகுதிகளில் இருந்த சிங்கள வியாபாரிகளை அவர்கள் தொடவில்லை. இவ்வாறு மலையகத் தமிழர் மீது "இந்திய எதிர்ப்புவாதத்தின்" பிரதி

நிதியான சு. கட்சிதிட்டமிட்ட தாக்குதலை மூர்க்கத்தனமாகத் தொடர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. எனவேதான் அவர்கள் 77 தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை ஆதரித்தனர்.

சு. கட்சியினால் மலையகத்தில் சலுகை பெற்றவர்கள் சிறுதொகையினரான மலையக படித்த வாலிபர்கள் மாத்திரமே. சு. க. ஆட்சியில்தான் இவர்களில் அநேகர் ஆசிரியர்களாக வரமுடிந்தது. பல்கலைக் கழகம செல்ல முடிந்தது. எனவேதான் படித்த மலையக இளைஞரில் ஒரு சாரார் சு. க. வை இன்னும் ஆதரிப்பதைக் காணலாம்.

இதைத் தவிர சு. க. ஆட்சி மலையகத் தமிழர்களின் மீது தேசிய இன ஒடுக்குமுறையை உச்ச அளவில் பிரயோகித்து அவர்களது தேசிய வளர்ச்சியையே சீர்குலைத்துவிட்டது.

எனவே மலையகத் தமிழர் சுதந்திர கட்சியை வெறுப்பதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. தேசியமயமாக்கப்பட்ட பின்னர் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் ஜீவாதாரத்தையும் தேசிய உரிமையையும் பாரதூரமாகப் பாதிக்கும் விதத்தில் பல்வேறு திட்டங்களை சு. கட்சியும் அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த யூ. என். பி. அரசாங்கமும் நடைமுறைப்படுத்தின. அவற்றை இனிப் பார்ப்போம்.

### சிங்களமயப்படுத்தல் :

**1) சிங்கள கிராமவாசிகளை தோட்டத் துறையில் ஈடுபடுத்துதல்:**

தோட்டப்புறங்களில் நீண்டகாலம் வாழ்ந்து தொழிலாள உணர்வைப் பெற்று விட்ட சிங்களத் தொழிலாளர்களுக்கும் தமிழ் தொழிலாளர்

களுக்கும் இடையில் எவ்வித சச்சரவும் ஏற்பட்ட தில்லை. கிராமங்களுக்கும், தோட்டப்புறங்களுக் கும் இடையே அதிக உறவு இல்லாதபோது பகை மையற்ற நிலைமை தேசியமயத்தின் முன்னர் நில வியது. சுருராகச் சொல்வதெனில் வடக்கு கிழக்கு தமிழர்களுடன் இவர்களுக்கிருந்த உறவை விட சிங்கள மக்களுடனுன உறவு சுமூகமானதாயிருந்தது. ஏனெனில் நிர்வாகத் துறையிலும் இதர சேவைத் துறைகளிலும் விசேடமாக யாழ் தமிழர்களே அதிகமாக இருந் தார்கள். இவர்கள் மலையகத் தமிழர்களை சாதி அடிப்படையிலும் கலாச்சார அம்சங்களிலும், வர்க்க நிலையிலும் தமமை விடக் கீழ்ப்படுத்திப பார்த்தனர். இதனுலும் தொழில்துறை தகராறு, அதிகாரத்துவம் ஆகிய காரணங்களினுலும் உத் தியோகஸ்தர்களாகவும் நிர்வாகிகளாகவும் இருந்த யாழ் தமிழர்களுக்கும், தொழிலாளர் களாய் இருந்த மலையகத் தமிழர்களு•கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள் காலப் போக்கில் வளர்ச்சி பெற்றது.

பண்டாரநாயக்க சீர்திருத்தத்தின் பயனுக மலையகத்தில் கூடுதலான சிறு எண்ணிக்கை கொண்ட புத்திஜீவிகள் உத்தியோகத் துறையில் செல்வாக்குமிக்க யாழ் சமூகத்தினருடன கடுமை யாக மோத வேண்டியிருநதது. இதன் விளைவா கத்தான் யாழ் எதிர்ப்புவாதம் மலையகத்தில், 60 களில், மேலும் வளர்ச்சி பெற்றது. இத்த கைய முரண்பாடுகள் சிங்களவருடன் ஏற்பட வில்லை.

இதைத் தவிர கிராமப்புற குயவர்கள், கொல்லர்கள், தச்சர்கள், அங்காடி வியாபாரிகள்

ஆகியோர் தோட்டப்புறங்களுடன் நல்ல உறவு கொண்டிருந்தனர். தமது பொருட்களை நம்பிக கையான லைன்களில் பாதுகாப்பாக வைத்து அங்கேயே அவர்களுடன் தங்கி ஒன்ருக உண்டு, உறங்கினர். இவ்வாறு இவர்களுக் கிடையே நல்லுறவு வளர்ந்து வந்தது.

மறுபுறத்தில் கிராமிய வயோதிகப் பெண்கள் தோட்ட நகர்ப்புறத் தமிழ் வர்த்தகர்களின் மனைவிமாருடன் நல்லுறவு கொண்டிருந்தனர். அவர்களுக்கு வீட்டுவேலைகளில் உதவி தமக்குத் தேவையானவற்றைக் கேட்டு வாங்கிச் சென் றனர்.

ஆனால் தேசியமயத்தின் பின்னர் சிங்களவர் மத்தியில் எசமான மனோபாவம் வளர்க்கப்பட்டு விட்டது. தோட்டப்புறங்களில் கைக்காசு (Casual) வேலைகளில் கிராமவாசிகள் ஈடுபடுத்தப் பட்டனர். அதுவும் திட்டமிட்டமுறையில். 1980 களிலே தோட்டத்துறையில் ஆகக் குறைந்தது 25 சதவீதத்தினர் ''இலங்கையராக'' இருத் தல் வேண்டுமென அரசாங்கம் கூறியது. ''நாடற்ருேராக'' மலையகத்தின் சொந்தக்காரர் கள் முத்திரை குத்தப்பட்டிருந்தபோது இவ்விதி இலங்கையர் எனக் கருதியது சிங்களவரையே ஆகும்.

தேயிலைத் தோட்டங்களில் சுலபமான வேலை கள் (easy jobs) சில உள்ளன. உதாரணமாக தொழிற்சாலைகளில் வேலை செய்தல், காவல் வேலை முதலியன. இதைவிட குத்தகை, (Con- tract) அடிப்படையில் செய்யப்படும் வேலை களும் உண்டு. உதாரணமாக காண் வெட்டுதல்,

கரை கட்டுதல் முதலியன. இவ்விரு வேலைகளை யும் தோட்ட நிர்வாகம் தமக்கு விசுவாசமான கருங்காலிகளுக்கே தொடர்ச்சியாக ஒருவகைச் சலுகையாக வழங்கி வந்துள்ளது.

தற்போது இத்தகைய வேலைகள் சிங்கள வர்களுக்கு வழங்கப்படுகிறது. அநேக சமயங் களில் தமிழ் தொழிலாளர்கள் நிர்வாகத்துடன் தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் செய்யும் வேளைகளில் இவர்கள நிர்வாகத்திற்குச் சார்பாக வேலைக்குப் போகின்றனர்.

இவ்வாறு இன்று மலையகத்தில் ஒரே தோட் டத்தில் தமிழ் தொழிலாளர், சிங்களத் தொழி லாளர் என இரு பிரிவாகத் தொழிலாளர்கள் பிளவுபட்டுள்ளனர்.

**2. தோட்ட நிர்வாகத்தில் சிங்களவர்கள்;**

தேசியமயமாக்கலுக்கு முன்னர் இவர்களின் எசமானுக கம்பெனிகள் இருந்தன. சுப்ரின்டெண் டென்ட்கள் கம்பெனிகளின் பிரதிநிதிகளாக இருந்தனர். இவர்களுக்கும் உள்ளூர் அரசியல் வாதிகளுக்கும் இடையே எதுவித உறவும் இருக் கவில்லை. தோட்டத்துறை ஒரு தனி சாம்ராச்சிய மாகத் திகழ்ந்தது. எனவே நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்படும் தொழிற் பிணக்குகளை அரசாங்கம் மத்தியத்து வம் செய்து வைக்கக்கூடிய நிலையில் இருந்தது. ஆனால் தேசியமயமாக்கலின் பின்னர் தோட்டத் துறைக்கு அரசாங்கமே முதலாளியாகிவிட்டது. இதன் பின்னர் ஏற்பட்ட சகல பிரச்சினைகளிலும் தொழிலாளர் அரசாங்கத்துடன் நேரடியாக மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

முன்னர் சுப்பவைசர் பதவி இருக்கவில்லை. அதற்குப் பதிலாக கங்காணிகளாக அநேகமாக தமிழர்களே நியமிக்கப்பட்டனர். எனவே நிர்வாகிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற தகராறுகள் யாவும் வர்க்கப் போராட்டமாகவே கருதப்பட்டன. அவற்றுக்கு இனவாத சாயம் பூசக்கூடிய சாத்தியப்பாடு இருக்கவில்லை. ஆனால் தேசியமயமாக்கலின் பின்னர் சுப்பவைசர்களாகவும், துரைமார்களாவும் சிங்களவர்களே நியமிக்கப்படுகிறார்கள். இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு நெருங்கிய உறவினர்களாகவோ அல்லது அவருக்கு வேண்டியவராகவோ இருந்து விடுகிறார்கள். எனவே தொழிலாளர்கள் தமிழர்களாகவும் நிர்வாகிகள் அரசியல் செல்வாக்கு மிக்க சிங்களவராகவும் அமைந்து விடுகிறார்கள். அந்நிலையில் மலையகத் தொழிலாளர் நிர்வாகத்துடன், நியாயமான கோரிக்கைகளை முன் வைத்துப்போராடும்போது கூட சிங்களவர்களுக்கு எதிரான தமிழர்களின் போராட்டமாகச் சித்தரிக்கப்படுகின்றன. இத்தகைய போராட்டங்களை முறியடிப்பதற்கு வெளியிலிருந்து சிங்களச் சண்டியர்கள் வரவழைக்கப்பட்டு, தோட்டத் தொழிலாளர் தாக்கப்பட்ட சம்பவங்கள் மலையகத்தில் பரவலாக நடைபெற்றுள்ளன.

**3. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்:**

நட்சா, குடியேற்றத் திட்டம் (கொலனி) நகரவிரிவாக்கல் திட்டம், கிராமப்புற தோட்டப்

புற ஒன்றிணைப்பு, பொருளாதாரத்தை பன்முகப்படுத்தல்; மீன்காடாக்கம், மாதிரிக் கிராமங்கள், நிலப் பங்கீடு, ஆகிய கவர்ச்சிகரமான பெயர்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையும் மலையகத் தொழிலாளர்கள் வெளியேற்றத்தையும், தேசியமயமாக்கலின் பின்னர் துரிதமாகச் சிங்கள அரசாங்கங்கள் செயல்படுத்தி வருகின்றன.

இவற்றின் தன்மையை விளக்குவதற்கு நட்சா திட்டத்தை மாத்திரம் உதாரணமாகத் தருகிறேன். இலங்கை அரசாங்கம் உலக வங்கியின் உதவியுடன் நட்டத்தில் இயங்கிய தோட்டங்களைக் கிராமங்களாக மாற்றுவதற்குத் திட்டமொன்றைத் தயாரித்தது. இத்திட்டதில் தோட்டத் தொழிலாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தின் பேரில் உலக வங்கி இத்திட்டத்திற்கு நிதியுதவி நல்கியது. ஆனால் நடைமுறையில் இத்திட்டத்தின் கீழ் இலாபகரமாக இயங்கிய பல தோட்டங்கள் கொண்டு வரப்பட்டதுடன் மலையகத் தொழிலாளர் அத்தோட்டங்களை விட்டு விரட்டியடிக்கப் பட்டனர்.

இதுசம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி நாவலப்பிட்டியலக்கருகிலுள்ள பெனிலேன்ட் (peni land) சுமார் 1000 ஏக்கர் கொண்டது, இவ்வாறு நட்சா திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 72 வீடுகளில் இரண்டு வீடுகள் மாத்திரமே தமிழர்களுக்கு வழங்கப்பட்டது. அவ்விரண்டு வீடுகளிலும் தமிழர்கள் அச்சம்

காரணமாக குடியேறவில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் சிங்களவர்களுக்கு வழங்கப் பட்ட 70 வீடுகளில் 13 வீடுகள் மாத்திரமே சிங்களவர்களால் பயன்படுத்தப்பட்டன. ஏனைய வீடுகள் காலியாகக் கிடந்தன. ஏனெனில் அவ் வீடுகள் வழங்கப்பட்ட சிங்களவர்களுக்கு அருகி லிருந்த கிராமங்களில் சொந்த வீடுகளும், காணிகளும் இருந்தன. எனவே அவர்களால் இவ்வீடுகளில் குடியிருக்கமுடியவில்லை. அப் பகுதியிலிருந்த மற்றொரு தோட்டமான கபர- கலயில் இருந்து மலையகத் தமிழ்த்தொழிலாளர் களை விரட்டியடிப்பதற்காக 1981ல் சிங்கள இனவெறியர்கள் பயன்படுத்தப்பட்டனர். [17]

தேசியமயமாக்கலைத் தொடர்ந்தே முன்னர் கூறிய டெல்டா, சங்குவாரி சம்பவங்களும், டெவன் தோட்டத்தில் சிவனுலெட்சுமணன் கொலையும் நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் மேற்கொண்ட காணிப் பங்கீட் டுத் திட்டத்தில் மலையகத் தமிழர் முற்றாகப புறக் கணிக்கப்பட்டனர். இன்றைய அரசாங்கம் பெரும் ஆரவாரத்தோடு அமுல்படுத்துகின்ற மாதிரி கிரா மங்கள் மலையகத்தைப் பொறுத்தளவில் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றமாகவே திகழ்கிறது. மீன்காடாக்கம் என்ற திட்டத்தின் கீழ் மலையகத் தமிழ் தொழிலாளர்கள் பலவந்தமாக வெளியேற் றப்படுகிறார்கள். நகர விரிவாக்கம் என்பது மலை யகத் தமிழ் நகரங்களை சிங்களமயப்படுத்துவ தாகவே அமைந்துள்ளது. கிராமப்புறத் தோட்டப் புற ஒன்றிணைப்பு என்பதும் சாராம்சத்தில் தோட் டப்புறங்களைச் சிங்களக் குடியேற்றங்களாக மாற்றுவதாகவே உள்ளது.

**1977க்குப் பின்னர் - தார்மீக அரசின் கீழ்:**

1970 முதல் 1977ம் ஆண்டு வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஆட்சி செய்த காலத்தை மலையக மக்கள் ''சோதனைக் காலம்'' என அழைத்தனர். 1973ம் ஆண்டு பஞ்சம், தேசியமயக் கொள்கையின் அடக்குமுறை, சிங்கள ஆதிக்கவாத நடவடிக்கைகள், பேச்சுக்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்த இடதுசாரிகளின் துரோகம் ஆகியவற்றால் வெறுப்படைந்த, சொல்லொண்ணுத் துயரத்துக்குள்ளான மலையகத் தமிழர் ஐக்கிய தேசியக் கட்சியை 77 பொதுத்தேர்தலின் போது ஆதரித்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது மலையகத் தமிழருக்கு ஏற்பட்ட ஆத்திரம் ஸ்தாபனமயப்படுவதற்கு மற்றொரு பிரதான காரணமாக இருந்தது. அதாவது, மலையகத்தில் செல்வாக்கு மிக்க இ. தொ. கா., ஐ. தே. க. உடன் சேர்ந்து ஸ்ரீ. ல. சு. கட்சி அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட மலையகத் தமிழரின் நலன்களுக்கு முரணான சகல நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடியது. அப்போது இடதுசாரி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருந்தனர். எனவே மலையக மக்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே இயக்கமாக இ. தொ. கா. இருந்தது. அது ஐ. தே. க. யுடன் கூட்டுச் சேர்ந்திருந்தமையால் அதன் அரசியல் லாபங்களை ஐ. தே. க. தட்டிக் கொண்டு போய் விட்டது. இந்த 7 வருட காலத்தில் பாராளுமன்ற இடதுசாரிகள் அம்பலமானதைப் போல் முன்னர் எப்பொழுதும் அம்பலமானதில்லை. இக் காலப் பகுதியில்தான் அதுவரை தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் கோரி வந்த கலாநிதி

என் எம். பெரேரா நிதியமைச்சரானதும் ''உலகில் எந்த நாட்டில் தோட்டத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கிறது?'' எனக் கேட்டார். எனவே மலையகத் தமிழர்களின் ஆதரவை அவர்கள் இழந்தனர். அதுவரை தோல்வி காணாத என்.எம். பெரேரா மலையகத் தமிழர்களின் கணிசமான வாக்குகள் கொண்ட தனது ருவான்—வெல ஆசனத்தில் 77ம் ஆண்டு தேர்தலில் தோற்றதற்கு இதுவே காரணமாகும்.

மலையகத் தமிழர் ஐ. தே. க. அரசாங்கம் தனக்குப் பெரிதாக எதுவும் செய்யுமென எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதன் ஆட்சியின் கீழ் நிம்மதியாக, பாதுகாப்புடன் வாழலாம் என நினைத்தனர். எனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொடுமையிலிருந்து மீள்வதற்கு அமோகமான ஆதரவை ஐ. தே. கட்சிக்கு வழங்கினர். 1947ம் ஆண்டிற்குப் பின்னர் மலையகத் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பும் வாய்ப்பு 77ம் ஆண்டு கிடைத்தது. இதற்கான நுவரெலியா—மஸ்கெலியா ஆசனத்தில் கூட முதலாவது பிரதிநிதியாக ஐ. தே. க. யைச் சேர்ந்த திரு. காமினி திசாநாயக்கவே தெரிவு செய்யப்பட்டார். ''மாபெரும் தலைவர்'' தொண்டமான் மூன்றுவது பிரதிநிதியாகவே தெரிவு செய்யப்பட்டார். இதற்குக் காரணம் அதுவரை அவர் ஐ. தே. க. யையே மறைமுகமாகவும் நேரடியாகவும் ஆதரித்து வந்தார். எனவே தோட்டத் தொழிலாளாகளால் அவரையும் ஐ. தே. க. வையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை. சில தோட்டங்களில் தொண்டமானின் தேர்தல் சின்னமான

சேவலுக்கு முன்னால் புள்ளடியிடுமாறு கூறிய போது "இப்போ நம்ம சின்னம் யானை இல்லிங்களா?" என தோட்டத் தொழிலாளர் திருப்பிக் கேட்டனர்.

**1977 வன்செயல்**

இவ்வாறு 4/5 பெரும்பான்மையுடன் ஐ. தே க. ஆட்சிக்கு வந்தது. ஆட்சிக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே அதாவது 1977 ஆகஸ்ட் மாதத்தில் இலங்கை வரலாறு கண்டிராத மிகப் பெரிய வன்செயல் தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. இவ்வன்செயலை "போரா? சமாதானமா?" எனக் கூறி தார்மீக அரசின் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் பிரகடனப்படுத்தி வைத்தார் என்பதை உலகறியும். இவ்வன்செயலின்போது மிகக் கூடுதலாக பாதிக்கப்பட்டவர்கள் மலையகத் தமிழர்களே. இவ்வன் செயல் 1958ம் ஆண்டு இடம் பெற்ற முதலாவது இனக்கலவரத்தை விட மோசமானதாகவும் தன்மையில் வேறுபட்டதாகவும் இருந்தது. 58 கலவரம் ஓரளவிற்குத் தன்னிச்சையாக வெடித்தது என்று எனக் கூறலாம். ஆனால் 77ம் ஆண்டு இடம் பெற்ற வன்செயல் அரசியல் தன்மை பொருந்தியதாக இருந்தது. வடக்கே நடைபெறும் தனிநாட்டிற்கான போராட்டத்தைக் கைவிடும்படி செய்வதற்காக செயற்கையான முறையில் உருவாக்கப்பட்ட அரசியல் பயங்கரவாதமாக அது இருந்தது. இவ்வன்செயலின்போது நூற்றுக்கணக்கான மலையகத் தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான வீடுகளும், கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. பலர் படுகொலை

செய்யப்பட்டனர். சுமார் 50,000 பேர் அகதிகளாயினர். பல இந்துக்கோயில்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

மலையக மக்கள் அதிர்ச்சியடைந்தனர். எந்த அரசாங்கத்தை தமது பாதுகாப்புக் கருதி ஆதரித்தார்களோ அதே அரசாங்கம் இவ்வாறு வெறித்தனமாக நடந்து கொண்டமை அவர்களை நம்பிக்கை இழக்கச் செய்தது. இவர்கள் அனைவரும் இந்தியாவுக்குத் தம்மை திருப்பி அனுப்பும்படி கோரினர். இலங்கையில் தம்மால் பாதுகாப்புடன் வாழமுடியாது என அவர்கள் கருதியதை இக்கோஷம் வெளிப்படுத்தியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக சன்சோனிக் கமிஷன் என்ருெரு விசாரணைக் குழுவை நியமித்து தமிழ் மக்களை ஏமாற்றியது இந்த அரசாங்கம்.

எப்படியோ நாளடைவில் ''இந்தியாவுக்கனுப்பு'' எனும் கோஷம் வலுவிழந்தது. அது மாத்திரமல்ல. இந்தியா செல்வதற்கு கடவுச்சீட்டுகள் பெற்றவர்கள் கூட, பின்னர் சாக்குப் போக்குக் காட்டிக் கொண்டு தமது பயணத்தை ஒத்திப்போட்டனர். இதற்கு '77'ன் பின்னர் தொடர்ச்சியாகத் தீபாவளி வருவது போல் வருடா வருடம் தமிழருக்கெதிரான வன்செயல் இடம் பெற்ருலும் அடுத்த சில ஆண்டுகளில் மலையகம் பெரும் பாதிப்புக்குள்ளாகவில்லை என்பது ஒரு காரணம். '77'ம் ஆண்டு இடம் பெற்ற வன்செயலுக்கான காரணத்தை மலையக மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஐ. தே. க. அரசாங்கம் அத்தகைய ஒரு வன்செயலைக் கட்டவிழ்த்துவிடும் என அவர்களால் நம்ப முடியவில்லை.

எனவே ''இவ்வன்செயல் தோல்வியடைந்த அரசியல் கட்சிகளின் திட்டமிட்ட சதியென அரசாங்கம் கூறியதை அவர்கள் நம்பினார்கள். இக்கூற்றை நம்புவதற்கு ஆதாரமாகச் சில சம்பவங்கள் அமைந்தன. '77 கலவரத்தின் போது மிக மோசமாக பாதிக்கப்பட்ட வத்தேகமபோன்ற பகுதிகளில் ஸ்ரீ. ல. சு. க. யினர் முன்னணி வகித்தனர். எப்பகுதிலும் ஐ. தே. க. சேர்ந்த பெரும் புள்ளிகள் வெளிப்படையாக பங்குகொள்ளவில்லை. எனவே பழியை தோல்வியடைந்த கட்சிகளின் மீது போடுவதில் இவ்வரசாங்கம் வெற்றி பெற்றது. உண்மை நிலையை மக்களுக்கு விளக்கிக் கூறி ஐ.தே க யின் சுயரூபத்தை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக தொண்டமான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமைச்சரானார். இத்தகைய காரணங்களால் மலையகத் தமிழர் எதிர்காலத்தில் இனியொரு வன்செயல் ஏற்படாது எனக் கருதினர். 77 ஆகஸ்ட் கலவரத்தின் பின்னர் தொண்டமான் அமைச்சராக நியமிக்கப்பட்டதால் இந் நம்பிக்கை மேலும் வலுவடைந்தது. ஆனால் இந் நம்பிக்கை நீடிக்கவில்லை.

**81ம் ஆண்டு வன்செயல்:**

1981ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெடித்த மூன்றாவது பெருமளவிலான வன்செயல் மீண்டும் ஒருமுறை மலையகத் தமிழர்களை மோசமாகப் பாதித்தது. அம்பாறைப் பகுதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின்போது சிங்கள தமிழ் மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இவ்வன் செயல் பூதாகரமாக வெடித்தது. இரத்

தினபுரி, நீர்கொழும்பு, பலாங்கொடை ஆகிய பகுதிகளில் சிறில் மாத்யூவின் இனவாத இயக்கத்தைச் சேர்ந்த குண்டர்கள் பொலிசாரின் ஒத்துழைப்புடன் திட்டமிட்ட முறையில் இத்தாக்குதலை மேற்கொண்டனர் என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. இதற்கு முன்னர் இடம்பெற்ற வன்செயல்களுக்கு முற்றிலும் வேறுபட்ட விதத்தில், ‘81 ம் ஆண்டு ஆகஸ்ட் வன்செயல் அமைந்தது. இதற்கு முன்னர் இடம்பெற்ற வன்செயல்களில் தூண்டிவிடப்பட்ட சிங்கள மக்கள் வெறியாட்டம் நடத்தினர். ஆனல் 81ல் சிங்கள மக்கள் பங்கு கொள்ளவில்லை. மாருக பயிற்றபட்ட குண்டர்களும், பொலிசாரும் திட்டமிட்ட முறையில் தமிழர் படுகொலையை மேற்கொண்டனர். இதனைத் திட்டமிட்ட அரச பயங்கரவாதமென்றே கூற வேண்டும். இவ்வன்செயலை அரசாங்கம், ‘‘வடக்கிலே தனிநாடு கோரினுல் தெற்கிலே தமிழர்கள் அழிக்கப்படுவார்கள்’’ என எச்சரிக்கை விடுப்பது போல் இவ்வன்செயலைத் திட்டமிட்டுச் செய்தது என்பதற்கு சில உதாரணங்களை மாத்திரம் இங்கே தருகிறோம். ஜூலை 24-ம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் ஏ.அமிர்தலிங்கம் அவர்கள் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கான விவாதம் நடைபெற்றபோது பாராளுமன்றத்தில் பேசப்பட்ட சிங்கள வெறித்தனமான பேச்சுக்களை இங்கு நினைவு கூரலாம். இதேகாலத்தில் அமைச்சர் திரு. சிறில்மாத்யூ தனது 352 பக்கங்கள் கொண்ட ‘‘சிங்கள மக்களே விழித்தெழுங்கள். கிளர்ந்தெழுங்கள்; பௌத்தத்தைப்

பாதுகாத்திடுங்கள்'' என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டுத் தனது அமைச்சினூடாக விநியோகித்தார். அவரது சிங்கள மௌத்த பெரமுனவே இவ்வன்செயலை முன்னின்று செய்தது.

'இந்தியா டுடே' சஞ்சிகை நிருபர் திரு. எஸ். வெங்கட்நாரயணன் ''எமது நாட்டில் இத்தகைய அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அரசாங்கத் தலைவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறுவது வழக்கம். அத்தகைய எண்ணம் ஏதும் உங்களுக்கு இருக்கிறதா?'' என. ஜே. ஆரிடம் வினவிய பின்னரே அவருக்கும் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அது வரை எந்தவொரு வன்செயலின்போதும் பாதிக்கப்பட்டோரை ஜனாதிபதி பார்வையிட்டதில்லை. சம்பவம் நடைபெற்ற இரத்தினபுரி பகுதிகளுக்கு சில வாரங்கள் கழித்து விஜயம் செய்த ஜே.ஆர்., ''கோழி இருக்கிறது; முட்டை இருக்கிறதா?''என பாதிக்கப்பட்டவர்களைக் கேலி செய்ததையும் அதே நிருபரின் மலையக மக்களின் பிரசா உரிமை சம்பந்தமான கேள்விகளுக்கு மனிதாபிமானமற்றமுறையில் பதிலளித்ததையும் மறப்பதற்கில்லை. அக்கேள்வி பதிலில் சிறு பகுதி வருமாறு:-

கேள்வி: பாதுகாப்பின்மை காரணமாகப் பெருந்தோட்டத் தொழிலாளர் இந்தியாவுக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ சென்று விட்டால் அவர்களது உழைப்பில் முழுமையாகத் தங்கியிருக்கும்

பெருந்தோட்டத்தை எவ்வாறு தொடர்ந்து நடத்துவீர்கள் ?

பதில் : (ஜே.ஆர்.) (இந்நாட்டின்) பிரசைகள் அல்லாதோர் திரும்பிப் போகலாம்.

கேள்வி: ஆனல்...இங்கு ஐந்து தலைமுறை வாழ்ந்த பின்னர்...?

பதில்: ஆம்...அவர்கள் திரும்பிப் போகலாம்.

கேள்வி: அமெரிக்காவிலே ஒரு குழந்தை அம்மண்ணில் பிறந்து விட்டால் அதன் தாயாருக்கும் சேர்த்து அந்நாட்டின் பிரசா உரிமை கிடைத்து விடுகிறது.

பதில்: இருக்கலாம். ஆனல் நாம் வேறு விதமான பிரசா உரிமைச் சட்டத்தை இங்கு கொண்டிருக்கிறோம். 18

அவ்வாறு இரத்தினபுரி மாவட்டத்திற்குப் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிடுவதற்காக ஜே. ஆர்.தலைமையில் சென்ற தூதுக்குழுவில் மகாவலி அமைச்சரும், ஐ.தே.க யின் தோட்டத் தொழிற் சங்கத் தலைவருமான காமினி திஸாநாயக்கவும் ஒருவர். அன்றிரவு அவர் சிங்கள மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த அறிக்கையில், ''பாதிப்பு கூறப்படுவதைப் போல் அவ்வளவு மோசமாக ஒன்றுமில்லை'' எனக் கூறினர்.

இதிலிருந்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மீது அனுதாபங் காட்டும் மனோபாவமாவது இவ்வாட்சியாளரிடம் ஆரம்பத்தில் இருக்கவில்லை, என்பது தெளிவு. ஆனல் தமிழ்நாட்டுச்

சுற்றுலா பிரயாணி தனபதி என்பவர் இவ்வன் செயலின்போது தாககப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் எதிர்ப்புப் பேரலை கிளம்பியது. அதுவரை வெளிநாட்டுச் சக்தி ஒன்றே இவ்வன் செயலின் பின்னணியிலிருந்ததாகக் கூறி வந்த அரசாங்கம் எவ்விதத்திலும் வேறு எவர் மீதும் பழி கூற முடியாத நிலையில் தவறை சிறில் மாத்யூ மீது போட்டது. திடீரென ஜே.ஆர். பாதிக்கப்பட்ட தமிழர் மீது அனுதாபம் பொழிந்தார். வெளிப்படையாகவே, தனது அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் இவ்வன் செயலில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோரினர். இப்பிரச்சினை சர்வதேச ரீதியிலும் கண்டிக்கப்பட்டதால் உலக அபிப்பிராயத்தை சீர்செய்வதற்காகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டார். தனது கட்சியைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களை வெளியேற்றியதுடன் சிலரைப் பதவி இறக்கம் செய்தார். ஆனல் சூத்திரதாரியான அமைச்சர் சிறில் மாத்யூ மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு பதவி இறக்கம் செய்யப்பட்ட இரத்தினபுரி மாவட்ட அமைச்சர், புஞ்சி நிலமே இவ்வன்செயலில் முன்னணி வகித்தவர். பின்னர் ''இப்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வன்செயலின்போது ஒருவரைக் கொலைசெய்து அவரது ரத்தத்தை குடித்ததாகக் கேள்விப் பட்டேன்.

''80 சதவீதமான பௌத்தர்கள் வாழ்கின்ற இந்நாட்டில் இத்தகைய சம்பவம் நடைபெற்ற

தற்காக நான் வேதனைப்படுகிறேன்'' என நீலிக் கண்ணீர் வடித்தார். இதன் மூலம் தமிழர்களைக் கொலை செய்து அவர்களுடைய ரத்தத்தைக் குடித்தனர் என்ற உண்மையைத் தன்னையும் அறியாமல் வெளிப்படுத்தினர்.[19]

எப்படியோ ஜே. ஆருடைய காரியார்த்த மான பேச்சுகளும், நடவடிக்கைகளும் ''சிறில் மாத்யூ, காமினி திஸாநாயக்க போன்ருேர் இன வாதிகளாக இருந்த போதும் ஜே. ஆர். நல்லவர், மலையக மக்களின் மீது அனுதாபம் உள்ளவர்'' என்ற அபிப்பிராயத்தை மலையக மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதைத் தவிர அமைச்சர் தொண்டமான் ''இந்த அரசாங்கத்தால் இந்த குண்டர்களின் வெறியாட் டத்தை நிறுத்த முடியாவிட்டால் அதனை வெளிப்படையாகச் சொல்லட்டும். மக்கள் தம் மைத் தாமே பாதுகாத்துக் கொள்வார்கள்[20] என்ற அர்த்தத்தில் பேசிய ''வீரம் செறிந்த'' பேச்சுக்கள் (இவற்றைப் பின்னர் வாபஸ் பெற் றுக் கொண்டார்) மலையக மக்கள் மத்தியில் அர சாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினல் தலைவர் தொண்டமான் உறுதியான செயல் பாட்டில் இறங்குவார் என்ற நம்பிக்கையை ஏற் படுத்தியது. எனவே அவர்கள் அதன் பின்னர் ஐ. தே. க வை அல்ல. ஜே. ஆரை நம்பினர். அதன்பின்னர் தொண்டமான் பேசிய பேச் சுக்கள் யாவும் ''ஜே. ஆர். நல்லவர்; அவரை நம்புங்கள்; அவர் பிரச்சினைகளைத் தீர்த்து வைப் பார்'' என்பதாகவே இருந்தது. அரசாங்கத் திற்கு எதிராக மலையக மக்கள் மத்தியில், அதிருப்தி ஏற்பட்ட போதெல்லாம் இவ்வாறு

தொண்டமான் அவற்றை வளரவிடாமல் தடுத்து ஐ. தே. க. அரசாங்கத்தைக் காப்பாற்றினுர்.

'81ல் இந்தியா செல்ல வேண்டும் என்ற கோஷம் '77ம் ஆண்டில் ஏற்பட்டதைப் போல் அவ்வளவு உத்வேகத்தோடு கிளம்பவில்லை. இதற்கு மேற் கூறிய காரணங்களை விட மற்ரெரு காரணமும் இருந்தது. அதாவது '77ம் ஆண்டு வன்செயல் வானத்திலிருந்து விழும் இடியைப் போல சற்றும் எதிர்பாராமல் திடீரென ஏற்பட்டது. ஆனுல் அதற்குப் பின்னர் மலையக மக்கள் மத்தியில் சிங்கள வெறியர்கள் கோழைகள்; திருப்பித் தாக்கினுல் மிரண்டு ஓடி விடுவார்கள் என்ற நம்பிக்கை வளர்ந்து வந்தது. அவர்கள் திருப்பித் தாக்கிய பல இடங்களில் இதுவே உண்மை நிலையாகவும் இருந்தது.

1981ல் தலவாக்கெலே, ஹோலிவூட் எஸ்டேட்டில் இரவுவேளையில் அத்துமீறிப் பிரவேசித்த குண்டசாலே எம். பி. யின் மகன் ஓட்டி வந்த லொறியை மறித்து அவனை வெட்டிப் படுகாயத்துக்குள்ளாக்கினர். இன்னும் தூல்லாவெல போன்ற இடங்களில் குண்டர்களைத் திருப்பித் தாக்கி புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். தோட்டந்தோறும் கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு மலையகமக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொண்டனர். இவ்வாறு அவர்கள் வாழ்ந்த சமூகக் கூட்டு வாழ்க்கையில் இத்தகைய கூட்டுப் பாதுகாப்பைப் பெற முடியும் என அவர்கள் உணர்ந்தனர்.

இத்தகைய எதிர்த்துத் தாக்கி தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ளும் தன்மை '77ன்

பின்னர் மேலோங்கி இருந்தது. இக்கால கட்டத்தில் மலையகத்திலே பல்வேறு இளைஞர் இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. அவற்றில் சில ''மலையகம் மலையகத்தவருக்கே'' என்ற கோஷத்தையும், வடக்கு கிழக்கிற்குச் செல்வதோ, இந்தியாவுக்கு ஓடுவதோ பிரச்சினையைத் தீர்க்காது; மலையகத்தில் நிலைத்து நின்று, வாழும் பிரதேசத்தை பாதுகாப்பதற்காகப் போராடுவதே உண்மையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்ற கருத்தையும் முன் வைத்தன. இக்கருத்தின் தாக்கம் மலையகப் பகுதியில் நிச்சயமாக ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

**அகதிகள் பிரச்சினையில் சக தமிழர்கள்**

'77ல் வன்செயலால் பாதிக்கப்பட்டு அகதிகளானவர்களை அரசாங்க பஸ்களில் ஏற்றி வடக்கிற்கு அனுப்பியதுடன் தனது கடமையை அரசாங்கமும் முடித்துக் கொண்டது. சிங்களக் குடியேற்றங்களைத் திட்டமிட்ட முறையில் நிறுவுவதில் அக்கறை காட்டும் இவ்வரசாங்கம் இம்மக்களுக்குப் புனர் வாழ்வளிப்பதில் நாட்டம் செலுத்தவில்லை. இம் மக்களின் சந்தா பணத்தில் வளர்ந்த தொழிற்சங்கங்கள் எதுவும் இவர்களை வாழ்விக்க முன்வரவில்லை. இச்சமயத்தில் காலஞ்சென்ற கே. சி. நித்தியானந்தா அவர்களினுல் தமிழ் அகதிகள் புனருத்தாரண இயக்கம்(T.R.R.O.)தொடங்கப்பட்டது. இவ்வியக்கமும் பின்னர் காந்தீயமும் அகதிகளுக்கு மறு வாழ்வளிப்பதில் ஆற்றிய சேவைகள் மகத்தானவை.

காந்தீய இயக்கம் போன்ற ஒரு வெகுஜன இயக்கத்திற்கும் ஆயுதப் போராட்டத்தை முன்

னெடுக்கும் ஒரு இயக்கத்திற்குமிடையிலான உறவை கையாள்வதில் ஏற்பட்ட தவறு காந்தீய இயக்கத்தைப் பாரதூரமாகப் பாதித்தது. காந்தீயத்தை ''பயங்கரவாதிகளின்'' கூடாரமென அரசாங்கம் கருதி அதனை நிர்மூலப்படுத்தியது. அதன் தலைவர் எஸ். ஏ. டேவிட் அவர்களும், செயலாளர் ராஜசுந்தரம் அவர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இவர்களில் திரு. ராஜசுந்தரம் வெலிகடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 52 பேரில் ஒருவராக அமரத்துவமடைந்தார்.

இவர்கள் மலையக அகதிகளுக்கு ஆற்றிய சேவை என்றென்றும் மறக்க முடியாதது.

1981ல் ஏற்பட்ட வன்செயலின் போது சப்ரகமுவ மாகாணத்தில் பாதிக்கப்பட்ட அகதிகள் வடக்கே செல்வதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் மத்திய மலைநாட்டை நோக்கியே நகர்ந்தனர். இவ்வாறு பொகவந்தலா நோக்கி பாதுகாப்புக்காக ஓடிய அகதிகளை இராணுவ டிரக்குகளில் ஏற்றி ''எம்மை இப் பகுதியில் குடியேற்றுங்கள்; அல்லது இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புங்கள்'' என அவர்கள் முன்வைத்த கோரிக்கையையும் பொருட்படுத்தாமல் துப்பாக்கிமுனையில் பலவந்தமாக பழைய இடங்களுக்கு அனுப்பினர்.

இவ்வாறு '77ல் வடக்கை நோக்கி விருப்பத்துடன் சென்ற மலையக அகதிகள் '81ல் அங்கு செல்ல விரும்பாததற்குப் பல காரணங்கள் இருந்தன. வடக்கில் முற்போக்கு இளைஞர் அணி இம்

மக்கள் மீது மிகுந்த அனுதாபம் கொண்டிருந்த போதும், இவர்களை தமது மலிவான கூலிகளாகப் பயன்படுத்தி லாபமீட்டுவதையே பூர்சுவாக்கள் தமது நோக்கமாகக் கொண்டிருந்தனர். அத்துடன் சில கூட்டணி எம். பி க்கள் இவர்களது வரவு செலவு அதிகரித்தால் தமது அரசியல் பலம் ஆட்டம் கண்டுவிடும் என அஞ்சி அவர்களை பல் வேறு தொல்லைகள் கொடுத்து வெளியேற்ற முயற்சித்தனர். அனைத்தையும் விட இராணுவத்தினர் இவர்களது வீடுகளுக்குத் தீ வைத்து கொளுத்தியும், தாக்கியும் அட்டூழியம் புரிந்தனர். அரசாங்கம் அத்துமீறிய குடியேற்றங்களால் காடுகள் அழிகின்றன என்ற போலியான காரணத்தைக் காட்டி கடுமையான சட்டங்களை நிறைவேற்றியது. இச் சட்டத்தை எதிர்த்த காலஞ்சென்ற கே. சி. நித்தியானந்தா அவர்களை சிறில் மாத்யூ ''கிழட்டுப் புலி'' என வர்ணித்தார். இத்தகைய சிக்கல் நிறைந்த சூழ்நிலை புதிய அகதிகளுக்கு அச்சத்தைபும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

**நேர்மையற்ற தலைமையால்**
**நிர்க்கதியான மலையகம்**

இந்த அரசாங்கத்தின் கீழ் மலையக மக்கள் அனுபவித்த துயரங்களையும், சோதனைகளையும், முன்னைய ஸ்ரீ. ல. சு. க. அரசாங்கத்தின் கீழ் கூட இவர்கள் அனுபவித்ததில்லை.

இவ் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் தான் மலையகத் தமிழர்களுக்கு எதிரான வன் செயல்கள் மூன்று தடவைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கடந்த ஆட்சியாளர்களின் கீழ்

மலையகத் தமிழர்களின் ஜனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. இவ்வரசாங்கத்தின் கீழ் அதன் தீவிரம் இன்னும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தங்கக்கலை என்ற தோட்டத்தைச் சேர்ந்த திருமணமாகாத இரு இளைஞர்களுக்கு கருத்தடை செய்யப்பட்ட சம்பவம் இவ்வாட்சியின் கீழ்தான் நடைபெற்றுள்ளது. இதே தோட்டத்தில் சர்வதேச நிறுவனமொன்று தோட்டத் தொழிலாளருக்கென நவீன வீடுகள் அமைத்தது. கட்டிட வேலைகள் பூர்த்தியானதும் காமினி திசாநாயகவின் ஆதரவுடன் தோட்டப்புறத்திற்கு வெளியேயுள்ள சிங்களவர்கள் பலவந்தமாகக் குடியேற்றப்பட்டார்கள். இது தொடர்பாக மலையகத் தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்தியும், அமைச்சர் தொண்டமான் தனது அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியும் பயனேதும் ஏற்படவில்லை. கடந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் மலையகத்தில் ஆசிரியர் நியமனம் பெற்ற படித்த வாலிபர்களின் தொகை கணிசமானது. இன்றைய அரசாங்கம் இந்த 7 வருட காலத்தில் மலையக மாணவர்களின் கல்வியைத் திட்டமிட்டே சீர்குலைத்து வந்துள்ளது. போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. பல பாடசாலைகளில் தளபாடங்கள் எதுவுமில்லை. இவ்வரசாங்கத்தின் கீழ்தான் 1980ம் ஆண்டு ஜுலை மாதம் 15ம் திகதி தோட்டப்புற பாடசாலைகள் யாவும் பொறுப்பேற்கப்பட்டன. இதன் பின்னர் நியாயப்படி தோட்டப்புறப் பாடசாலைகளின் கல்வித்தரம் உயர்ந்திருக்க வேண்டும். ஆனால் நடந்ததோ இதற்கு எதிர்மாருக இருந்தது. 8லே் மேற்

கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி 86 மலையகத் தமிழ் பாடசாலைகள் ஆசிரியர்கள் இன்மையால் ஒரு வருடத்திற்கு மேலாக மூடப்பட்டுக் கிடந்தன.[21] 1983ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 402 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டபோது ஒருவருக்கு பம்பரகல பகுதியிலுள்ள ஒரு பாடசாலைக்கு நியமனம் கிடைத்தது. அவர் அப்பாடசாலைக்குச் சென்றபோது அது தோட்டத்துரையின் மாட்டுத் தொழுவமாக மாற்றப்பட்டிருந்தது. அதில் கட்டப்பட்டிருந்த மாடுகளால் அக்கட்டிடம் சேதத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. இப்பாடசாலை தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இவ்வாறாக ஆசிரியர் இல்லாமையால் புறக்கணிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது. இப்பாடசாலை அமைச்சர் தொண்டமானின் ஆசனத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இன்று மலையகப் பாடசாலைகள் ஓரளவாவது சீராக இயங்க வேண்டுமானால் உடனடியாக 3000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டியுள்ளது. காமினி திஸாநாயக்க நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் ஏராளமான மாதிரிக் கிராமங்கள் அமைத்துச் சிங்களவர்களைக் குடியேற்றியிருக்கும்போது இத்தொகுதியின் மலையகப் பிரதிநிதியான அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரேயொரு தமிழ் மாதிரிக் கிராமத்தை கொட்டகலப் பகுதியில் அதுவும் தனது பெயரால் சௌமியமூர்த்திபுரம் என்ற பெயரில் அமைத்துள்ளார். அதற்கு நீர் வசதியோ, மின்சாரவசதியோ, வழங்க அரசாங்கம் இன்றுவரை மறுத்து வருகிறது. நுவரெலிய மாவட்டத்தில் பெரும்பான்மையினர் மலையகத் தமிழர்களாக இருந்தும் இப்பகுதியில்

உள்ள அரசாங்க அலுவலகங்களிலும், நிறுவனங்களிலும் 97 சதவீதத்தினர் சிங்களவர்களே. இங்குள்ள எந்தவொரு திணைக்கள காரியாலயத்திலும் உயர் அதிகாரியாக தமிழர் எவரும் பதவி வகிக்கவில்லை. இம்மாவட்டத்தில் இயங்கும் இளைஞர் சேவா மன்றத்தில் ஒதுக்கிடப்படும் நிலையில் 1/10 தானும் தமிழர் வாழும் பகுதிகளின் அபிவிருத்திக்குச் செலவிடப்படுவதில்லை. 1981ம் ஆண்டு நுவரெலியா கல்விப் பணியகம் அப்பகுதித் தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 10 மிலியன் ரூபாயை அப்படியே ஒரு சதம் செலவழிக்காமல் திருப்பியனுப்பியது. இதற்கு அப்பட்டமான தமிழர் ஒதுக்கல் வாதமே காரணமாகும். நுவரெலியா மாவட்டம் உருளைக்கிழங்கு உற்பத்திக்கு மிகப் பிரசித்திப் பெற்றது. ஆயினும் விதைக்கிழங்கு வினியோகத்தில் சிங்களவர்களுக்கே அரசாங்கம் முன்னுரிமை கொடுக்கிறது.

வீரத்தியாகி சிவனுலட்சுமணன் எந்த மண்ணுக்காகத் தன் உயிரைத் துறந்தானே, எந்த நிலத்தைத் தாம் ஆட்சிக்கு வந்தால் தோட்டத் தொழிலாளருக்குப் பகிர்ந்தளிப்போமென தேர்தலின் போது, ஐ. தே. க. வாக்களித்ததோ அந்த நிலம், டெவன் தோட்டம், இன்றளவும் கைவிடப்பட்ட நிலையில் எந்த நேரமும் சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கத் திரை மறைவில் பல முயற்சிகள் நடைபெற்ற வண்ணம் உள்ளது. பிள்ளைக் காம்பரு (Creche) ஆயாக்களாக பெரும்பாலும் சிங்களப் பெண்மணிகளே நியமிக்கப்படுகிறுர்கள். இவ்வரசாங்கம் பதவிக்கு வந்த

பின்னர் வாழ்க்கைச் செலவு மிக வேகமாக அதி கரித்துள்ளது. இச்செலவை ஈடு செய்வதற் காக அரசாங்கம் ஏனைய தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்கியுள்ளது. இதில் மலையகத் தொழிலாளருக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. இவ்வரசாங்கம் 10 வருடங்களுக்கு பிரசா உரி மைப்பிரச்சினை கிடையாது எனப் பாராளுமன்றத் தில் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் நடை முறையில் ஒவ்வொரு விடயத்திலும் பிரசா உரிமை கோரப்படுகிறது. 1982ல் திரு. காமினி திசாநாயக்க காடுகள் அழிப்பதையும் ''அத்து மீறி குடியேறுவதையும்'' தடை செய்வதற்கு பாரதூரமான பயங்கரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு நிகரான ஒரு சட்டத்தை நிறைவேற்ற முயற்சித்தார். வடக்கில் குடியேறிய மலையக அகதிகள் கொழும்பு இ. தொ. கா. தலை மைக் காரியாலயத்திற்கு படை எடுத்ததைத் தொடர்ந்து தொண்டமான் அதனைக் கடுமையாக எதிர்த்தார். எனவே அச்சட்டம் நிறைவேற்றப் படவில்லை. ஆயினும் 83 ஜூன் மாதம் இதே காமினி திசாநாயக்க, திருகோணமலை பகுதியில் குடியேறி நீண்டகாலமாக வாழ்ந்த மலையக மக் களை, 5 அரசாங்க பஸ்களில் ஏற்றி பலவந்தமாக கட்டிய துணியுடன் மத்திய மலைநாட்டுக்கு அனுப் பினர். தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் போராட்டத்தைத் தொடர்ந்து, சம்பள நிர்ணய சபை ஒன்றை அமைத்து வருடக் கணக் கில் காலத்தைக் கடத்தியது. மீண்டும் வேலை நிறுத்தம் வெடிக்கவே, ஜ. தொ. கா. தலைவ ஏ. அசீஸ் வெளிநாடு சென்ற நேரம் பார்த்து, திட்டமிட்டு இச்சபையைக் கூட்டி ஒரு வாக்கு

வித்தியாசத்தில் சம்பள உயர்வுப் பிரேரணையினை தோற்கடித்தது. கடந்த அரசாங்கம் தோட்டத் துரைமார்கள் ஐ. தே. க. வின் ஆதரவாளர்கள் என்பதால் அவர்களது அதிகாரத்தையும் சலுகைகளையும் ஓரளவிற்கு கட்டுப்படுத்தியது. ஆனால் இந்த அரசாங்கம் அவர்களுக்கு அதிகாரத்தையும் சலுகைகளையும் வழங்கி, ''கீழ்ப்படியாவிட்டால் சிங்களவர்களைக் கொண்டு தாக்குவோம்'' என வெளிப்படையாகவே மிரட்டித் தோட்டத் தொழிலாளரை மூர்க்கமாக அடக்கி வருகிறது... இப்படியே இதனை நீட்டிக்கொண்டு போகலாம்.

இன்று மலையகத் தமிழ் தொழிலாளர்களுடைய நிலைமையை சுருக்கமாக, சிலவரிகளில் இவ்வாறு கூறலாம். பொருளாதார ரீதியில் எப்படி சாகாமல் உயிர் வாழுவது என அவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு விலைவாசி அதிகரித்து விட்டது. தமிழர் என்ற முறையில் எப்படித் தாம் சிங்களக்குண்டர்களால் கொல்லப்படாமல் தப்பிப் பிழைக்கலாம் எனச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தளவிற்கு தேசிய இன ஒடுக்குமுறை உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. ஆயினும் அவர்கள் 1982ம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஜே. ஆரையே ஆதரித்து வாக்களித்தார்கள். இந்த விசித்திரமான நிலைமைக்குக் காரணம் என்ன?

**ஜனாதிபதி தேர்தல்:**

மலையகத் தமிழர் இலங்கையிலுள்ள சகல கட்சி மீதும் நம்பிக்கை இழந்தனர். எல்லோருமே அவர்களுக்குத் துரோகம் செய்து

விட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள வாதக் கட்சியாக இருந்தாலும் ஸ்ரீ.ல.சு.க.யின் அளவிற்கு அடக்குமுறைத் தன்மை படைத்த சிங்கள ஆதிக்கவாத (Agressive - Sinhala Chauvinism) கட்சி அல்ல என அவர்கள் அதுவரை கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்து விட்டது. எனவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களின் கட்சிக் கொள் கையை விடத் தனிநபர் குணாம்சங்களை அவர் கள் கருத்தில் கொள்ளத் தொடங்கினார்கள். அவர்கள் தமது கண்ணோட்டத்தில் போட்டி யிட்ட அபேட்சகர்களைப் பின்வருமாறு மதிப் பிட்டார்கள்.

**குமார் பொன்னம்பலம்:**

இவர் 'தமிழ் ஈழத்தை' முன் வைத்தார். மலையக மக்கள் 'தமிழ் ஈழத்தை' ஆதரிக்கவில்லை. அதைவிட அவரது தந்தை ஜீ.ஜீ.பொன்னம் பலம் மலையக மக்களுக்குச் செய்த துரோகத்தை அவர்கள் மறந்து விடவில்லை. அனைத்துக்கும் மேலாக அவர் தேர்தலில் வெற்றி பெறப் போவதில்லை. எனவே அவரை ஏன் ஆதரிக்க வேண்டுமெனக் கருதினர். கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா கடந்த அரசாங் கத்தில் அமைச்சராக இருந்து கொண்டு அவர் மேற்கொண்ட தமிழ் மக்கள் விரோத நடவடிக் கைகளை அவர்கள் இன்னும் மறந்து விடவில்லை.

**வாசுதேவ நாணயக்கார:**

இவரைப் பெரும்பாலான தோட்டத் தொழி லாளருக்குத் தெரியாது.

**ரோகண விஜயவீர:**

1971 வரை இவர் மலையகத் தமிழரை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் அங்கமாகவே கருதினர். எனவே அவர்கள் அவரை வெறுத்தனர்.

**ஹெக்டர் கொப்பேகடுவ:**

ஸ்ரீ.ல.சு.க.அரசாங்கத்தில் கண்டிய வீரனாகச் சித்தரிக்கப்பட்ட இவர் அபகீர்த்தி வாய்ந்த நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் மலையக மக்களின் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தார். இறுதியாக,

**ஜே. ஆர். ஜயவர்த்தன:**

இவரது ஐ.தே.க.இல் சிங்களத் தீவிரவாதிகள் இருந்தபோதும் அவர்களையெல்லாம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து தம்மைப் பாதுகாக்கக் கூடியவர் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் தொண்டமானல் ஏற்படுத்தப்பட்டது. அனைத்தையும் விட யார் ஜெயித்தாலும் பரவாயில்லை. கொப்பேகடுவ தோற்க வேண்டும் என அவர்கள் விரும்பினா. கொப்பேகடுவ ஜெயித்தால் தாம் ஈவிரக்கமின்றி பழிவாங்கப் படுவோம் என அஞ்சினர். எனவே, கொப்பேகடுவையைத் தோற்கடிக்கும் தகைமையுள்ள ஒரேயொரு அபேட்சகரமாக ஜே ஆரை ஆதரித்தனர்.

**தொண்டமான் அரசாங்கத்தில் சேர்ந்தால் யாருக்கு லாபம்?**

தொண்டமான் அமைச்சரானதால் மலையகத் தமிழர் பெற்ற நன்மைகளைவிட அதனுல் இந்த

அரசாங்கம் பெற்ற நன்மை மிக அதிகம் உண்மையில் தொண்டமான் அமைச்சரான தால் மலையக மக்களுக்கு கிடைத்த பொருட் படுத்தக் கூடிய இலாபம் எதுவுமே கிடையாது. ஆனால் அரசாங்கம் பெற்ற இலாபமே அநேகம்.

இன்று இலங்கையில் ஒருவரது குரலுக்கு ஆறுலட்சம் மக்கள் அணி திரள்கிறார்கள் என்றால் அது தொண்டமானுக்கு மாத்திரமே அவர் தனி நபரல்ல. அவருக்குப் பின்னால் ஸ்தாபனப்பட்ட 6 லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் 60% தமது கைகளில் வைத்திருக்கிறார்கள். விண்ணை அதிரவைக்கும் இந்த மகத்தான சக்தியால் தாங்கப்படும் ஒரு மனிதர் எவ்வளவு வலிமை மிக்கவராக இருக்க வேண்டும்? ஆனால் தொண்டமானோ அற்பப் பதவிக்காக ஜே.ஆரின் காலடியில் விழுந்து கிடக்கிறார்.

1975-ல் சிறிமாவோ-பண்டாரநாயக்காவின் அரசாங்கம் ஜே.ஆர். ஜெயவர்தனவை கைது செய்ய முயன்றபோது அவரைப் பொலிசாரால் பாதுகாக்க முடியவில்லை. அப்போது அரசு முப்படைகள் அவரிடம் இருக்கவில்லை. அவர் தனது பாதுகாப்பைத் தேடி தனது கட்சிக் காரியாலயத்திற்கு ஓடவில்லை. தொண்டமானின் வீட்டைத் தேடி பங்களாவிற்கு ஓடி வந்தார். எதற்காக? அரசியல்வாதி என்ற முறையில் ஜே.ஆருக்குத் தன்னைப் பாதுகாக்கக்கூடிய ஒரே சக்தி ஸ்தாபனப்பட்ட தொழிலாள வர்க்

கம் மாத்திரமே என்பது தெரிந்திருந்தது அந்தத் தொழிலாள சக்தி தொண்டமானுக்குப் பின்னால் இருப்பதை அறிந்துதான் ஓடோடி வந்தார். அவருக்கு ஆறுதல் கூறிய தொண்டமான் "அப்படி உங்களைக் கைது செய்தால் 24 மணித்தியாலத்திற்குள் எனது பலத்தை முழு உலகத்திற்கும் காட்டுகிறேன்" என சூளுரைத்தாரே, அந்தப் பலம் எது? ஜே.ஆர். நாடி வந்த தொழிலாளர் சக்திதானே! இத்தகைய பலத்தை வைத்துக் கொண்டு அன்று தன்னிடம் பாதுகாப்பிற்காக ஓடி வந்த ஒரு மனிதரிடம் இன்று மலையகத் தமிழரின் வாழ்விற்கு பிச்சை கேட்டுக் கொண்டிருக்கிறார், தொண்டமான். பதவி ஆசை மனிதனை எவ்வளவு கீழ்த்தரமானவனாக்கி விடுகிறது?

இவர் எப்படி அந்த அமைச்சர் பதவியைப் பெற்றார் என்ற விடயமே மிகவும் அசிங்கமானது. ஜே.ஆர்.அவரை அழைத்து அப்பதவியைக் கொடுக்கவில்லை. மலையக மக்களின் நலனைக் கருதித் திட்டவட்டமான கோரிக்கைகளை முன்வைத்து அதன் அடிப்படையில் அவர் அரசாங்கத்துடன் கூட்டுச் சேரவில்லை. மாறாக 77-ம் ஆண்டு வன்செயலில் மலையகத் தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டிருந்தபோது அவர்களது உடமைகளும, உயிர்களும், சூறையாடப்பட்டிருந்த வேளையில் அவற்றைத் தூண்டியது "போரா-சமாதானமா?" என்ற ஜே.ஆரின் பேச்சுத்தான். அவரது திட்டந்தான் அது, என்பதை மக்களுக்கு நேர்மையாகவும், வெளிப்படையாகவும் கூறி அவர்களைத் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்

வதற்குத் தயார்படுத்த வேண்டிய அவர் என்ன செய்தார்? ''எதிர்க் கட்சியினரின் நாசவேலை யிது'' என ஜே.ஆா வாய்கூசாமல் கூறிய பொய்யை அப்படியே மக்களுக்குக் கபடத்தன மாக ஒப்புவித்து அதற்கு சன்மானமாகத் தானே வாய்திறந்து ''மந்திரி பதவி கிடைத்தால் ஏற்றுக் கொள்வேன்'' என வெட்கமின்றிக் கேட்டார். ஜே. ஆர். எத்தனையோ முக்கிய மான பல அமைச்சுகள் தனது கையில் இருந் தும் அவருக்கு முக்கியத்துவம் குறைந்த கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச் சைக் கையளித்தார்.

மந்திரிப் பதவி கிடைத்தவுடன் தொண்ட மான் மலையக மக்களைப் பாதுகாப்பதைவிட இந்த அரசாங்கத்தைப் பாதுகாப்பதையே தனது பிர தான கடமையாகக் கொண்டார். உதாரணமாக 1981ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் திகதி கென் யன் புரஜக்ட் (Canyon Project) டில் வேலை செய் யும் சிங்களத் தொழிலாளர்கள் புல்டோசர், லாறி கள், போன்ற வாகனங்களையும் பயங்கர ஆயுதங் களையும் பாவித்து அவரது தேர்தல் தொகுதியி லுள்ள கங்காவத்த, பிறவுன்லோ ஆகிய தோட் டங்களைச் சேர்ந்த 37 லைன் அறைகளை தகர்த் தெறிந்து அத்தோட்டத் தொழிலாளர்களின் உட மைகளைக் கொள்ளையடித்துச் சென்றதை கண்டித் துத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம செய்த போது அங்கு விரைந்து சென்ற தொண்டமான் வேலை நிறுத்தத்தை கைவிடும்படி வேண்டினார். அதே போல், ஏனைய தொழிலாளர்களுக்கு வழங் கிய வேலைப்படி தமக்கும் வழங்கப்பட வேண்டும்

எனக்கூறி முழு மலையகமும் வேலை நிறுத்தத்தில் குதித்தபோது தொண்டமான் அவர்களை வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். 1981 தமிழர் படுகொலையைக் கண்டித்து, தமிழ்நாடு அர்த்தால் மேற்கொண்டபோது ஜே. ஆரின் ஏஜண்டாக தமிழ்நாடு சென்று அர்த்தாலைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டார். ஜனாதிபதித் தேர்தலை '82ல் ஈழத்தமிழர் பகிஷ்கரித்தபோது வடக்கே சென்று தொண்டமான் ஜே. ஆருக்கு வாக்களிக்குமாறு வேண்டினார். அன்று என். எம். பெரேரா, கொல்வின் ஆர் டி. சில்வா போன்ற தொழிலாளத்தலைவர்கள் அமைச்சராக இருந்துகொண்டு எவ்வாறு தொழிலாள வர்க்கத்திற்கு துரோகமிழைத்தார்களோ அதை விடக் கூடுதலான துரோகத்தைத் தொண்டமான் தொழிலாளர் வர்க்கத்திற்கு இழைத்தார். இந்த அரசாங்கம் கொண்டுவந்த அத்தனை மக்கள் விரோதச் செயல்களுக்கும் அவர் உடந்தையாக இருந்தார். 1980 ஆகஸ்ட் பொது வேலைநிறுத்தத்தின் போது 40 ஆயிரம் தொழிலாளர்களை இவ்வரசாங்கம் வீதியில் நிறுத்தியது. இவ்வேலைநிறுத்தத்தில் பங்கு கொள்ளாதது மாத்திரமல்ல, அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களை வேலையில் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கோரி ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் என்றுலும் அவர் மேற்கொள்ளவில்லை. இத்தகைய பிரச்சினைகள் ஏற்படும்போது தொண்டமானின் சந்தர்ப்பவாதம் இரண்டு வழிகளில் வெளிப்பட்டது. முதலாவதாக அவர் ஆட்சேபனை மகஜர்களை பெரும் பத்திரிகை விளம்பரத்துடன் கையளிப்பார்.

உதாரணமாக இவ்வேலை நிறுத்தத்தின்போது வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளுமாறு கூறி ஒரு மகஜரை ஜனாதிபதியிடம் கையளித்தார். அடுத்து ஐ.நா. ஸ்தாபனத்தின் விதிகளையும் மீறி இரவுநேரங்களில் பெண்களை வேலைக்கமர்த்தலாம் என்ற சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்தபோது அதையும் ஆட்சேபித்து ஒரு மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. உருப்படியான நடவடிக்கைகள் மூலம், மக்களை ஸ்தாபனப் படுத்தி தடுத்து நிறுத்த வேண்டிய மக்கள் விரோத செயல்களை இவ்வாறு வெறுமனே வார்த்தைகளால் ஆட்சேபிப்பது ஒரு கேவலமான சந்தர்ப்பவாத அரசியலாகும். இதன் மூலம் தமக்கும் அச்செயல்களுக்கும் சம்பந்தமில்லை என உலகத்திற்குக் காட்டுவது மாத்திரமே இவரது நோக்கம். இதன்மூலம் மக்கள் மத்தியில் இருந்தும் வெளியுலகிலிருந்தும் அவரை நோக்கி வரும் கண்டனக் கணைகளை சமாளிப்பதற்கு இந்நடவடிக்கை அவருக்கு தேவைப்படுகிறது. இதைத் தவிர அச்செயல்களுக்கு அவர் உடந்தையாகவே இருந்திருக்கிருர். 6 லட்சம் தொழிலாளர்களைப் போராட்டத்திலிருந்து பிரித்து இலங்கையில் எந்தவொரு தொழிலாளர் போராட்டமும் வெற்றி பெற முடியாத நிலையைத் தாம் அமைச்சரானதன் மூலம் ஏற்படுத்திய இவர், இவ்வரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டு தனக்கும் அச்செயல்களுக்கும் சம்பந்தமில்லை எனக் கூற முடியாது. ஆனுல் அவர் அவ்வாறுதான் கூறி வருகிருர்.

இரண்டாவதாக, இவர்பேசும் வீரம் செறிந்த பேச்சுகள், மலையகத் தமிழர்களும் சரி, ஏனைய தமிழ் பேசும் மக்களும சரி, பாரதூரமாக பாதிக்கப்பட்டு அவர்கள் குமுறிக்கொண்டிருக்கும் போது தொண்டமான் அவர்களது உணர்வுகளை பிரதிநிதித்துவப் படுத்தும் விதத்தில் பேசிவிடுவார். அல்லது அறிக்கை விடுவார். இதனுல் மக்கள் ஏமாற்றப்படுகிருர்கள். இவரது பேச்சைக் கேட்கும் மக்கள் 'எ ம து த லை வ ர் எமது பிரச்சினைகளைப் புரிந்து கொண்டிருக்கிருர். அவற்றை மிகத் துணிவோடு வெளியே சொல்கிருர். எனவே உரிய நடவடிக்கை எடுப்பார்' என நம்புகிருர்கள். சுயமாகத் தாம் மேற்கொள்ளும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடுகிருர்கள், அவர்களது. உணர்ச்சி இவ்வாறு தணிக்கப்பட்டதும், சந்தடி இல்லாமல் அப்பிரச்சினையை கைநழுவ விடுவது தொண்டமானுக்குக் கைவந்தகலை. இவரது இந்த தந்திரோபாயத்தை ஜே ஆர். நன்கு புரிந்து வைத்துக்கொண்டு அதற்கேற்ருற்போல் சாமர்த்தியமாக நடந்து கொள்கிருர். தொண்டமானின் ராஜதந்திரத்தோடு கூடிய கோபத்தை அரசியல் சாணக்கியனுன ஜே ஆர். புரிந்து கொண்டு "பெருந்தன்மையுடன்" நடந்து கொள்கிருர். அடிப்பதைப் போல் நடி, நான் அழுவதைப் போல சிரிக்கிறேன்" என்ற நாடகத்தை இருவருமே சாமர்த்தியமாக நடிக்கின்றனர். இதற்குப் பல உதாரணங்களைத் தரலாம். 1981-ல் வன்செயலின்போது தொண்டமான், 'அரசங்கத்தால் இதனைத் தடுத்து நிறுத்த முடியாவிட்டால் நாமே தடுத்து நிறுத்துவோம்'

என்ற அர்த்தத்தில் வீரமாகப் பேசி விட்டு பின்னர் ஜே.ஆர். கூறியதும் அவ் வசனங்களை வாபஸ் வாங்கினார். இதேவிதமான மற்றொரு சம்பவம் 1982-ம் ஆண்டு நுவரெலி யாவில் இ.தொ.கா. மாநாட்டின்போது நடை பெற்றது. இம்மாநாட்டில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான மலையகத் தமிழர்களின் உள்ளத்தில் இந்த அரசாங்கம் வெறும் வாக் குறுதிகளால் தம்மை ஏமாற்றி வருகின்றது என்ற உணர்வும ஆத்திரமும் மேலோங்கியிருந் தது. இதனைப் புரிந்து கொண்ட தொண்டமான் ஜே.ஆரை மேடையில் வைத்துக் கொண்டு ''எமக்கு வாக்குறுதிகள் வேண்டாம்; எதை யாவது செய்வதாக இருந்தால் நடைமுறையில் உடனடியாகச் செய்யுங்கள். அல்லது முடியா தெனக் கூறிவிடுங்கள்'', என பலத்த கை தட்டலுக்கு மத்தியிலே வீரமுழக்கம் செய்தார். இதையே ஜே.ஆரைப் பார்த்துக் கொண்டு ஆங்கிலத்திலும் தானே மொழிபெயர்த்துக் கூறினார். இதற்குச் சிரித்துக்கொண்டே பதில் கூறிய ஜே.ஆர்.''மக்களுக்கு பிரச்சினை தொடர்ச்சி யாக இருக்க வேண்டும; பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டால் இ.தொ.கா. போன்ற தொழிற்சங்கங்களுக்கெல்லாம் வேலை இல்லாது போய் விடும்'' எனப் பேசித் தொண்டமானின் வீரத்தைக் கோமாளித்தனமாக்கி விட்டுச் சென்றார்.

இதைவிட அரசாங்கத்தில் அமைச்சர் பதவி ஏற்றதால் இ.தொ.கா.விற்கு ஏற்பட்டுள்ள அவப் பெயரும் இழப்பும் மற்றெவரையும் விட திரு.

தொண்டமானுக்கு நன்கு தெரியும். இ. தொ. கா. வரலாற்றிலேயே மிகக் கூடுதலான அங்கத்தவர் களைக் கொண்டிருந்தது 1976-ம் 75-ம் ஆண்டு களிலாகும். இக்காலப் பகுதியில்தான் ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்தின் கீழ் மலையகத் தமிழர் அனுபவித்த சொல்லொண்ணுத் துயரங் களுக்கு எதிராக அவர்கள் நடத்திய போராட் டங்களுக்கு இ.தொ.கா. அரசாங்கத்திற்கு வெளியே இருந்து ஓரளவு துணிச்சலோடு தலைமை கொடுத்தது எனவேதான் அதன் அங் கத்துவம் வேகமாக அதிகரித்தது. இக்காலப் பகுதியில் அதன் அங்கத்தவர்களின் தொகை ஆறரை லட்சத்தைத் தாண்டியது. ஆனல் 1981-ல் தொண்டமான் அரசாங்கத்துடன் இணைந்த பின்னர் இவ்வங்கத்துவம் 2 லட்சத்து 45 ஆயிரமாகக் குறைந்தது. அதுவரை மலை யகத்தின் மிகப் பெரிய தொழிற்சங்கமாக மாத் திரமல்ல. தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக இ.தொ.கா. திகழ்ந்தது. ஆனல் இன்று மலையகத்தில் அது இரண்டா வது இடத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டது. முதலாவது ஸ்தானத்தை ஐ.தே.க யின் தொழிற்சங்க பிரிவான தேசிய தோட்டத் தொழி லாளர் சங்கம் (Jathika Estate Worker's union) வகிக்கிறது.

அது மாத்திரமல்ல. இ. தொ. கா. விற்கு நிதி யுதவி நல்கிய பல சர்வதேச நிறுவனங்களி லிருந்து இ. தொ. கா. தற்போது வெளியேற்றப் பட்டுள்ளது. தமிழ் நாட்டு அமைச்சரொருவர் "தொண்டமான் அமைச்சராக இருக்கலாம்.

ஆனல் ஜே ஆருக்கு அவரொரு தோட்டி" என்று பேசுமளவிற்கு தொண்டமானுக்கு அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது.[22]

**மலையகத் தமிழர்களைப் பலமிழக்கச் செய்துவிட்டார் தொண்டமான்:**

இன்று மலையகத் தொழிலாளர்களின் மொத்தத் தொகை 6 லட்சத்து 37 ஆயிரம். இதில் சுமார் 3லட்சம் தொழிலாளர் ஐ. தே. கட்சி தொழிலாளர் சங்கத்தில் அங்கத்துவம வகிக்கிருர்கள். இந்த அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, தோட்டத் துரைமார் மூலம் அவர்களை பல்வேறு வழிகளில் நிர்ப்பந்தப்படுத்தி, தனது தொழிற்சங்கத்தை வளர்த்து வருகிறது. இதைவிடத் தொண்டமானே யூ. என். பி. அரசாங்கத்தில் சேர்ந்திருக்கும்போது நாம் யூ. என். பி. யில் சேர்ந்தால் என்ன? என்ற மனேபாவம் அவர்களிடையே '83 வரை வளர்ந்து வந்தது. சுமார் இரண்டரை லட்சம் பேர் இ. தொ. கா. வில் இருக்கிருர்கள். எனவே சுமார் ஐந்தரை லட்சம் பேர் (84%) அரசாங்க ஆதரவுத் தொழிற் சங்கங்களில் இருக்கிருர்கள். ஏனைய 83 ஆயிரம் பேர் (16%) பத்துக்கும் அதிகமான தொழிற்சங்கங்களில் சிதறிக் கிடக்கிருர்கள். எனவே தொண்டமான் அமைச்சராக இருப்பதால் மலையகத் தமிழருக்கு தமது பிரச்சினைகளை எதிர்த்துப் போராடும் பலம் இல்லாமற் போய் விட்டது. கடந்த ஸ்ரீ. ல. சு. கட்சி அரசாங்கத்தின் போது அவர்கள் முகங்கொடுத்த பாரதூரமான பிரச்சினைகளுக்கு இ. தொ. கா. அரசாங்கத்திற்கு வெளியே இருந்தபடியால் எதிர்ப்புக் காட்டவும்,

தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடிந்தது. ஆனால் இன்று பிரச்சினைகளைச் சமாளிக்கவும் முடியாமல், எதிர்ப்பைக் காட்டவும் முடியாமல் அவர்கள் திண்டாடுகிறார்கள்.

இவற்றினால் ஒரு விளைவு யாதெனில், இதிகாச நாயகர்களாக ஒரு காலத்தில் கருதப்பட்ட என். எம். பெரேரா போன்ற இடதுசாரித் தலைவர்கள் கடந்த அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகித்த சொற்ப காலத்தில் எவ்வாறு அம்பலமானார்களோ அதே போல இன்று தொண்டமான் அம்பலமாகி நிற்கிறார். ஆனால் மலையகத்தில் நிலவும் ஸ்தாபனமயப்பட்ட காட்டிக் கொடுப்பும் அடக்குமுறையும் மற்றொரு தலைமை உருவாவதை தடுத்து வருகிறது.

**காலகட்டம்-6**

**1983 ஜூலை வன்செயலின் பின்னர்:**

1982ல் ‘‘ஜே. ஆர். நல்லவர்; அவர் மீது மாத்திரந்தான் நம்பிக்கை வைக்க முடியும், அவர் தம்மைப் பாதுகாப்பார்’’ என்ற எதிர்பார்ப்புடன், மலையகத் தமிழர் ஜே. ஆரை ஜனாதிபதி தேர்தலில் ஆதரித்தனர். தொண்டமானின் பிரச்சாரம் இந்நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியது.

1982 அக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மலையகத் தமிழரின் வாக்குகள் வகித்த பாத்திரத்தைப் பின்வரும் வரிகள் தெளிவாகக் காட்டுகின்றன. ‘‘இ.தொ. கா- பெருந்தோட்ட துறையில் மிகப் பெரிய தொழிற்சங்கம்- யூ. என். பி. யுடன் கூட்டுச் சேர்ந்தமை 1982, அக்டோபர் ஜனாதிபதி தேர்தலில் ஒரு முக்கிய காரணியாக அமைந்தது.... நுவரெலியா, பதுளை, கண்டி

ஆகிய மாவட்டங்களில் முறையே 63. 10 சத வீதம், 58, 61 சதவீதம் 59. 80 சதவீதம் வாக்குகள், பெறப்பட்டமை இந்தியர்களின் வாக்குகள் வகித்த பாத்திரத்தை புலப்படுத்து கின்றது.'' 23

ஜே. ஆர். ஜனாதிபதியானார். அடுத்து நடை பெற்ற ஜனநாயக விரோத சர்வஜன வாக்கெடுப் பையும் தொண்டமான் வெட்கமில்லாமல் ஆதரித் தார். யூ. என். பி. தொடர்ந்து ஆட்சி செய்தது.

தொண்டமானுக்கு பாராட்டு விழா ஒன்று தடபுடலாக நடைபெற்றது. ''கம்யூனிச வலையில் விழாமல் மலையகத் தமிழர்களை காப் பாற்றியதற்கும், ஜனாதிபதித் தேர்தலில் ஜே. ஆரை ஆதரித்ததற்கும்'' நன்றி தெரிவிக்கப் பட்டது. ஸ்ரீ. சு. க. அரசாங்கத்தினால் சுவீகரிக்கப் பட்ட லெவண்டன் தோட்டத்து தேயிலைத் தொழிற்சாலை தொண்டமானுக்கு திருப்பி கைய ளிக்கப்பட்டது.

இவ்வரசாங்கம் தொண்டமான் தொழிலாள வர்க்கத்திற்கும், ஜனநாயகத்திற்கும் செய்த துரோகத்திற்கு இவ்வாறு நன்றி பாராட்டி பரிசு களை கொடுத்து, மகிழ்ச்சி கொண்டாடிய நிலைமை நீடிக்கவில்லை.

1983 ல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது இ.தொ.கா.வை ''நாயுண்ணி'' என இதே அரசாங்கத்தைச் சேர்ந்த அமைச்சர் காமினி திசாநாயக்க அட்டனில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் கூறினார். ''நாயுண்ணியானது நாய் மீது அமர்ந்து கொண்டு அதன் ரத்தத்தைக்

குடிக்கிறது. ஆனுல் அது என்னவோ தன்னுல் தான் நாய் வாழ்கிறது என நினைத்துக் கொள் கிறது. இந்த நாயுண்ணியைப் போன்றதுதான் இ.தொ. கா.வும்'' என அவர் பேசினுர். அதையும் கேட்டுக் கொண்டு தொண்டமான் பேசாமல்தான் இருந்தார்.

அனைத்திற்கும் மேலாக, 1983 ஜூலையில் நடைபெற்ற வன்செயல் மலையகத் தமிழர்களை திட்டமிட்டு அழித்தொழிக்கும் உயர்ந்தபட்ச நடவடிக்கையாக அமைந்தது. அதனைத் திட்ட மிட்டுச் செய்தவர்கள் ஜே. ஆர்., சிறில் மெத்யூ, காமினி திசாநாயக்க ஆகியோரே என்பது தொண்டமானுக்குத் தெரியும். இருந்தும் வார்த்தை ''ஸ்டண்டுகள்'' மூலம் காலத்தைக் கடத்திக்கொண்டு அமைச்சராக வீற்றிருக்கிருர்.

'83 ஜூலையின்போது மலையகத்தில் பாதிக்கப்படாத ஒரு குடும்பத்தானும் கிடையாது. சுமார் 2000 பேர் படுகொலை செய்யப்பட்டனர். சுமார் ஒன்றரை லட்சம் பேர் அகதிகளாயினர். நுவரெலியா மாவட்டத்தில், மலையகத் தமிழர் அடர்த்தியாக வாழும் பகுதியில் கூட தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது நுவ ரெலியா அமைச்சர் காமினி திசாநாயக்காவின் நேரடித் தூண்டுதலால் தாக்கப்பட்டது. இத் தடவை இதன் பின்னணியில் இயங்கிவர்கள் யூ. என். பி. அமைச்சர்களே என்பது சாதாரணத் தொழிலாளருக்கு கூடத் தெரியும். நுவரெலியா மாவட்டத்தில் தப்பிப் பிழைத்த ஒரு சில நகரங் களைத் தவிர ஏனைய மலையக நகரங்கள் யாவும் முற்ருக அழிக்கப்பட்டு விட்டன. (இது சம்பந்த

மாக B. A. அஜந்தா எழுதியுள்ள ''மலையகத் தமிழர் படுகொலை'' என்ற நூல், பயனுள்ள விபரங்களைத் தருகிறது.)[24]

மலையகத் தமிழர் இதுவரை ''தமிழீழத்தை'' ஆதரிக்கவில்லை. ஆனால் இவர்களே 83ல் வெறித்தனமாக வேட்டையாடப்பட்டுள்ளனர். இன்றும் பணயக் கைதிகளாக உள்ளனர்.

இவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் ஐ. தே. க. வையே ஆதரித்தனர். ஆனால் அதே அரசாங்கம் இவர்களை வேட்டையாடியது. இத்தனை கொடுமைகளுக்கும் மத்தியில் வானொலியில் பேசிய ஜே. ஆர். என்னவோ சிங்கள மக்களை தமிழர்கள் போட்டுத் துன்புறுத்துவது போல சிங்கள மக்களுக்குத்தான் ஆறுதல் கூறினார். ஒரு வார்த்தைதானும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குக் கூறவில்லை. இன்று கூட சிங்கள மக்கள் மத்தியில் இதற்கான குற்ற உணர்வோ, கவலையோ ஏற்படவில்லை. மாறாக, இந்திய தலையீடு பற்றிய அச்சத்தைக் காட்டி சிங்கள வெறியை இவ்வரசாங்கம் உயர்த்திப் பிடிக்கிறது இந்தச் சிங்கள இனவெறியின் பின்னால் அமெரிக்காவின் நலன் பாதுகாக்கப்படுகின்றது. (இது பற்றி இந்நூலில் ஆராய்வது அவசியமில்லை).

இன்று மலையகத் தமிழர் அனைத்தையும் இழந்து நிற்கிறார்கள். தமது உயிர், உடமை, கற்பு ஆகியவற்றை மாத்திரமல்ல, தன்னம்பிக்கையைக் கூடத்தான். யூ. என். பி யை நம்பினார்கள். ஜே. ஆரை. நம்பினார்கள். ஏமாந்தார்கள். சிங்கள வெறியர்களிடமிருந்து தம்மைத்தாமே

காப்பாற்றிக் கொள்ளலாம் என நம்பினுர்கள். இத் தடவை சிங்களக் குண்டர்கள் திருப்பித் தாக்கப் பட்ட இடங்களில் எல்லாம் இராணுவம் வெறியாட் டம் நடாத்தி விட்டது. எனவேநிராயுதபாணியாக தம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற நம் பிக்கை அவர்களை விட்டுப் போய்விட்டது. சிங் களவர்களை அவர்கள் நம்பவில்லை. வேறு எவர் மீதும், தம்மீதுகூட அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. எனவே ''எம்மை இந் தியாவுக்குத் திருப்பி அனுப்பு'' என உரத்த குர லில் கோருகிருர்கள். அது நடைமுறைச் சாத்திய மற்ற கோஷம் என்பது உண்மைதான். ஆனல் இம்மக்களின் எதிர்காலம் என்ன?

இந்தக் கேள்விக்கு வரலாற்று ரீதியில் விடை காண்பதன் மூலமே சரியான தலைமை உருவாக முடியும்.

○ ○

பின் இணைப்பு- 1.

## தேயிலை

தேயிலை : ஏக்கர் பரப்பு, உற்பத்தி, ஏற்றுமதி வருவாய்

| வருடம் | ஏக்கர்பரப்பு | உற்பத்தி மில்லியன் இருத்தல் | ஏற்றுமதி மில்லியன் இருத்தல் | ஏற்றுமதி வருவாய் மில்லியன் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1968 | 597,490 | 496. 0 | 459. 1 | 1,162 |
| 1970 | 592,499 | 462. 8 | 468. 0 | 1,120 |
| 1971 | 597,191 | 470. 1 | 480. 0 | 1,145 |
| 1975 | 597,691 | 471. 1 | 468. 9 | 1,932 |
| 1976 | 594,481 | 433. 3 | 440. 8 | 2,100 |
| 1977 | 598,024 | 459. 8 | 409. 5 | 3,502 |
| 1978 | 600,226 | 438. 7 | 424. 6 | 6,401 |

### தேயிலே உற்பத்தியாகும் நிலப் பரப்பு - 1978

| அளவு | மொத்த ஏக்கர் |
|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானவை | 123,528 |
| 10 முதல் 100 ஏக்கர் | 93,616 |
| 100 முதல் 500 ஏக்கர் | 148,040 |
| 500 ஏக்கருக்குமேல் | 235,042 |
| | 600,226 |

ஆதாரம் : Sri Lanka Tea Board and Customs Returns.

குறிப்பு 1: உற்பத்திக் குறைந்தும் வருவாய் அதிகரித்துள்ளமைக்கு உலகச் சந்தையில் தேயிலேயின் விலே உயர்ந்திருப்பதும் இலங்கை அரசாங்கம் ஏற்றுமதி வரியைக் கிலோவுக்கு 15. 50 ரூபாவாய் அதிகரித்திருப்பதும் காரணமாகும்.

2: இவ் ஏற்றுமதி வரி அதிகரிப்பால் மாத்திரம் 1978ல் அரசாங்கத்திற்கு 66 கோடியே 44 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மேலதிக வருமானமாய் கிடைத்தது. அதில் ஒரு சதமாவது தொழிலாளருக்கு வழங்கப்படவில்லே.

**பின் இணைப்பு- 2:**

## ரப்பர்

ரப்பர் : ஏக்கர் பரப்பு, உற்பத்தி, ஏற்றுமதி வருவாய்

| வருடம் | ஏக்கர் பரப்பு | உற்பத்தி மில்லியன் இருத்தல் | ஏற்றுமதி மில்லியன் இருத்தல் | ஏற்றுமதி வருவாய் மில்லியன் ரூபாய் |
|---|---|---|---|---|
| 1968 | 572,909 | 328.0 | 328.3 | 331 |
| 1970 | 569,973 | 350.9 | 354.2 | 440 |
| 1971 | 567,994 | 311.0 | 285.2 | 307 |
| 1975 | 562,494 | 327.9 | 354.9 | 654 |
| 1976 | 560,872 | 335.4 | 299.8 | 830 |
| 1977 | 559,850 | 322.0 | 295.4 | 931 |
| 1978 | 559,257 | 343.1 | 304.3 | 2, 025 |

ரப்பர் உற்பத்தியாகும் நிலப்பரப்பு- 1978.

| அளவு | மொத்த ஏக்கர். |
|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானவை | 171, 024 |
| 10 முதல் 100 ஏக்கர் | 130, 137 |
| 100 ஏக்கருக்கு மேல் | 258, 096 |
| | 559, 257 |

ஆதாரம் : Customs Returns and Rubber Control Department.

குறிப்பு : ரப்பர் உற்பத்திக்கு பெருமளவு ஊக்குவிப்புப் பணம் அரசாங்கத்தினுல் வழங்கப்படுகிறது. ஆயினும் உற்பத்தி பொருட்படுத்தத் தக்க அளவில் அதிகரிக்கவில்லை. இதற்கு நிர்வாகச் சீர்கேடும் ஊழலுமே பிரதான காரணங்கள்.

**பின் இணைப்பு- 3:**

மொத்த ஏற்றுமதி வருவாயில் தேயிலை, ரப்பர்.

| வருடம் | மொத்த ஏற்றுமதி வருவாய் மில்லியன் ரூபாய். | தேயிலையால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் மில். ரூபாய் | % | ரப்பரால் பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் மில். ரூபாய் | % | தேயிலை ரப்பர் பெற்ற ஏற்றுமதி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1968 | 1,976 | 1, 162 | 58. 8% | 331 | 16.75% | 75.55% |
| 1969 | 1,875 | 1, 062 | 56. 6% | 431 | 22.98% | 79.58% |
| 1970 | 1,995 | 1, 120 | 56. 1% | 440 | 22. 1% | 78. 2% |
| 1971 | 1,930 | 1, 145 | 59. 32% | 307 | 15. 9% | 75.22% |
| 1977 | 6,615 | 3, 502 | 52. 9% | 931 | 14. 1% | 67. 0% |
| 1978 | 13,175 | 6, 401 | 48. 6% | 2,025 | 15. 4% | 64. 0% |
| 1979 | 15,228 | 5, 722 | 37. 6% | 2,502 | 16. 4% | 54 0% |
| 1980 | 17,179 | 6, 170 | 35. 9% | 2,633 | 15. 3% | 51. 2% |
| 1981 | 19,658 | 6, 430 | 32. 7% | 2,880 | 14. 7% | 47. 4% |

Source: Central Bank Report & Customs Returns.

குறிப்பு : இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த 1977 முதல் தேயிலை, ரப்பர் ஏற்றுமதி மூலம் கிடைத்து வரும் வருமான வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதற்கு இவ்வரசாங்கம் கடைப்பிடிக்கும் திறந்த பொருளாதாரக் கொள்கையே காரணம். ஆயினும் நிரந்தர உள்ளூர் உற்பத்தி என்ற நிலையில் இருந்து நோக்கும்போது இந்த அரசாங்கமும் தேயிலை, ரப்பர் ஏற்றுமதியிலேயே தங்கியுள்ளது.

## பின் இணைப்பு- 4:

தேசியமயமாக்கலின் பின்னர் தேயிலைத் தோட்ட உடமை:

Distribution of Sri Lanka's tea acreage serice introduction of the Land Reform Law (No. 1 of 1972) and as at end of 1978 is shows below:-

| | No. of Estates | Acerage. |
|---|---|---|
| 1. Sri Lanka State Plantation Corporation | 316 | 154,989 |
| 2. Janatha Estates Development Board | 305 | 190,079 |
| 3. Land Reform Commission | 40 | 4,109 |
| 4. Sri Lanka Tea Board | 7 | 1,354 |
| 5. Janawasa Commission | 32 | 1,788 |
| 6. Udarata Co-operative Estates Development Board | 8 | 1,427 |

| | | |
|---|---|---|
| 7. Co-operative Societies etc., | 169 | 16,384 |
| 8. Productivity Committee | 2 | 35 |
| 9. Bank of Ceylon | 2 | 567 |
| 10. Public Trustee | 2 | 67 |
| 11. Sugar Corporation | 1 | 48 |
| 12. National Agricultural Development Authority | 13 | 4,132 |
| 13. Small Holdings owned by State Agencies | 19 | 98 |
| 14. Ceylonese Individuals | 2,771 | 95,356 |
| 15. Non-Ceylonese Individuals | 73 | 4,705 |
| 16. Ceylonese and Non-Ceylonese Individuals | 11 | 1,658 |
| 17. Small Holdings owned by Ceylonese Individuals. | 129,033 | 123,430 |
| | 132,809 | 600,226 |

Source: Sri Lanka Tea Board.

## குறிப்புகள்

1) A History of Ceylon; by Father S. G Parera, PP. 169.

2) Hundred years of Tea.

3) (i) Report of a Commission of Immigration to Ceylon-1938 (ii) Census Report.

4) The Tamils of Sri Lanka - by Walter Schwarg.

5) மலையகத் தமிழர்களின் எதிர்காலம்- B. A. காதர்.

6) பொருளியல் நோக்கு-மார்ச் 1980, பக். 12.

7) இலங்கையில் இடதுசாரி இயக்கம்-கலாநிதி குமாரி ஜெயவர்த்தன (இவர் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்).

8) பிரித்தானியாவில் பல லிபரல்வாதிகள் இவ்வாறு குரல் எழுப்பினர். அவர்களில் பிரதானமாக C. H. Schwamm, Sir Mancherjee, Bhownaggree, Herbert Robert, G.H. Weir ஆகியோரைக் குறிப்பிடலாம்.

9) இலங்கை வாழ் இந்தியர்களின் குடி அகல்வு - ஸ்ரீ. ச. ஜெயசிங் (இவரது இந்நூல் உசாத்துணை நூலாகப் பெரிதும் பயன்பட்டது).

10) கலாநிதி நியூட்டன் குணசிங்க அவர்களது ஆய்வின்படி அதுவரை கண்டிய தேசிய இனம் கரையோரத் தேசிய இனம் எனத் தனித் தனியாக பிரித்தானியரால் வகுக்கக்கூடிய அளவுக்குப் பிரிந்திருந்த இச்சிங்கள மக்கள் 1930 களில் நடைபெற்ற கலப்புத் திருமண மூலம் ஒன்றுபட்டனர். இக்காலப்பகுதியில் பல கரை

யோரச் சிங்கள பூர்சுவாக்கள் கண்டிய நில வுடமையாளர்களின் மகள்மார்களைத் திருமணம் செய்தனர். (உ-ம். திரு. டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா சிறிமாவோவை மணந்தார்).இதன் பின்னரே இரு சமூகங்களும் இணைந்து சிங்களத் தேசிய இனம் உருவானது.

11) இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சரித்திரம்-இ. தொ. க. கருத்தரங்கு கட்டுரை.

12) Indo-Ceylon Relations since Independence-S. U. Kodikara (இந்நூலில் இந்திய பீதி தெளிவாகப் புலப்படுத்தப்படுகிறது)

13) Politics in Sri Lanka—A. J. Wilson

14) Replies to Questionnaire of International Commission of Jurists by Ceylon Institute of National and Tamil affairs (CINTH), 1974, Unpublished typescript-P. 20.

15) A Report on the survey of Repatriates from Sri Lanka-1980; Published by centre for Research on New International Economic order II. Indians in South Asia-Edited by I. J. Bahadur Singh.

16) மலையகத் தொழிலாளா பற்றிய பொய்மைகளும், உண்மைகளும்-பி. அசோக்.

17 பி. அசோக் எழுதிய அதே நூல்.

18) India Today-Sept. 1/15/1981.

19) வீரகேசரி-செப். 24, 1981.

20) அவ்வாதம் வருமாறு:-"If the Government is unable to put an end to the mob rule


forthwith it should say so that the people them selves could take the necessary precautions for their safety and security of both Persons and property."

21) B. அசோக் எழுதிய அதே நூல்.

22) *1983* வன்செயலின்போது அமைச்சர் காளிமுத்து அவர்கள் பகிரங்க பொதுக்கூட்ட மொன்றில் இவ்வாறு கூறினர்.

25) W. A. Wiswa warnapala and L. Dias Hewagama-in Recent Politics in Sri Lanka-The Presidential Election and the Referendum of 1982- Navrang, New Delhi.

OO




1981-ஆம் ஆண்டின் இலங்கை அரசின் குடி சன மதிப்பீட்டின்படி.

# தர்க்கீகம் காட்டும் பாதை

சங்கிலித் தொடர்பான அண்மைக் காலச் சம்பவங்கள் ஏகாதிபத்தியத்துடன் இணங்கிய சிங்கள எதேச்சாதிகார அரசின் சதித் தொடரின் ஒரு பகுதியே. ஏன் இந்தச் சதி? இதன் மர்மம்தான் என்ன? இலங்கையின் இன்றைய காலகட்டத்தின் நிலையை (Objective condition) இயங்கியல் ரீதியில் ஆய்வதன் மூலமே இதற்கு விடை காண முடியும். தமிழ்ப் பேசும் மக்கள் பொதுவான கலாச்சாரத்தாலும், மொழியாலும், பொருளாதாரத்தாலும், எல்லையினாலும் இணைக்கப்பட்ட ஒரு தேசிய இனம். மலையக தோட்டத் தொழிலாளர்கள் இத்தேசிய இனத்தின் முதுகெலும்பு. 'ஏகாதிபத்தியத்தின் இறுக்கமான பிடியிலிருந்து விடுபட அதன் மென்மையான பகுதியை வெட்ட வேண்டும்' என்ற புரட்சிப் புரவலன் லெனினின் வாக்குக்கமைய தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக்கும், உடமைக்குமான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமே. இந்த நிலையில் எதேச்சாதிகார அரசு தமிழ்ப் பேசும் மக்களின் போராட்டத்தை ஒடுக்க முயல்வது இயல்பே.

இப்படியாயின் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் விமோசனத்திற்கு மார்க்கம்தான் என்ன? தமது மூதாதையர் நாட்டிற்கு திரும்பிச் செல்வதில்தான் இவர்களின் விமோசனப் பாதை அமைகிறது என்று தோட்டத் தொழிலாளர்மேல் ஏகபோக உரிமை கொண்டாடும் சில தொழிற்

சங்கங்கள் புரட்டு வாதம் செய்கின்றன. இந்தப் புரட்டல்களின் வாதம் காலத்திற்கு ஒவ்வாதது. ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிக்கு இசைந்து பின்வாங்குவது போன்றதாகும்.

உண்மையில் இவர்களின் விமோசன மார்க்கமென்ன ? இவர்களின் வரலாற்றை ஆராயும்போது ஒரே ஒரு முடிவினுல்தான் இதற்கு விடையளிக்கலாம் என்பது தெளிவாகிறது. உழைப்புச் சக்தியை முழுக்கமுழுக்க உறிஞ்சி, உழைப்பாற்றலை விரையம் செய்யும் முதலாளித்துவத்திற்கு எதிராக அமையும் தமிழ்ப் பேசும் மக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்வதன் மூலம்தான் தமிழ்ப் பேசும் மக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்வதன் மூலம்தான் தமிழ்ப் பேசும் பாட்டாளி வர்க்கம் தனது விமோசனத்திற்கான வழியைக் காண முடியும்.

தர்க்கீகம்—10/11.

○ ஈழப் புரட்சி அமைப்பினரால் (ஈரோஸ்) ஈழத்தில் 1980 அக்டோபர் 17 முதல் மாத இதழாக வெளிவந்த 'தர்க்கீகம்' இதழ் அரசின் அடக்குமுறை காரணமாக 1982 இறுதியில் நிறுத்தப்பட்டது.

# இதுவரை வந்த எமது வெளியீடுகள்

○ ஈழவர் இடர் தீர:
(ஈழவர் இடர் தொடர்பான இயங்கியல் ரீதியிலான ஆய்வு)

○ லங்கா ராணி:
(ஈழவர் சிக்கலை வரலாற்று ரீதியாக ஆய்வு செய்து நாவல் வடிவில் அமைக்கப்பட்டது)

○ இந்த மண்ணும் எங்கள் நாட்களும்.
(ஈழத்து கவிதைகளின் தொகுப்பு)

# வர இருப்பவை

○ ஈழவர் இடர் தீர—பகுதி II

○ இந்த மண்ணும் எங்கள் நாட்களும்.
(திருத்திய பதிப்பு)

○ ஈழத் தமிழ் இளைஞர் இயக்கங்களின் வரலாறு.

